தைலம் :—சித்திர மூலம், நொச்சி வேர், அவுரி வேர், துத்தி வேர், சஞ்சீவி வேர், கழற்சி வேர், மாவிலிங்க வேர், வாதமடக்கி வேர், சிற்றாமணக்கு வேர், அகத்தியிலை, ஊமத்தம் வேர், வாகை யிலை, அரசம்பட்டை, வேலிப் பருத்தி வேர், முருங்கை வேர், பொடு தலை இவை வகைக்கு பலம் 3, இவை யெல்லாம் துவைத்து நாலு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டொன்றாக்கி நாகப்பூ, தேவதாரம், கடுகு, ஓமம், நாய்க்கடுகு, வசம்பு, சுக்கு, சிறுமூலம், செவ்வள் ளிக்கொடி, கடுகுரோகணி, வெளிச்சிப்பிசின், மஞ்சள், குந்துருக் கம், கிராம்பு, இவை வகைக்குப் பலம் 2½, சிற்றாமணக்கெண்ணெய் படி 1, நல்லெண்ணெய் படி 1, நிம்பெண்ணெய் படி ¾, வெள் ளாட்டுப் பால் படி 1, இவை யெல்லாம் சேர்த்துப் பதத்தில் வடித்து தலைக்கும் தேய்த்து, மேலுக்குமிட்டு, உள்ளுக்கும் கொள் ளவும். பாரிசவாதம், வாதம் எல்லாம் தீரும்.

வாயுவுக்கு

சஞ்சீவியிலை பதினான்கு பறித்து ஒரு பானையில் தண்ணீர் விட்டு வேடு கட்டினதின்மேல் ஏழிலை பரப்பி அதன்மேலே

பூண்டு வ. 5, உரித்து மேலே வைத்து நின்ற இலைகள் ஏழை யும் மேலே பரப்பிப் புட்டவித்துப் பிழிந்துகொண்டு அந்தச்சாறு விட்டுப் பருப்பை அரைத்துக் கலக்கிக் கொடுக்க ஆனந்தவாயு தீரும்.

வேறு :—புங்கம்வேர், கழற்சிவேர், வெள்வெங்காயம் வகைக்கு எலுமிச்சங்காயளவு அரைத்து இளநீர்த்தண்ணீர் காய்ச்சிக் கொடுக்க ஆந்திர வாயு தீரும்.

வேறு :—பொன்னுங்காணிவேரும், புத்தோடும், செங்கல்லும் இவை மூன்றும் கொட்டைப் பாக்களவு அரைத்து இளவெந்நீரில் கொடுக்க ஆந்திரவாயு, எலிவிஷம், வாதபித்தசிலேற்பனந் தீரும். வயிறுமெத்த எடுத்தால், தலையிலே தண்ணீரைவிட்டு, மோருஞ் சோறும் கொடுக்கவும்.

குளிகை :—நொச்சியிலை, வேளையிலை சமன் கொண்டு அரைத்து எலுமிச்சங்காயளவு ஐந்துண்டை செய்து நல்லெண்ணெ யில் புரட்டிப் பிறகு தவிட்டில் புரட்டி, விழுங்கவும். ஆந்திரவாயு, அண்டவாதம், ஆனந்தவாயு தீரும்.

வேறு :—வெள்வெங்காயம் அரைத்துக்கொண்டு, கழற்சிக் கொழுந்து, முடக்கொற்றான், சித்திரமூலம் இவை யரைத்து புன்னைக்காயளவு திரட்டிக்கொண்டு ஒரு சிரங்கை சிற்றாமணக் கெண்ணெய் சட்டியில் விட்டுத் தாளித்துத் தின்னத் தீரும்.

ஒற்றடம்:—கழற்சிக் கொழுந்து வில்வயிலையுமிடித்து வறுத்து ஒற்றடமிடவும்.

உள்மருந்து :—மூன்று கழற்சிப் பருப்பு முளை யெடுத்து அரைத்து மூன்று முட்டை வெள்ளைக் கருவிலடை சுட்டுத் தின்ன வும். கழல் பருப்புப் பாதியும், ஒருள்ளிப்பூடும், வசம்பும், மிளகும் கூட்டி யரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

ஒற்றடம் :—மேலுக்குக் கழற்சியிலை, வசம்பு, வெள்வெங்கா யம் நறுக்கி வறுத்து ஒற்றடமிடவும்.

தாது விருத்திக்கு

பற்பம் :—ஆமையோடு பொடித்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பி மூன்று நாள் கொடுக்கவும்,

வேறு :—தூதுளையைச் சமூல முலர்த்திப் பொடித்து படி $\frac{1}{4}$, வாலுழுவைப் பொடி படி $\frac{1}{4}$, இவை இரண்டும் கலந்து வெருகடிப் பிரமாணம் பசுவின் நெய்யில் கொடுக்கவும்.

வேறு :—பொடுதலை, நற்சீரகம், வெல்லமுமரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும்.

வேறு: —தூதுளம்பூ படி 2, பசுவின் பால் படி 1 விட்டுச் சுவர அவித்து அரைத்துக்கொண்டு காலையில் ஒரு நேரம் நெல்லிக் காய்ப் பிரமாணம் கொள்ளவும். இந்தப்படிக்குச் செலவழியுமள வும் கொள்ளவும். இதற்கு முன் நல்ல மலாக்கச் சந்தனக் கட்டை வாங்கி நெல்லிக்காய்ப் பிரமாண மரைத்து பால் கலசத்தில் போட்டு அதின்மேலே பாலைக் கரந்து கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் முன்னே கொண்டு, பிறகு முன்சொன்ன மருந்து கொள்ளவும். புளி மறுத்துச் சற்றுப்புக் கூட்டவும்.

கூந்தல் வளர

தைலம் :—நல்லெண்ணெய் படி 1, விளக்கெண்ணெய் படி 1, நறுநெய் படி 1, மருதோன்றியிலை, தான்றியிலை, பருத்தியிலை, கையாந்தகரை வகைக்குச் சாறு படி 1, பசுவின் பால் படி 4, அதிமதுரம், மிளகு, சீரகம் வகைக்கு, பலம் 4, இவைகளை அரைத் துக் கரைத்துப் பதத்தில் வடித்து மூழ்கவும். தலைமயிர் கழிவு தீர்ந்து நன்ருய் வளரும்.

சூலைக்கு

சேங்கொட்டை 20, சட்டியில் கருக்கிக் கொண்டு ஓமம் படி $\frac{1}{8}$, ரசம் பலம் 1, கூட்டி யிடித்து மூன்றரை நாள் ஏழு பொழுது கொடுக்கவும். எட்டாம் நாள் தண்ணீர் வேதுவைத்துக் தாரையாக சிரசிலே யிருந்து விடவும். விளக்கெண்ணெய் பத்து முழுக்கு முழுகவும். பத்து நாள் பத்தியங் கார்க்கவும். சூலை கிரந்தி தீரும்.

வேறு :—பரங்கிப்பட்டை பலம் 5, முதனுள் சீவி உலரப் போட்டு மறுநாளுதயம் அரைத்துச் சுண்ணும்பு பலம் 1 கூட்டிக் குழைத்துத் தின்னவும். இப்படி பத்து நாள் கொள்ளவும். தீரும்.

பெருவியாதிக்கு

தேங்காய் கண்திறந்து அதில் கள்ளிப்பால் படி $\frac{1}{4}$, இந்துப்பு பலம் 3, இவைகளைத் தேங்காயிலடைத்து வேப்பங்கம்பு

கொண்டு கண்ணையடைத்து ஓடு கருக்கச் சுட்டு அரைத்து ஒரு காசளவு கொடுக்கத் தீரும்.

குட்டங்குறைநோய் சொரிக்கு

இலைக்கள்ளியிலையும் அழிஞ்சிலையும் அரைத்து விழுங்கவும். இந்தப்படி நாற்பதுநாள்கொள்ள குட்டங்குறைநோய், சொறி குட்டம் தீரும்.

எண்ணெய் :— நல்லெண்ணெய் படி 1, கையாந்தகரைச் சாறு படி 1, மிளகுபொடி படி ¼ கூட்டி வேகவைத்து முழுகிவரக் குட்டங் தீரும்.

கிரந்திக்கு

துளசி கசக்கிச் சிறு நீர்விட்டு விரவிக் கட்டக் கிரந்தி தீரும்.

வெள்ளை பரிந்த குட்டத்துக்கு

ஆயில்பட்டை, அழிஞ்சில்பட்டை, பெருமரப்பட்டை, காஞ்சுரங்காய், கருவாப்பட்டை, வெள்வேலம்பட்டை சங்கங்குப்பிப் பட்டை, முட்சங்கம்வேர்ப்பட்டை, வெள்ளறுகு, சிவனார்வேம்பு, ஆலம்பட்டை, இலந்தைப்பட்டை வகைக்குப் பலம் 5 தரித்துப் புடத்தைலமிறக்கி உடம்பெல்லாம் பூசி, உள்ளுக்கும் காசளவு கொடுக்கப் பதினெட்டுக் குட்டமும் வெள்ளையும் தீரும்.

வேறு;—உசிலமரக்காளான் அரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு வெந்நீரில் மண்டலங்கொடுத்துவர வெண்குட்டம், கருங் குட்டம், வண்டுக்கடி தீரும்.

இந்தப்படி மூன்றுநாள் கொடுக்க சுரம் தீரும். வயிற்றெரிப்புக்கு பாலில் ஏழுநாள் கொடுக்கவும். பத்தியம் புளிமறுக்கவும்.

வேறு :—பங்கம்பாளை எலுமிச்சங் காயளவு அரைத்து ¼ படி வேப்பெண்ணெயில் வெந்து பூசக்குட்டந்தீரும். மயிர் முளைக்கும்.

குட்டம், குறைநோய், கிரந்தி, சூலை, வாதசூலைக்கு

புகை :—இரசம் பலம் 2, அரிதாரம், சாதிலிங்கம், வெள்ளைக் கந்தகம், ஊசிக்காந்தம், வகைக்குப் பலம் 1, காரீயம் பலம் 5, எருக் கங்கரி பலம் 5, துரிசு பலம் ¾, சித்திரமூலம் பலம் ¾, சஞ்சீவி வேர்ப் பட்டை பலம் ¾, கருங்குங்கிலியயம் பலம் ¾, மிளகு பலம் ¾,

பால் துத்தம் பலம் $\frac{3}{4}$, கடுகு பலம் $\frac{3}{4}$, சுண்ணும்புக்கல் பலம் $\frac{3}{4}$, ஆக இவையெல்லாம் உத்தாமணிச்சாறு, கரிப்பான்சாறு கலந்து விட்டு ஒரு சாமமரைத்துப் பதினெரு கிழிகட்டி நிழலிலுலர்த்தி ஐந்தரைநாள் புகை காட்டவும். இரண்டு நாள் ஆறப்போட்டுப் பிறகு பதினெரு நாள் தண்ணீரில் கிடக்கும்போது கோழி அவித்துச் சாறு கொடுக்கவும். பிராமணருக்குத் துவரம்பருப்புச்சாறு கொடுக்கவும், சிற்றுமணக்கெண்ணெய் பத்து முழுக்கு முழுகவும். இருபத்தைந்து நாள் உப்பு புளி மறுக்கவும். பத்தியம் :—முறுங்கைப் பிஞ்சு,இலை, அத்திக்காய், வாழைப்பிஞ்சு கூட்டிக் கொள்ளவும்.

வேறு: —புகை

காரீயம் பணவெடைகால் கருங்குங்குலியம் பணவெடைகால்
கூறிய தாரங்கெவுரி வெள்ளைகொடிய கடுகுமிளகுடனே
பாரிலப் பன்னிரு விடயம் பகரும் சூதமுப்பதெடை
சீரிய துரிசுஎருக்கலம் கரிசித்திரபச்சை யிருமூன்றே.

யிரு மூன்றுறு குளிகை யதாயிதமாய்ப் பருத்திச் சாற்றரைத்துப்
புருவ நுதலாய் முப்பொழுது புளியந்தணலில் புகை காட்டில்
உருவை யழிக்குங் கிரந்தி சூலை ஓடி ஒளித்துப் போமென்று
திருமாமரையாப்பு மகாமுனிவர் திடமா யுரைத்த திதுவாமே,

இந்தப் புகைக்கு இச்சாபத்தியம். பத்து முழுக்கு விளக்கெண்ணெய் முழுகவும். கிரந்தி சூலை குட்டம் தீரும்.

வேறு :—தைலம்

கார்பூத்த நல் முருங்கைப்பட்டை கொடிவேலிவேர்
சீர்பூத்த ஆடுதின்னுப்பாளை—நேர்பூத்த
இம்மூன்றும் வெவ்வேறு எலுமிச்சங்காயளவு
செம்மாந்தகொங்கைத் திருவே கொளப்போம்.

மறைனுரையுமாரையும் தில்லை ஊடே பகையாய்ப்
பறையுமாய் பாலுழக்கிலரை—கரைசேர்ந்த
நேர்வாளம்பத்து ரெட்டிநேரே நீர்வெட்டி முத்துச்
சீர்வாய்ந்த செங்கமலச் செங்கையனே—தேர்வாய்ந்த
மாவிலிங்கஞ்சாற்றில் மருந்தெல்லாம் தானரைத்து
மேவியங்கே கொண்டு விரவிய பின்—காவியங்கண்,
மின்னே ஒருபடி நல்லெண்ணெயில் விட்டமூலிலப்
பின்னே தயிலம் பிறப்பதுகேள்—தன்னேரில்

சேங்கொட்டை அன்பதொக்கு செய்யகலசத்துள் வைத்து
ஓங்கு சிவனார்வேம்பு உள்வைத்தே—பாங்கிலப்
பாதாளத்தயில எண்ணெய் தன்னோடுறவு செய்து
வேழமுகத் தைங்கரனை மெய்போத்திக்—கோதில்லா,
சருதம் கழஞ்சுநேர்சொல் கந்தகம்பொடித்து—வேதித்து
இரண்டும் விரவியபின் கோதத்—திருந்த
மருந்தை இயல்பாய்க்கலந்து மருந்தெண்ணெய் காய்ச்சி
வடித்துப் பொருந்து மொருகாசெடை—யுட்கொண்டால்
அக்கடிவிஷங் குட்ட மறும் பூச மதனரதிப்
பெண்ணே கேள்போம் சொரியும் படர்தாமரை துலங்கு
வண்டுகடி முறியுமிது தப்பாது.

வேறு :—சிற்றாமணக்கெண்ணெய் படி 1¼, சங்கங்குப்பியிலை, அவுரியிலை, கொழுஞ்சியிலை, முருங்கையிலை, புங்கம்பட்டை, புங்கம் இலை, பொடுதலை, சங்கம்வேர், வெள்ளறுகு, சிவனார்வேம்பு, கழற்சிக் கொழுந்து, பருத்தியிலை இவைவெல்லாம் வகைக்குப் பலம் 5, சீனப்பா பலம் 5, கருஞ்சீரகம் பலம் 5, துத்தம் பலம் 1, துருசு பலம் 1, மிளகு பலம் 1, ஈரவெங்காயம் பலம் 1, சித்திரமூலம் பலம் 1, இவையெல்லாம் காட்டுமருந்துச்சாறு கொண்டரைத்துப் போட்டு பதத்திலேவெந்து போதொன்றுக்கு மாகாணிப் படிவீதங் கொடுக்கவும். பத்தியம் காக்கவும். கிரந்தி தீரும்.

கர்ப்பிணி கிரந்திக்கு—விளக்கெண்ணெய்ப் படி 1, ஈரவெங்காயச்சாறு படி 1, செப்புநெருஞ்சி, குட்டித்தக்காளி, சங்கங்குப்பி, முருக்கிலை, வெள்ளறுகு, சங்கம்வேர், சிறுகாஞ்சொரிவேர், கழற்சியிலை, குளப்பாலை, வகைக்குச்சாறு படி ¾, செங்கத்தாரிப் பட்டை பலம் 1, சிற்றரத்தை, வேப்பம்பட்டை, அதிமதுரம், கடுகுரோகணி, சித்திரமூலம், கருஞ்சீரகம், வகைக்குப் பலம் 1, துருசு பலம் ½, இவை யரைத்து எண்ணெயில் கலந்து பதத்தில் வடித்து ஐந்து மாத முதல் ஒன்று விட்டொருநாள் ஒருகாசெடை யளவுகொள்ளவும். உப்பு மறுக்கவும்.

எண்ணெய்—சிற்றாமணக்கெண்ணெய் படி ¾, ஈரவெங்காயச்சாறு படி ¾, கழற்சியிலைச்சாறு படி ¾, வெள்ளறுகுச்சாறு படி ¼, முருக்கிலைச்சாறு படி ¼, இலுப்பைச்சாறு படி ¼, செப்புநெருஞ்சிச்சாறு படி ¼, சங்கம்வேர்பட்டை அரைத்து, ஒரு மாங்காயளவு இவையெல்லாங்கூட்டி பதத்தில் வடித்து வடித்தவுடனே மாக்

கடுக்காய் 30, பொடிசெய்து வடிகட்டி எண்ணெயில் போட்டுக் கிண்டி நாளொன்றுக்கு மாகாணிப்படிவீதம் உண்டு பத்தியங்காக்க கிரந்தி க்ரப்பான் கர்ப்பிணிகிரந்தி தீரும்.

எண்ணெய் :—

கார்குழலீர் கேளீர் கரப்பான் வகைதீர்வதற்குப்
பார்புகழ் நல்லெண்ணெய்படி இரண்டு—கோல்பசுவின்
பாலுமிரண்டுபடி கூட்டி விரவிதாளிசேர்த்து
மருந்து யியம்பக்கேள்—வகைக்குரிய
ஆடாதோடையுடனறுகு செருப் படியும்
வாடாகண்டங்கத்திரி வல்லீஞ்சில்—கோடாத
கோழியவரையிலை குப்பைமேனியுடனே
போடு சங்கங்குப்பி பொடுதலையும்—மாதரசே
கத்தகத்தின்லத்திப்பச்சை கறிமுள்ளி சின்னியிலை
மத்தக்கிரந்தி விதரணயன்—சுத்தக்
கருநொச்சி வெண்ணொச்சி குமரியரிய
பிரமியுடனன் பாகத்—துரியமுட
னிந்தமருந்து இடித்துவகைக்குப் படி காலும்
அந்தமுடனெண்ணெய் அதில் விட்டுச்—சிந்தாமல்
செங்கத்தாரிப்பட்டை சேர்க்கடுகுரோகணியும்
பங்கமுறும் வேம்பாடம் பட்டையிவை—சங்கையுள்ள
பூதக்கரப்பன் பட்டைபுகல் கடுக்காயிந்தவகை
தாதாய் வகைக்குப்பலந்தானிரண்டாஞ்—சூதான
சீனப்பாவொன்றும் சிவகம் அரைப்பலமும்
காணப்படவரைத்துக் கலந்ததற்பின்—வானத்தில்,
சூரியநாதன் முகத்தில் துலங்க ஒருநாளிருத்தி
வார்குழலே மற்ற மறுநாளில்—தீதுறவே
பதத்தில் வடித்தெண்ணெய் பண்பாயகத்தில்வைத்து
இதத்துடனே கொள்ளும் இயல்புகேள்—தனக்கெளிதாய்
நாலுநாளைக்கொருநாள் நண்ணுதலே யோர் கரண்டி
மேலும் சுடவெச்சென வைத்துக்—கோலவிழி
மானேனீயருந்திடுகில் மாறுக கரப்பானும்
தானேவிஷக்கரப்பன் தன்னோடும்—போம் தாய்கேள்
வீக்கம் விஷப்பாக முடன் மெய்க்கிரந்தி விட்டகலும்.
தீர்க்கமதாய்ச் சொல்ல ஒரு செய்திகே—ளேற்கையாய்க்
கர்ப்பிணிப்பெண் கழுக்கிரந்தி கரப்பானது

சற்பிணையாய்வந்து செய்யிற்சாராமல்—பொற்கொடியாள்
முழுகியஞ்சு மாதமதில் மூன்றுமுறை யெண்ணெய் கொடு
தழுவியேழான் பதிலும் தப்பாதே—விழிபிறந்த
மானே மண்டைக்கரப்பான் வாகாய்க் கடிவிஷங்கள்
தானே சொரிசிறங்கு தான்வந்தால்—தேனே கேள்
இந்தக்கடுகரைத்து இவ்வெண்ணெய்தான் கூட்டி
அந்தத்தலத்தில் அறப்பூசு—விந்தையால்
காதுதனில் சீவடியில் கர்சள்வு யெண்ணெய்விடில்
ஓடிவிடும் மாதேனேயுள்ளதெல்லாம்—தேடரிய,
சங்கரனார் தாமுரைத்தார் தப்பாது தப்பாது
மங்கையரே கேள்மகிழ்ந்து.

கால் புற்றுக்கு

மங்கையரே காலதனில்வந்த புத்துதான் வளரில்
சங்கையுடன் மருந்து தானுரைகேள்—தங்கையரே
கருவிகொண்டு புத்தைரத்தம் காண அறச்சீவியபின்
பெருகுவெள்ளைப் பாஷாணம் பின்துருசும்—பசிய
அவுரியிலையுடனம்மே பொரிகாரம்
பிரியமுடன் ஆவெண்ணெய் போட்டரைத்து–அரிவையரே
யந்தக்கரணிலள வாகத்தானமைத்துச்
சிந்தையுறச்சீலையால் சேத்திறுக்கு—விந்தையார்
இந்தப்படி நாள் மூன்றிலியல் பாகக்கட்டியபின்
அந்தமுளைக்கரையும் ஆயிழையே—கொந்து முலைப்பால்
விளக்கெண்ணெய் கோதாய்நெல் சோறுதயிர்
நற்பாய்ப்பிசைந்துகட்டு நாள்மூன்று—வளக்குடைய
மாதேமுளைகரைந்து வந்துதென்றாலப் புண்துவர்த்
தாதே நற்சீர்நெய்யில்தான் வறுத்து—சிதமுள்ள
காடிநீர்விட்டரைத்து களிப்பாகத்தான் பூச
வாடிவிடும் புண்ணின்வகைதீரும்—சோடிழையா
யின்னமொரு மருந்து இயல்பாகத்தானுரைக்க
கன்னல்மொழிமாதே கருதிக்கேள்—அன்னையரே
நிம்பெண்ணெய் ஓர்படியில் நீமதுரம் ஏலமிது
வெந்து நக்கில் புத்துவிஷந்தீரும்—அந்தமரத் தீராகரண்
கிடந்தால் தேடாயெவட்சார்ந்
தாராரயப் பொடிசெய்து தான்தேய்த்து—வாரமுடன்

இப்படி நாள்மூன்று மியல்பாகத்தேய்க்கப்பின்பு
அப்பிரமேயிந்துப்பு ஆளெலும்பு—செப்பமுடன்
சேர்த்துப் பொடிசெய்து சிறக்க யிதுமூன்றுநாள்
ஆற்கப்பொடியை அதில்சேர்த்து—தீர்க்கமுறச்
சூதமரைக்கழஞ்சு தோகாய் நல்லோட்டிலிட்டுத்
தாது சித்திரப்பாலாடைச்சாறு விட்டுப்—பேதமற
மத்தித்துப்பரமதை மாதேயவன் தலையில்
உச்சிதனில் மத்திக்க ஓடிவிடும்—சித்தமுற
ஏழுநாள் மத்திக்கயிதமாய்த் தினமிரண்டு
நாழிகையில்தப்பாதே நாயகியே—கேள்பிறகு
இரண்டுநாள் கழித்துபின்பு வெந்நீர்தான் விடுகில்
ஒழுகிவிடும் கால்புற்று உள்ளதெல்லாம்—மழுவேந்து
சங்கரனுர் தாமுரைத்தார் தையலேதப்பாது
அங்கையினுலச்செய்தியறி.

செப்புற்று கரும்புற்றுக்கு

காஞ்சுரமிலையிடித்து வறுத்து நாலுநாள் கட்டவும். பேய்க்குமட்டியிலை யிடித்து வறுத்து நாலுநாள் கட்டவும். அதிலே உண்டான புழுவும் செத்துக் கறடுங்கரைந்து புண்ணும் ஆறும்.

பேதிக்கு

நேர்வாளம் பலம் 5, கடுக்காய் பலம் 10, சுக்கு பலம் 15, மிளகு பலம் 3, கடுகுரோகணி பலம் 1, காந்தம் பலம் 3, நெல்லி பலம் 5, இந்துப்பு பலம் 5, வளையலுப்பு பலம் 3, வெடியுப்பு பலம் 3, வெள்வெங்காயம் பலம் 10 இவைகளையெல்லாம் நிலவாகைச் சாற்றிலரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் உண்டை செய்து உபயோகிக்கவும். இதற்கு வயிறு கழியும். குளிர்காய்ச்சல், சன்னி, காமாலை இவை தீரும். மதத்திற்குக் கண்டு கொடுக்கவும். கபாலவாயு, குட்டம் இவை தீரும்.

செவிப்புழுவுக்கு

நல்லெண்ணெய் படி 1, கரிப்பான், வெற்றிலை, பங்கம்பாளை, தைவேளை, நொச்சியிலை வகைக்குச்சாறு படி $\frac{1}{4}$, தைவேளை எலுமிச்சங்காயளவு, சுக்கு, திப்பிலி, வெள்வெங்காயம், மிளகு, வசம்பு, மஞ்சள், சீரகம், வகைக்குப் பலம் 3, சித்திரமூலம் பலம் 1, வெந்து பதத்தில் வடித்துக் காதிலடைக்கவும்.

இதிலடங்கா வியாதியானுல் முழுகவும். கபாலவாயு, கபால குட்டம், காது மந்தம், எழுச்சி, காதுப்புற்று, சீழ்வடிதல், செவிப் புழு இவையெல்லாம் தீரும்.

செவி மந்தத்திற்கு

பன்றிப்பித்தை மனிதரின் கண்ணீரிலுரைத்துப் பூச செவி கேட்கும். நல்லெண்ணெய் படி $\frac{3}{4}$, நொச்சி, சஞ்சீவிப்பழுப்பு, கள்ளி, அறுகம்புல், பொடுதலை, மாவிலிங்கு, வகைக்குச் சாறு படி $\frac{3}{4}$, சுக்கு, மிளகு, வெள்வெங்காயம், வகைக்குப் பலம் 5 இவை களையெல்லாமரைத்து, வெந்து பதத்தில் வடித்து, செவியிலடைக்க மந்தந் தீரும்.

உள்ளுக்கு :—நொச்சியிலை, மாதுளையிலை, கீழ்க்காய்நெல்லி யிலை இவைகளைப் புட்டவித்துச் சுரசம் வடித்து திரிகடுகு, வசம்பு, வெதுப்பிப் பொடித்து மேல்பொடிபோட்டுக் கொடுக்க செவி மந்தம் தீரும்.

வேறு :—கஞ்சாங்கோரை, ஓருள்ளிப்பூடு, வசம்பு கூட்டி, நையத்தட்டி காதில் பிழியப் புழு செத்துப்போம்.

வேறு :—நாய்க்கடுகு இலைச்சாற்றில் நல்லெண்ணெய், சமன் சேர்த்து ஈரவெங்காயமும் கிள்ளிப்போட்டு சூரியபுடமிட்டு எடுக்க வும். செவியிலிட்டுத் தேய்க்கப் புழு விழும்.

வேறு :—சிறுபுள்ளடி, வெள்வெங்காயமும் அரைத்து எண் ணெயில் காய்ச்சிச் செவியிலடைக்கப் புழு விழும்.

கபால குட்டத்திற்கு

வேப்பெண்ணெய் படி $\frac{1}{4}$, புங்கெண்ணெய் படி $\frac{1}{4}$, கண் டங்கத்தரிப் பழச்சாறு படி $\frac{1}{4}$, எருக்கிலையை வாட்டிப்பிழிந்த சாறு படி $\frac{1}{4}$, கொம்மட்டிப் பழச்சதை படி $\frac{3}{4}$, அறுகுச்சாறு படி $\frac{1}{4}$, நீரடிமுத்து பலம் 6, இந்துப்பு பலம் 4, துருசு பலம் 2, சீனக்காரம் பலம் 2, கடைமருந்து எல்லாவற்றையும் எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து எண்ணெயில் கலந்து சூரியபுடம் வைத் துப் போடவும். அந்திக்காப்பிட்டு முழுகவும்.

வேறு :—நல்லெண்ணெய் படி $\frac{1}{4}$, பேய்க்கும்மட்டிப்பழச் சாறு படி $\frac{1}{4}$, வெள்ளாட்டுப்புழுக்கை படி $\frac{1}{4}$, கார்போகரிசி, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், ஏலம், மஞ்சள், மிளகு, வெள்ளுள்ளி, ஓடு போக்கிய நீரடிமுத்து, கரிப்பானிலை, வெற்றிலைக்காம்பு, குப்பை

மேனிவேர், இவைகளையரைத்து வகைக்கு ஒரு பாக்களவு, நெல்லிக்காய் கந்தகம் பலம் $\frac{1}{4}$, நேர்வாளம் பலம் 1, கோட்டம் பலம் 10, இவைகளையுமரைத்துப் பதத்தில் வடித்துத் தலையில்தேய்த்து அரைப்பிட்டு முழுகவும். அந்தியில் இந்தப்படி மூன்றுநாள் செய்யவும். கபால குட்டம் தீரும்.

கபாலவாயு நேத்திரவாயு தலையிடிகளுக்கு

புகை :—திரிகடுகு, மஞ்சள், அபின், ஓமம், கஞ்சா, துளசி, அரிசி, காசுக்கட்டி, குங்கிலியம், அதிவிடயம், சாதிபத்திரி, காவிக்கல், இலுப்பைப்பிண்ணாக்கு, பிசங்கு, சீயக்காய், கருஞ்சீரகம், அரிதாரம், ஆக மருந்து 17, இவைகளைப்பொடித்துக் கடுதாசில் சுருட்டி நாசியில் புகைபிடிக்கத் தீரும்,

விரேசனத்திற்கு :—நிலவாகை சமூலம் பிடி 3, மிளகு பலம் 1, திப்பிலி பலம் 1, கடுக்காய் 6, களிப்பாக்கு பலம் 4, குமரிச்சருகு பிடி 1, இவைகளை இரண்டுபடி தண்ணீர்விட்டு நாலொன்ருக்கிச் சற்றுக் காயமுமுரைத்து உழக்கு கோமயமும் விட்டுக்கொள்ளவும். வாதபித்த சிலேற்பனம், வாயு, மூலவீக்கம், பாண்டு, சிரங்கு, குளிர் இவை தீரும்.

பூச்சு :—நல்லெண்ணெய் படி 5, நாறுகரந்தைப்பொடி படி $\frac{3}{4}$, அதிமதுரம் பலம் 3, இவைகளைக் கூட்டிப் பதத்திலிறக்கிக் காசெடை வீதம் இரண்டுநேரமும் உள்ளுக்குக் கொண்டு, கடுகை. நோவுள்ள இடமெல்லாம் பூசி சாயுங்காலம் மா அரைப்பிட்டு வெந்நீர் விட்டுக்கழுவவும். இப்படி ஏழுநாள்கொண்டு உப்பு புளியை மறுக்கவும்.

புகை:—எருக்கிலை, மேனியிலை, பொடுதலை, நொச்சிக்கொழுந்து, குட்டித்தக்காளி, ஊமத்தஇலை, இவையெல்லாம் வகைக்குப் படி 1, இடித்துச் சாறுபிழிந்து காரீயம் பலம் 3, இரதம் பலம் 3 உருக்கிப் பொடித்து அந்தச் சாறு விட்டுக் கருகாமல் வறுத்துப் பொடித்து ஏழு கிழி கட்டிப் புகைக்கத் தீரும். விளக்கெண்ணெய் மேலிட்டுப் புகைக்கவும். விளக்கெண்ணெய் முழுகவும்.

யானைத்தோல்குட்டம், கால்வெள்ளை, கைவெள்ளைகளுக்கு

கண்டங்கத்திரி சமூலம் பலம் 15, வெற்றிலைக்கொடி பலம் 15, இவைகளைத் துவைத்து பெரியமிடாவிலிட்டு அது

முழுகத் தண்ணீர் விட்டு தண்ணீருக்குள்ளே குதிரைக்குளம்பை நடுவே வைத்துப் பானையை மேல்தூருப்போன சட்டிமூடிச் சீலே மண்செய்து வெந்து கொதிக்கவிட்டு இறக்கிச் சட்டித்தூரிலே இருந்த சாணியை யெடுத்துப்போட்டு அதன்வழி உழக்கு நல்லெண்ணெயும் உழக்கு உவர் மண்ணும் போட்டு வெள்ளையளவு புகை பிடிக்கவும். இப்படி ஐந்துநாள் செய்யவும்.

பூச்சு மருந்து:—உத்தாமணியிலையும் புகையுரையும் மிளகுமரைத்துப் பூச மாறும்.

மதகரி வேடிப்புக்கு:—மாம்பட்டை யிடித்துக் காடித்தெளிவில் போட்டு அதிலே நாழி யுவர்மண் போட்டுச் சீலைமண் செய்து காய்ந்த மருந்திலே நாழிச் சுண்ணும்புக்கல்போட்டு நோவுள்ளதில் வேது காட்டவும். மூன்றுநாள் செய்ய மதகரி, வெடிப்பு, பித்தவெடிப்பு இவை தீரும்.

உதட்டு வெள்ளைக்கு:—கனிந்த பேயன்பழமுரித்து உதட்டில் கட்டிக்கொண்டு நித்திரை செய்துவிட்டு வெள்ளரிக்காய் முறித்துத் தண்ணீரைச் சீலையிலூட்டி உதட்டின்மேலே வைத்து உலரப் பூசின பின் புழுகு பூச மாறும்.

பித்தமதகரிக்கு:—காட்டுமாவிலிங்கப்பட்டையைக் கொண்டு வந்து விழுதுபட அரைத்து அதன்மேல் நாவுக்கினியானைக் கொண்டுவந்து அதைக் கூடக் கூட்டி அரைத்த பிறகு அதின்பால் திரளும். அந்தப்பால்திரட்சியை என்றுங்கிடவாமல் புறக்கிப் போட்டு அதை உண்டை பண்ணி இரண்டு சுண்டைக்காயளவு கொடுக்கவும். பிறகு இளவெந்நீர் கொள்ள வயிறு பேதிக்கும். தனக்கென்று வசமானகாலத்தில் தண்ணீர் தலைவழியே விட்டு மோருஞ்சோறும் கொடுக்கவும். இப்படி ஒன்றுவிட்டொருநாள் கொடுக்கவும்.

வேறு:—எண்ணெய்—கருடன்வணங்கியை மாங்காயளவரைத்து முக்கால் படி எண்ணெயில் வேகவைத்துக் கொள்ளவும்.

சூலைபதினெட்டுக்கு—ஏரண்டத்தைலம்

வெள்ளுள்ளிச்சாறு நாழிவிரவி இஞ்சிச்சாறும்
ஒள்ளிமம தண்ணீர்மீட்டான், உரைசெய்யாக் கன்னிநெல்லி
உள்ளதோர் சாறுநாழி, உரைக்கின் ஆவின்பால் நாழி
மெள்ளவே கஷாயமூறி மேலிடுமருந்துதானே,

தானே கொடுவேலி, முல்லை, சாரணை, வீழிமுத்தம்
ஆன ஆதண்டை சிற்றாமணக்குடன் பங்கம் பாளை
ஊனதில் வியாதிபோக ஒவ்வொரு பலமே கொண்டு
தானது ஊரிக்காய்ச்சித் தன்னையும் எட்டொன்றாக்கே,
ஆக்கிய நற்சீர் கோட்டம் ஆனதோர் வசம்பு மோதம்
போக்கிய நேர் பாளிந்து புதியதோர் மிளகு திப்பிலி
தாக்கிய கடுகுரோகணி தானது கழஞ்சோரொன்று
ஏக்கிய சிற்றாமணக் கெண் ணெயிலெரித்து நக்கே,

கஷாயம் :—

பங்கம்பாளை வேர்க் கொம்பு பருத்த முத்தக்காசுடனே
அங்கஞ்சொரியு மதன்வேரு மடவே காய்ச்சி யருந்தியிடில்
பொங்குஞ்சொரியும் சுரைசூரை பொல்லாதென்ன ஈரெட்டும்
பங்கம் படாதே யிவை தீரும் பாரீர் பாரீர் பாரீரே.

கழுத்துக்கு மேலுண்டான வியாதிக்கு

நல்லெண்ணெய் படி 1, சிற்றாமணக்கம்வேர் பலம் 15, சீந்தில் தண்டு பலம் 15, இவைகளை இடித்துப்பதக்குத் தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி இறுத்துக்கொள்ளவும், பாணன்பழச்சாறு படி 1, காத்தோட்டி யிலைச்சாறு படி 1, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோட்டம், விலாமிச்சம் வேர், சண்பகப்பூ, நெல்லிப்பருப்பு வகைக்குப் பலம் 1, வீத்மரைத்துப் பதத்தில் வடித்து முழுகவும்.

படர்தாமரைக்கு

பாரிணங்கும் நிலவாகைச் சமூல மதுதானும்
 பகர்ந்திடும்கீழ்க் காய் நெல்லி யிலையும் பொடுதலையும்
சீரணங்கு இவை மூன்றும் பாணன் பழச்சாற்றில்
 சிறப்புடனே அரைத்தருந்தித்திந்து மெய்யில் பூசில்
வாரணங்கே வந்தபடர் தாமரையும் தீரும்,
 வருந்தி யிதைஅமாவாசை நாள் முதல் தின்னென்று
தாரிணங்கு மகத்தியனுர் தாமுரைத்த தம்மே
 தப்பாது யிம்மருந்து சஞ்சீவி நிகராமே.
போமே நிலவாகை சமூலம் புகலும் புரசம் விரையதுவும்
ஆமேதாரம் பணவெடையு மதுதான் இரதம் காலெடையும்
நாமே பாணன் பழச்சாற்றில் நன்றாயருத்தித் தானருந்தத்
தாமே நோவில் தான் பூசத் தறுகாப் படர்தாமரை யறுமே.

தேமல், திரைக்கு

அறுமே தேமலது தானுமல்லாமல் திரையது தனக்குச்
சிறுமே நல்ல பனைவெல்லம் சேரில் திடமாய்த் திரைவீழும்
வெறுமே நாறு கரந்தையிலைமீதுச்சூதம் விட்டரைத்துத்
தெரிவீர் நல்ல வெல்லத்தில் தின்னிலத் திரை தீர்ந்திடுமே.

நிலவாகைவேர், சுழலாவாரைவேர், ஆவாரங்கொழுந்து இம் மூன்றினையும் பிரண்டைத் தண்ணீர் விட்டரைத்துப் பசுவின் பாலில் கொடுத்து, மேலும் பூசவும். இப்படி மூன்று நாள் செய்ய படர்தாமரை தீரும்.

திரைக்குத் தேங்காய்ப்பாலில் நாங்கிலுவை அரைத்து வெந்து அந்த நெய் கொடுக்கக் கூட்டோடே விடும்.

வேறு :—சாரணைவேரும், எலுமிச்சம்வேரும், காண மு மரைத்து விழுங்கத் திரை விழும்.

பல்வியாதிக்கு

பல்லசைவுக்கு—ஷி வலிக்கு.
வெகுவலியே யானைக்கால் பருத்தநெல்லிப் பருப்புடனே
மல்லசைந்த வெள்வேலின் மூலப்பட்டை தானிக்காயும்
கல்லசைய அரைத்து மாவாதே தேவதாரடியின் நங்குழிக்
நன்றாய்த் தேங்காய்நெய்யில் கருகாமல் வெந்து
பல்லுக்கன்னந்தேய்க்க அல்லலது தீரும்
அதிசயங் காணிம்மருந்து அறிந்து செய்யே. (1)

வேறு :—வெள்வேலம்பட்டையையும் ஆவாரம்பட்டையை யுமிடித்து ஊறப்போட்டு ஊறின தண்ணீரை அதிகாலையிலே ஏழுநாள் கொப்பளிக்கச் செய்ய பல்வாதமும் பல்லசைவுந் தீரும்.

சொத்தைப்பல்லுக்கு :—மேனிவேர், சாரணைவேர், வசம்பு இவைகளை நறுக்கிப் பல்லில் கூட்டிவைக்கத் தீரும்.

பல்வலிக்கு :—கமுகு வடக்குவேரைக் குளிசமாடிக் காதில் போட வலி நிற்கும்.

பல்வலுக்க :— மருதம்பட்டையைக் கரிச்சான்சாற்றி லூறப் போட்டு நிழலிலுலர்த்திப் பாக்குடன் தின்னப் பல்வலுக்கும்.

வேறு :—நத்தைச்சூரிவேரும் கருஞ்சீரகமும் நறுக்கி வாயி லொதுக்க வலி தீரும்.

வேறு :—தேவதாரங்கருக்கைத் தண்ணீர்விட்டுக் காய்ச்சிக் கொப்பளிக்கத் தீரும்.

பல்புழுவுக்கு :—முள்ளிப்பழமும் மேனிச்சாறும் நல்லெண்ணெயில் வேகவைத்து பல்லடிகள்தோறும் குத்தி வெந்நீர் கொப்பளிக்கவும்.

சொறி சிரங்குக்கு

நாரத்தம்பழச்சாறு எருமைச்சாணியில் சாரித்துப் பூசத் தீரும்.

வேறு :—நிலவாகைவேரும் துத்தமும் எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துப் பூசத் தீரும்.

வேறு :—கொடிக்கள்ளி கொழுந்தரைத்து சிறு எலுமிச்சங்காயளவு தவிட்டில் புரட்டிக் கால்மண்டலங்கொள்ள குட்டம், சொறி சிரங்கு இவை தீரும்.

வேறு :—தோலியாக்கலப்பைவேர் எலுமிச்சங்காயளவு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி ஐந்துநாள் தின்னச் சொறி, சிரங்கு தீரும்.

குடல்படுவனுக்கு

வாந்திப்பிராந்தி யெடுத்து தொப்புளைச் சுற்றி வலித்து, காலுங்கையும் கனுமாரினல் சட்டியைக் காயவைத்துக் காடிச் சோறு வருத்துக் கொட்டிப்போட்டு ஒருக்குலைப்பழஞ்சிலையைச் சுற்றிச் சுட்டுப்போட்டு அந்தச்சட்டியில் அரைப்படி தண்ணீர் விட்டு அரைக்கால் படியானல் இறுத்துக்கொடுக்கவும்.

ஒற்றடம் :—பசுவின் வெண்ணெயு மறுகு மரைத்து நாபியிலொற்றடம் போடவும்.

வேறு:—கண்டங்கத்தரியிலையையும் பச்சைமஞ்சளையும் இடித்துச்சாறுபிழிந்து உப்புக்கூட்டிக் கரைத்துக் கொடுக்கத் தீரும்,

வேறு :—ஈரவெங்காயமிடித்துச் சாறுபிழிந்து கொடுக்கத் தீரும்.

வயிறு மிஞ்சியெடுத்தால்

நீர்மோருஞ் சோறும் உண்ணவும். தொண்டை நொந்தால் சீனக்காரம் பொடிசெய்து எலுமிச்சம்பழச் சாற்றில் கொடுக்கத் தீரும்.

தேமலுக்கு

தேங்காயைச் சீலையில் சுட்டுப் பொடிசெய்து தயிரில் கொடுக்கவும்.

சுக்கிலப்பிரமியத்திற்கு

கருடப்பச்சை எலுமிச்சங்காயளவு அரைத்து பாலிலாவது இளநீரிலாவது கொடுக்கவும். சுக்கிலப்பிரமேகம், வயிற்றுக்கடுப்பு, வயிற்றுளைவு இவை தீரும். இப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

வேறு :—பசுவின் நெய் படி 1, ஈரவெங்காயம் அரிந்து படி $\frac{1}{4}$ இவைகளைக் கூட்டி வேகவைத்து பதத்திலிறக்கிக் கடுகுடன் மூன்று நாள் தின்னவும். புளி மறுக்கவும்.

வேறு:—பசுவின் பால்ஊறு பாலகக்காயவைத்து தினம் அரைப் படி ஈரவெங்காயம் அரிந்து புட்டவித்து அந்தப்பாலையும் உறை விட்டு விடியற்காலம் அந்தவெங்காயத்தை அரைத்து அதைத் தயிரில் கரைத்து அரைக்கால்படி நல்லெண்ணெயும்விட்டு ஒருபலம் கருப்புக்கட்டியும் தட்டிப்போட்டுக் குழப்பி இப்படி ஐந்துநாள் கொடுக்கத் தீராத பிரமியமெல்லாம் தீரும். பத்தியம் பச்சரிசி சோறும் பாலும் பனைவெல்லமும் கூட்டிச் சாப்பிடவும்.

தலைப்புற்றுக்கும் பிரமியத்திற்கும்

முழுக எண்ணெய் :—நல்லெண்ணெய் படி 1 கோழிக்கார மரைத்து நாரத்தங்காய்ப்பிரமாணம் குப்பைமேனியரைத்து அந்த அளவு கூட்டிப் பதத்தில் வடித்து முழுக இரண்டுந் தீரும்.

பற்பம் :—கோழிக்காரமெடுத்து வெள்ளிய சீலையில் பந்தாகச் சுருட்டி நாலெருவில் புடமிட்டு பணவெடைபற்பம் சீனியிலாவது கருப்புக்கட்டியிலாவது கொடுக்கவும். உப்பு புளி தவிர்க்கவும்.

குளிகை :—துத்திவேர் ஏலம் சமன்கொண்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்துப் பருஞ்சுண்டைக்காயளவு உண்டை நல்லெண்ணெயில் கொடுக்கவும்.

பிரமியத்திலெடுத்த வியாதிகளுக்கெல்லாம்

எண்ணெய்:—குறுந்தொட்டிவேர், சிறுகீரைவேர், பொன்னாங் காணிவேர், திரிபலை, விலாமிச்சம் வேர் இவை வகைக்குப் பலம் 5, நாலுமரக்கால் தண்ணீரில்போட்டு நாலொன்றாய்க் காய்ச்சி

வடித்து அதில் நல்லெண்ணெய் படி $\frac{3}{4}$, சிற்றுமணக்கெண்ணெய் படி $\frac{3}{4}$, நறுநெய் படி $\frac{3}{4}$, பசுவின்பால் படி 1, இளநீர்த்தண்ணீர் படி 1, எலுமிச்சம்பழச்சாறு படி 1, விலாமிச்சம்வேர், திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், வசம்பு, கடுகு, அரத்தை, கோட்டம், சாதிக்காய், இலவங்கம், வெள்வெங்காயம், ஈரவெங்காயம், சாரணைவேர், பரங்கிப்பட்டை, சந்தனம், பூதாவிருட்சம், பெருங்காயம், மஞ்சள், மரமஞ்சள் இவை வகைக்குப் பலம் 1, கூட்டி பால்வார்த்தரைத்துக் கலக்கிப் பதத்தில் வடித்து நாளொன்றுக்குக் காசளவு கொள்ளவும். கைப்பும் புளிப்பும் மறுக்கவும். பால் கூட்டவும். **எலும்புருக்கியும் கல்லடைப்புந்** தீரும்.

பிரமேகத்திற்கு, போதைக்கு

அரைப்படி அவல் மூன்றுபோது சாப்பிட்டு தண்ணீர் குடியாமலிருந்து, பத்தியமாகச் சீவனம் பண்ணவும்.

நாக்குட்டத்துக்கு

வேப்பம்பட்டை, ஆயில்பட்டை, கொடிவேலிவேர், சிவனார்வேம்பு, வெள்ளறுகு, சங்கங்குப்பி, காணம், புதுப்பானை கொண்டு வந்து முக்கால்பானை தண்ணீர்விட்டு சரக்குகளையெல்லாம் தட்டிப்போட்டு மூன்றுநாள் மருந்தூற விட்டுத் தினந்தோறும் முக்கால் படி தண்ணீர் கொள்ளவும். நீர்முள்ளி, நாயுருவி வகைக்குத் தூக்கு 4 கொண்டு வந்து சுட்டுச் சாம்பரைச் சிறுநீர் விட்டுக் குழப்பிப் பூசவும். பத்தியம்—நறுநெய்யில் ஈரவெங்காயம் பொரித்து அரைத்து உண்ணவும்.

அரையாப்புக்கு

இரதம் பலம் 2, நெல்லிக்காய்கந்தகம் பலம் 2, சங்கு சுட்டது பலம் 2, இவை இரண்டினையும் வெவ்வேறே பொடித்து ஒரு கலசம் அரைப்படி கொள்ளுகிறதாக எடுத்து சங்கம் பொடியைக்கலசத்தில் பாதிபரப்பி அதன்மேல் கந்தகப்பொடி பாதி பரப்பி அதன்மேல் ரசத்தைவிட்டு அதன்மேலே கந்தகப் பொடியைப்பரப்பி அதின்மேலே சங்குப்பொடியைப் பரப்பிச் சித்திரப் பாலாடைச்சாறு பூராவிட்டு ஒருமுழ உயரம் எருவடுக்கித் தீ போட்டு அதன்மேலே கலசத்தை வைத்துத் தண்ணீர்வற்று

மட்டும் அனலிலே யிருந்து வெந்துபொங்கினுல் ஆற்றி தண்ணீர் வற்ற விட்டு நறுக்கிப் பொடிசெய்து குழலிலடைத்து ஒருபண எடை கருப்புக்கட்டியில் பொதித்து கொடுக்கவும். இப்படி அரை மண்டலங் கொடுக்கப் புரையுள்பட அடைபடும். பத்தியம்: புளி மறுக்கவும், கிள்ளிக்கீரை, முருங்கையிலே, காய், வெள்ளாட்டு உப்புக் கண்டம் கூட்டவும்.

வேறு :—நவாச்சாரமும் சுண்ணும்பும் சமபாகமாகக் கூட்டித் தண்ணீர்விட்டரைத்துப் பூசிக் கையாலே தடவித்தடவித் தண்ணீர் விட்டுத் தடவியிருக்க வற்றிப்போம். அதன்பிறகு சீலேயை நாலாறு மடிப்பாக மடித்துப்போட்டு வெந்நீர்விட வற்றிப்போம்.

வேறு :—கௌரியை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துப் பற்றுப்போடவும். இதிலடங்கா வியாதியானுல் இந்தப் பாஷாணத்தை ஊமத்தையிலேச் சாற்றி லரைத்து பணஎடை உருமால் சீலேயிலுள்ள மத்திச்சீலேயை மடித்துப்போட்டு அதற்கு முன்பு வளையலோடு கொண்டு கீறி இந்தச்சீலே போட்டு மூன்றுநாள் வெந்நீர் விடவும்; தீரும்.

பவுத்திரத்திற்கு

முருங்கை விதை 10. சீரகம் பலம் 1, ஏலம் பலம் 1, பச்சைக் கற்பூரம் பலம் 1, காகோளி, கலப்பைக்கிழங்கு இவைகளை யரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பிக் கொடுக்க பவுத்திரம், அரையாப்பு, மேகம் இவை தீரும்.

வேறு :—பிரண்டைவேர் சிறுக நறுக்கி அரைத்து மூன்று முட்டை வெள்ளைக் கருவில் பிசைந்து, நல்லெண்ணெயில் அடை சுட்டுத் தின்ன மூலப்பவுத்திரம் தீரும். இப்படி மூன்று நாள் செய்யவும்.

வேறு :—ஆவரைவேர்ப்பட்டை பாக்களவு அரைத்து நல்ல வெல்லமும் கூட்டி நெய்யில் தின்னத் தீரும். இப்படி கொழுந்தும் ஆம்.

வேறு :—சித்திரமூலத்தை அரைத்துச் சர்க்கரைகூட்டி மத்தித்து மூன்றுநாள் தின்னவும். தினம் இரண்டுநேரமும் கொள்ளவும். பத்தியம் காக்கவும். கண்டிப்பிருந்தால் ரசக்களிம்பைப் பூசி வெற்றிலே வாட்டிக் கட்டவும்.

வேறு :—ஒருபிடி அரிசியும் ஒருபிடி உப்பும் வெள்ளாட்டின் கோமயத்தில் வேகவைத்துச்சோறு சதங்கைக்கொதியிடும் பருவத்தில் கோழிமுட்டை வெள்ளைக்கரு விட்டு வெந்து இறக்கிப் பின்பு வேலிப்பருத்தியிலை பறித்துக் கசக்கிச் சிறுகச் சாறுபிழிந்து சோற்றை வழித்து மத்தித்து உருட்டிச் சில்லாகத்தட்டிச் சூடு பொறுக்க வியாதியில் வைத்துக் கட்டவும். நன்றுயிருக்கிக் கட்டவும். இப்படி ஐந்துநாள் கட்டவும். முதனுள் வெதும்பி, மறுநாள் பழுத்து, மூன்றுநாள் உடைந்து, நாலாநாள் சீயும் ஆணியும் தெறித்து, ஐந்தாநாள் ஆறிப்போம். பிறகு ஒருகாலும் வராது. முளையரையாப்புக்கும் பிளவைக்குமாம்.

வேறு :—சாதிக்காய் நல்லதாக மூன்று கழஞ்சு கொண்டு மூன்றுநாளைக்குத் தினமும் ஒரு கதலிப்பழத்திற்குள்ளே ஒரு கழஞ்சுகாயை வைத்துத் தின்னவும். இப்படி மூன்று நாள் தின்னவும்.

நீர்சுருக்குக்கு

கருஞ்சீரகம் பொடிசெய்து குமரிச்சோறும் வாங்கி வங்காளச் சீனியும் கூட்டிக்கொடுக்க நீர்விடும்.

நெய் :—பேய்ப்புடல், ஆடாதோடை, வேப்பம்பட்டை, முன்னைவேர், சீந்தில்தண்டு இவை வகைக்குப் பலம் 10 தரித்திடித்து 6 மரக்கால் தண்ணீரில்போட்டு எட்டொன்றுக்கி வடித்து அதில் பசுவின் நெய் படி $1\frac{1}{4}$ கூடவிட்டு, கோட்டம், செவ்வியம், சித்திரமூலம், கல்மதம், சதகுப்பை, விளாவரிசி, கடுகுரோகணி, சிறுமூலம், அத்தித்திப்பிலி, மஞ்சிட்டி, யவாட்சாரம், அதிவிடயம், ஓமம், வெந்தயம், தேவதாரம், துருசு, துத்தம், சீரகம், கடுக்காய், வசம்பு, சாதிக்காய், செவ்வள்ளிக்கொடி, வெள்ளைக் குந்திருக்கம், ஆக வகைக்குப் பலம் 1, குக்கில் பலம் 15, கடைமருந்தெல்லாவற்றையுமிடித்து வஸ்திரகாயம் செய்து அந்தக் குடிநீரில் போட்டு குக்கில் பலம் 15-ல் ஐந்துபலம் கூடப்போட்டுக் காய்ந்த குடிநீர் விட்டரைத்து அதைக் கலக்கிக்கொண்டு பேய்முசுட்டை வேர், ஆவாரைவேர்பட்டை, பாலைச்சருகு (குளப்பாலையிலை), சித்திரப்பாலாடை ஆக வகைக்கு பலம் 1, வீதம் அரைத்து நெய்யில் கலக்கி மெழுகு பதத்தில் வடித்துக்கொள்ளவும். பிறகு குக்கில் பலம் 10, வெந்தநெய்விட்டரைத்து அந்த நெய்யில் குழப்பி அடுப்பில்வைத்து ஒருகொதியிலிறக்கவும். மாங்கிஷத்திலெடுத்த எல்லாவகைச் சுருக்குந் தீரும்.

பற்று :—முயல்புழுக்கை, எலிப்புழுக்கை, சிற்றுமணக்கெண்ணெய்விட்டரைத்துத் தொப்புள் முதல் அபானவாய்வரையும் பற்றுப்போடவும்.

உள்ளுக்கு :—பெருநெருஞ்சிக்காயைப் பால்விட்டரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து அரைப்படி பாலில் கலக்கிக் கொடுக்கவும்.

வேறு :—வெள்ளரிவிதை அந்தப்படியே அரைத்துச் சீனியில் கொடுக்கவும்.

வேறு :—முருக்கக்கொழுந்து எலுமிச்சங்காயளவு அரைத்து மேதிவெண்ணெயில் குழப்பிக் கொடுக்க நீர்ச் சுருக்குத் தீரும். இப்படி மூன்று நாள் கொள்ளவும்.

வேறு :—சிற்றுமணக்கெண்ணெய் படி ¼, நெருஞ்சி சமூலம், ஈரவெங்காயம், கற்றாழை வகைக்குச் சாறு படி ¼, ஈரவெங்காய மரிந்து துட்டெடை சேர்த்துக்காய்ச்சி சிவந்த பதத்தில் வடித்துக் கொள்ளவும். பொரிகாரம் பொரித்துக் கூட்டிக் கொடுக்கத் தீரும்.

வேறு :—நெய்க்கொட்டான் பழத்துப் பருப்பும், புளியும், உப்பும் அரைத்துத் தண்டிலிருந்து அபானவாய்வரைக்கும் பூச நீர் விடும்.

நீர் கடுப்புக்கு

கடுக்காய் பலம் 1, சீரகம் பலம் 5, இவைகளை வெதுப்பி எலுமிச்சம்பழச்சாற்றிலாட்டிக் கூட்டிக் குழப்பிக் கொள்ளவும். இப்படி பத்துநாள் கொடுக்க துர்மாங்கிஷக் கடுப்புத் தீரும்.

கல்லடைப்புக்கு

இரு வெள்ளரிக்காய்களை உமிக்காந்தலிலே புழுங்கவைத்துச் சுட்டு அரைத்துப் பொரிகாரம்கூடப் பொரித்துப்போட்டு நெருஞ்சிக்காயும் அரைத்துக் கூட்டிப் பசுவின்பாலில் கொடுக்கக் கல் விழும். சவுக்காரத்தைக் குதிரைமூத்திரத்திலுரைத்து நெரிய கோரையில்தடவி தண்டில் செலுத்தி அரைநாழிகை சென்றால் வாங்கிப்போம். கல்லும் தெறிக்கும்.

வேறு:—வெடியுப்பு பலம் இரண்டை இருநாழிதண்ணீர்விட்டு வற்றிக் கால்படி ஆனால் குடிக்கக் கல்விழும். வெண்ணெயுடனே கலந்து விழுங்க கல்விழும்.

தூர்மாமிச அடைப்புக்கு

கீரந்தம் பலம் 2, முட்டை ஓடு பலம் 2 இவைகளை வெவ்வேருகப் பொடித்துச் சிவப்புக் கற்ருழைச்சாறு இடித்துப் பிழிந்து வடிகட்டி இந்தச்சாற்றில் கொடுக்கவும். தூர்மாமிச அடைப்புத் தீரும்.

உள் நாக்கிற்கு

பங்கம்பாளையிலையரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பி உச்சந்தலையில் பற்றுப்போட உள்நாக்கு உள்ளேவாங்கும்,

* அண்டிக்கு

மங்கையரை அண்டியதுவந்து பிள்ளைத்தான் மெலிந்தால்,
சங்கையற மருந்தொன்றுகேள்—அங்கத்துள்
கல்நார் பொடிசெய்து கத்தாவின் வெண்ணெயிட்டுத்
தின்னுமல் தானுருக்கித் தின்றிடுகில்—உன்னிதமாய்
வந்த அண்டி தான்வாங்கும் வார்குழலே சோகையும்போம்,
இந்த இயல்பு கேள்—அந்தமுள்ள
ஊச்சியது கொண்டுவந்து ஒண்ணுதலா ரடுப்பில்,
காச்சிமிகுந்த கன்னலதனில்—ஆச்சியரே
உமியைப்பரப்பி ஊச்சியதின் மேல்வைத்துச்
சமிய உமிமேலும் தான்பரப்பி—வசியறவே
நீருகவெந்ததற்பின் நீரில்வெருகடிதான்.
வீருயருந்தமிகவும் நன்று—சூதாகத்
தின்னுத பிள்ளையென்ருல் சீராய் மெத்தத்தயிரில்,
மின்னே குழைத்தருந்த மெத்த நன்று—அன்னையரே
புளியதுமேல் பட்டைவெட்டிப்புறணிதனைப் போக்கியபின்,
அளிய அரைத்து நன்ருயன்பாகப்—பழுதில்லா,
மேதிப்பால் தன்னில் மிகக்கருத்துத் தானருந்த,
சாதித் தண்டியதுதான் தீரும்.

தண்டாலே இரத்தம் விழுவதற்கு

பருத்தியிலைச்சாறுபடி $\frac{1}{4}$, அதில் கல்லைக் காய்ச்சிப்போட்டு முலைப்பாலும் நெய்யும்கூட்டி கல்லையெடுத்துப்போட்டு மூன்று

---

* பெண்தோடத்தைக் குறிக்கும்.

காசெடை நல்லெண்ணெய்விட்டுக் கொடுக்க தண்டுரத்தம் விழு கிறதும் பெரும்பாடுந் தீரும்.

மூலக்கடுப்புக்கு

நெட்டிலை, சாரணைவேர் இவைகளை நறுக்கி நாழிப் பசுவின்பால் விட்டவித்து உலர்த்திப் பொடி செய்து, நெய்யும் சர்க்கரையும் கூட்டி கொட்டைப்பாக்களவு கொள்ள மூலந் தீரும்.

வேறு:—சித்திரமூலமரைத்து ஒரு பாக்களவு. உழக்கரிசி பொங்குகிறபோது அந்த மருந்தைக் கூடப்போட்டுக் கிண்டித் தின்னவும். இது படுவன் பிளவைக்கும் ஆம்.

மூளைக்குத் தடவ மருந்து

குன்றிப்பருப்பையும் வெண்காரத்தையும் இலைக்கள்ளிச்சாறு விட்டரைத்து விரலில் தடவி அபானவாயில் தடவ மாறும்.

வேறு:—நூறு கரந்தையிலைகளைப் பறித்துப் பிண்ணாக்கு விட்டு புழுக்கித் தின்ன கூட்டோடே மாறும்.

மூலம் வெளியே புறப்பட்டால்

குப்பைமேனி சமூலம் பிடுங்கி உலர்த்திப் பொடி செய்து குடுக்கையில் வைத்துக்கொண்டு மூலம் புறப்பட்டால் சட்டியிலே நெருப்பிட்டுப் பொடியைப் போட்டுப் புகை காட்டவும்.

மூலம் கண்டிதமாய் மலம் விடாமல் வயிறு வீங்கினால்

கடுக்காய் 2, பேய்க்கடுக்காய் 2, இவைகளையரைத்து ஒருபடி தண்ணீரில் போட்டு நாலொன்றாய்க் காய்ச்சி யிறுத்துத் தேன் விட்டு அளாவிக் கொடுக்கவும். வீக்கமும் தீரும்.

உள்மூலத்திற்கு

கத்தரித்தனிளம் பிஞ்சில் சுமுரிளவிரியா தொன்றில்
கயல்விழியீர், பெருங்காயம் கால்கழஞ்சு விட்டரைத்து
சத்திபெற மூன்றுநாள் தானுருட்டிக்கொள்ளில்
தருகிவிடு மூலமது தானருந்தி அப்பால்

சித்தணங்கே சுண்டிதனைச்சீவி உப்புப் பொடித்து
தீயதனிலே வெதுப்பி உப்பைத்தானுதிர்த்துப் போட்டு
கொடுத்தலா லரைத்தூரிய தண்ணீரில் வெந்து
குழம்பாக்கிப் படி அரைத்துக் கால் கொண்டருந்தக்
[குணமே

கொண்டருந்தக் குணமாகும் காரைவடவேரில்
குறையாமல் புழுங்கரிசிகூட்டி நன்றுயரைத்து
விண்டலருங்குழலாரே மேதியது நெய்யில்
மெதுவாக அடை சுட்டு மிகுந்த நெய்விட்டருந்தி
லப்பனே கண்டமூலமது பதரிவிழுந்தோடும்,
பாங்காக இப்படித்தான் பரிவுடனே தின்னென்று
தப்பாது அன்று முனிதானுரைத்ததம்மே
அரிவையரே யிம்மருந்து அறிந்து செய்து கொள்ளே.

பீமருதம் பட்டையது தன்னைத்திகழெலுமிச்சங்
காயளவரைத்து நெய்கடைந்த முன்னாளே
போதுமான வரையில்நேரிழையே கரைத்தருந்தத்
தீருமிந்த மூலம் உமையணங்கே
மூக்கறணை வேரினோடு வலிய சுக்குத்தான் கூட்டி
எட்டொன்றாய்க் காய்ச்சி ஐயமின்றி
அத்தாளம் அமுதின்மேல் அருந்த
அகலுமென்று நல்லதென்று அறிவித்தாரே.

நல்லதென்று நத்தையதின் கறியவித்து
நவின்றேம் நல்தேங்காயும் அருந்த நன்று
அல்லதொடு மூன்றுமைக்கறி யரைத்து
அளவாகப் பசுவின் பாலிலருந்த நன்று
வல்லணங்கே நாரத்தின் பழத்தின்சாறு
வாகாக நாலுபடி நாழியாக
மெல்ல வெந்து அளவாக நாற்பது நாள்
விரும்பி நக்கில் மூலமது விழுந்து போமே.

புறமூலத்திற்கு

கொள்ளே புறமூலந்தனக்கு
குளிர்தாமரையிலை கோவையிலை,
உள்ளே மணக்குமிருள்ளி
ஒக்கவிடித்து நெய்யில் வெந்து,

பள்ளே பீதுங்கிப்பேர்க்காமல்
பருத்தியிலையை அடைசேர்த்து,
நள்ளேமூலந்தனை யணைக்க
நன்றாய் வீக்கம் கடுப்பறுக்கும்.
கடுப்பேயறுமே முதலைவிட்டைக்
கதிக்கக் கழஞ்சா மூன்றுடனே
கொடுப்பீ ரரிதாரங் கழஞ்சு
கூட்டி நன்றாய்ப் பொடிசெய்து
அடுப்பே கூட்டி ஆளதனை
அதிலே உட்கார்ந் திருக்கவைத்து
எடுத்தே அனலில் புகைபிடிக்க
எழுந்தே வாங்கும் மூலமதே
வாங்குஞ் சீயும் ரத்தமுடன்
மாறாக்கடுப்பு வீக்க மறு
மேங்கு மண்டித்தான் தீரும்
ஏதா திருக்கி லிதன்கூடத்
தாங்கும் ஆமை யடலதுவும்
தரித்த மாட்டுக் கொம்புடனே
ஓங்குங் குந்திருக்கங் கூட்டில்
உடனே மூல வாயறுமே.

வேறு

தோத்து விடுந்துடரிய தினிலையுமிரு நாழிச்
சுரிகுழலே நான்றாகச் சுருதிபடவரைத்து
ஆத்திலுன்னப் புழுங்கலத்தின் அரிசியது உழக்கு
ஆரணங்கே கரும்புக்கட்டி அஞ்சுபலம் கூட்டி
தேத்தமுட னிம்மூன் றுஞ் சிந்தா மலேயரைத்துச்
சீருடனே விளக்கெண்ணெய் சேர அடைசுட்டுப்
பாத்திருந்து விடியிரண்டு நாழிகையில் தின்னப்
பறிந்துவிடும் புறமூலம் பறிந்திடுநாள் மூன்றே.

வேறு

மூன்றேயெடுசீனக் கிழங்குப் பொடியதுவு ழக்கு
முன்னரிந்த யீருள்ளி தானுமது வுழக்கு
ஆண்டகையே கருப்புக்கட்டி தானுமரைப் படியாம்—
அடைவாக இம்மூன்றும் விழுதுபட அரைத்து

வேண்டுநல்ல சட்டியதில் விளக்கெண்ணெய் படிகால்
விட்டு நன்றுய்க் காய்ந்தவுட னிப்பொடியைப் போட்டுப்
பாண்டமதில் பற்றுமல் பதந்தீரக்கிண்டிப்
பருகிடவே நாள்மூன்றில் பாறிடு மூலமுமே.

நெய் :—நறுநெய் $1\frac{3}{4}$, பெரும்பூசனிக்காய்த்தண்ணீர் படி 3, தாழைவிழுதிச்சாறு படி 1, பொன்னுங்கணிச்சாறு படி 1, சதாவேரிச்சாறு படி 1, நிலப்பனங்கிழங்கு சாறு படி 1, இவைகளைச் சேகரித்து சீரகம் பலம் $\frac{3}{4}$, கோட்டம் பலம் $\frac{1}{2}$, சண்பகப்பூ பலம் $\frac{1}{2}$, சாதிக்காய் பலம் 1, கிராம்பு பலம் 1, விலாமிச்சம்வேர் பலம் $\frac{1}{4}$ இவைகளையெல்லாம் முறைப்படி சேர்த்து வேகவைத்து வடித்து இருபது நாள் கொள்ளவும்.

வேறு :—காட்டுக் கருணைக்கிழங்கு தோல் சீவி நிழலிலுலர்த்திப் பொடி செய்து வெருகடிப்பிரமாணம் இராத்திரியில் பசுவின் பாலில் போட்டுக் கொடுக்கவும்.

வேறு :—பொன்னுங்காணி சமூலம் பலம் நான்கை இரண்டு படி நீரில் போட்டுக் குடிநீராக்கி, உழக்கு நறுநெய் பகிர்ந்துவிட்டு ஐந்து நாள் கொடுக்கவும். கால்பலம் சீனியும் ஐந்து பங்கிட்டுக் கூட்டிக்கொள்ளவும்.

வேறு :—அதிமதுரம், சீரகம், மிளகு, சரிகொண்டரைத்துச் சுண்டைக்காயளவு உண்டை செய்து ஒருண்டை மோரில் கொடுக்கக் கடுப்புத் தீரும்.

வேறு :—நெல்லிப்பருப்பை அரைப்பலம் அரைத்துக்கொண்டு சர்க்கரை பலம் $\frac{1}{4}$, பூங்கதலிப்பழம் 5 இவைகளையெல்லாம் பிசைந்து மூன்று நாள் கொள்ளவும், கடுப்பும் ரத்தக்காந்தலும் தீரும்.

நீர்ச்சுருக்குக்கும் வயிற்றுக்கடுப்புக்கும்

பெருந்தும்பைவேரை எலுமிச்சங்காயளவு அரைத்துப் பசுவின் பாலில் கொள்ளவும்.

எண்ணெய் :—நொச்சியிலை, வாதமடக்கி, குப்பைமேனி, துளசி, வல்லாரை, தைவேளை, அதிமதுரம், கோட்டம், செஞ்சந்தனம், நற்சந்தனம், தேவதாரம், கடுகுரோகணி, வாய்விளங்கம், கொத்தமல்லி, பச்சைச் சண்பகப்பூ, சிறுநாகப்பூ, வெட்

பாலரிசி, மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், அபின், கஞ்சா இவைகளை யெல்லாம் கூட்டி எண்ணெய் வைத்து முழுகவும்.

வேறு :—சிற்றகத்தியிலை அரைத்து வெள்ளாட்டின் பாலில் கொடுக்கவும்.

வேறு :—வல்லாரை சமூலம், முசுமுசுக்கை சமூலம், கருவேல், மாதுளை, வெட்பூலா, மருது, அத்தி, நாவல், அரசு இப்பட்டை கள் வகைக்கு பலம் 1, திப்பிலிமூலம், கடுக்காய், ஈரவெங்காயம், சுக்கு, திப்பிலி, ஏலம் இவை வகைக்குப் பலம் 2, கொத்தமல்லி, கல்நார், ஓமம், வாய்விளங்கம், சிவதை, அதிமதுரம், கடுகு ரோகணி, மாசிக்காய், கிராம்பு, லவங்கப்பத்திரி இவை வகைக்குப் பலம் 1, சீரகம் பலம் 3, ஆக இம் மருந்துகளையெல்லாம் சேகரித்து ஒன்பது படி தண்ணீர் விட்டு மூன்றுபடியாக வற்ற விட்டுக் கால் படி இறுத்துக் கொடுக்கவும்.

வயிற்றுக்கடுப்புக்கு

மாது செறியும் பூங்குழலே
மாதளங்காயைச் சூழ்ந்தறுத்து
மோது விரையைத்தான் களைந்து
மிகுந்த விடயம் கிராம்பினும் நற்
சீரகுரோசானி சாதிக்காய்
எம்மாது நல்லீர்காயிலிட்டு
வருந்தக்கட்டி நீரிலிடே
இடுவீர் நீர்தான் ஒருபடியில்
இணக்கக் காய்ச்சி உழக்காக்கி
நடுவே யிருந்த மருந்தெல்லாம்
நன்று யரைத்துத் தானல்க
குவடுவரா குழலேயிந்தவிதம்
மயங்காதிருந்து குடிப்பீராய்
விடுமே வயிற்றுக்கடுப்பதுவும்
மீளமருந்து வேண்டாமே.

வயிற்றுக்கடுப்புக்கு, கர்ப்பிணி வயிற்றுக்கடுப்புக்கு

சீருடன் விடையம்மோதம் சீரகம் நெல்லிகஞ்சாம்
பாருடனதிமதுரம் பகர்ந்திடாய் திரிகடுகு
கூர்குரோ சானியபின் குறித்ததோர் ஏழுநாலும்,
சேருமா தளங்காய் தன்னில் சிறக்கவே வைத்துமூடி

மூடியே சாணிகொண்டு முண்டமாய் பொதிந்துநன்ருய்
நாடியே வருந்தச்சுட்டு நல்கிய மருந்தெடுத்துத்
தேடியே ஆவின்பாலில் சிறிப்புடனரைத்துத் தேனில்
ஓடியே கொடுப்பீராகில் ஒளிந்திடும் கடுப்புத்தானே.

வயிறது கடுத்துளைந்துரத்தமே விழுகுதென்றுல்,
விரைய வெள்வேலம் பட்டை நெல்லிமிகுந்த
[மாங்கொட்டை யுள்ளிச்
சரசமாயரைத்து மேதித்தயிருடன் கொள்வீராகில்
வயிறது கடுப்புத் தீர்ந்து ரத்தமும் மாறுமென்க.

வேறு :—செம்பொன்னெருஞ்சி சமூலம், ஆவாரைப்பஞ்சாங்கமும் மேற்படி சாற்றிலரைத்துச் சர்க்கரை கூட்டிக்கொடுக்கச் சீயும் ரத்தமும் மாறும்.

வேறு :—சிவந்தசாரணைவேரை யரைத்துப் பசுவின்பாலில் கொடுக்கத் தீரும்.

வேறு :—மிளகுபொடித்து நெய்யில் விழுங்க மாறும்.

வேறு :—மாம்பட்டை, மருதம்பட்டை, அத்திப்பட்டை, நாவல்பட்டை இந்த நான்கு பட்டைகளையும் துவைத்துப் புட்டவித்துப் பிழிந்துகொண்டு அதில் சீரகமரைத்துப் பாக்களவு கூட்டி மேதித்தயிரில் கொடுக்கவும். கர்ப்பிணியின் மேல்கடுப்பு உட்படத் தீரும்.

வேறு :—நாவல்பட்டைச்சாறு படி 1, சட்டியில் விட்டு உழக்காகக் காய்ச்சி இதில் கால்படி வெள்ளாட்டின் பால்விட்டுக் கொடுக்கவும், உதிரக்கடுப்புத் தீரும்.

வேறு :—பீமருதம்பட்டையரைத்துக் கிடாரிக்கோமயத்தில் கலக்கிப் பருத்திவிதைப் பிரமாணம் சுண்ணும்பு கூட்டிக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

வேறு :—காட்டுமாம்பட்டைச்சாறு இடித்துப்பிழிந்து குடிக்கிறசமயத்தில் பருத்திவிதைப்பிரமாணம் சுண்ணும்புகரைத்துக் கொடுக்க வயிற்றுக்கடுப்பு, அண்டி இவை தீரும்.

வேறு :—எருமைத்தயிர் வடிகட்டிக் கற்கம் எடுத்து வேப்பீர்க்குப் புரணி அரைத்துப் பாக்களவு, சீரகம் பொரித்தரைத்து அந்த அளவு கூட்டிக் கற்கத்தில் குழைத்துக் கொடுக்கவும்.

இதிலடங்கா வியாதியானல் ஒருதுளி ஊமத்திலைச் சாறு கூட்டி யிடவும். கடுப்பு நிற்கும்.

சோகைக்கு வெள்ளாட்டின் கோமயத்தில் கொடுக்கவும். பித்தத்திற்கு பசுவின் பாலில் கொடுக்கவும். இருமலுக்கு தேனும் திப்பிலியும் கூட்டிக் கொடுக்கவும். ஆண்கட்டுக்கு சர்க்கரையில் கொடுக்கவும். சுரத்திற்கு இளவென்னீரிலிடவும்.

காமாலை, சோகை, பித்தபாண்டுகளுக்குப் பற்பம்

காந்தம் பலம் 1, கந்தகம் பலம் 1, இரதம் பலம் 1, அரப் பொடி பலம் $2\frac{1}{2}$, இவைகளையெல்லாம் குமரிச்சாறு விட்டரைத்து ஒரு சாமம் நன்றாயரைத்துக் கலத்தில் அப்பி வேடு கட்டி வெயி லில் வைக்கப் பற்பமாம். இதில் பணஎடை பழமோரில் கொடுக்க காமாலை, சோகை, பாண்டு, விஷபாகம், வீக்கம், பொருமல், நீர்க்கட்டு இவை தீரும்.

வேறு :—காமாலைக்கு :—காணத்தண்ணீர் படி $\frac{1}{4}$, உவர்மண் தண்ணீர் படி $\frac{1}{4}$, சுண்ணும்புத் தண்ணீர் படி $\frac{1}{4}$, ஆக இவை மூன்றினையும் கலந்து கொடுக்கக் காமாலை, சோகை இவை தீரும்.

வயிறு அதிகமாகயெடுத்தால்

பழமாங்கொட்டைப் பருப்புப் பாக்களவு அரைத்துக் கொடுக்கவும்.

பித்தபாண்டுக்கு

தலைவிரிச்சான்காய் 10 அரைத்து உண்டை செய்து பத்து நாள் தின்னத் தீரும்.

வேறு :—காந்தம் பலம் 4, அரப்பொடி பலம் 8 இவைகளைத் தண்ணீர் விட்டு நன்றாயரைத்து ஒரு சிறு கலசத்தில் வைத்துச் சீலைமண் செய்து கோழிப்புடம் போட்டு பிறகு பொடி செய்து கொள்ளவும்.

அனுபானம் :—எலுமிச்சம்பழம் 40, கொண்டுவந்து ஒன்றை நாலு கவறாய்க்கீறி மருந்தை அறுப்பு வாய்கள்தோறும் தடவிப் புதுச்சட்டியில் வைத்து ஒருபடி கரிப்பான்சாறு விட்டு ஐந்துநாள் சூரியபுடம் வைத்து இருபதுநாள் இரண்டு நேரமும் தின்ன,

காமாலே, சோகை, பாண்டு, வயிற்றெரிப்பு, பயித்தியம் இவை தீரும்.

வேறு :—சிற்றுமணக்கெண்ணெய் படி 5, தேங்காய்ப்பால் படி ¼, சதுரக்கள்ளிப்பால் படி ¼ இவைகளைக் கூட்டி வெந்து கடுகுபதத்தில் வடித்து ஒரு சிறு கரண்டி கொள்ளவும். குன்மம், பெருவயிறு, மகோதரம், பித்தபாண்டு, விஷபாகம், காமாலே, வாயுத்திரட்சி இவை தீரும்.

வேறு :—ஊசிக்காந்தம், பழையஇரும்புக்கிட்டம், பழைய செங்கல், பழங்காரை, அரப்பொடி, மிளகு, களிப்பாக்கு இவை களைச் சமன்கூட்டிப் பொடித்து வெருகடிப்பிரமாணம் மேதி மோரில் பத்துண்டை கொள்ள காமாலே, சோகை, விஷபாண்டு, விஷபாகம் ஊதுகாமாலே இவை தீரும்.

வேறு :—* துடரிசமூலம் பலம் 40 சஞ்சீவியிலே, பலம் 40, பனேயோலே பலம் 40, தென்னேமட்டை பலம் 40, நீர் முள்ளி சமூலம் பலம் 40, நெருஞ்சி சமூலம் பலம் 40, வாழைச்சருகு பலம் 40, குமரிச்சருகு பலம் 40, பனங்கதிர் பலம் 40, எருக்கம்வேர் பலம் 40, சித்திரமூலம் பலம் 30, இவைகளையெல்லா மெரித்துச் சாம்பராக்கி ஐந்து மரக்கால் தண்ணீரில் கலக்கித் தெளிந்த பிறகு ஒன்றரைப்படி தண்ணீர் இறுத்து ஒரு சிரங்கை நெல்லரிசி போட்டுக் கஞ்சி வைத்துக்கொள்ளவும். இப்படி இருபதுநாள் கொள்ளவும். பாண்டு, காமாலே, விஷபாகம், சோகை இவை தீரும்.

துவாலே :—திருகுகள்ளி யிடித்துச் சாறு பிழிந்து தரையிலே புளியம் பொருக்குப் போட்டுச் சுட்டுத்தள்ளிப்போட்டுத் தரை யிலே இந்தச்சாறு விட்டுக் குழப்பித் துவாலேயாகப் போடவும்.

இதனால் நீரடைத்தால் மருந்து :—குமரிச்சாறு, காடிமண்டி, முலேப்பால், சந்தனம், விளக்கெண்ணெய் இவைகளையெல்லாம் குழப்பி அடிவயிற்றில் பற்றுப் போடவும் ; நிற்கும்.

குடிநீர் :—வெள்ளாட்டின் கோமயம் படி 3, பசுவின் கோம யம் படி 3, தண்ணீர் படி 6, இவைகளைக் கூடவிட்டு †முப்புரமெரித்தான்வேரும், நெருஞ்சி, சிந்தில்தண்டு, முசலி, சிறுபீளை, பிரமி, குருவிச்சு, துடரி, ஆடாதோடை, சிவன்வேம்பு,

* புலித்தொடக்கி. † சிவகரந்தை.

விறுவட்டு, நீர்முள்ளி, விஷ்ணுக்கிரந்தி, குமரிச்சருகு இவை வகைக்குப் பலம் 2, பற்படாகம் பலம் 1, வெள்வெங்காயம் பலம் 1, கடுக்காய், களிப்பாக்கு, கடுகுரோகணி, சிவதை, சுக்கு, மிளகு, மஞ்சள், இவை வகைக்குப் பலம் 2, இவைகளை யெல்லாம் நன்ருயிடித்துக் குடிநீரில் போட்டுக் காய்ச்சி இரண்டரைப்படியாக்கி அரைப்படி குடிநீரில் பொரிகாரம் பொரித் துப்போட்டு இப்படி ஐந்துநாள் கொள்ள பாண்டு, சோகை, விஷபாண்டு இவை தீரும்.

விஷபாகம், பாண்டுரோகங்களுக்கு

சிற்ருமணக்கெண்ணெய் படி 1, வெண்சிவதை பலம் 1, கடுக்காய் பலம் $\frac{3}{4}$, நேர்வாளம் பலம் $\frac{3}{4}$, வெண்காரம் பலம் 2, சிரட்டை சுட்டகரி பலம் 1, சுக்கு பலம் 1, மிளகு பலம் 1, திப்பிலி பலம் 1, சதிரக்கள்ளிப்பால் பலம் 6, இவைகளையெல்லாம் பிரமிச்சாருவது, முருக்கிலைச்சாருவது விட்டரைத்து எண்ணெயில் விட்டுக்காய்ச்சி சேறுபதத்திலிறக்கிக் கடுகுடன் ஒரு கரண்டி கொள்ள பாண்டு, விஷபாண்டு, கெண்டைவாயுதிரட்சி, வாயு இவை தீரும்.

குடிநீர் :—தூதுளைவேர், கண்டங்கத்தரிவேர், மிதிபாகல்வேர் வெள்ளைச்சாரணைவேர் இவை வகைக்கு ஒருபிடி, பிரண்டை சமூலமிடித்த சாறு படி 1, கோமூத்திரம் படி 6, பெருங்காயம் பலம் 1, திப்பிலி பலம் 1, கருஞ்சீரகம் பலம் 1, அதிமதுரம் பலம் 2, கோட்டம் பலம் 2, இந்துப்பு பலம் 2, காந்தம் பலம் 2, சுக்கு பலம் 3, விலாமிச்சம்வேர் ஒருபிடி, கடுக்காய்ப்பொடி பலம் 3, நேபாளம் சுத்தி செய்தது பலம் $\frac{1}{4}$ இவைகளைக்கூட்டிக் குடிநீர் காய்ச்சி ஒரு நாளைக்கு அரைக்கால் படி கொடுக்க வீக்கம் தீரும்.

காமாலை

இருப்புக்கிட்டப்பொடி படி $\frac{3}{4}$, கடுக்காய்ப்பொடி படி $\frac{3}{4}$, கழற் சிப் பருப்பு படி $\frac{1}{4}$, மிளகுப்பொடி படி $\frac{3}{4}$, மரமஞ்சள்பொடி படி $\frac{3}{4}$, முருக்கிலைச்சாறு படி $\frac{3}{4}$, காட்டுக்குறிஞ்சிச்சாறு படி $\frac{3}{4}$, ஆடா தோடைச்சாறு படி $\frac{3}{4}$, வேலிப்பருத்திச்சாறு படி $\frac{3}{4}$, கன்னிப்பால் படி $\frac{1}{4}$ இவைகளையெல்லாம் அந்தச் சாற்றிலூறப்போட்டு உறைந்தபின் ஒரு நாளைக்கு வெருகடிப்பிரமாணம் கொள்ளவும்.

கழிச்சலுக்கு :—பழங்கூரையும் குங்கிலியமும் பொடிசெய்து பழங்கஞ்சியில் கொடுக்கவும். அத்திப்பாலும் நல்லெண்ணெயும் கொடுக்கத் தீரும்.

குடிநீர் :—நீர்முள்ளி சமூலம், நெருஞ்சி சமூலம், இலந்தை யிலை இவை வகைக்குப் படி 1, மிளகு, வெங்காயம், மஞ்சள், சுக்கு, களிப்பாக்கு, பற்பாடகம், முத்தக்காசு, இவை வகைக்கு பலம் 1 ஆகக் கூட்டி அட்டபாகமாகக் காய்ச்சிக் கால்படி கொடுக் கவும். இப்படி மூன்றுநாள் கொடுக்க வீக்கம், விஷபாகம் இவை தீரும். இதிலடங்கா வியாதியானல் சிறுபீளை, சங்கிலை, பிரமி, பொன்னுங்காணி, சிறுகீரை, சிறுவழுதலை இவை வகைக்கு ஒரு பிடி கூடக் கூட்டிக்கொள்ளவும். மெத்த நல்லது.

வேறு :—கையாந்தகரை பிடி 2, மிளகு பலம் 5, ஒரு படி தண்ணீரிலிட்டுக் கால்படியாக வற்றக் காய்ச்சி இப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

வேறு :—முசுட்டையிலை, கறிவேப்பிலை, நீர்முள்ளியிலை, கண் டங்கத்தரி, நெருஞ்சி, மிளகு, சுக்கு வகைக்கு பலம் 4. கடுக்காய் பலம் 50, திப்பிலி பலம் 5 இவைகளையெல்லாம் பத்துப்படி தண் ணீரில்போட்டு ஒன்றரைப்படியான பிறகு நாளொன்றுக்கு அரைப் படி இறுத்து மேல்மருந்து துத்தம் பலம் 1, நேர்பாளம் பலம் 1; திப்பிலி பலம் 10, கடுக்காய் பலம் 10, இவைகளையெல்லாம் குமரிச்சாறு விட்டரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் உண்டை செய்து நாளொன்றுக்கு ஒருண்டை கூட்டிக் கொடுக்கவும், இந்தப்படி மூன்றுநாள் கொடுக்க வீக்கமும் விஷபாகமுந் தீரும்,

துவாலை :—நீர்முள்ளியிலையும் தண்டும் கருக்கி வெள்வெங் காயமும் மஞ்சளுங் கூட்டிச் சிறுநீர்விட்டரைத்து மூன்றுநாள் துவாலையிட வீக்கந் தீரும்.

வேறு :—கழுதைவிட்டைத் தண்ணீர் படி $\frac{1}{4}$, ஈரவெங்காயச் சாறுபடி $\frac{1}{4}$, நல்லெண்ணெய் படி $\frac{1}{4}$ ஆக இவைமூன்றினையும் காய்ச் சித் துவாலையிட வீக்கந் தீரும்,

வேறு :—தலைவிரிச்சான்சமூலம் கொண்டுவந்து இடித்துச் சிறுநீர் விட்டு வருத்துக்கட்ட வீக்கந் தீரும்.

வேறு :—முருக்கிலைச்சாறு படி $\frac{1}{4}$, வெள்ளாட்டுக்கோமயம் படி $\frac{1}{4}$, கடுக்காய் 5, களிப்பாக்கு 5, ஈரவெங்காயம் 5, இம்மூன்றினை

யுமரைத்துக் கலக்கி இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும். சற்றுப் புக் கூட்டவும்.

வேறு :—சிறுபீளை, குருவிச்சு, ஆடாதோடை, சிவனார் வேம்பு, விறுவட்டு, நீர்முள்ளி, விஷ்ணுக்கிராந்தி, குமரிச்சருகு, ஆக இவை வகைக்குப் பலம் 2, பற்படாகம் பலம் 1, வெள்வெங் காயம், கடுக்காய், களிப்பாக்கு, கடுகுரோகணி, சிவதை, சுக்கு, மிளகு, மஞ்சள் இவை வகைக்குப் பலம் 2, இவைகளை யெல்லாம் நன்றாய் இடித்துப் போட்டு நீர்விட்டு முறைப்படிக் காய்ச்சி ஐந்து நாளைக்குப் பொரிகாரம்பொரித்து மேல்தூவிக் கொடுக்கவும்.

வேறு;—தூதுளைவேர், கண்டங்கத்தரிவேர், பாகல்வேர், வெள்ளைச்சாரணைவேர் இவை வகைக்குப் பிடி 1, பிரண்டை சமூல மிடித்துச் சாறு படி 1, கோமயம் படி 6, காயம் பலம் 1, திப்பிலி பலம் 1, கருஞ்சீரகம் பலம் 1, அதிமதுரம் பலம் 2, கோட்டம் பலம் 2, இந்துப்பு பலம் 2, காந்தம் பலம் 2, சுக்கு பலம் 3, விலாமிச்சம்வேர் பிடி 1, கடுக்காய்ப்பொடி படி $\frac{3}{4}$, நேர்வாளம் சுத்தி செய்து 60-வித்து கூட்டி ஒன்றாக்கி, அரைக்கால்படி கொடுக்க வீக்கம் தீரும்.

மஞ்சள்நோய் செங்காமாலைக்கு

கானகத்தின் கோவைச் சாறுவின் பாலும்
 கனபருத்திக் கொட்டை பாலிந்த மூன்றும்
தானுதவி யோரொன்று நாலுழக்காய்
 சக்கரை நேரிச் சிறுபயறு கொள்ளில்
மானனையாய் முச்சுவடு வகைக்குளாவி
 வன்மையுடன் நாலொன்றாய்க் காய்ச்சி ஊற்றி
பானுவது உதயத்தில் மூன்றுபோது
 பகர்ந்திடில் மஞ்சள்நோய் பாறுமென்றே.

வேறு—;ஒரு தேங்காயைத் திருகி வெந்நீர்விட்டுப் பால பிழிந்து ஆவரைமேல் புறந்தோல் வெட்டி அந்தப்பாலை விட்டரைத்து எலுமிச்சங்காயளவு அந்தப்பாலில் கொடுக்கவும். வயிறு பேதித்த பிறகு கஞ்சி வைத்துக்கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

வேறு :—ஆவாரை, அல்லி, பொன்னாங்காணி, சிறுபுள்ளடி வகைக்குத் தான்றிக்காய்ப் பிரமாணம், தேற்றான்கொட்டை 2

இத்தனையுமரைத்து, உடம்பு காய்ந்தால், பசுவின் தயிரில் கொடுக்கவும். இல்லாதிருந்தால் எருமைமோரில் கொடுக்கவும். மஞ்சள் நோய் தீரும்.

வேறு :—அப்பைக்கொடிக்கிழங்கை அரைத்துப் பாலில் கொடுகத் தீரும்.

சிலேற்பன ரோகத்திற்கு

சுக்கு மிளகு மாசிக்காய்
மிக்கதேற்றான் கொட்டையுடன்
அழகுசெறியும் திப்பிலியும்
அணிசேர் கிராம்பு இந்துப்பு
வளமாய் வறுத்துப் பொடிசெய்து
மற்றமருந்துவகை யினிக்கேள்
பணமேயொக்கும் தூதுவளை
படருஞ்சிறு வழுதலை கூட்டே. (1)

கூட்டுமாடா தோடையுடன்
குலவியகண்டங் கத்தரியும்
நாட்டுவேலிப் பருத்தியுடன்
நன்றாய்ப்பறித்துப் பிட்டவித்துப்
பொடியைக் கஷாயத்தில் பொருந்தக்
காய்ச்சி யுண்டை செய்து
ஈட்டமுடனே இருமலினை
இசைந்த சிலேற்பனம் போய்விடுமே. (2)

வேறு :—

சிலேற்பனம் வந்து மீறித் திசைமுட்டி வருத்து மாகில்
மாப்போடு மலத்தி போத வண்டின்மேல் வைத்து அவித்துத்
தீப்பட பிழிந்து கொண்டு திப்பிலி வசம்புங் கூட்டி
நாற்பட நக்குவீராய் நடக்குமே சிலேற்பந் தானே.

வேறு:—தேற்றான்விதையை அரைத்துப் பசுவின் வெண்ணெயில் தினந்தோறும் எலுமிச்சங்காயளவு குழப்பித் தின்னவும். இரவில் சுக்குக்குடிநீர் கொள்ளவும்.

வேறு :—இன்னும் ஆடாதோடை, கண்டங்கத்தரியிலை, வில்வ இலை, உத்தமதாளியிலை, தூதுவளையிலை, வட்டத்துத்தியிலை இவை

களைச் சமன் கூட்டி யிடித்துச் சுரசம் வடித்து அதில் சுக்கு, திப்பிலி, இந்துப்பு, வில்வவேர் இவைகளையெல்லாம் வெதுப்பிப் பொடிசெய்து போட்டுத் தேன்விட்டளாவிக் கொடுக்கவும். மேலிளைப்பு, இருமல், தொண்டைபரபரப்பு இவையெல்லாம் தீரும்.

சுவாச இளைப்புக்கு

கடுக்காய், ஓமம், முத்தக்காசு இவைகளை அரைத்துத் தண்ணீரில் கலக்கிக் காய்ச்சிக் குடிக்க இளைப்புத் தீரும்.

விக்கலுக்கு

தாந்து குத்திய தரிப்பான் கஞ்சியில்
பூந்து ருத்திய பூணகம் போட்டளி,
ஏந்து காய்ச்சி யூத்திக் குடிப்பீரேல்
வாந்தி சத்தி விக்கலு மறுக்குமே.

வேறு :—மேனியிலை ஒரு பாக்களவு அரைத்துப் பசுவின் வெண்ணெய் அந்த அளவு கூட்டிக் கொடுக்க நிற்கும். இப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

வேறு—அதிமதுரம், ஏலம், சீரகம் இவைகளை அரைத்துப் பசுவின் வெண்ணெயில் மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

வேறு :—

நெல்லி மாதுள வோடுடன் நெல்பொரி
நல்ல திப்பிலி ஏலம் நற்சீரகம்
வல்ல சுக்கு மதுரம் கிராம்புடன்
வில்வமா பழச்சதையுடன் மேவியே.

மேவியே மயில் தூவலு மிந்துப்பும்
தாவியே சமனாக வறுத்துடன்
ஆவியுண்டரைப்பது சர்க்கரைப்
பாவுடன் கொள்ளப் பறந்திடும் விக்கலே.

வேறு :—

வெல்லும் சத்தி விக்கலுக்கு
விரும்பும் குடிநீர் வகை கேளீர்,

நல்ல சந்தனம் வில்வவேர்
நல்குநெற் பொரிதான் கூட்டி,
வெல்லும் தண்ணீ ரிருநாழி
விரும்பிக்காய்ச்சி எட்டொன்ருய்
மெல்ல இறுத்துக் குடிப்பீரேல்,
விரைந்து விட்டோடும் கண்டீரே.

வேறு :—$\frac{3}{4}$ பலம் ஏலத்தை அரைத்து இளவெந்நீரில் கொடுக்கத் தீரும்.

வேறு :—கீழ்காய்நெல்லி கசக்கி நசியமிடத் தீரும்.

வேறு :—திப்பிலிமூலம், சுக்கு, வெள்ளுள்ளி, திரிபலை இவைகளைக்கூட்டிக குடிநீர் வைத்துக் கொடுக்க விக்கல் தீரும்.

வேறு :—தேங்காய்ப்பால் படி 2, அரலிப்பழுப்பு, சிருக்கு வாயிலை இவைகளை இடித்துக்கொண்டு தேங்காய்ப்பாலுடன் கலந்து வெந்து அந்த நெய்யிடத் தொடைகைச்சிரங்கு, கபாலகுட்டம், கடிவிஷம் இவை தீரும்.

ஆமை சூலைக்கு

நறுநெய் படி $\frac{1}{4}$, பருத்திச்சாறு படி $\frac{1}{4}$, துளசிச்சாறு படி $\frac{1}{4}$, கள்ளிப்பால் படி $\frac{1}{4}$, தேங்காய்ப்பால் படி 1 ஆக இவைகளையெல்லாம் கூட்டிக் கடுகு பதத்தில் வேகவைத்து இரண்டு காசளவு கொடுக்கவும். சிறுபிள்ளைகளுக்கு ஒருகாசளவு கொடுக்கவும் ஆமைசூலை தீரும்.

க்ஷயத்திற்கு

திரிகடுகைப் பொடிசெய்து தேனில் ஏழுநாள் தின்ன க்ஷயம் தீரும்.

இருமலுக்கு

பருத்திவேர், முசுமுசுக்கைவேர், ஈரவெங்காயத்தண்ணீர், கொம்மட்டிக்காய்சாறு இவை வகைக்கு $\frac{1}{4}$ படி ஊற்றின எண்ணெயில் வேகவைத்து பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

வேறு :—நெய்க்கொட்டை முத்தின் பட்டையை யிடித்து ஆமணக் கெண்ணெயில் குழப்பி ஈரவெங்காயம் அரிந்திட்டு முப்பது நாழிகை கிண்டி சூரியபுடம் வைத்து ஒரு காசளவு கொடுக்க

வும். இருமலாய்க் கழியும். மத்தியானம் கஞ்சித்தண்ணீர் காய்ச்சிக் கொடுக்கவும்.

வேறு :—சுக்கு, கடுக்காய், இரண்டும் சரிகொண்டு பொடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு கோழிமுட்டை வெள்ளைக் கருவில் வெருகடிப் பிரமாணம் குழைத்து ஐந்துநாள் தின்ன இளைப்பு மாறும்.

வேறு :—ஈளைக்கு :—நெல்லிப்பருப்பு, திப்பிலி, நெல்பொரி, சுக்கு இவை நான்கையும் சரிகொண்டு பொடித்துத் தேனிலாவது நெய்யிலாவது குழைத்துத் தின்ன நிற்கும்.

வறட்சி இருமலுக்கு :—பசுவின் பால் படி 1 பருத்திக் கொட்டைப் பால் படி 1, தேங்காய்ப் பால் படி 1, ஆக மூன்றின் பாலும் காய்கிறபோது பனைவெல்லம் கூட்டிக்கிண்டவும். உழக்குப் பச்சையரிசியை யிடித்துத் தெள்ளிக் குறுகிவருகிறபோது மாவைப்போட்டுக் கிண்டிக் களியான பிறகு இறக்கி நல்லெண்ணெய்விட்டு மூன்று நாள் தின்னவும், இருமல் வாந்தி எரிச்சல் தீரும்.

கற்பூராதிச் சூரணம்

கஸ்தூரிமஞ்சள், சுக்கு, திப்பிலி, மிளகு, நாகப்பூ, பச்சிலை, சதகுப்பை, இலவங்கம், சாதிக்காய், கற்பூரம், இவைகளை யெல்லாம் வகைக்குப் பலம் 3, நெருஞ்சிவேர் பலம் 5, முட்டை ஒடு பலம் $\frac{3}{4}$, கடுக்காய்ப்பொடி பலம் 1 தூதுவளைவேர் பலம் 1, துளசிவேர் பலம் 1, தேற்றான்கொட்டைவேர் பலம் 1, இவைகளையெல்லாம் பொடி செய்து சீலைவடிகொண்டு தேனிலாவது, கருப்புக் கட்டியிலாவது கொடுக்க இருமல், ஈளை இவை தீரும்.

வேறு :—சிற்றகத்திக் கொழுந்தையும், உத்தமதாளிக் கொழுந்தையும் அரைத்து வகைக்கு ஒரு பாக்களவு பசுவின் பாலில் கொடுக்க இருமல் தீரும்.

வேறு :—தவசுமுருங்கையிலையை ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து இரவில் அமுதின்மேலே பசுவின் பாலில் கொடுக்கவும், இப்படி மூன்று நாள் கொடுக்க இருமல் தீரும்.

வேறு :—வேலிப்பருத்தி யிலையையிடித்துப் பொடிசெய்து நிழலிலுலர்த்தலாக உலுலர்த்திக்கொண்டு வெருகடியளவு நெய்

யிலாவது தேனிலாவது இஞ்சிச்சாற்றிலாவது கொடுக்க இருமல் தீரும்.

வேறு :—ஈளைக்கு :—பேயத்திப்பட்டையை இடித்துப் பொடி செய்து பசுவின்பாலில் கொடுக்கத் தீரும்.

காசகுலாந்தகன்

சாதிலிங்கம், மனோசிலை, நாபி
 தயங்குசுக்கு, மிள குடன் திப்பிலி (?)
அரிதாரமும் வெண்காரமும்
 சுத்தியடையவுடன் செய்தபின்
பெரிய இஞ்சிச் சாற்றி லரைத்திடப்
 பெரும் பயறள வாகத் திரட்டியே
கரிக்கும் சீரகம் தேனுடன்
 கொள்விராலய நாதனுர்
அருள்காச குலாந்தகனரும்
 காயகாசங்கள் போக்குந்தீரும்.

ஈளைக்கு

இருநாழி இலுப்பை எண்ணெயில் எலுமிச்சங்காயளவு சோமநாதன்பெருங்காயம்போட்டுக் கரையுமட்டும் கிண்டிவைத்து ஆறுமுன்னே பழகின கலயத்தில் ஊற்றிக்கொள்ளவும். அதன் பிறகு காலமே ஒரு நெய்முட்டைக்கரண்டிஅளவு கொள்ளவும். அந்திக்கும் ஒரு நெய்முட்டைகொள்ளவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும் நாளைக்கொருநாள் முழுகவும். இப்படி முழுகிவந்துண்டால் கோழிக்குடல்போன்ற மூன்று கூடு விழும். அப்புறம் கொள்ளவேண்டாம். ஈளை, இருமல், எலிக்கடி எல்லாம் தீரும்.

விரேசனத்திற்கு

முடக்கொற்றான்விதை, சிவதைவேர், வெள்ளைக் காக்கணம் வேர், சிற்றாமணக்குமுத்து பலம் 3, கந்தகம் பலம் 5 இவைகளை யெல்லாமரைத்துத் தேங்காயிலடைத்துப் பசுவின் சாணியில் பொதிந்து 20 நாள் புதைத்துவைத்துப் பிறகு எடுத்துச் சேர அரைத்துப் பரணியில் அடைத்துக்கொள்ளவும், நாவில் தடவக் கழியும்.

வேறு :—இன்னும் ரசம் பலம் 1, கந்தகம் பலம் 1. நேர் வாளம் பலம் 3, காட்டலிசம்விதை பலம் 4, கடுக்காய் பலம் 4, புரசம் விதை பலம்1, இவைகளையெல்லாம் கள்ளிப்பாலிலரைத்து முற்றின தேங்காயிலடைத்துக் கண்ணை வசம்புகொண்டடைத்துச் சீலைமண்செய்து ஆப்புக்கீழாகப் புதைத்து ஏழுநாள் சென்றெடுத்து, அதை அரைத்துக் கலத்தில் அப்பி வெயிலில் வைக்கத் தைலம் விழும். அதையெடுத்து ஒன்றிலடைத்துக் கொள்ளவும். அணுவளவு தொப்புளிலே தடவ மிகுதியாய்க் கழியும். மாமருந்தைக் கழுவிப்போட்டு மோருஞ்சோறு முண்ணவும், குளிர்ந்த தண்ணீர் குடிக்கவும். சந்தனம் பூசவும்.

புளிக்குழம்பு

புளிப்பிசைந்த கூழ் படி $\frac{1}{4}$, நேர்வாளம் பலம் 3, சிவதை பலம் 4, துருசு பலம் 1 இவைகளை அரைத்துக் காய்ச்சிக் குழம்பாக்கிக்கொள்ளவும். ஓர் ஆளுக்குப் புளியம்விதையளவு கொடுக்கவும். ஏக விரேசனம். [1]

ஆருத புண்ணுக்கு

சித்திர மூலம் ஒரு எலுமிச்சங்காயளவு, வெள்வெங்காயம் அந்த அளவு குருவைநெல்லரிசிமா ஒருபடி மாவோடே இந்த மருந்து பாதியும் அந்த அளவு வெல்லமும் கூட்டிப் பிசைந்து ஏழு அடையாகப் பிடித்து நின்ற மருந்து பாதியும் ஒருபடி நல்லெண்ணெயில் கலந்து கொதிக்கவைத்து இந்த நெய்யில் அந்த அடைகளைச் சுட்டு ஏழு பொழுதுதின்று நெய்யும் நக்கிவர எந்தப் புண்ணும் புரையும் தீரும். உப்பு, புளி மறுக்கவும்.

வேறு :—துத்தம், துருசு, சமன்கொண்டு செறுப்படிச்சாறு, சிறுபுள்ளடிச்சாறு, ஓடுவடக்கிச்சாறு, மஞ்சணத்திச்சாறு, மேனிச்சாறு, சரிகொண்டுவிட்டரைத்து, பிறகு தேசிப்பழச்சாறு விட்டரைத்து, பிறகு பசு வெண்ணெய் கூட்டி மத்தித்து ஆருத புண்ணுக்கு எருவையாகப் போடவும். குளிர்ந்த கண்ணுக்கும், வடுப்பட்ட கண்ணுக்கும் எரிப்புக்கும் நீர்பற்பநோய்க்கும் ஆம்.

வேறு:—சீரகம், அதிமதுரம், ஓமம், கருஞ்சீரகம், ஏலம், வகைக்குப் பலம் 1, கிராம்பு பலம் $\frac{1}{4}$, துருசு பலம் $\frac{1}{4}$, இவை

[1] அளவு :—புளியம்விதை என்று கூறியிருப்பினும் இக்காலமக்கள் உடல்வன்மைக்குத் தக்கவாறு 1 குன்றி அளவு கொடுத்தாலே போதும்.

களைப் பொடித்து உழக்கு நல்லெண்ணெயில் காய்ச்சி வடித்துப் புண் புரைக்கிட எல்லாப்புண்ணும் ஆறும். பத்தியமாக இருக்கவும்.

புண் கிருமிக்கு :—வங்காளச்சீனியை முசுமுசுக்கைச் சாறு விட்டரைத்துச் சீலையிலூட்டிப் புண்ணில் போடவும். புண்குதறி உபத்திரவம் பண்ணும். பிறகு பச்சை நாபிமுன் சாறு விட்டரைத்துச் சீலையிலூட்டிப் புண்ணில் போடவும். புழுவெல்லாம் சீலையிலொட்டிச் செத்திருக்கும். இப்படி மூன்றுநாள்போட புழுவெல்லாம் செத்து மஞ்சள்நீர்போலே விழும்.

வேறு :—1 பலம் துத்தத்தை சுட்டுக் கலுவத்தில் போட்டு எருமை வெண்ணெய் கலந்து செம்புகொண்டு உரைக்கவும். பிறகு $\frac{3}{4}$ பலம் ரசத்தை வெற்றிலைச்சாறு விட்டு முறித்துக் கூடப்போட்டரைத்துச் சீலையிலூட்டிப் புண்ணில் எருவையாகப் போடவும். அந்தி சந்தி 6 நாள் போடவும். 7ஆம் நாள் முழுக்காட்டவும்.

சதை வளர்ந்த புண்ணுனல் :—ஊமத்தம்நெத்தும், சஞ்சீவிக் கம்பும், கீரைத்தண்டும், மஞ்சள்கிழங்கும் சுட்டுக்கட்டத் தீரும்.

வேறு:—இரதம் பலம் 1, துருசு பலம் 1 இவை இரண்டையும் தேன்மெழுகில் மத்தித்துப் புண்ணினளவுதட்டிப் புண்ணிலே வைத்துக் கட்டவும். மறுநாள் கழுவிப்போட்டு அப்படியே வைத்துக் கட்டவும்.

கன்னப்புண்ணுக்கு :—உவரைக்கரைத்துத் தெளியவைத்து அதிலே இலவம் பஞ்சு தோய்த்து சுண்ணும்புதடவி புண்ணில் போடவும். மறுநாள் முலைப்பாலை பஞ்சில் தோய்த்துப் புண்ணில் போட ஆறிவிடும்.

ஓசிகண்டமாலைகளுக்கு

நல்லெண்ணெய் படி 2, கஞ்சாயிலை படி 2 இவைகளை அரைத்துக் கலந்து வேகிறபோது 4 கழஞ்சு அபின் கூடப்போட்டுப் பதத்தில் வேகவைத்து, கடுகையுங்கூட வைத்துக்கொண்டு அளவுப்படி கொடுக்க கண்டமாலை, ஓசி உள்படத் தீரும்.

வேறு :—சேங்கொட்டை இரண்டை ஒன்று நாலாக நறுக்கி அபின் பலம் 1 கூட்டி கரிச்சான் சாறுபடி 1-ல் ஊறப்போட்டு சூரியபுடம் வைத்துச் சாறு வற்றவிட்டு 20 நாள் இரண்டு நேரமும் கொள்ள கண்டமாலை தீரும்.

வேறு:—இரதம், கந்தகம், நேர்வாளம், தாரம், மனோசிலை, வெள்ளைக் கௌரி, நாபி, துத்தம், துருசு, இந்து, வெண்காரம் ஆக இந்த 12 மருந்துகளை சதுரக்கள்ளிப்பால் விட்டரைத்துக் கயிறு செய்து வைத்துக்கொள்ளவும். ஆமணக்கெண்ணெயில் உரைத்துப்பூச கண்டமாலைப்புண், வாதவீக்கம் இவை தீரும்.

வாயில் கெந்தளிக்கு

சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், அதிமதுரம், ஏலம், ஓமம், சீரகம், ஈருள்ளி, இந்துப்பு, திப்பிலி, கடுக்காய், தூதுவளை வேர், கிராம்பு, கருடப்பச்சை ஆக 14 மருந்துகளையும் வகைக்குப் வராகன் 5, நறுநெய்படி $\frac{1}{4}$, வேப்பெண்ணெய் படி $\frac{1}{4}$, ஆக இவைகளைக் கூட்டி எரித்துப் பதத்தில் வடித்துக் கொடுக்கத் தீரும்.

சிறு பெண்கள் முலை யோனி பெருக்க

விரால்மீன் 1, பூனைகம் 1 பிடி, செங்கழுநீர்க் கிழங்கு பலம் $\frac{1}{4}$ கோட்டம் பலம் $\frac{1}{4}$, மனோசிலை பலம் 1 இவைகளையெல்லாம் 1 படி நல்லெண்ணெயில்போட்டு எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு காது, தண்டு நேர்ந்திருந்தாலும் முலை சிறுத்திருந்தாலும் தடவப் பெருக்கும்.

யோனிக்கு :—வேப்பம்பால் யோனியில் தடவப் பெருக்கும்.

வேறு :—வெள்ளைக்குன்றியரைத்து யோனியில் தடவ யோனி பெருக்கும்.

வேறு :—கார்த்திகைக்கிழங்கு அரைத்துத் தண்டில்பூசிப் புணரப் போம்.

வேறு :—நாயுருவி வேரை அரைத்துத் தொப்புளில் தடவ மலரும்.

வாழாத பெண்ணுக்கு

ஆடையொட்டிச்சாறு படி $\frac{1}{4}$, தொட்டால்வாடிச்சாறு படி $\frac{1}{4}$, இவைகளை மாட்டின்மேலேறிக்கடித்த அட்டையை அறுத்து ஓட்டிலே விட்டு அந்த ரத்தம் உலரவிட்டு நல்லெண்ணெயில்போட்டு அவனுடைய சிறுநீரும் விட்டுக் குழப்பித் தலையில் தேய்க்கக் கூட வருவாள்.

வேறு :—ஓரிலைத்தாமரை உலர்த்திப் பொடிசெய்து இந்தப் பொடியும் அவன் சிறுநீரும் கூட்டி நல்லெண்ணெயில் வேக வைத்துத் தேய்க்கவும் : வாழும்.

வேறு :—ஆனைவணங்கியிலை, செந்தொட்டியிலை, மேனியிலை இவை மூன்றின் சாறுபிழிந்து நல்லெண்ணெயில் கூட்டிக் கொடுக்க வாழும்.

வேறு :—வெள்ளைக் கிலுகிலுப்பையிலையும், மணித்தக்காளி யிலையும் கசக்கித் தலையில் பிழிய வாழும்.

வேறு :—குன்றுமணியிலை அந்தப்படி பிழிய வாழும்.

வேறு :—கிரகணம் தீண்டுகிறவேளையிலே சிற்றுமணக்க முத்தும் மஞ்சளும், கன்னியழியா பிள்ளையைக்கொண்டரைத்து செப்பில் வைத்துக் கொண்டு தண்ணீரிலே குழைத்துப் பூச வாழும்.

வேறு ,—ஆடாதோடையிலையும், ஆனைவணங்கியிலையும், ஓருள் ளிப்பூடும் அரைத்து நல்லெண்ணெயில் கலந்து உள்ளுக்குங் கொடுத்து தலையிலேயும் தேய்க்க வாழும்.

வேறு :—ஆனைவணங்கி, செந்தொட்டி, கொட்டி, இந்த மூன்றினிலைகளையும் திருநீற்றில் கசக்கிப்பிழிய வாழும்.

வேறு :—காமுருகிவாலை நறுக்கி அதனிரத்தம் சீலையிலூட்டித் தலைமுட்டுக்கொண்ட சீலையும் கூடவைத்து வாலைமுடிந்து பிரம்பிலே கட்டி மீன்கொத்தி மீனெடுக்கும்போது பிரம்பைப் போட்டு மிதித்துக்கொள்ள எழுந்திராது. அதைப்பிடுத்து காலில் ரத்தம்வாங்கி அந்தச்சீலையிலூட்டி பிரம்பிலே கட்டிவைத்திருக்க வும். அந்தப்பிரம்பைக் கொண்டு தட்டத்தெய்வ ஸ்திரீயானாலும் .. நவாள்.

வேறு :—நல்லெண்ணெயில் சுடலையில் முளைத்தபச்சிலைச்சாறு பிழிந்து புருஷனைக்கொண்டு ஸ்திரீக்குத்தேய்த்து முழுக உடனே தனதாய்வாழுவாள். புருஷனுக்கு ஸ்திரீயைக்கொண்டு தலையில் தேய்க்க உடனே வாழ்வன்.

முலைப்பால் சுரக்க

கருஞ்சீரகத்தை அரைத்துப் பசுவின்பாலில் கொடுக்க சுரக் கும்.

வேறு:—கோழியெச்சமும், மாடப்புறுவின் எச்சமும் அரைத்து முலையில் பூசச் சுரக்கும்.

பிள்ளைபெற்றால் குடிநீர்

சாரணைவேர், கண்டங்கத்திரிவேர், வேப்பீர்க்கு, நொச்சிக் கம்பு ஆக இவை சமன், திரிகடுகு, மஞ்சள் வகைக்கு பலம் 1, வீதம் போட்டு $\frac{3}{4}$ படி தண்ணீர்விட்டு $\frac{1}{16}$ படியாகக் காய்ச்சிப் பிழிந்து அன்னங் கொடுத்த நாள் முதல் ஐந்து நாள் இரவில் குடிநீர்போட்டு உடனே கொடுக்கவும். உதயத்தில் பத்தியங் கொடுக்கவும்.

துவாலை படாத பேருக்கு

முருங்கைவிதை 7 அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். இப்படி ஏழு நாள் கொடுக்கத் துவாலை படும்.

வேறு :—விளங்காத பெண்ணுக்குத் தேவதாளியிலை பறித்துத் தின்னக் கொடுக்க விளங்கும்.

தொடை கை சிரங்குகளுக்கும், கடிவிஷத்திற்கும்

தேங்காய்ப்பால் படி 2, கருஊமத்தையிலைச்சாறு தேங்காய்ப் பாலுடன் கலந்துவெந்து, அந்த நெய்யிடத் தொடை, கை சிரங்கு, கபாலகுட்டம் கடிவிஷம், இவை தீரும்.

குறுக்கே கிடக்கிற பிள்ளை விழ

வெள்வெங்காயமும், நெல்லிக்காயும் சமனாக அரைத்துப் பசுவின்பாலில் கொடுக்க உடனே பேறு வரும்.

ஆவி ஏகிற பிள்ளை விழ

சாரணைவேரரைத்து இளவெந்நீரில் கொடுக்க விழும்.

பாலருடம்பு தேற

ஆலம் விழுதினிளந்துளிரும்
அரியதென்னம் பூமதுரம்
கோலமிளகு சீரகமும் கொட்டி
ஆவின் பால்வார்த்தரைத்துச்
சீலநறு நெய்தனில் வெந்து
திரும்பிவடித்துத்தினம் கொடுக்கப்
பாலருடம்பு மிகத்தேறிப்
பருக்கும் சொன்னோம் கண்டீரே.

பாலர் கிரந்திக்கு

பாலர் கிரந்தி பறந்தோடப்
பகர்வேன் ஆவின் நெய் உழக்கதனில்
கோலலிங்கம் துரிசொன்று
கூட்டிக்கால் கழஞ்சிட்டு வெந்து
மேலும்தடவி மூன்றரைநாள்
திரும்பி அரைக்காசளவு கொடு
சாலவே ஒரு சாடிமுட்டும்
தண்ணீர்தனில் வைத்தெடுத்திடுமே.

நாக்குச் சிலந்திக்கு

சீனக்காரமும் நல்லெண்ணெயும் கலந்து நாக்கில் தடவத் தீரும்.

பல்லறணைக்கு

சீனக்காரத்தை ஒதுக்கத் தீரும்.

முலைப்பால் சுரக்க

வேறு:—ஏலம் ஒரு பிடியும் நெல்லிமுள்ளியுமரைத்துக்காலமே செய்த கஞ்சியிலாவது கருப்புக்கட்டியிலாவது வாழைப்பத்திலாவது பிசைந்து கொடுக்கப் பால் சுரக்கும்.

வேறு ;—சதகுப்பையரைத்துப் பாலில் கொடுக்கச் சுரக்கும்.

வேறு ;—ஆலம்பட்டையை அரைத்துப் பசுவின்பாலில் கலக்கித் தயிருரைத்து வார்த்துண்ணச் சுரக்கும்.

பிள்ளைப் பெறமாட்டாதவளுக்கு

கார்த்திகை நக்ஷத்திரத்தில் கார்த்திகைக் கிழங்கு பிடிங்கி உலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலிலுரைத்து தொப்புள் சூழத்தடவப் பிள்ளை பிறக்கும்.

வேறு :—செம்பொன்னெருஞ்சிவேரைக் காடிவார்த்தரைத்து உள்ளங்காலில் தடவப் பிறவி நோக்கும்.

வேறு :—கவிழ்தும்பை வேரைத் தரித்துப் பிட்டத்திலே அல்லது பிடரியிலே கட்டப் பிறவி நோக்கும்.

வேறு :—ஊமத்தம்வேரையரைத்து முதுகில் கீழ்நோக்கித் தடவப் பிள்ளை பிறக்கும். பெற்றவுடனே மேல்நோக்கிக் கழுவிப் போடவும்.

செத்தபிள்ளை விழ

அதிமதுரம் தேன்விட்டரைத்து உள்ளேகொள்ளப் பிள்ளை விழும்.

வேறு:—ஆவரையிலை காடிவார்த்தரைத்துத் துவாலை யிடவும்.

வேறு :—பலகரை புடமிட்டெடுத்து நுணுக்கிப் பச்சிலையும் கூடப்போட்டுத் திரட்டிக் குடுமாப்போலே அரைத்துச்சற்று ஆமணக்கெண்ணெய் விட்டு மத்தித்து மூன்று உண்டையாகத் திரட்டிவிழுங்கப் பிள்ளை விழும்.

வேறு :—வேலிப்பருத்தியை அரைத்துப் பசுவின்பாலில் கொடுக்கப் பிள்ளை விழும்.

வேறு :—அன்றிட்ட குதிரைலத்தி எடுத்துச்சாறு பிழிந்து அந்தச்சாறுச் சரிபாதி நல்லெண்ணெய்விட்டு எண்ணெயில் மூன்றிலொன்று மத்தஞ்சாறு கூட்டி உள்ளுக்குக் கொடுத்துக் கீழ்நோக்கி வயிற்றிலிருந்து யோனியளவும் தடவி முதுகிலும் தடவ விழும்.

வேறு :—ஏலமும், அரசந்தோலும் காடி வார்த்தரைத்து உள்ளங்காலில் தடவ விழும்.

வேறு :—நாவல்தோலரைத்து நான்கு நாள்குடிக்க நன்று. வயிற்றில் செத்தபிள்ளை விழும்.

அசைவுக்கு

எண்ணெய் :—மயிலெண்ணெய் படி $\frac{1}{4}$, முதலை நெய் படி $\frac{1}{4}$, வெள்ளாட்டின் நெய் படி $\frac{1}{4}$, மிளகு, வெளுத்த பிசின் வகைக்கு பலம், இவைகளை யெல்லாம் பதத்தில் வடித்து மேலிட வசையும்.

வேறு :—காந்தத்தைவைத்துக் கட்டவும்.

வேறு :—வேலிப்பருத்திப் பால் விட்டு அந்த இலையை அரைத்துக் கட்டவும். புங்கம்பால் குத்த அசையும்.

புண்ணுக்கு

காரச்சீலை ;—கவுரிபாஷாணம் சற்றுமஞ்சளும் எலிமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, நெரியமெல்லிய சீலையில் தடவி நிழ

லுலாத்தலாக உலர்த்திக் கொள்ளவும். அப்புண்ணளவு சீலை கிழித்துப் புண்ணில்போடவும். இரண்டு சாமம் சென்றால் காரச்சீலையை எடுத்துப்போட்டு அந்த புண்ணின்மேலே வேறே சீலை கிழித்து விளக்கெண்ணெயில் தோய்த்துப் போட்டு 100 நாழிகை கிடக்க விட்டு எடுத்துப்போடவும், புண்ணாறும்.

புரைக்கு

தேங்காய்ப் பால் படி $\frac{3}{4}$, புங்கம் பால் படி $\frac{3}{4}$, ஆக இவை இரண்டையும் கூட விட்டு, 2 கடுக்காய் பொடித்துக் கூடப் போட்டுக் காய்ச்சி நீர்வற்றின பருவத்தில் நெய்வடித்து நெய் சூடாறுமுன்னே வேம்பாடம்பட்டை பலம் 2, கடுக்காய், துருசு, காசுக்கட்டி, இவைகளையெல்லாம் பொடித்து வடி கொண்டு போட்டுக் கிண்டி சூரியபுடம் வைத்துப் பிறகு புண்ணிலிடப் புரை மாறும்.

பிள்ளையமுகுளிதோஷத்திற்கு

துடரிவேர், குட்டித்தக்காளிவேர், மூக்கரணைவேர், இவை மூன்றின் வேரும் மாறிவைத்துக் குளிசமாடிக் கட்ட நிற்கும்.

வேறு :—முட்டையைப் பிடித்து பிள்ளைத்தலையைச் சுற்றிக் குழியினுள் புதைத்து வைத்து வெந்நீர் விட்டு மூடிவைக்க நிற்கும்.

வேறு :—இசங்கு வடவேர் கொழுந்து இலை இவைகளை யெல்லாம் ஒருபிரமாணத்திற்கு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி, வெந்து, பிள்ளைக்குத் தேய்க்க சகலமும் குணமாம்.

வேறு :—முடக்கொற்றான், வசம்பு, வெள்ளுள்ளி அரைத்து உள்ளுக்கும் கொடுத்து மேலும் துவாலை போடத் தீரும்.

வேறு :—ஒரு புதுப்பானையிலே தண்ணீர் விட்டு அதிலே கத்தக விட்டையும் அதிமதுரமும் பொடிசெய்து போட்டு அதிலே ஒரு வெற்றிலையைஅந்திப்போது போட்டு விடியற்காலை அந்த வெற்றிலையைத் தலையில் வைத்துந் தண்ணீர் விடவும். இந்தப்படி மூன்று நாள்விட சகலதோஷமும் தீரும்.

வேறு :—உத்தமதாளி, முடக்கொற்றான், சுடலாவரை இவை களைத் துவாலையிடச் சகலதோஷமும் தீரும். சூலிக்குகுளிமீட்டான் வேரைக் குளிசங்கட்டத் தோஷமில்லை.

பிள்ளை முலைகுடியாமல் சீறியழுதால்

சுடுகாட்டெலும்பை வாய்பேசாமல் எடுத்துவந்து . தாய் முலைப்பாலில் அரைத்து முலைக்காம்பில் தடவி முலைகொடுக்க உடனே குடிக்கும். அழுவதும் தீரும்.

பிள்ளை யழுததில் வயிற்று வலியும் கழிச்சலும் கண்டால்

திரிகடுகு, வசம்பு, உள்ளிக்காய், ஓமம், இவைகளைச் சரி கொண்டு வறுத்துப் பொடித்துக் குழைந்த சோற்றில் வெருகடிப் பிரமாணம் நல்லெண்ணெய் குத்திக்கொடுக்கத் தீரும்.

பெண் மலடும் மருந்தும்

1. பூ வாய் ஒதுங்கியிருந்தாலும், 2. காற்றுத்தரித்தாலும், 3. சதைவளர்ந்திருந்தாலும், 4. புழுவுண்டாயிருந்தாலும், 5. உடம்பு பருத்தாலும், 6. சயித்தானிருந்தாலும், கர்ப்பந் தங்காது.

பூ வாய் ஒதுங்கியிருந்தால் அதன் குணம் :—புருஷனும் ஸ்திரீயும்கூடி நீங்குகிறபோது அவளுக்குத்தலைவலிக்கும். இதற்கு மருந்து—பருத்திக்கொட்டைப் பருப்பு நறுக்கி நீர்க்கோழிப்பித்து விட்டு மத்தித்து விலக்கம்வந்து முழுகின மறுநாள் புருஷன் லிங்கத்திலும் பூவிலும் ஷை துவாரத்திலும்தடவிப் புணர பூ வாய் விலகினது தீர்ந்து செவ்வனே நிற்கும். கர்ப்பமுண்டாம்.

காற்றுத்தரித்தாலதன் குணம் :—உடம்பு நடு நடுங்கியிருக்கும். இதற்கு மருந்து:—பெருங்காயத்தை நல்லெண்ணெயில் சாரித்துப் பூசிப் புணரவும்.

சதை வளர்ந்திருந்தாலதன் குணம் :—நெஞ்சு நொந்திருக்கும். இதற்கு மருந்து:—தவளைப்பித்தும் கஸ்தூரிமஞ்சளும் திரிபலையும் பொடிசெய்து மத்தித்துப் பூசிப்புணரவும்.

புழுவுண்டாயிருந்தாலதன் குணம் :—குரக்குவலிக்கும். இதற்கு மருந்து—சீரகம், மஞ்சள், சுக்கு, கடுகு ஆக இவைநான்கினையும் பொடிசெய்துநல் லெண்ணெயில் சாரித்துப் பூசிப் புணர நன்று.

உடம்பு பருத்தாலதன் குணம்—கணைக்கால் நொந்திருக்கும். இதற்கு மருந்து— :சீரகம், சவுக்காரம், கடுக்காய் இவைமூன்றினை யும் நீரிலரைத்துப்பூசிப் புணரவும்.

இந்த ஐந்துகுணமுமில்லாதிருந்தால் அதுசயித்தான் குண மென்றறிந்து தகடுகட்டவும், கர்ப்பமுண்டாம்.

தகடு கட்டுகிறதிற்கு மந்திரம் :—

அங்கந்திறக்க அங்கத்திலிங்கம் தெறிக்க நாதந்திறக்க
உடக்காணிதிறக்க உடல்கண்ணிலப் பேய்கண்திறக்க சுவாமி
[யாணை

கர்ப்பந்தரிக்க :— இப்படி ஆயிரத்தெட்டுரு சபித்து தகடு கட்டவும். கர்ப்பமுண்டாம். இதற்கு அக்ஷரம்—வேப்பம் சிராய் கொண்டு புகைக்க, பின்மாதுளையிலையும் நாவல்பூவும் கூட்டி நெய்வைத்துச் சபிக்கவும். பின் அமுக்கிருவேர் குடிநீர் வைத்துக் கொள்ளப் பிள்ளையுண்டாம்.

பிள்ளைபேறுக்கு :— ஓத - பாசிபடர்ந்தவளுக்குப் பாதையில் வாசுதேவன்வழுக்கி விழுந்தாற்போலே இவளவள் வயிற்றில் மாவும் கொடியும் பிள்ளையும் வேறுவேருக விழுக சிவா.

அங்கந்திறக்க அறைதிறக்க அரைவாய்—எங்குந்திறக்கச் சிவா என்று சயில் ஓம் ஆம் அவ்வுறு சிவாய.

நீர்ப்பாட்டுக்கு

செக்கச் சிவந்தவன் செம்பட் டுடுத்தவன்செப்புக் குடங்
[கொண்டு
தண்ணீருக்குப் போனுன் மடைதிறந்து வயல் பாய்ந்தது
வாடா வாடாமுடப்பள்ளா கல்லடை
மதவடையிலடையிற்படை ஒக்காளமெடுக்கு
மடைசுத்திப்பார்த்து அடைத்துவந்தேன் நாயிந்தேநாச்சியா
[ராலே
இந்திரனேடே சொன்னேன். இறைவனேடே சொன்னேன்.
சந்திரனேடே சொன்னேன். சந்திரசூரியனே டேசொன்
[னேன்.
துர்க்கையோடே சொன்னேன். துர்க்கைபர மேசுவரனேடே
சொன்னேன்.]

அடை அடை திருநீலகண்டராணை அடை அடை.

இதற்கு அக்ஷரம்



மணியாம்பொருக்கை ஓத மந்திரம் :—

நீர்ப்பாடுசொல்லி வந்தவனை அனுமாராகக்கொண்டேன்,
நீர்ப்பாடுபடுகிறவனைத் திருவணையாகக்கொண்டேன்,
நம்மைச் சீராமராகக் கொண்டேன், இருக்கிறவர்களை
தேவர்களும், ரிஷியும் குரங்குப்படையுமாகக் கொண்டேன்.
நாம் திருவணையடைக்க உடைத்துப்போற தெப்படி
அங்கமடைக்க அறையடைக்க அங்கத்திலிங்கமடைக்க,
அங்கமெங்கு மடையடைக்க மடைக்கச் சிவா.

ஏழுமணியாம்பொருக்கை ஓதி அரையிலே கட்ட **நீர்ப்பாடு நிற்கும்.**

சத்திமறிக்க மந்திரம்

ஒழுகங்கையமுவதேன் கண்ணைப்பிசைவதேன்,
அங்கமுதவாய்கொண்டு அமுதுண்பதேன்
பேச்சி முலையைப் பிசைந்துமுன் உண்பதேன்
நீயொரு பேய்ச்சி நானொரு நாராயணன்
அம் அம் ஓம் அம்மை பத்திரகாளி அம்மை அம்மை
அமுதத்தைமிகவேயுண்டு அங்காடிக்குள்ளே
உவக்களித்தால் உலகத்தார் நம்மை நகைப்பார்கள்
அம்மை அம்மை உன்னையு மென்னையும் படைத்த
பரமேசுவரனுணையே அமை சத்தியைபத்திர
காளியாகக் கொண்டு சத்தியெடுக்கிற தலத்தை
சிதம்பர தலமாகக்கொண்டு சிவனிருக்கிற இடத்திலே
யெச்சிலாக நீதியோவென்று தியானிக்கச் சத்தி நிற்கும்.
ஓம் சத்தி சத்தி மகாசத்தி சத்தியாணை நில் சத்தி பெரிதோ
சிவன் பெரிதோ சத்தி பெரிதல்ல சிவன் பெரிது.
சத்தி நிற்கச் சிவன் எழுகச் சிவா.

காதுக்குத்துக்கு

புகர்கின்ற நம்மைப் பரமேசுவரனாகக்கொண்டேன்
உளுக்கிவந்தவளைப்போக்கி மமாகக்கொண்டேன்
உளுக்கை உடம்பாகக்கொண்டேன்
பிடிக்கிற பேரை நாயாகக்கொண்டேன்
புடி புடி கய்த்தூரி புடிபுளியம் பொந்திலே
பொறிவிழுந்து கிடக்குது
சாத்தாவும் வேட்டைகு எழுந்தருளினார்,
வந்து நிற்கிறார் அய்யா பிடி பிடி
அய்யாபிடி பிடி என்னை யிராமனாகக்கொண்டேன்
என்னையே அனுமாராகக்கொண்டேன்

நான் திருவாழி கொடுத்தனுப்பி யிருக்கத்தான் போகாதிருப்பார்களோ போபோ புலைச்சிபோ உன்னையுமென்னையும் படைத்த பரமேசுவரனையே போ.

முலைப்பால் சுரக்க

மெய்யல்லாம் நீறணிந்து வெண்மதி சடைக்கணிந்து
கையிலே கபாலமேந்தி இரந்துண்ணுமாண்டார்தம்மை
அய்யமே தீண்டிச்சென்று அமளியிலொருவர் அறிவதில்லை
அய்யனே நாதனே அமுதுக்கெழுந்திரும் அய்யா

இந்த மந்திரம் செபித்துத் தண்ணீர் ஓதிக்கொடுக்க முலைப் பால் சுரக்கும்.

சூதகம் விலக

மணியாம்பருக்கை ஓத மந்திரம் :—அவன் குமன் சிவ தங்கை குமரி குண்டணி ஊருவா உருண்டுவா வாதிரண்டு உருண்டு ஓடிவா.

இதற்கு அக்ஷரம்



காத்துக்குத்துக்கு

இந்திரன் மகளிந்திர னுக்குக் காத்துக்குத்துச்
சென்று கெட்டு இந்திரன் மகனிளையான்
ஓடிவந்து தவனிருக்க நொந்தவன் குடிக்க
காத்துக்குலைஞ்சு போகச்சிவா.

நட்டுவாக்காலிக்கு

மந்திரம் :—

ஊருக்குமேற்கே உயர்ந்ததொரு ஆலவிருக்ஷம
ஆலவிருக்ஷத்துக்குள்ளே தவளை கிடக்கும்
தவளை வயிற்றில் நீர் குளிந்தாப்போலே
கடிவாயில் நீர் குளிர்ந்து போகச்சிவா.

குண்டு, பாணம், அம்பு படாமல் விலக

சிறுகீரைவேர், திருகுகள்ளிவேர், வெள்ளெருக்கம்வேர், மூன்றுவேரும் குளிசமாடித் தலையிலிருக்க அம்புவிலகும்.

வேறு :—நாய்ப்பாகல்வேரும், முசுமுசுக்கைவேரும் பிடுங்கி தலைமாறிக்கட்டி முடியிலிருக்க விலகும்.

வெட்டருமலிருக்க

சுடுகாட்டில் முளைத்த சிறுகீரைக்குக் காப்புக்கட்டி மறுநாள் பிடுங்கி உலர்த்தித் தீபதூபம் காட்டி கள்ளிநூல் கொண்டு குளிசமாடித் தலையிலிருக்க வெட்டருது.

மந்திரம் :—

ஓங்கிரீயும் ஷிறீகம், கொணே கொணே
தள-தள-இரும் பக பக உறுள உறுள—அர
அர அர மிரி மிரி மிரி விரி விரி விரி
கிகா கிகா கிகா இரவுங் கௌவங் அய்யுங்
கிலியும் பகவதே சறுவசன சறுவேந்தி
ராணி சருவதோஷ பாவங்களும் ஒன்பது
நவகிரகமும் பறபற பிசாசும் போகச்சிவா
கலிபுட்டு புளிமுட்டு அலகுதிரி அலகுதிரி என்று
அருவாள் குகொண்டுதடவவும்—குருபிரம
வரள்பூலாவேரும் கூரைச்சருகும் அரைத்துப் பூசவும்.

வேறு :—

ஒன்றும் ரண்டும் உற்றவினை உத்தமூன்றும் அய்யனுர்
இன்று நாலும் பிடாரியார் அட்டதெய்வ மஞ்சிலி
இலவலத்தினமாடன் ஆறிலே பருத்தபில்லி
ஏழிலே கொண்டுபோம் எட்டிலே குருநாதன்
ஒன்பதாகுமே இராமனஞ்சுதான் ஞசஞ்சாதீது
சீதையாறுக்குமே வசந்தீது லட்சுமிணுகாரியம், சித்தீசர் நன்று
சறுல்லாபம் விபூஷிணுநன்று மறனங்கும் பகன்னனஞ்சாதீ
மிளவணனே னகுலாச சயாதீது.

அங்கதனுருவார் சசியம் நன்று சுக்கீரிவாவேந்து தெரிசனம்
நன்று இந்திரனதஞ்ச கலியாணம் நன்று
காரியஞ்சஞ்சா சூலினதீது, அனுமன் காரியசித்தீ சநன்று
குகன்பிரியாதெரிசன நன்று நாரதர் கலகஞ்செய்வார்தீது
கைகேசிகாரியநாசனம்தீது பரதன் காரியசித்தீச நன்று
தீர்க்காயித்துச் சாம்புவன்நன்று.

௬	௰௪	௫	௪
௭	௨	௰௧	௰௪
௰௨	௰௩	௮	௧
௪	௩	௰	௰௫

பலகணங்களுக்கு

சிற்றுமணக்கெண்ணெய் படி 2, முடக்கொற்றுனிலை, வில்வயிலை, தகரையிலை, மிளகு, தக்காளியிலை, செம்முள்ளியிலை செம்பொன்னெருஞ்சி, சிறுசெருப்படி, துளசி, வல்லாரை ஆக இவை வகைக்குச் சாறு படி ¼. ஈரவெங்காயம் அரிந்து படி ¼, குமரிச்சோறு கழுவிப்போட்டு ¼, அதிமதுரம், மாசிக்காய், நற்சீரகம், கோட்டம், திப்பிலி, திப்பிலிமூலம் சதகுப்பை. முத்தக்காசு, கொல்லன் கோவைக்கிழங்கு, ஓமம் இவை வகைக்குப் பலம் ¼, இவையெல்லாம் நன்றுயிடித்துக் கூடக்கலந்து வெந்து சதங்கைக் கொதியிடுகிற பருவத்தில் வடித்து, இரண்டு காசெடைகொள்ள, கணையென்னப்பட்டதெல்லாம் தீரும். இந்தப்படி மூன்றுநாள்

விடியகொடுத்து இரவில் சுக்கு, முத்தக்காசு. திப்பிலிமூலம், விஷ்ணுக்கிராந்தி, யிண்டங்கொழுந்து இவையெல்லாம் குடிநீர் வைத்து இறுத்துக் கொடுக்கவும்.

பலகணைக்கும் கைகால் குளிர்ந்து உடம்பு காய்ந்து நாக்குப்பூத்து வாய் நாறி மூக்கு அலகடி அசந்து கண்ணில் ரத்தமாங்கிஷமற்று யிருக்கிற குழந்தைகளுக்கு

குடிநீர் :—நாரத்திலைனீர்க்கு, எலுமிச்சயிலைனீர்க்கு, ஆடாதோடையிலை யீர்க்கு, அகத்தி ஈர்க்கு, வேப்பீர்க்கு, துளசி, கஞ்சாங்கோரை, செம்முள்ளி, விஷ்ணுக்சிராந்தி, மிளகு, கொல்லன் கோவைக்கிழங்கு, பழம்பாசி, தகரை, செம்பொன்னெருஞ்சி, இண்டங்கொழுந்து, சிறு செருப்படி, சிறு புள்ளடி, சித்திரப் பாலாடை, கண்டங்கத்திரிவேர், தூதுளைவேர் முடக்கொற்றான், முசுமுசுக்கை இவையெல்லாம் சமன் கொண்டிடித்து எட்டுப்படித் தண்ணீரில் போட்டு, பச்சை நெல்லொருபிடி, பாசிப்பயறு ஒரு பிடி, துவரை ஒரு பிடி, கூடப்போட்டு, திரிகடுகு, திப்பிலிமூலம், வெள்வெங்காயம், ஈரவெங்காயம், சீரகம், கடுகுரோகணி இவை வகைக்கு $\frac{1}{4}$ வராகனெடை வாங்கிக்கிழிகட்டிப்போட்டு குடிநீர் வைத்து சூடுமாறுமல் அடுப்பில் வைத்து இரண்டுபோதும் கொடுக்கவும். போது ஒன்று கால்படி இறுத்து அதிலே கிழிக் கட்டிப் போட்ட பல மருந்து பலம் $\frac{3}{4}$, எடுத்து அதனுடனே மாசிக்காய், அதிமதுரம், சிரகம், ஆமையோடு அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். பொன்னுங்காணிவேரை அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பி பல், ஈறு, நாக்கிலேயும் தடவவும். எப்படிப்பட்டகணையும் காய்ச்சலும் தீரும். வயிறு கழியும். இந்தப்படி நாலுநாளைக்கொருநாள் கொடுக்கவும்.

பத்தியம் :—ஈரவெங்காயமும் சுடுகஞ்சியும் கொடுக்கவும். புளி மறுக்கவும்.

கணையெண்ணெய் :—சிற்றாமணக்கெண்ணெய் படி $\frac{3}{4}$, தகரையிலை, குழிமீட்டான், முடக்கொற்றான், பொன்னுங்காணி, சிறுகீரைவேர், அத்திப்பட்டை இவையரைத்து வகைக்குப் பலம் 2, சுக்கு, திப்பிலி, சீரகம், கோட்டம், வகைக்குப் பலம் 1, இவையெல்லாமரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து, ஒரு காசெடை வீதம் கொடுக்கவும்.

கணைநெய் :—ஆவின் நெய் படி ¼, துளசி, கற்பூரவள்ளி, பொன்னுங்காணி, வில்வயிலை, மாவிலை, விழுதியிலை வகைக்குச்சாறு படி ¼. ஏலம், திப்பிலி, திப்பிலிமூலம், சுக்கு, இலவங்கப்பட்டை, சாத்திரபேதி, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, சீரகம், கருஞ்சீரகம் இவை வகைக்கு பலம் ½, கல்நார் பலம் 1, கூட்டி அரைத்து பதத்தில் வெந்து ஒரு காசெடை கொடுக்க நூற்றெட்டுக் கணையும் தீரும்.

பிரளிக்கு

சிற்றாமணக்கெண்ணெய் படி ¼, விளாவிலைச்சாறு படி ⅛, வசம்பு அரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு கடுகுமரைத்து அந்த அளவு, ஈரவெங்காய மறிந்து படி ⅛, இவையெல்லாம் எண்ணெயில் கலந்து ஈரவெங்காயம் சிவந்தபதத்தில் வடித்துக் கடுகு வேறே வைத்துக் கொள்ளவும். ஒரு காசெடைகொடுத்து மறுநாள் வில்வயிலையும் ஈரவெங்காயமும் சாறுபிழிந்து கொடுக்கவும். இதற்குப்பதிலாக கடுகையும் பயன் படுத்தலாம்.

திட்டு மாந்தத்திற்கு

கீழ்க்காய்நெல்லியிலையும், காயும், அரைத்துப் பசுவின் நெய்யில் வெந்து காசெடை கொடுக்கத் திட்டு தீரும்.

வேறு :—விளாவிலையிடித்துப் பிழிந்து முச்சந்திக்கல்லு மூன்று கல்லுக்காய்ச்சிப் போட்டுத் தெளியவைத்து இரண்டு காசெடை கொடுத்துத் கோதை துவாலை போடவும்.

மாந்தம், செங்கரப்பானுக்கு

எண்ணெய் :—இசங்கிலை, தூதுளையிலை, குப்பைமேனி, அவுரியிலை, வெள்ளறுகு, சாறணையிலை புளியிலை, பிடாரமுகியிலை யிவை வகைக்குச்சாறு படி ⅛, நல்,லெண்ணெய் படி 1, கோட்டம், மதுரம், இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், கடுக்காய், ஓமம் இவை வகைக்குப் பலம் 1, நேர்வாளம் பலம் 5, இவையெல்லாம் கூட்டி அரைத்துப் பதத்தில் வடித்து ஒரு காசெடை கொடுக்க மாந்தம், தொண்டைக்கட்டு செங்கரப்பான், பிள்ளை தோஷம், பிள்ளைப்பிணி இவையெல்லாய் தீரும்.

வேறு :—சிற்றாமணக்கெண்ணெய் படி ¾, கருணைக்கிழங்கு அரைத்து பாக்களவு, மாம்பட்டை பாக்களவு, உள்ளிப் பூடு 1, வசம்பு ஒருதேர் இந்தநான்கு மருந்தும் போட்டுச் சூரிபுடம் வைத்து உள்ளுக்கு ஒரு துட்டளவு கொடுக்கக் கொள்ளிக்கரப்

பான் தீரும். மேலும் மூன்று நாளைக்கு துவாலையிடவும், அரைப் பிட்டு குளிக்கவும். கஞ்சிகாய்ச்சிக் கொடுக்கவும்,

மாந்தத்திற்கு

நெய் :—பசுவின் நெய் படி ¼, சீரகம் பலம் 1, ஏலம் பலம் 1, வங்கைப்பட்டை பலம் 2, கிராம்பு பலம் 1, தாளிசபத்திரி பலம்1, மிளகு வ 2, திப்பிலி வ 3, சுக்கு வ 4, இலவங்கப்பத்திரி வ 4, ஈரவெங்காயம் படி ⅛, பொன்னுங்காணி வேர், சிறுகீரை வேர், இவை யெல்லாம்பொடி செய்து நெய்யிலே வேகவைத்து இறுத்துக் கொடுக்கவும்,

வேறு :—பெருந்தும்பையிலை படி ¼, பொடுதலை பிடி 1, நொச்சியிலை பிடி 1. கழற்சியிலை பிடி 1, வேலிப்பருத்தியிலை பிடி 1, இவைஐந்தும் உழக்கு நல்லெண்ணெய்க்கு உழக்குச்சாறு விட்டு, பதத்தில் வெந்து கொள்ளவும். மூன்று மாதத்துப் பிள்ளைக்கு முலைப்பாலில் ஒரு காசெடை விட்டுக்கொடுக்கவும்.

வேறு :—கடுக்காய், திப்பிலி, அதிமதுரம், சீரகம், கண்டங்கத்தரிவேர், தாதுளைவேர், நாவல்பட்டை, நெல்லிப்பட்டை, கிளுவைப்பட்டை இவையெல்லாம் துவைத்து உரியதண்ணீர் விட்டு ஊறிச்திறுகச் சிறுகக்கொள்ளவும்.

வேறு :—ஆமணக்கெண்ணெய் படி 1, ஏலம் பலம் 8, சீரகம் பலம் 8, அதிமதுரம் பலம் 16, கருவாப்பட்டை பலம் 8, சீனி பலம் 2, ஆக இவையெல்லாம் பச்சையாகப் பொடித்து மேற்படியில் போட்டு ஒரு திங்களெட்டு நாள் சூரியபுடம் வைத்து, உள்ளுக்குக்கொடுக்கவும். பத்தியங்காக்கவும்.

வாய் கிரந்திக்கு

கண்டங்கத்தரிவேர் பலம் 1. மூக்குறச்சரணைவேர் பலம் 1, முப்புர மெரித்தான் வேர் பலம் 1. பரங்கிப் பட்டை பலம் 1, சித்திர மூலம் பலம் ¼, வெள்ளறுகு பலம் ¼, சங்கம்வேர் பலம் ¼, கருஞ்சீரகம் பலம் ¼, இவையெல்லாம் கற்பூரவள்ளிச் சாறு விட்டரைக்கவும். பிறகு பசுவின் பால் விட்டரைக்கவும். பிறகு அரைப் படி நெய்யில் சேர்த்து பதத்தில் வடித்து, வெருக்டிப் பிரமாணம் கொடுக்கவும். வாய்க்கிரந்தி. கரப்பன், கழுத்துக்குமேலுண்டான புண்களெல்லாம் தீரும்.

உட் காய்ச்சலுக்கு

நல்லெண்ணெய் படி 2, இளநீர்த் தண்ணீர் படி 2, அதிமதுரம், சந்தனம், நன்னாரி வேர், குங்குமப்பூ, அகில் கட்டை, கோட்டம், ஏலம், இலவங்கப்பத்திரி, நாகப்பூ, இலவங்கம், வெட்டிவேர், கிரந்தி தகரம், சடாமாஞ்சி, சதாவேரிக் கிழங்கு, இலாமிச்சம் வேர், சண்பகப்பூ, பூலாங்கிழங்கு, சாதிக்காய், ஈத்தங்கி நாத்து, திரிபலை, கடுகு ரோகணி, பச்சைக் கற்பூரம், ஆகவகைக்குப் பலம் 1, வீதம் கூட்டி அரைத்துப் பதத்தில் வடித்து முழுக உட்சுரம், உடம்பு வியர்வை, கால் கைவியர்வை தீரும்.

உட் சுரத்திற்கு

எண்ணெய்:—நல்லெண்ணெய் படி 3, பசுவின் பால் படி 3, செவ்விள நீர்த் தண்ணீர் படி 3, பொன்னுங் காணிச் சாறு படி 3, பொடுதலைச் சாறு படி 2, குமரிச் சாறு படி 1, கையாந்தகரைச் சாறு படி 2, நெல்லிக் காய்ச் சாறு படி 2, துளசிச் சாறு படி 1, நெல்லிப் பருப்பு படி $\frac{3}{4}$, மிளகு படி $\frac{3}{4}$, வெட்டி வேர் பலம் 2, இலாமிச்சம் வேர் பலம் 2, மலாக்கா சந்தனம் பலம் 2, கடுக்காய் 50, இவைகளைக் குடிநீர் செய்து இறுத்துக் கொள்ளவும். வெந்தயம் பலம் $\frac{3}{4}$, ஈரவெங்காயம் பலம் $\frac{3}{4}$, சீரகம் பலம் $\frac{3}{4}$, செங்கழுநீர் பலம் 2, கோட்டம் பலம் 2, பூலாங் கிழங்கு பலம் $\frac{1}{4}$, முத்தக்காசு பலம் $\frac{1}{4}$, செஞ்சந்தனம் பலம் $\frac{1}{4}$, தான்றிக்காய் பலம் 1, கடுகுரோகணி பலம் $\frac{1}{4}$, தேற்றாங்கொட்டை பலம் $\frac{1}{4}$, சாதிக்காய் பலம் 5, சாதிபத்திரி பலம் 3, கோரோசனை பலம் 5, கருஞ் சீரகம் பலம் 3, புனுகுசட்டம் பலம் 3, கஸ்தூரி மஞ்சள் பலம் 6, அதிமதுரம் பலம் 1, இவை யெல்லா மரைத்துக் கலக்கிப் பதத்தில் இறக்கி மூன்றுநாளூறி வடித்து முழுகவும்.

கூழ்ப்பாண்ட கிருதம் :—நறுநெய் படி 1, பொன்னுங் காணிச் சாறு படி 1, சிறுகீரைச் சாறு படி 1, பூசனிக்காய்த் தண்ணீர் படி 1, வங்காளச்சீனி பலம் 5, கோட்டம், சண்பகப்பூ, ஏலம், இலவங்கப்பட்டை, அதிமதுரம் வகைக்குப் பலம் 1, கூட்டி அரைத்துக் கலக்கிப் பதத்தில் வடித்துப் பத்துநாள் கொள்ள பெரும்பாடு, எலும்புரிக்கி, உட்காய்ச்சல், பிரமேகம் தீரும்.

பெரும்பாட்டுக்கு

முழுக எண்ணெய் :—நல்லெண்ணெய் படி 1, பசுவின் பால் படி 1, முசுமுசுக்கைச் சாறு படி $\frac{3}{4}$, சீந்திலிலைச் சாறு படி $\frac{3}{4}$,

பொன்னுங்காணிச் சாறு படி ¾, வல்லாரைச் சாறு படி ¾, இவை யெல்லாம் கூட்டிப் பதத்தில் வடித்து முழுகவும்.

வேறு:—நறுநெய் படி ¼, நல்லெண்ணெய் படி ¼, பசுவின் பால் படி 2, கூடவிட்டு, வெள்ளைக் குந்திருக்கம்பொடி படி ¼, மேலேபோட்டு கையாலே மத்திக்கக் குழம்பாய்த் திரளும். பிறகு மறுசட்டியில் நான்கு படி தண்ணீர்விட்டு அதில் கொட்டவெண் ணெய் போலே யிருக்கும். இதில் மிச்சங்காயளவு இருவேளைத் தின்றுவரவும். பெரும்பாடு, வெள்ளைச் சாய்கிறது, உட்சுரம் தீரும். மூன்றுநாளைக்குக்கொருக்கால் மறுதண்ணீர் விடவும்

வேறு:—கருங்குங்கிலியம் பொடி செய்து நல்லெண்ணெய் ஒரு சிரங்கை சட்டியிலே விட்டுக்காய்ச்சி இந்தப்பொடியைத் தூவி கோழி முட்டை மூன்று உடைத்துக்கூடவிட்டு கம்பு கொண்டு கிண்டி பதமாய்க்கொள்ளப் பெரும்பாடு தீரும்.

வேறு:—கருங்கம்பளி தீயில் சுட்டு தண்ணிரில் கலக்கிக் குடிக்கப் பெரும்பாடு தீரும்,

வேறு:—குளப்பாலைவேரை அரைத்து எருமைப்பாலில் குடிக் கப் பெரும்பாடு தீரும்.

வேறு:—கோவையிலையை அரைத்து நல்லெண்ணெயில் குழைத்து விழுங்கப் பெரும்பாடு தீரும்.

வேறு:—கீழ்க்காய்நெல்லிவேரும் கருஞ்சீரகமும் வகைக்கு ஒரு பாக்களவு பசுவின் பாலில் கொள்ளப் பெரும்பாடு சாய்கிறது, பிரமேகம், சுக்கிலப்பிரமேகம், லிங்கச்சூலை, உள்ளுருக்கி, எலும் புருக்கி, நீரடைப்புத் தீரும். இந்தப்படி ஐந்துநாள் கொள்ளவும்.

வேறு:—முருக்கிலைச்சாறு படி ¼, அதில் மூன்று துளி நல் லெண்ணெய் விட்டுக குடிக்கத்தீரும்.

வேறு:—வெள்ளுள்ளி, வசம்பு, பெருங்காயம், இந்துப்பு இவை வகைக்குப் பலம் 1, பனைவெல்லம் பலம் 3, குறுவை நெல் லரிசி வீழியிலைச் சாற்றில் நனையப்போட்டு இடித்த மாவும் கடை மருந்துப் பொடியும் கூட்டி வீழியிலைச்சாற்றில் குழைத்து ரொட்டி சுட்டுத்தின்ன. இந்தப்படி எட்டு நாள் கொள்ள பெரும் பாடு தீரும்.

வேறு :—விரிசன் கொழுந்து அரைத்து ஒரு எலுமிச்சங்கா யளவு, நல்ல வெல்லமந்தளவு கூட்டி ஆறுமாதத்துக் காடி ஒரு படி தெளிவில் கரைத்துக் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கப் பெரும்பாடு தீரும்.

வேறு :—* முத்தாத்தன் செவியைப் பரித்தரைத்து பழங் காடியில் மூன்று நாள் குடிக்கப் பெரும்பாடு தீரும்.

வேறு :—தேங்காயுடைத்துத் திருகி அவ்வளவு எருக்கலம்பூ இதழும் பிரண்டைவேரும் கருக வறுத்து இடித்து வடிகட்டி வெருகடிப் பிரமாணம் சிறுநீராகுதல் வெள்ளாட்டுக் கோமய மாகுதல் பூஞ்சாராய மாகுதல் இந்த அனுபானத்தில் எட்டு நாள் கொள்ள நெடும்பாடு தீரும்.

எலும்புருக்கிக்கு

† கோழிகுஞ்சு பொரித்த ஓட்டில் நாலாறு கொண்டுவந்து உட்தோல் உரித்துப்போட்டு பொடி செய்து அரைப்படி எலுமிச் சம்பழச்சாற்றில் கலந்து கொடுக்க எலும்புருக்கித் தீரும். இந்தப்படி ஐந்துநாள் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

வேறு :—நன்னாரி வேரும் யானை அறுகும் பாலிலரைத்துப் பாலில் கலக்கிக் குடிக்கவும். இந்தப்படி ஐந்துநாள் செய்யவும். புளி மறுக்கவும்.

வேறு :—சிறுபீளை இலையை யரைத்து எலுமிச்சங்காயளவு நெய்யிலாவது பழைய மோரிலாவது கலக்கிக் குடிக்கவும். இந்தப் படி மூன்று நாள் செய்யவும். எலும்புருகித் தீரும்,

வெள்ளை சாய்கிறதற்கு

குமிழிலை இரண்டு சிரங்கையைத் தண்ணீர் படாமலரைத்து உழக்கு பசுவின் பாலில் போட்டுப் பிசைந்து வடித்துக் குடிக்க வெள்ளை நிற்கும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

வேறு :—முருக்கிலை பரித்துத் துவைத்துச் சாறு பிழிந்து பழங்காடியும் நல்லவெல்லமும் கூட்டிக்கொடுக்க மாசிவிழும். இதற்குப் பெரும்பாடும் தீரும்.

---

* முத்திருக்கஞ்செவி

† அண்ட ஓட்டைப் பற்பஞ் செய்து அளவுப்படி கொடுத்தல் சிறந்தது.

10

உட்சுரத்திற்கு

சீரகம் படி ½, ஈரவெங்காயம் படி 1, உரித்து அரிந்து சீரகத்தையும் பெரும்படியாகத் துவைத்து உரிய நறுநெய்யில் கலந்து ஒரு விறகில் வெந்து பதத்தில் இறக்கிப் பழகின கலசத்தில் வைத்துக்கொள்ளவும். அதிகாலமே நெய்யும் கடுகும் வெருகடிப் பிரமாணம் கொள்ள உட்சுரம், வரட்சியுட்படத் தீரும்.

சிறுதேக்கு குடிநீர்:—சுக்கு, திப்பிலி, பேய்ப்புடல், சிறுதேக்கு, செவ்வியம், கடுகுரோகணி, கோட்டம், சீந்தில்தண்டு, சிறுகாஞ்சோரிவேர், வில்வவேர், முத்தக்காசு, பற்பாடகம், இவை வகைக்குப் பலம் 1, எட்டொன்றாகக் காய்ச்சிக் கொடுக்கப் பதிமூன்று வகைச் சுரமுந் தீரும்.

நான்குநாள் மாறலுக்கு

ஆண் பனைக்குருத்தோலை ஒரு பிடி நறுக்கி, சட்டியிலிட்டுக் கருகித் தீயான பிறகு கால்படி மோர்விட்டுச் சுத்திக்கொடுக்கவும். இதற்கு நாசியாலே சிராய் விழுகிறதுட்படத் தீரும்.

வேறு:—முத்தக்காசு, சிறுதேக்கு, கோட்டம், பற்பாடகம், சிறுகாஞ்சோரிவேர், சுக்கு, நிலவேம்பு, திரிபலை, சிறுவழுதலை வேர், சீந்தில்தண்டு இவை வகைக்குப் பலம் 1, தக்க நீர்விட்டு எட்டொன்றாய் காய்ச்சிக் கொடுக்கவும்.

வேறு:—மிதிபாகல் சமூலம் கொண்டுவந்து இடித்துப் பிழிந்த தனிச்சாறு படி ¼, ஏழுமுறை வடிகட்டிக்கொண்டு பசுவின் பால் படி ¼, கூடவிட்டு நல்லவெல்லம் எலுமிச்சங்காயளவு கூடக்கரைத்துக்கொடுக்கவும். ஏழுதரம் வயிறு கழியும். சுரமும் உடனே விடும்.

அட்டசுரத்திற்கு

சாத்திரவேதி, ஏலம், கல்நார், திப்பிலி, சீரகம் வகைக்குப் பலம் 1, ஓமம் பலம் 3, சுக்கு பலம் ¾, நேர்வாளம் பலம் 2, கோரோசனை பலம் ¼, சாரணைவேர் பலம் 3, இவையெல்லாம் கூட்டிப் பொடிசெய்து, கொத்தமல்லியும் சுக்கும் வறுத்து அதிலே இளநீர்விட்டு அந்த இளநீரை வடித்து முன்கூட்டின சூரணம் கூட்டிக்கொடுக்க அட்டசுரமும் தீரும்.

மாறல் சுரத்திற்கு

அரிதாரம், நாவி, கந்தகம், இரதம், பொரிகாரம், துருசு. பாகலிலைச்சாறு விட்டரைத்துச் செம்புக்கிண்ணியிலிட்டு சட்டியில்

செம்புக்கிண்ணித் தூறுதெரிய மணலிட்டுத் தூறிலே நெல் வைத்துத் தீயெரித்து, நெல் பொரிந்தால் ஆறவிட்டு எடுத்துப்பண வெடைபற்பமும் ஒன்பது மிளகும் வெற்றிலையில் வைத்துத் தின்று வெந்நீர் குடிக்கத் தீரும்.

சன்னிவாத சுரத்திற்கு

சீந்தில்தண்டு, தூதுளைவேர், கண்டங்கத்தரிவேர், குருவீச்சுவேர், குருந்தொட்டி வேர், சிறுகாஞ்சோரிவேர், விஷ்ணுக்கிராந்தி, பொன்முசுட்டை வேர், முத்தக்காசு வகைக்குப் பலம் $\frac{3}{4}$, சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், கொத்தமல்லி, வெட்பாலையரிசி, செவ்வியம், சிறுதேக்கு, கோட்டம், பேய்ப்புடல், வகைக்குப் பலம் 1, இவையெல்லாம் அட்டபாகமாகக்காய்ச்சி இறுத்து அந்தக்குடிநீரில் இஞ்சிச்சாறு ஆழாக்கு $\frac{1}{4}$, கூட்டிக்கொடுக்கவும். இதில் ரசசெந்தூரம், விஷ்ணுசக்கிரம், பூபதி இந்தவகை கூட்டிக்கொடுக்கவும்.

வேறு :—கொத்தமல்லி பொடியைத் தண்ணீரிலூறவைத்துக் கொடுக்கத் தீரும்.

தாக சுரத்திற்கு

மாங்கொழுந்தை தண்ணீரில் காய்ச்சிப் புதுக்குடத்தில் விட்டு ஆற்றிக்கொடுக்கத் தாக சுரம் தீரும்.

வேறு :—ஏலம், மதுரம், சந்தனம், இலாமிச்சம்வேர் வகைகுப் பலம் 5 கூட்டி ஒரு படி இளநீர்த்தண்ணீர் விட்டுக்காய்ச்சிக் கொடுக்கத் தாகந் தீரும்.

வேறு :—நெல்லிப்பருப்பு, கஸ்தூரிமஞ்சள், இவ்விரண்டையுமரைத்து முலைப்பாலுடன் கலந்து உச்சிமுதல் உள்ளங்கால் மட்டும் துவாலையிடத் தாகம் பொறுக்கும்.

ஆம சுரத்தின் குணம்

ஆம சுரத்தின்குணங் கேளீ
ரதிகமாக வெதும்பாதே
சாமந்தோறு மப்பிருக்குந்
தனியே உறக்கந்தான் வந்து
சேமமாக உடம்புளையுஞ்
சீறு மிருமுஞ் செயல் கெடுக்கும்
நாமந்தழரும் உடம்பெரியும்
நடுக்கியிருக்கு நன்னுதலே

நான்குநாள் மாறலுக்கு

பிராயிளங்கொழுந்து, வெட்பாலைவேர், கழற்சிப்பருப்பு, உள்முளையெடுத்துப்போட்டு அரைத்துக் கொடுக்கத் தீரும்.

சுரத்திற்கு

மெருகெண்ணெய்:—மெருகங்கிழங்கு நறுக்கி ஒருபடி, நாலுபடி தண்ணீரில் போட்டு ஒரு படியாகக் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும். அதில் நல்லெண்ணெய் படி 1, பசுவின் பால் படி 1, மெருகங் கிழங்கரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு கலக்கி வெந்து ஒரு நாளைக்கு இரண்டு கைக்கும் பூசவும்; ஒரு நாளைக்கு மார்பளவு பூசவும்; ஒரு நாளைக்கு காலளவும் பூசவும். பலவெதுப்புத் தீரும்.

மோரெண்ணெய்:—நல்லெண்ணெய் படி 2, மோர் படி 12, அரத்தை, சுக்கு, கோட்டம், சந்தனம், மரமஞ்சள், அதிமதுரம், முத்தக்காசு, திப்பிலி, குறுந்தொட்டிவேர், நன்னாரிவேர், செவ்வியம், தேவதாரம், இலாமிச்சம்வேர், கடல்நுரை, வெட்டி வேர், கடுகுரோகணி வகைகுப் பலம் $2\frac{1}{2}$, கூட்டி அரைத்துப் பதத்தில் வெந்து முழுகச் சீதசுரம், தாக சுரம், சருவ சுரமும் தீரும்.

சந்தனாதிக் குடிநீர்:—சந்தனம், இலாமிச்சம்வேர், தாமரைவளையம், தாமரை, அல்லி, தண்ணீர்மிட்டான் கிழங்கு, வெட்பாலையரிசி, அதிவிடயம், முத்தக்காசு, வகைக்குப் பலம் 3, மூன்று படி நீர் விட்டுக்காய்ச்சி கால் படி குடிநீராக இறுத்துக் கொடுக்கவும்.

மிருத்துவாதி குளிகை:—அதிமதுரம் பலம் 3, கோரோசனை பலம் 2, முலைப் பால் விட்டரைத்துக் கடலைப் பிரமாணம் உண்டைசெய்து அனுபானம் மான்கொம்பு, ருத்திராக்ஷம், பவளம், பூநாகம் கூட்டி முலைப்பாலில் கொடுக்க பித்தசன்னி, கபாலபித்தமிவை தீரும்.

வேறு:—காந்தம் பலம் 4, அரப்பொடி பலம் 4. செங்கற் சிட்டம் பலம் 8, இவையெல்லாம் கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றில் குழம்பாக்கி வெயிலிலும பனியிலும் வைத்து வற்றவிட்டுப் பொடி செய்து பால்கஞ்சி குடிக்கவிட்டு, அதன்மேலேவெருகடிப்பிரமாணம் இந்தப்பொடியைக் கொடுக்கவும். பால், நெய் கூட்டவும் எட்டுநாள் உப்பு, புளி தவிர்க்கவும். நாலுநாளைக் கொருகால் முழுகி வரத் தீரும்.

பெருவிரலில் நின்று மேல்நோக்கி ஏறுகிற வாய்வுக்கு

வெள்வெங்காயமரைத்து ஒரு பாக்களவு, திப்பிலி 5, வறுத்தரைத்து அந்தச்சட்டியிலே வெந்நீர்வைத்து அரைத்த மருந்தை நாக்கில் தடவி வெந்நீர் குடிக்கவும்.

காது மந்தத்திற்கு

இஞ்சிச்சாறு, குதிரை யுடனே யிட்டலத்திச் சாறுங் கூட்டிக் காதிலடைக்க காது மந்தந் தீரும்.

அதிசாரசுரத்திற்கு

சாதிக்காய், சாதிபத்திரி, குரோசானி ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, இவைகளைப் பொடி செய்து தேனில் கொடுக்கவும். பொன்முசுட்டை வேர்க் குடிநீர் செய்து கொடுக்கவும்.

வேறு :—பெருமருதம் பட்டை பலம் 2, அதிவிடயம் பலம் $\frac{1}{4}$, சுக்கு பலம் 2, கிராம்பு பலம் $\frac{1}{4}$, சாதிக்காய் பலம் $\frac{1}{4}$, சீரகம் பலம் $\frac{1}{4}$, ஆக மருந்தாறும் கிழிகட்டிப் போட்டு விளாம்பழச்சதை பலம் 2, முத்தக்காசு பலம் 2, பொன்முசுட்டை வேர் பலம் 2, மாதளை வேர் பலம் 2, முதல் * பஞ்ச மூலமும் வகைக்கு பலம் 2, இவையெல்லாம் எட்டொன்றாகக் குடிநீர் செய்து கிழிமருந்தை அரைத்துக் கலக்கி இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

ஓடித்திரிகிற வாய்வுக்கு

கோழி முட்டையுடைத்துக் கிண்ணியில் விட்டுக் குந்திருக்கம் பொடி செய்து போட்டு நல்லெண்ணெய் விட்டுக் கொடுக்கத் தீரும்.

சருவாங்க வாய்விற்கு

சூரணம் :—திரிகடுகு, அரத்தை, சிற்றரத்தை, ஓமம், அதிமதுரம், திரிபலை, கோட்டம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், திப்பிலி, திப்பிலிமூலம், சாதிக்காய், சிறுநாகப்பூ, சண்பகப்பூ, பூலாங்கிழங்கு, சீரகம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், கடுகுரோகணி, கற்கடகசிங்கி, மலாக்கா சந்தனம், சடாமாஞ்சி, சமுத்திரப்பச்சை, சிறு

---

* பாதிரி, வாகை, பெருங்குமிழ், வில்வம், தழுதாழை இவைகளின் வேர் கட்டை.

தேக்கு, கிராம்பு, கருஞ்சீரகம், கொத்தமல்லி, இவை வகைக்குப பலம் 1, பொடித்துக் கூட்டிப் சர்க்கரை கூட ரேசித்து வெருகடிப்பிரமாணம் தேனில் கொள்ளவும். வாயு இருபத்தாறும் தீரும். பத்தியம்—இச்சாபத்தியம்.

பாரிச வாய்வுக்கு

மாவிலிங்கப் பட்டை மேல்பொருக்கைத் தள்ளி, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து கொட்டைப் பாக்களவு இரண்டு நேரமும் கொள்ளவும். சர்வ வாய்வும் தீரும்.

வேறு:—இதன் வேரை அரைத்துக் குடிக்கக் குட்டம் தீரும்.

வேறு:—இந்தப்பட்டையும் புழுங்கலரிசியுமாக அரைத்து பாவையாகச்செய்து கீழுமேலும் எருக்கிலை பொதிந்து மூன்றெரு வில்புடம் போட்டுத் தலை முதல் பிய்த்துத்தின்ன வாய்வும் வஞ்சனைக்கட்டும் தீரும்.

வேறு:—நிலவாகை சமூலப் பொடியும், கடுக்காய்ப் பொடியும், சரி கூட்டி தேனில் கொடுக்க வாய்வு தீரும்.

வாய்வு குன்மத்திற்கு

மிளகு பழம் படி $\frac{1}{8}$, ஒருபடி பசுவின் பால் விட்டு அவித்து நன்றாயரைத்துக்கொள்ளவும். கருவேப்பிலை பிடி 1, வெள்வெங்காயம் பலம் 1, ஓமம் படி $\frac{1}{16}$, பழம்புளி நாரத்தங்காயளவு, நாமக்கட்டி பலம் $\frac{1}{8}$, இவையெல்லாங்கூட்டி நன்றாயரைத்து அரைப்படி நல்லெண்ணெயில் கலக்கி வெந்து சிவந்த பதத்தில் இறக்கிக் கொள்ளவும். ஒரு ஆளுக்கு சிறுதான்றிக்காய்ப்பிரமாணம் எண்ணெயுங் கடுகும் கொடுக்க சகல வாய்வும் சகல குன்மமும் தீரும்.

கபாலவாய்வு நேத்திரவாய்வுக்கு

பசுமஞ்சள், இஞ்சி. முருக்கு, வாகை, பாடா
பிரண்டை, தழுதாழை அத்தி இவை எட்டும்
மசியஇடித்துக் கூடினசாறுபடி ஒன்றரையாய்க் கூட்டி
புன்னை நிம்பம் ஏரண்டம் இலுப்பை புங்கு
முசியாத எள் இவையின் நெய் வகைக்கு உழக்கு
முகனையுள்ள நறுநெய்தான் உழக்குங் கூட்டி
அசையாத ஆறுவகை தயிலமது தன்னை
அன்புடனே சாறுதனில் அடவாக்கிக் கொள்ளே.

ஆக்கியபின் மிளகு மஞ்சள் வெளுத்தப்பிசின் அரத்தை
அரிய கந்தமுடன் சதகுப்பை வசம்பதுவும்
நீக்கமில்லாத் திப்பிலியும் வராகிபுரமெரித்தான்
நீண்டநரிவிரட்டி யிவைமூல மெண்கழஞ்சாம்
வாக்குடனே கூட்டிஅரைத் தெண்ணெய் தனில்வெந்து
வடிகொண்டு முழுகியிடு காதிலடை யிரைச்சல்
போக்கடியசீழ் வடிதல் மந்தம் காதடைப்பும்
போக்கியிடும் சன்னியும்போம் பொதுவகை முனியுரையே.

வேறு :—அத்திப்பட்டை, இலந்தப்பட்டை, நாயுருவிவேர், இவை இடித்து நான்குபடி தண்ணீரில் போட்டு நாழியாகக் கொள்ளவும். இந்தக் குடிநீரில் அரைக்கால்படி இருத்து மேல் மருந்து—கௌரிபாஷாணம், துத்தம், அரிதாரம், இவை வகைக்கு மஞ்சாடி, கிளிகட்டி சுண்ணும்புக்கல்லில் வெந்து சுத்திசெய்து, இந்த மருந்தளவு சந்தனம் கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றிலரைத் துப் பயறளவு உண்டை செய்து கொண்டு, உண்டையில் பாதி அந் தக் குடிநீரில் உரைத்துக் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்க தலையிடி, காதுமந்தம், இரைக்சல் தீரும்.

குன்மம் பதினெட்டுக்கு

திரிகடுகு, வாய்விளங்கம், கடுகுரோகணி, பெருங்காயம், வெள்வெங்காயம், சீரகம், கருஞ்சீரகம், ஊசிக்காந்தம், திரிபலை, ஓமம், சாதிக்காய், இந்துப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, ஆக இவை வகைக்குப் பலம் 1, அமுக்கிராவேர் பலம் 3, பிரமிச்சாறு, நாறுகரந் தைச்சாறு, உத்தமதாளிச்சாறு, உகாயிலைச்சாறு, பிரண்டைச் சாறு, நாரத்தம்பழச்சாறு வகைக்குப் படி ⅛, இஞ்சிச்சாறு படி 1, இவையெல்லாம் ஒன்ருய் விட்டுக்காய்ச்சிக் கடை மருந் தெல்லாம் பொடி செய்து போட்டுக் கிண்டி நீர்வற்றக்காய்ச்சி அதில் கால்படி கற்கண்டும் இரண்டுபலக் கருப்புக்கட்டியும் கூடப் பொடித்துப்போட்டுக் காய்ச்சி லேகிய பருவத்தில் கால்படி தேனும் விட்டுக் கிண்டிக் இறக்கிக்கொள்ளவும். தினம் ஒரு கொட்டைப்பாக்களவு தின்றுவரக் குன்மம் பதினெட்டும், வாய்வு இருபத்தாறும் தீரும்.

வேறு :—குப்பைமேனி சமூலம், நிலவாகை சமூலம், இந்த வகை யரைத்து எலுமிச்சங்காயளவு, பெருங்காயமும் சித்திரமூல மும் வகைக்கு ஒரு சுண்டைக்காய் மரியாதி மோரில் கலந்து ஐந்து

நாள் குடிக்கவும். உப்பு புளி மறுக்கவும். குன்மம் பதினெட்டும் தீரும்.

பிள்ளைப் பேறில் வயிற்று வலிக்கும் கழிச்சலுக்கும்

திரிகடுகு, வசம்பு, உள்ளி, காயம், ஓமம், இவை சரி கொண்டு வறுத்துப் பொடித்துக் குழைந்த சோற்றில் வெருகடிப்பிரமாணம் நல்லெண்ணெய் குத்திக்கொடுக்கத் திரும்.

வயிற்றில் ஈரல் சூலையில் குத்துகிறதற்கு

வெள்வெங்காயம், ஒருபூடு, சுக்குஒரு தேர், மிளகு பலம் 1, வேலிப்பருத்தி பலம் 1, சாறணைவேர் பலம் 1, புளி பலம் 1, இவைலாம் கூட்டி *மிளகுச்சாறு இராத்திரி செய்து விடியுமுன்னே கொள்ளவும்.

சத்தி குன்மத்திற்கு

திரிபலை பலம் 1, இந்துப்பு பலம் 1, இவ்விரண்டையும் பொடி செய்து நாரத்தங்காய் 10, குப்பைமேனிச்சாறு படி 1, நாரத்தங்காயைக் கிண்ணியாக அறுத்துக் கடைச் சரக்குப் பொடியைக் காயில் திணித்து, அந்தச்சாற்றிலூறவைத்து, ஒருநாள் இராக்காலத்திலே பனியுண்ணவைத்து, மறுநாளடுப்பில் வைத்து ஒரு விறகு கொண்டு எரியிட்டு சுவறின உடனே இறக்கி அதிகாலமே இரண்டு கீத்தும் அந்திக்கு இரண்டு கீத்தும், சோற்றிலொரு கீத்தும் போட்டுண்ணவும். கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

பயித்திய வாய்வுக்கு

அமுக்கிருவேரைக் குறுகநறுக்கி, நிழலிலுலர்த்தி சற்றேமுறிகிற பதத்திலிடித்து வடி கொண்டு படி 1, சீனி படி 1, பசுவின் நெய் படி 1, இவை மூன்றும் ஒன்றுய்க் குழப்பி பழகின கலசத்தில் வைத்துக் கொண்டு புன்னைக்காயளவாக இரண்டு நேரமும் கொள்ளவும். பசுவின் பால், நெய், சற்றுப்புக் கூட்டவும். பயித்திய வாய்வு தீரும்.

சத்தி குன்மத்திற்கு

பிரண்டை படி 2, மோர்படி 2, உப்பு படி 1, ஆக மூன்றுமூறப்போட்டு உலர்த்தியிடித்துப் பொடிசெய்து கடுகுபொடி

* மிளகு இரசம்

படி ¼, சுக்குப்பொடி படி ¼. மிளகு பொடி படி ¼, வெள்வெங் காயம்பலம் 1, ஆக இதுவும் பொடி செய்து ஒன்ருய்ச் சேகரித்துத் தின்னவும். அதன் பிறகு வயிற்றை யெரித்தால் எருமைவெண் ணெயும் சீரகமும் எலுமிச்சங்காயளவு தின்னவும். அதன் பிறகு சுக்குப் பொடி படி ¼, கடுக்காய்ப் பொடி படி ¼ ஆக இவ்விரண்டும் கூட்டி சர்க்கரையில் குழப்பி நாற்பது நாள் தின்னவும்.

எண்ணெய் :—சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, நாகப்பூ, சிறுநாகப்பூ, சண்பகப்பூ, கோட்டம், தேவதாரம், மிளகு, ஏலம், இலவங்கப்பட்டை, சந்தனம், சிறுதேக்கு, பச்சைநெல்லிப் பருப்பு, கற்பூரம், கஸ்தூரி மஞ்சள், இவை வகைக்குப் பலம 4. வெட்டிவேர், இலாமிச்சம்வேர், கொடுப்பை வேர், கையாந்தகரை, முசுமுசுக்கை, சிரா, செங்கழுநீர், தாமரைவளையம், தாழைவிழுது, சிற்ருமுட்டிவேர், பேராமுட்டிவேர், நன்னுரிவேர், நெல்லிக்காய், முடக்கொற்ருன், சீந்தில் தண்டு, கற்ருழைவேர், முன்னைவேர், வில்வவேர், முத்தக்காசு வகைக்குப் பலம் 10, இடித்துக் குடிநீர் செய்து எண்ணெயில் விட்டுக்காய்ச்சிப் பதத்திலிறக்கி முழுகவும்.

வாய்வுக்கு

தும்பை, கொளுஞ்சி, பிரண்டை இவை மூன்றும் வகைக்குச் சாறு படி ¾. இதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வகைக்கு பலம் 3 நன்ருய்ப்பழுது பார்த்து இளவறுப்பாக வறுத் துப் பொடி செய்து சாற்றை அடுப்பில் வைத்துக்காய்ச்சி முக்கால் படியான உடனே மருந்துப் பொடியும், ஒரு கழஞ்சு பெருங்காய மும் பொடி செய்து கூடப்போட்டுக் கிண்டிப் பழகின கலசத்தில் வைத்துக் கொண்டு சாப்பிடத் தீரும்.

வாதத்திற்கு

நல்லெண்ணெய் படி ¾, வெள்ளாட்டின் பால் படி 2, பசுவின் பால் படி ¾, நொச்சிச்சாறு படி ¾, புளியிலைச் சாறுபடி ¾, ஆகச் சேகரித்து அடுப்பில் வைத்து வேம்பு, கள்ளி, எருக்கன்விறகு அகப்பட்டதைக்கொண்டு எரியிட்டு மெழுகு பதத்தில் கருங் கம்பளி கொண்டு வடிகொண்டு பழங்கலசத்தில் வைத்துக் கொண்டு, நோயுள்ள இடத்தில் கோழித்தூவல்கொண்டு தடவி, மாலைபெருந்தும்பை வேது பிடிக்கத் தீரும்.

ஏரண்டத்தயிலம்

உள்ளி இஞ்சி இந்துப்பு உற்ற சிவதை சீவந்தி
கொள்ளும் நிலவாகையின் வேரும்குலவு மிளகு திப்பிலியும்
உள்ளேரண்டத்தெண்ணெயுடனே முடகொற்றுனிலைகொள்
தள்ளாதொக்கக் கள்ளிப்பால் தன்னோடெரித்து எண்ணெய்
[கொள்ளே
கொள்ளேகுன் மங்குடல்வாதக் கொடியபிலீகை யட்டலிகை
உள்ளே திரண்டமலக்கட்டு உடனே பிறந்த சலஞ்சீதம்
கொள்வோர் பக்க சூலை வலி குத்தும் வாய்வு பெருவயிறு
பிள்ளே கழிந்து போமென்று பெரியோருரைத்ததிதுவாமே.

இதற்கு வகை:—உள்ளி, சிவதை, இந்துப்பு, இஞ்சிவகைக்குப் பலம் 3, மிளகு பலம் 1, திப்பிலி பலம் 1. நிலவாகைவேர் பலம் 3, கள்ளிப்பால் பலம் 3, சிற்றுமணக்கெண்ணெய் படி 2, முடக் கொற்றான் சாறு படி 1, ஆக எரித்து அரைக்காசெடை வீதம் இரண்டு நேரமும் கொடுக்கவும், காற்றுப்படாதிருக்கவும், பத்தியம் பதனமாக இருக்கவும்.

மகோதரத்திற்கு

நறுநெய் படி $\frac{1}{4}$, மேதிச்சாணத்தண்ணீர் படி $\frac{1}{4}$, கோமூத்திரம் படி $\frac{1}{4}$, பால் படி $\frac{1}{4}$, கள்ளிப்பால் படி $\frac{1}{8}$, நேர்வாளம், திரிகடுகு, சிவதை வகைக்குப் பலம் 1, இவைகளைக் காய்ச்சிப் பதத்தில் வடித்து நக்கவும்.

வேறு:—சிற்றுமணக்கெண்ணெய் படி $\frac{1}{4}$, கத்தகலத்தித் தண்ணீர் படி $\frac{1}{4}$, வெள்வெங்காயம் பலம் 6, கருஞ்சீரகம் பலம் 3, வசம்பு பலம் 3, ஆக இவை அரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து மேலிட மகோதரம் தீரும்.

உண்டை:—அரிதாரம் பலம 1, இரதம் பலம் 1, கற்றாழை மடலிலவித்துச் சுத்தி செய்த கடுக்காய்ப் பலம் 10, பருத்தியிலைச் சாற்றில் போட்டுக் குடிநீர் காய்ச்சி அந்தக் குடிநீர் விட்டரைத்துப் பருத்தி விதையளவு உண்டைசெய்து இளவெந்நீரில் ஒரு உண்டையிட மகோதரந்தீரும்,

பெருவயிறு கெண்டை மகோதரமிந்தவகைக்கு

ஒருபடி எருமை மோரில் ஒரு பிடி உப்பு காலையில் போட்டு வைத்து மறுநாள் காலையில் கொடுக்கக்கழியும், கெண்டை கரைந்து விழும்.

வேறு :—கொம்மட்டிக்காய் சதை படி ¾, உப்பு படி ¾, மஞ்சள் படி ¾, ஆக மூன்றும் அரைத்துச் சூரியபுடம் வைத்துப் பொடி செய்து வெருகடிப்பிரமாணம் இளவெந்நீரில் கொள்ளப் பெருவயிறு, கெண்டை கரையும்.

வேறு :—பருவிரால்கண்டம் 3, மிளகு, மஞ்சள், வெள்வெங்காயம், ஓமம், சீரகம், இவை வகைக்குப் பலம் 1, உப்பு படி ⅛, தேங்காய் ஒன்றரைத்து கூடக்குழப்பி ஆகயிது ஒரு படி, சதுரக்கள்ளிப் பட்டை மேல் வைத்து, அவித்துப் பிறகு பட்டையை எடுத்துப் போட்டு மூன்று கண்டமும் தினமொரு கண்டமாக மூன்று நாள் கொடுக்கவும். நீராம்பல், கெண்டை தீரும். மிஞ்சி யெடுத்தால் மோருஞ் சோறுகொடுக்கவும்.

வெப்பாலைக்கு

சோறு பொங்கி எருமைத் தயிர் விட்டுக் கருப்புக்கட்டிக் கூட்டித் தின்னபிறகு சங்கங்குப்பி வேரை எலுமிச்சங்காயளவு அரைத்துத் தின்னவும். இரவில் இந்த இலையை வயிற்றில் வைத்துக்கட்டிப்படுக்கவும். இந்தப்படி மூன்று நாள் செய்யத்தீரும்.

வறட்சூலை கடுப்புக்கும் கிரந்திக்கும்

நிலவாகை, வெள்ளறுகு, சிவனார்வேம்பு இவை மூன்றும் சமூலம் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி இடித்து வடி கொண்டு சுக்கு, மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, ஓமம், குருசானி ஓமம், ஏலம், கருஞ்சீரகம், நற்சீரகம், கிராம்பு, இவையெல்லாம் கூடின அளவு பரங்கிப்பட்டை. இவைகளையு மிடித்து வடிகட்டி இரண்டுவகைப் பொடியும், கலந்து வெருகடிப் பிரமாணம் இரண்டு நேரமும் தேனிலாவது இளவெந்நீரிலாவது கொள்ளவும். இந்தப்படி மண்டலங்கொள்ளவும். புளி மறுக்கவும்.

சூலைக்கடுப்புக்கு

எள்ளுப் படி ⅛, இடித்துப் பொடி செய்து சுக்கு பலம் ⅛, மிளகு பலம் ⅛, வெள்வெங்காயம் பலம் 1. இவையெல்லாம் பச்சையாகப் பொடி செய்து வெள்வெங்காயமரைத்துக்கொண்டு பொடுதலை விளாங்காயளவு அரைத்து இவையெல்லாம் எள்ளுப் பொடியுள்பட உரலிலே போட்டிடித்து சேறு பதத்தில ஒரு பலக்

கருப்புக்கட்டி கூட்டியிடித்துப் புதுக் கலசத்தில் வைத்து சிறு எலுமிச்சங்காயளவு இரண்டு நேரமும் கொள்ளவும். சூலே இடுப்பு வாதம், கை கால் கடுப்பெல்லாம் தீரும். இச்சா பத்தியம்,

மருந்திட்டுக்கு

நல்ல பீர்க்கம் விதை 207, அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கத் தீரும்.

மருந்திட்டிருமலுக்கு

நாரத்தங்கொழுந்து, எலுமிச்சங்கொழுந்து, நாயுருவிக் கொழுந்து, அரிதாரம் இவை நான்கும்சற்று, ஊமத்திலேயும் முருக்கிலேயும், மேனியிலேயும், உத்தமதாளி யிலேயும் தட்டிச்சாறு பிழிந்துவிட்டு இந்த மருந்து நான்கையுமரைத்துக் குழம்பாக்கிச் சீலேப்பாளத்தில் பூசி உலர்த்தித் திரித்து வைத்துக்கொண்டு மோருஞ் சோறு முண்டு பாக்கு வெற்றிலே தின்று ஒதுக்கிக் கொண்டு திரியைக் கொளுத்திப் புகை குடிக்கவும். இந்தப்படி மூன்று நாள் குடிக்க மருத்திட்டிருமல் தீரும்.

வேறு :—மணத்தக்காளி வேரை நல்லெண்ணெயில் பிசைந்து கொடுக்க மருந்து விழும்.

வேறு :—பேய் முசுட்டைவேரை மேல் தோல் போக்கிப் போட்டு உலர்த்திப் பொடித்து ஒருபடி தூளும் அரைப்படி கல்லுப்பும் பொடி செய்து போட்டு பொடிகளேக் கலந்து முப்பது பாணன்பழங் கொண்டுவந்து நாலு கீற்றுகக்கீறி அந்தப்பொடியைக் கீற்றிலே திணித்து ஆறுநாள் வெயிலில் வைத்து தினம் மூன்று பழம் தின்னவும். மருந்திடு தீரும்.

சகல விஷங்களுக்கும்

வல்லாரைச்சாறு படி 1, சீராசெங்கழுநீர்ச்சாறு படி 1, திருநாமப்பாலேச்சாறு படி 1, இளநீர் படி 2, நறுநெய் படி 2, தாளிச்சாறு படி 1, பசுவின் பால் படி 12, அதிலரைத்துக்கரைக்க மருந்து :—அதிமதுரம் பலம் $1\frac{1}{2}$. சந்தனம் பலம் $1\frac{1}{2}$, செங்கழுநீர்க் கிழங்கு பலம் $1\frac{1}{2}$, குன்றிவேர் பலம் $\frac{1}{8}$, அவுரியிலே அரைத்து ஒரு மாங்காயளவு, கோரோசனே பலம் 1, ஆக இவையெல்லாமரைத்துக் கலக்கிப் பதத்தில் வடித்துக் கொள்ள சருவ விஷங்களும் தீரும். உடம்பெரிப்பு, தலேசுழற்றல், அங்கமெரிப்பு, உள்ளங்

கால், உள்ளங்கை யெரிப்பு, நாக்குலர்ந்து நெஞ்சு வற்றினது, வரட்சி, இருமல், அசீரணசுரம், விஷபாகம், வீக்கம், பல்லிப் பித்து, ஒந்திப்பித்து, பாம்பு நஞ்சு, ஆனைமதம், கழுதைக் குரும்பி, கசநோய், இந்தவகையுண்டான விஷமுந் தீரும்.

விப்புருதிக்கு

தலைப்பிண்ணுக்கு நெல்லிக்காயளவு, காடித்தெளிவு நாழியில் தட்டிப்போட்டு சாயுங்காலம் ஊறப்போட்டு மறுநாள் முத்துப் போல் இறுத்து உழக்குப்போலே கொள்ளவும். உடம்பு வருத்த மானால் மோருஞ்சோறும் உண்ணவும்.

மருந்திட்டுக்கு

பொற்கொன்றையும், பொன்னுவரைக்காயும் கண்டங்கத் தரிச்சாற்றிலரைத்து ஒரு சுண்டைக்காயளவு கொடுக்கவும்.

சுரோணிதவாய்வுக்கு

எண்ணெய் :—ஆமணக்கெண்ணெய் படி $\frac{1}{4}$, நல்லெண்ணெய் படி $\frac{1}{4}$, நொச்சி, எருக்கிலை, ஊமத்திலை, வகைக்குச்சாறு படி $\frac{1}{4}$, இந்துப்பு பலம் 1. மரமஞ்சள் பலம் 1, கூட்டி வெந்து பதத்தில் வடித்து மூன்று நாள் நக்கவும்.

கர்ப்பக்கிராணிக்கு

நறுநெய் படி 1, பூசனிப் பூ 40, அரிதாரம் பலம் 1, பொடித்து நெய்யில் போட்டு பூசனிப் பூவும் போட்டு சிவக்கத் தீயெரிக்கவும். கிண்டிக்காய்ச்சிப் பூசனிப் பூ நையவெந்தால் பிறகு அதிமதுரம், கோட்டம், ஏலம், சீரகம், சந்தனம், வகைக்குப் பலம் 1, சதாவேரி சமூலமிடித்த சாறு படி 1, இந்த நீரிலரைத்துக் கலக்கிப் பதத்தி லிறக்கிப் பாதத்தில் பூசியும் மத்தித்து கடுகோடே தின்னவும். கர்ப்பக் கிராணி, வெள்ளை சாய்கிறது எல்லாம் தீரும்.

கர்ப்ப விப்புருதிக்கும் கர்ப்பரோகத்திற்கும்

தேங்காய்நெய் படி $\frac{1}{8}$, சோமனுதன் பெருங்காயம் வராகன் 3, நெய்யில் போட்டுருகின உடனே சாரணைவேர் வராகன்7, முத்தாத் தான் செவி வராகன் 7, அமுக்கிருவேர் வராகன் 14, ஆக இவை யெல்லாம் முத்தாத்தான் செவியிலைச்சாறு விட்டரைத்து நெய்யில் கலந்து வெந்து பதத்தில்வடித்து கடுகுடனே இறக்கிவைத்து

உபயோகிக்க கர்ப்ப விப்புருதி, கர்ப்பரோகம், வயிற்று வலி, புழு வலி, இரத்தம் சாய்கிறது, கர்ப்பக்கிராணி இவையெல்லாம் தீரும்.

கர்ப்பமுண்டாக

நல்லெண்ணெய் படி $\frac{3}{4}$, முடக்கொற்றான் சாறு படி $\frac{3}{4}$, சுக்கு, வசம்பு, வெள்வெங்காயம், பெருங்காயம், பூசனசாலை, சீதாரி, தேவதாரம், சதகுப்பை இவையெல்லாம் வகைக்குப் பலம் $\frac{3}{4}$, வீதம் அரைத்துப் பதத்தில் வடித்து நாற்பது நாள்கொள்ளக் கர்ப்பமுண்டாம்.

வேறு ;—வெள்ளைத்துத்திவேர் அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்க விப்புருதி தீரும்,

யோனியாலே இரத்தம் விழுகிறதற்கும், வெள்ளைசாய்கிறதற்கும்.

தாமரையல்லியும் பசுவின் வெண்ணெயும் சீனியும் கூட்டிக் கொடுக்க நிற்கும்.

வேறு :—இலவம்பூவரைத்துப் பாலில் கொடுக்க நிற்கும்.

வேறு :—தாமரையல்லி, முத்தக்காசு, இலாமிச்சம்வேர், சந்தனம், சிறுகீரைவேர், அதிமதுரம் இவற்றைப் பொடி செய்து அமுது சர்க்கரை கூட்டி தேனில் கொள்ள யோனியாலே ரத்தம் விழுகிறது நிற்கும்.

வேறு :—முத்தக்காசு, சீந்தில், அதிமதுரம், சந்தனம், இலாமிச்சம்வேர், சுக்கு, நாவல்தோல், செம்பருத்திப்பூ, திப்பிலி, முந்திரிகைப்பழம், நெல்லிக்காய், முறைப்படி நீர்விட்டு, காய்ச்சி, எட்டொன்றாக்கிக் கொடுக்க யோனியாலே இரத்தம் வீழ்கிறது தீரும்.

கூழ்ப்பாண்டகிருதம் :—பெரும்பூசனிக்காய்த்தண்ணீர் படி 2, கருப்பஞ்சாறு படி 2, சதாவேரிச்சாறு படி 2, இளநீர்த்தண்ணீர் படி 2, நறு நெய் படி 2, முந்திரிகைப்பழம் பலம் 1, அதிமதுரம், சந்தனம், கூகைநீறு, இந்துப்பு, பச்சிலை, திரிபலை, தேவதாரம், கோட்டம், ஏலம், இலவங்கம், சிறுநாகப்பூ, இலாமிச்சம்வேர், சுக்கு, பொன்னாங்காணிவேர், மஞ்சள், மரமஞ்சள், வள்ளிக்கிழங்கு மஞ்சிட்டி, ஞாழல்பூ, தகரம், விளாவரிசி, சிறுவழுதலைவேர், ஓமம், மாதளங்காய், இவை வகைக்குப் பலம் 1, இவை யெல்லா முரைத்துக் கலக்கிப் பதத்தில் வெந்து கொள்ள, எரிப்பு, மூத்திரக்

கிரீச்சனம், இரத்தம் விழுகை, பாண்டுரோகம், சுரம், ரத்தப் பிரமியம், நாதத்தாபிதம் தீரும்.

பயித்தியத்திற்கு

மிதிபாகலிலைச்சாறு பிழிந்து அதில் பழம்புளி கரைத்து வடி கொண்டு இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

இன்னும் ;—நொச்சிவேர் காடி விட்டரைத்து துவாலை போடவும். நாசிக்கு நசியம் விடவும். அதன் பிறகு வெந்நீர்விட்டு முழுகவும். முசலீரல் பசுவின் நெய்யில் பொரித்துத்தின்று வரவும். பிறகு ஆதளை எண்ணெயிட்டு முழுகவும். அந்த எண்ணெயை காதிலுமிட்டு நாசியிலும் நசியம் பண்ணவும்.

வேறு :—சேவலீரலுக்குள்ளே கல்லிருக்கும். அதை எடுத்துத் தமரிட்டுக் கையில் கட்டத் தீரும். பத்தியம்—கலைக்கறி கூட்டவும்.

வேறு:—எலுமிச்சம் பழச்சாறு படி $\frac{1}{4}$, பச்சைப் பயறு படி $\frac{1}{2}$, நனையப்போட்டுப் பிசைந்த சாறு படி $\frac{1}{4}$, கூட்டி சிறுகீரை வேர் ஒரு பாக்களவு அரைத்துக் கொடுக்கத் தீரும். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

வேறு :—பிரண்டை துலாம் ஒன்றிடித்துப் பதக்குத்தண்ணீர் விட்டுப் பானைவாய் ஏடுகட்டி, ஏட்டின்மேலே ஒரு தேங்காயுடைத்துத் திருகி பாதியை யேட்டின்மேலே பரப்பி, அதின்மேலே அந்தளவு முருங்கைப்பூ வைத்து, அதின்மேலே மீதி தேங்காய் பூவையும் வைத்து, அதின்மேலே கழஞ்சு சீரகம் தூவி, சட்டியிட்டு மூடிச் சீலை மண்செய்து, மூன்றுசாமம் ஒரு விறகுகொண்டு எரியிட்டு ஒருபடி தண்ணீரிலுதிர்த்து ஒரு பகற்பொழுதிருக்க அடைகிறநேரங் கூரையில் வைத்து, விடியற்காலை எடுத்து இந்த மருந்தைப் பிசைந்து இந்தப்படி ஐந்துநாள் அன்றாடம் வைத்துக் கொடுக்கவும்.

வேறு :—சங்கம்வேரரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கத் தீரும்.

சந்தனாதித்தைலம் :—சந்தனம், இலாமிச்சம்வேர், சீந்தில் தண்டு, நெல்லிக்காய், வகைக்குப் பலம் 6, இடித்து தண்ணீர் படி 10, விட்டுக்காய்ச்சி நாலொன்றானல் நல்லெண்ணெய் படி $1\frac{1}{4}$, சந்தனம், அதிமதுரம், அகில்கட்டை, கோட்டம், ஏலம், இலவங் கப்பட்டை, பச்சிலை, நன்னாரி வேர், செங்கழுநீர்க் கிழங்கு, சிறு நாகப்பூ, இலாமிச்சம் வேர், வெட்டி வேர், தக்கோலம், சாதிக்

காய், கற்பூரம், புழுகுசட்டம், ஈரவெங்காயம் இவை வகைக்கு வராக்னெடை 3, கூட்டி அரைத்துப் பதத்தில் வெந்து முழுகவும்.

உள்ளுக்கு :—அதிமதுரமும், கொடுப்பை சமூலமும் இளநீரி லடைத்து வெந்து அந்த இளநீருள்ளே இருக்கிற மருந்தை அரைத்து இளநீரில் கொடுக்கப் பயித்தியம் நாற்பத்திரண்டு வித மும் தீரும்.

வேறு :—எலுமிச்சம் பழமறுத்து சுண்ணும்பு தடவி பனியில் வைத்து காலமேதின்னவும். அதன்பிறகு குமரிமடலைக் கொண்டு வந்து கீறி சிறுபயறு படி ¼, இட்டு வாழைநார் கொண்டு நன் ருய்க்கட்டி இரண்டு நாள்மணலில் புதைத்து மூன்ரும்நாள் எடுத்து அந்தப் பயற்றைப் பசுவின் பாலில் பிசைந்து வடித்து சீனியில் கொடுக்கப் பயித்தியம் தீரும். இது கொடுத்து ஒரு சாமத்திற்கு மேல் இரண்டு செவ்விளநீர் கொடுக்கவும், பயித்தியமெல்லாம் தீரும்.

நசியம் :—தும்பையிலை, சாறணையிலை, ஒருள்ளிப்பூடு, வசம்பு, சிறு நீரில் நறுக்கி இரண்டு நாசியிலும் விடவும்.

வேறு :—முசுமுசுக்கை யிலையைக் கத்தகப் பால் விட்டரைத்து அந்தப் பாலில் கரைத்துக் கொடுக்கவும்.

வேறு :—நூறு எலுமிச்சம் பழம் கொண்டுவந்து தினம் பத்து பழமாகத் தேய்க்கவும்.

வேறு :—உச்சந் தலையைச சற்றே கீறி இலுப்பைப் பிண்ணக் குப் பொடிசெய்து தேய்க்கவும்.

வேறு :—கொம்மட்டிக்காய்ப்பழம் நாலிரண்டு கொண்டு வந்து தினமொரு பழத்தை உடைத்துச் சோற்றை வாங்கிப் பிசைந்து சாறுகொடுக்கவும். உடம்பெங்கும் துவாலை போடவும்.

வேறு :—முலைப்பால் படி ¼, வெள்ளாட்டின் பால் படி ¼, கத்தகப்பால் படி ¼, காடித்தெளிவு படி ¼, இளநீர்த்தண்ணீர் படி ¼, பாணன் பழச் சாறு படி ¼, முசுறு முட்டையரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு, சீனியாவது சர்க்கரையாவது மாங்காயளவு, இவையெல்லாம் ஒன்ருய்க்கலந்து கொடுக்கவும். இந்தப்படி மண்டலங்கொள்ளத் தீரும்.

வேறு :—பயித்தியம் கொண்டவன் உச்சியைச் சற்றே கீறி தினமொருபாணன்பழச்சாறு பிழிந்து மத்தித்துப் பிறகு ஐந்து

குடம் தண்ணீர் விடவும், இந்தப்படி மண்டலம் விடவும். உப்பு, புளி, மறுக்கவும்.

வேறு :—குன்றிமணிப் பருப்பெடுத்துப் பாணன்பழச்சாறு விட்டரைத்து வழித்துக்கொண்டு நடுத்தலையில் வழித்துக் குடோரியாடி, அரைத்த மருந்தைத் தலையில் அப்பவும்.

உள்மருந்து :—திருகுகள்ளியைப் பொடியாகச்சீவிய பொடி படி 1, உப்பு படி 1, இவைகளைப் பானையில் போட்டுச் செம்பசுச் சாண எருவில் புடமிட்டு வெந்தபிறகு எடுத்துப்பொடி செய்து வெருகடிப்பிரமாணம் தின்னவும். புளி மறுக்கவும்.

வேறு :—இஞ்சி பலம் 2, எலுமிச்சம் பழம் 20, சீரகம் பலம் 1, பாசிப்பயறு பருப்பு படி ⅛, முதல் நாள் நனையப்போட்டு அந்தத் தண்ணீரைப் பிசைந்து இறுத்து அதிலே மருந்தெல்லாம் பொடி செய்து போட்டு எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து நெல்லிக்காய்ச் சாறு படி ¼ விட்டு, சர்க்கரை பலம் 1, பசுவின்தயிர் படி 1, கூட விட்டு மருந்தெல்லாம் கலந்து உள்ளேகொடுக்கவும். இந்த மருந் திலேகால் படி புறம்பாய்வைத்து உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரைக்கும் துவாலைபோடவும். இதிலடங்காத வியாதியானல் இதனுடன் சதுரக்கள்ளி வாட்டிப் பிழிந்துகொண்டு எலுமிச்சம் பழச் சாறு கூட்டித்தலையிலே நாலுநாள் மத்திக்கவும்.

வேறு :—பேய்க்கோவைத்தண்டுச்சாறு படி ¼, பருத்திக் கொட்டை பால் படி ¼, பசுவின் பால் படி ¼, இதில் சீனி கூட்டிக் கொடுக்க தீரும். இந்தப்படி மூன்று நாள்கொடுக்கவும்.

வேறு :—முசுமுசுக்கை, குன்றியிலை, வாழைக்கிழங்கு, தாழை விழுது, நீர்வள்ளிக்கிழங்கு, விளாவிலை, பாலையிலை, பேய்க்கோவைத் தண்டு, * மின்னியிலை, ஒரொன்று சாறு படி 2, பால் படி 8, தேற்றான்விதை 30, முந்திரிகைப்பழம் 50, அதிமதுரம் பலம் 1, நெய் படி 2, கற்கண்டு பலம் 1, கூகை நீறு படி ⅛, இவையெல்லாம் கூட்டிவெந்து பதத்தில் வடித்துத் தலையில் வார்க்கவும்—இதை ஒரு குழம்பாகக் காய்ச்சிச் சாறு குடிக்கவும். நெல்லிக்காயரைத்து நெய்யில் குழைத்துத்தலையில் அப்பத் தீரும்.

நசியம்:—குப்பைமேனி, தைவேளை, மிளகரணை, சங்கங்குப்பி, திரிகடுகு, வெள்வெங்காயம், வசம்பு, பெருங்காயம், இவையெல் லாம் கூட்டி நசியம் பண்ணவும்.

---

* கருத்தகாக்கணம்.

அஞ்சனம் :—குப்பைமேனி, திரிகடுகு, அரைத்து அஞ்சனமிட வும். இதற்கு எந்தப்பயித்தியமும் தீரும். குணமானதன்பிறகு பசு வின்தயிரில் நற்சீரகமரைத்துக் கொடுக்கவும்.

வாந்தி செய்விக்க :—காட்டுக்கோவைத் தண்டுச்சாறும், குன்றி யிலைச்சாறும், முசுமுசுக்கைச்சாறும், பருத்திக்கொட்டைப்பாலும் கூட்டி உள்ளே கொடுக்க வாந்தி பண்ணும். பயித்தியம் தீரும்.

கண் பூவிற்கு

எலி வலது பல்லும் உப்புமாகத் தேய்த்துக் கண்ணில் எழுத ஆணிப்பூ மாறும்.

வேறு:—குப்பைமேனியிலையைப் பறித்து சட்டியிலிட்டுக் கருக்கிப் பொடி செய்து சிற்றுமணக்கெண்ணெயில் குழப்பி கண்ணிலிடப் பூ மாறும்.

வேறு :—ஊறுகிற நத்தையைப் பிடித்து வந்து கல்லைப்பொடி செய்து நத்தையில் போடத் தண்ணீரூறும். அந்தத் தண்ணீரைக் கண்ணிலிடப் பூவும் தீரும் ; தண்ணீர் வடிகிறதும் நிற்கும்.

வேறு :—கிராம்பு, மலாக்காச்சந்தனம், நற்சீரகம், திப்பிலி, ஓரிலைத்தாமரை, கீழ்க்காய்நெல்லி, பொன்னுங்காணி, பசுவின் நெய், பசுவின் வெண்ணெய் இவையெல்லாமரைத்துப் பொடித்து வெண்ணெயும், நெய்யும் கூட்டி ஒன்றுய்க் கலந்து கொதிக்கிற பரு வத்தில் ஒரு சிப்பி மாமிசத்தை அதில் போட்டு அது பருவமாகை யிலே மாமிசம் வெடிக்கும். அந்தப்பருவத்திலிறக்கிப் பூவுக்குப் போட நீற்கும்.

வேறு :—மிளக்கைக் கொடிக்கள்ளிப்பாலில் நனையப்போட் டுலர்த்தி வெள்ளாட்டுப் பிச்சில் உரைத்துப் பூசப் பூத்தீரும்.

வேறு :—முருங்கை விதையை உரைத்துக் கண்ணிலிடப் பூ மாறும்.

உதிரிப்பூவுக்கு

ஆனைப்பல்லைத் தண்ணீரிலுரைத்துக் கண்ணிலிட மாறும்.

கண் புகைச்சலுக்கு

தும்பைப்பூவும் சீரகமுமரைத்து முலைப்பால் விட்டு கண் ணில் பிழிய புகைச்சல் மாறும்.

குளிகை :—சமுத்திராச்சோதி விதையை எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து உண்டை செய்து நிழலிலுலர்த்தித் தேனிலுரைத்து இட நீல காசம், பித்க காசம் தீரும்.

சதைவளர்ந்த கண்ணுக்கு:—ஷ்டி யைப் பாகலிலைச்சாறிலிடவும்.

தினவுக்கு:—ஷ்டி யைப் புளியிலைச்சாற்றிலிடவும்.

முடமயிர் கண்ணுக்கு

சங்குப்பொடி பலம் 4, இஞ்சி பலம் 2, மிளகு பலம் ⅛, இந்துப்பு பலம் 1, இவை சேர எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து உண்டை செய்து இமையில் தடவ முடமயிர் குணமாம்.

வெள்ளெழுத்துக்கு

புங்கம் வேரைத் தேனிலுரைத்துக் கண்ணிலிட வெள்ளெழுத்துமாறும்.

வேறு :—* புங்கரிசியை நெய்யில் தேனில் உரைத்து, இட வெள்ளெழுத்து மாறும்.

வேறு :—துத்தம், செங்கழுநீர், கோட்டம், இருவேலி வேர், நந்தியாவட்டம் வேர் இவை சரி கொண்டு பசுவின் பாலில் வேக வைத்து நன்றுயரைத்து உண்டை செய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடப் புகைச்சலும் வெள்ளெழுத்தும் மாறும்.

வேறு :—பருத்தியிலையைக் கசக்கிப் பிழிய மாறும்.

படலத்துக்கு

கோரக்கர் மூலியைப் பசுவின் வெண்ணெயிலரைத்துச் சிமிழில் வைத்துக்கொண்டு கடுகு மாத்திரம் கண்ணிலிட படலமும் துர்மாமிசமும் தீரும்.

மாலைக் கண்ணுக்கு

இந்துப்பை இசங்கிலைச்சாற்றிலுரைத்துக் கண்ணிலிட மாலைக் கண் தீரும்.

தலைப்புழுவெட்டுக்கு

பெருங்கரையான் கூட்டில் மண்ணை யெடுத்துவந்து இரண்டு உப்புக்கல்லும் கூட்டி சிறுநீர் விட்டரைத்துத் தடவ மயிர் முளைக்கும்.

---

* **புங்கம்வித்து.**

தலைமயிர் உதிர்ந்து சொறி பற்றின புண்ணுக்கு

கள்ளிச்சிராய் மேல்பொருக்குக் கொண்டுவந்து ஒருபிடி நொச்சிக்கொழுந்தும் கொண்டுவந்து கள்ளிச்சிராயில் தீப்பற்ற வைத்து எரியும்போது நொச்சிக் கொழுந்தை மேல் வைத்துச் சுட்டுக் கரியானால் இரண்டும் பொடிசெய்து வைத்துக்கொண்டு பழ மோரில் குழப்பிப் பூசத் தீரும்.

வேறு :—பசுவின் நெய் படி 1, மிளகுதக்காளிச்சாறு படி $\frac{1}{4}$, பொன்னாங்காணிச்சாறு படி $\frac{1}{4}$, ஆவாரஞ்சாறு படி $\frac{1}{4}$, எலுமிச்சம்பழச்சாறு படி $\frac{1}{4}$. நீர்ப்பூலாச்சாறு படி $\frac{1}{4}$, கையாந்தகரைச்சாறு படி $\frac{1}{4}$, சண்பகப்பூ, அதிமதுரம், வங்காளப்பச்சை, கோரோசனை, நெல்லிப்பருப்பு, திப்பிலி, சீரகம், செங்கழுநீர், கோட்டம், வகைக்குப் பலம் 1, பச்சைக் கற்பூரம் பலம் $\frac{1}{4}$, கூட்டி பதத்தில் வடித்து முழுக, குளுமை பிறந்து, புழுச்செத்து, தலை மயிர் வளரும்.

அக்கி விரணத்துக்கு

நொச்சியிலை அரைத்து எண்ணெயில் வெந்து நுரையைத் தடவத் தீரும்.

சகல விஷத்திற்கு

சஞ்சீவிப்பழுப்பைக் கையில் கசக்கித் தேய்த்து வெந்நீரில் கையைக் கழுவி உள்ளும் கொடுத்து, காதிலும் பிழிய சகல விஷமும் தீரும்.

வேறு :—நிம்பெண்ணெய் படி $\frac{1}{8}$, நத்தைப்பால் படி $\frac{1}{4}$, * தண்டுவார் முண்டன் சாறு படி $\frac{1}{4}$, முருக்கன் சாறு படி $\frac{1}{4}$, இரதம் பலம் 1, † சுந்தரி ஒன்று இவையெல்லாம் கலசத்தில் விட்டு ஒரு மண்டலம் ஒருக்குழியில் புதைத்து, பிறகு எடுத்து வைத்துக்கொண்டு இதில் கழஞ்சு தயிலம் எடுத்துக் கையில் தடவிக்கொண்டு அரைக்கால் படி இளவெந்நீரில் கையைக் கழுவிக் கொடுக்கவும். அசந்த கடியும் தீரும், சகல விஷமுந் தீரும். வாயிலே கொடுக்கப் போகாதிருந்தால் உச்சி, உள்ளங்கால், உள்ளங்கைக்கும் தயிலம் தேய்க்கத் தீரும்.

---

* இது தண்டுலியம், என விருக்குமென ஊகிக்கப்படுகிறது.

† மூஞ்சுறு.

தேள், நட்டுவாக்காலி, எலி கடிகளுக்கு

துடரியிலையைப் பறித்துக் கசக்கி விஷமேறின மட்டமாக இறுகத் தடவிக் கடிவாயிலும் சற்று நேரம் பிடித்து மருந்தைப் புகைத்துப் போடவும்,

வேறு :—இரதம் பலம் 1, நேர்வாளம் பலம் 1, கனசிரட்டை சுட்டகரி பலம் 1, ஆக இவை மூன்றும் தேங்காய்ப்பால் விட்டரைத்துப் பாக்களவு கருப்புக்கட்டி கூட்டி அரைத்து சிமிழிலடைத்துக்கொண்டு தடிக்கம்பு, எழுத்தாணி, உள்ளங்கால் இவைகளில் தடவிக் கழுவிக் கொடுக்க விஷம் மீளும்.

தேளுக்கு

நல்லவெல்லம் ஒருபாக்களவு உரியத் தண்ணீரில் கலக்கிக் கொடுக்கத் தேள் விஷம் தீரும்.

வேறு: —வேளையிலையைக் கசக்கிக் காதில் பக்கம்மாருடிப்பிழியத் தேள் விஷம் தீரும்.

நட்டுவாக்காலிக்கு

எலுமிச்சங்காயளவு கருப்புக்கட்டி கொண்டுவந்து பாதி கடித்துத் தின்று நின்ற பாதியைப் பிறருக்குக் கொடுக்கவும். நட்டுவாக்காலி விஷம் தீரும்.

எலிக்கு

ஆதளைமணியரைத்துப் பசுவின் பாலில் கொடுக்க எலி விஷம் தீரும்.

வேறு :—அழிஞ்சில்வேர்ப் பட்டையை அரைத்து இளவெந்நீரில் கொடுக்க விஷம் தீரும்.

வேறு :— ஊரிலழகியான் வேரும் எள்ளும் தேங்காயுமரைத்து வகைக்கு எலுமிச்சங்காயளவு கூட்டி அவ்வளவு சர்க்கரையும் கூட்டி நாழிப் பசுவின்பாலில் கொடுக்கவும். ஒருநாளைக்குப் பயித்தியமெடுத்துப்பேசும். பிறகு தீரும். கைகண்டது.

வேறு :—கடிப்பட்ட உடனே நல்லெண்ணெயும், உப்புமாகக் கலந்துகொடுக்கத் தீரும்.

வேறு :—

திப்பிலி மிளகிஞ்டுஞ் செருப்படி பீர்க்கம்வேரும்
தப்பில்லா அமுதவல்லியிலேயினை ஒக்கக்கூட்டி
ஒப்பில்லாக் கள்ளிச்சாற்றில் அரைத்துண்டை விழுங்கத்தீரும்
எப்படியேனுங் கடித்த எலியென்னும் விஷங்கள் தீரும்.

வேறு :—குப்பைமேனியை யிடித்துச் சிறுநீர்விட்டுப் பிழிந்து அரைக்கால்படி மூன்றுநாள்கொடுக்கவும்.

வேறு:—பூனைக்காலி வேர், வசம்பு, வெள்வெங்காயம், இவைகளை நல்லெண்ணெயில் வெந்து தின்னவும்.

பூனைக் கடிக்கு

முருங்கையிலே அரைத்துக் கொடுக்கவும். வேளையிலே கடிவாயில் கட்டவும். வெட்பாலேயிலேயையும் கட்டவும். பூனைக்காலி இலேயையும் கட்டலாம்.

அரணைக் கடிக்கு

நாரத்தம்பழச் சாற்றில் முலேப்பால் கூட்டி அடிநாக்கில் தடவ விஷந் தீரும்.

வேறு :—கருணைக்கிழங்கு அரைத்துப் பசுவின்பாலில் கொடுக்கத் தீரும்.

வேறு :—சாறணை வேரும், இலுப்பைப் பிண்ணாக்கும் * நெய்கொட்டான் பழமும் அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

வேறு :—அரசம்வேரை அரைத்துப் பசுவின்பாலில் கொடுக்க நஞ்சு தீரும். கண்டமாலே, குவளைவிப்புருதி, இருமல் தீரும்.

கிரிக் கடிக்கு

காணத்தைத் தண்ணீரில் ஊரப்போட்டுப் பிசைந்து கொறுக்கை யெடுத்துக்போட்டு அந்தத் தண்ணீரில் கலக்கி வெல்லும் கரைத்துக் கொடுக்கத் தீரும்.

விருபன் கடிக்கு

விருபன் கடித்தால் உடல்வீங்கும். மேலெல்லாம் காசுபோலே தடிக்கும். கடைவாய் கொப்புளிக்கும். இதற்கு மருந்து :

* பூவந்திப் பழம்.

வெள்ளரி வேர் அரைத்து நீரில்குடிக்கத் தீரும். தலைமயிர் கருக்கிப் பசுவின் வெண்ணெயில் குழப்பித் துவாலையிடவும்.

உதிரமண்டலி கடிக்கு

நகை, சிகைவரைக்கும் இரத்தம் விழும். அதற்கு மருந்து : இலந்தைத் தம்பலமெடுத்து நன்ருய்ப்பொடித்து சிறு நீரிலாவது வெந்நீரிலாவது கரைத்துக்கொடுக்கத் தீரும். காட்டுப் பருத்தி யிலை, வாகையிலை, ஷை பட்டை இவையெல்லாம் வெவ்வேறே காடித்தெளிவில் துவாலையிடவும். நான்குநாள் உள்ளுங்கொடுத்து துவாலையுமிடத் தீரும்.

விரிசன் கடிக்கு

மேல்வீங்கும். கடவாய், நெஞ்சு நஞ்சோடும். முப்பதானுள் மேலெல்லாம் பொக்களிக்கும். இதற்கு மருந்து : வாகைப்பட்டை ஷை யிலை இடித்து காடித்தெளிவில் துவாலையிடவும். பேய் முசுட்டையிலையும், வேரும், கொல்லன் கோவைக் கிழங்கும் அரைத்து இளவெந்நீரில் கொடுக்கவும், இந்தப்படி ஒன்றரை வாரம், பத்துநாள், கொடுக்கவும், மூன்றுமாதம். சென்ருல் உடல் கறுத்துத் தடிக்கும். பிறகு உள்மருந்து மாத்திரம் கொடுக்கவும். அதிருப்தியானுல் சட்டியைக் காயவைத்து மிளகுப்பொடியிட்டு புகைக்கவும்.

விஷத்திற்கு

பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கிலை, பேய்ச்சுரை, பேய்முசுட்டை, பேய்க்கொம்மட்டி, வனமாம்பட்டை ஷை யிலை, காஞ்சிரம்பட்டை ஷை யிலை இவையெல்லாம் நிழலுலர்த்தலாக உலர்த்தி யிடித்து தூள்செய்து இளவெந்நீரில் வெருகடிப் பிரமாணம் கொடுக்கவும்.

வேறு :—எருக்கலங்கொழுந்து அரைத்துக் கொடுக்கவும்,

வேறு:—கொம்மட்டி மாதளம்வேர் அரைத்துக் கொடுக்கவும்.

பேய்நாய்க் கடிக்கு

வீழிவேர் அரைத்துத் தண்ணீருக்குள்ளே இறுத்திக் குடிக்க வும். மாறும்.

வேறு :—ஊரிலழகியான்வேரை அரைத்து எலுமிச்சங்காய ளவும் அந்த அளவு சர்க்கரையும்கூட்டி பசுவின் பாலில் கொடுக் கவும்.

வேறு:—கடிபட்ட உடனே நல்லெண்ணெயும் உப்புமாகக் கலந்து கொடுக்கத் தீரும்

பெருச்சாளி கடிக்கு

நிலவாகை வேரை அரைத்து இளவெந்நீரில் கொடுக்கத் தீரும். ஷை இலையை நறுக்கிக் கட்டவும்.

மூஞ்சூரு கடிக்கு

சாரணை வேர், குளப்பாலை வேர் இவைகளையரைத்து ஆட்டுப் பாலில் கொடுக்கத் தீரும். ஷை இலையை அவித்துக் கட்டவும்.

சில் விஷத்திற்கு

அழிஞ்சில் வேர் ஒரு பிடி, நிலவாகை வேர் ஒரு பிடி, பேய்க் கும்மட்டி வேர் ஒரு பிடி, வெள்ளைக் காக்கணம் வேர் ஒரு பிடி, நெல் பொரியரிசி ஒரு பிடி, * நேர்வாளக் கொட்டை 2, ஆக இவை யெல்லாம் அம்மியில் போட்டு நன்றுயரைத்துத் தூளாய் பொடித் துக்கொண்டு, நாளொன்றுக்கு வெருகடி கொள்ள நிற்கும். உப்பு, புளி, கசப்பு தவிர்க்கவும்.

நாயட்டை காதில் புகுந்தால்

வேளை வேரை அரைத்துக் காதில் பிழிய விழும். குஞ்சு கூட விழவேண்டு மென்றால் நாய்வேளை வேரை அரைத்து நல்லெண் ணெயில் வெந்து காதிலடைக்க விழும்.

பாம்பு கடியாமலிருக்க

வடக்கே போகிற ஆதளை வேரைப் பிடுங்கிக் குளிசமாடி கை யிலிருக்க பாம்பு கடியாது.

வேறு:—ஆதித்தவாரமும் அமாவாசையும் கூடின அன்று நீலி வேரைப் பிடுங்கி மோதிரத்திலடைத்துக் கையில் கிடக்க பாம்பு கடியாது.

நாய் கடியாமலிருக்க

கருவேலிலை மடியிலிருக்க நாய் கடியாது.

தீராத புண்ணுக்கு

வேலிப்பருத்தி, கோழியாவரை, நாயுருவியிலை. உத்தமதாளி, வேப்பங்கொழுந்து, எள்ளு, கோவைக்கிழங்கு, சிறுகீரைவேர்,

---

* சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு.

மஞ்சள், மரமஞ்சள், இந்துப்பு, செங்சந்தனம், திப்பிலி, வேம் பாடம்பட்டை வகைக்குப் பலம் $1\frac{3}{4}$ வாங்கி அரைத்து எண் ணெயில் கலந்து மெழுகுபதத்தில் வடித்து புண்ணில் போடவும்.

வேறு :—இரதம் பலம் 3 குழிஅம்மியில் விட்டு அறுகீரைச் சாறுவிட்டு புளியங்கம்புகொண்டு பன்னிரண்டுநாழிகை மத் திக்கவும். பிறகு ஊமத்தஞ்சாறு விட்டுக் கட்டுக்கொடிக்கொண்டு ஐந்துநாழிகை மத்திக்கவும். பிறகு ஊமத்தம் விதையரைத்துக் கவசம்செய்து அதில் வைத்து அவிபுடம்போடவும், இந்தப்படி மூன்று புடம் போடவும். பிறகு ஒரு புடம் கோழிப்புடம் போடக் குளிகையாம். இது வசீகரத்திற்கும் ஆம்—தம்பனம். வேணுமென் ருல் இந்தக்குளிகை கையில்வைத்து மத்தஞ்சாற்றில் மத்திக்கவும். பிறகு சஞ்சீவிப் பழுப்புச்சாற்றில் மத்திக்கவும், பிறகு அரக்கில் மத்திக்கவும். தம்பனம்.

வேறு :—இரசத்தைக் கவிழ்தும்பைச்சாற்றில் கொன்று ஒரு ஓட்டில் வைத்து பெருந்தும்பைச்சாற்றில் சுறுக்குப் புடங் கொடுத்துப் பிறகு கொடிக்கள்ளிப்பால் சுறுக்குக் கொடுக்கக் கட்டுப்படும். குளிகையாம்.

இரத்தக்கட்டு முறிய

நரிவிரட்டி யிலையைக்கொண்டுவந்து பழங்காடி விட்டிடித்துச் சாறுபிழிந்து கால்படி உள்ளுக்குக் கொடுத்து மேலும் துவாலே போடவும். இந்தப்படி மூன்று நாள் செய்யவும்.

வேறு :—உசிலிலே பலம் 10 கொண்டுவந்து முன்சொன்னபடி செய்யவும்.

வேறு :—நாய்வேளே கொண்டுவந்து ஐந்துபலம் இடித்து ஏழு படி தண்ணீரில்போட்டு ஒன்றரைப்படியாக வற்றக் காய்ச்சித் தினம் அரைப்படி வீதம் மூன்றுநாள்கொடுக்கவும். இரசவெக்கை தீரும். பிறகு மூன்றுமுறை விளக்கெண்ணெய் முழுகவும்.

வேறு:—கோவையிலேயும், வில்வயிலேயும், சரிகொண்டு துவைத்து சாறுபிழிந்து நல்லவெல்லம் கூட்டி மூன்று நாள் குடிக் கவும். வெல்லம் நீங்கலாக துவாலேயும்போடவும்

இரசம் வயிற்றில்தாவி இரத்தம் சலம் விழுந்தால்

பழமாங்கொட்டை பலம் 3, நற்சீரகம் பலம் 3, புழுங்கலரிசி படி $\frac{1}{4}$ இவை மூன்றுமிடித்து அரைத்து மோர்க்கூழ் செய்து

இரண்டு நேரமும் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும். புளி மறுக்கவும். பசுவின்பால் கூட்டிக் கொடுக்கவும்.

காந்தலெடுத்தால்

இலவங்கப்பட்டை, கோட்டம், வகைக்குப் பலம் 3, அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும்,

சுத்தி

கந்தகம் :— கந்தகம் பொடித்து இரும்புச் சட்டியிலிட்டு கொடிவேலிச்சாறு விட்டு ஒரு சாமம் வேகவைத்து வெள்ளாட்டுப் பால்விட்டு ஒரு சாமமரைத்து உலர்த்தி யெடுக்கச் சுத்தி. நெய் குத்தி யுருக்கிப் பாலில் சாய்க்கச் சுத்தி.

இலிங்கம் :— சாதிலிங்கம் எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு சாமமரைத்துலர்த்தச் சுத்தி. காணம் வேகவைத்துத் துவளங்கட்டி வேகவைக்கச் சுத்தி. குமரிச்சாற்றில் துவளங்கட்டி வேகவைக்கச் சுத்தி.

மனோசிலை :— மனோசிலை சீலையில் துவளங்கட்டி ஆட்டுக் கோமயத்தில் வேகவைக்கச் சுத்தி. சுண்ணும்பு நீரில் துவளங் கட்டியவிக்கச் சுத்தியாம்.

பாஷாணம் :— துவளங்கட்டிச் சுண்ணும்புக் கல்லில் நீத்தால் சுத்தியாம்.

கௌரி :— எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துத் திரட்டி உலர்த்தி சுண்ணும்பு நீற்றின தண்ணீரில் துவளங்கட்டி அவிக்கச் சுத்தியாம்.

பச்சைநாபி சுத்தி :— சிறுகீரை வெந்த தண்ணீரிலே வேகவைக்கச் சுத்தி.

வேறு :— நாபியைச் சிறுகச் சிறுக நறுக்கி கோமூத்திரத்தில் மூன்றுநாளூறப் போட்டுப் பிறகு வெள்ளாட்டின் கோமயத்தில் இந்தப்படி ஊறவைக்கச் சுத்தியாம்.

நிர்விஷம் :— சிறுகீரையில் போட்டு வேகவைக்கச் சுத்தி.

காந்தம் :— பசுவின் மோரில் அல்லது கோமூத்திரத்தில் அல்லது பழங்காடித் தெளிவில் அல்லது காணம் அவித்த சாற்றில் வேகவைக்கச் சுத்தியாம்.

தாம்பிரம் :—மோரில் ஏழுதரமுருக்கிச் சாய்த்த பிறகு புளி யிலைச் சாற்றில் ஏழுதரம் குப்பைமேனிச் சாற்றில் ஏழுதரம் சாய்க்கவும். பிறகு தகடுதட்டிக் கொண்டு கோமூத்திரத்தில் ஒரு சாமம் வேகவைக்கச் சுத்தியாம்.

துத்தம் :—நெருப்பில் சுடச் சுத்தியாம்,

குக்கில் :—ஆடாதோடை, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, சீந்தில் தண்டு, கண்டங்கத்தரி, ஓரொன்று குக்கில்பிரமாணம் கூட்டித் துவைத்துப் பானையில் போட்டு பலத்திற்கு இரண்டுபடி தண்ணீர் விட்டு குக்கில் துவளங்கட்டி எரித்து ஒருபடி தண்ணீர் இருக்க இறக்கச்சுத்தி.

சன்னி நிதானம்

கருத் துறுசன்னி தன்னைக் கசங்கிட அறியவேண்டில்
உருத்திராக்கத்தை நோக அரைத்து நாவதனிலிட்டால்
திருத்தமாங் கருமை கண்டால் திகழுறுசன்னியாகும்
பெருத்தது வெளுப்பதாகிப் பின்னையதல்லலாமே,

சன்னி பதிமூன்றுக்கும் வகை

சித்தமுள்ள தாந்திரிகம் சீவகசெதி
சித்தவிப்பிரமம் பிரலாபம் கர்ணியாசம்
ரத்தமுடன் அந்தகனும் சாத்தியமாம்
அபினியாசம் சீதாங்கம் ருத்தாகம்
மெத்தமுடன் கண்டகுப்சம் விக்கிளுதம் முயல்புக்ன
நேத்திரமா ரத்தஷ்டீவி எழுவகையும்
அசாத்தியமாம் சகல குண
வைத்தியர் முன் சாதித்தாரே (?)

அந்த முள தாந்திரிக மேழுநாளாம்
அந்தகனும் பத்து நாள் ருத்தாகம்
சிந்தை மகிழ் இருபது நாள் சித்தவிப்பிரமம்,
சீராக இருபத்தஞ்சு சீதாங்கம் ஏழு
கந்த மருங்கண்ட குப்சம் பதிமூன்ருகும்
கர்ணியாசம் தொண்ணூறு விக்கிளுதம் பத்து
பந்த மூன்ற பினியாசம் சீவகச் செய்தி
பத்திரண்டு பிரலாபும் புக்ன நேத்திரமிரண்டு

நிதானம்

தாந்திரிகமாப் போலும் போலதாகும்
சந்ததமு முடல் நொந்து தாக முண்டாஞ்
சந்தமுமாராட்ட மிருமல் பின்னர்தலை
நொந்து உடல் காய்ந்து தகைமையோடு.
இந்தவிதக்குணத்திற்கு ஏழு நாளும்
இயல் இரவே குணு குணுத்தின் நிதானங்கண்டு
கொந்துலவும் பூங்குழலாய் சன்னி வாதம்,
குறித்து நீ எல்லோர்க்கும் கூறுவாயே

அந்தக மாஞ்சன்னிக் குத்தாக முண்டாம்
அதி பிரமை ஆராட்டம் தலையசைப்பு
வந்து விடும் விக்கலுடன் வாந்தியாகும்
வகையறியாப் பிதற்றுதலும் வாய் நீரூறல்
முந்து சுரந்தீவரமாய் முதனுள் பற்றும்
முகங்கண்டு நிதானித்து மொழிவாய் மின்னே
நந்துலவு குரல் தொனி நாடி கண்டு
நலமான கிரியை தனை நயந்து செய்யே

ருத்தாகம் பொய் சொல்லும் கழுத்தசைக்கும்
முதலிலிருமலுண்டாம் முயர்ந்ததாக
சிக்கனவாம் நெற்றியுடன் கழுத்து வேர்க்கும்
சேர்த்துடனே சம்போகம் பண்ணுமென்றும்
இக்குணந்தான் கண்ட நாளிருப்பதாகும்
இங்கிதனை நிதானித்துக் கண்டு கொள்வாய்
தக்க நிலையறியாம லிச்சை செய்தால்
தணியாத பாவம் வந்து தலைமேல் கொள்ளும்

சித்த விப்பிரம சன்னி செய்யுங்குணங்கள்
தீராத வாதபித்தம் பிரகோபிக்கு மந்த குணம்
மத்த பிதற்றுதலும் வந்த பேரை
வாஞ்சையாய் தடவி உடன் பார்த்து நிற்கும்
நித்திரையுமில்லாமல் ஆடும் பாடும்
நெடுமூச்சுப் பிரமை பிதற்றுஞ்சரீரம் நோதல்
இத்தமுடன் புருவத்தின் நிறுத்தி நிற்கும்
இருபத்தஞ்சு நாளென்றியம் பிடாயே

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
101991
EGMORE, MADRAS-600 008

சீதாங்கமுடல் நொந்து அசந்து நிற்கு
சொல்மூர்ச்சை வயிறழிவு தோன்றி நிற்கும்
பீதாங்க சரீரமெல்லாம் பலமில்லாமல்
பசியின்றிக் குடகுடத்தாக முண்டாம்
மேதாங்க உப்பிசமும் விக்கலுண்டா
மென்மையுடன் ஏழுநாள் மீருதாகில்
வாதாங்கவுடம்பேது வலி நில்லாது
வந்தலரும் பூங்குழலாய் வாட்டங்காணே 1

Lc
N50.

கண்டகுப்சம் பொய்யே சொல்லும் தாபசோபங்
கறுத்துடனே நாக்குலர்ந்து உள்ளே பாயும்
பண்டை வயிறளேந்து உப்பிசமேயாகிப்
பசித்திருக்கும் கண்ணுடல் தான் தினவேயுண்டு
விண்டுவரும் சுரந்தீவிரமே காணும்
விதிப்படி நாள் பதின்மூன்றில் மிகுதியில்லே
கொண்ட குழல் மடமாதே குறித்துக் கொண்டு
கூறுவாய் குவலயத்துக் குணங்கள் தானே

கணேக்கெண்ணெய்

தென்னங்குறும்பைச் சாறு உழக்கு,
சீராந்தகரைச் சாறுழக்கு
வன்ன முலேயாய் பழம்பாசி,
வகையாய் சுருள்ளிச் சாறுழக்கு
இன்னங்கு மரிச்சாறுழக்கு,
இனிய அவுரிமஞ்சணுத்தி
கண்ணறுறல் செறியும் விளக்
கெண்ணெய் உரி, (?) கலந்தே ஒன்ருய்க் காச்சுவதே.

ஒன்றே ஏலம் அதிமதுரம்
உற்ற கோரோசனேயதுவும்
நன்றே நற்சீர் கோட்டமுடன்
நல்காயிலவங்கப்பட்டை
அன்றே கிராம்பு சந்தனமும்
அரையீர் வகைக்குக்கழஞ்சரையாய்
இன்றே எரித்து எண்ணெய் நக்கில்
எதிர்த்த கணேயெட்டோடிடுமே. 2

கோழி பற்பம்

முத்துக் கோழியது தன்னை
முதுகைப் பிளந்து கடுகுப்பூ
ஒத்தக்காய மெண் கழஞ்சு
உழக்கு மிளகு வெள்ளுள்ளி
பத்தயிடித்துத் தூள்செய்து
பதியக்கள்ளிப்பால் விட்டு
சுத்திக்கட்டிக் கோமயத்தில்
சுருள அவித்துமருந்துதனைத்
தீர உலர்த்திப் பொடியாக்கித்
தின்னும் வெருகடிப் பிரமாணம்
தீரும் வியாதிதனைக் கேளாய்
பொருமுங்குன்மம் பெருவயறு
பொத்தேயேறுங்குடல் வாதம்
மருவும் சூலைமருவலயற
லதவுங்கவுசிம கோதரமும்
உருகப்பிடித்தங்கேறுமென்று,
உமையாட் குரைத் ததிதுவாமே.

அதிசார சுரத்திற்கு

முத்தக்காசு மலைதாங்கி
முதிர்ந்த வில்வப்பழச்சதையும்,
சுத்தமாதளை பஞ்சமூலம்
துலையாச் சதகுப்பையதுவும்,
உத்தவகைக்கு கழஞ்சிரண்டாய்
ஒக்குங்கழஞ்சு பதினெட்டும்,
மெத்த நீரிருநாழியிட்டு
மேவுங்கழி மருந்தினிக்கேளே. 1

மேவும் பெருமருதப்பட்டை
மிகுந்த சுண்டி இருகழஞ்சி
தாவும் கிராம்பு சாதிக்காய்
தறுகாநற்சீர் அதிவிடயம்
யாவும் வகைக்குக் கழஞ்சுமுக்கால்
கண்டதொகை தான் ஐங்கழஞ்சும்
ஆவுங்கிளியாய் மேல் போட்டு
அந்த நீரெட்டொன்ருக்கி 2

ஆக்கி யிறுத்துத் தனியரைத்து
அடவாய்தேன் விட்டருந்திடுகில்
•போக்கிக்கழியும் அதிசாரம்
பொருந்தும் சுரங்களிவையெல்லாம்
தாக்கி மூன்று நாள் கொள்ளில்
தறுகாதோடும் திண்ணமென
நோக்கிஉமையாள் இது சொன்னுள்
நொடியில் தீரும் கண்டீரே. 3

நடுங்கி வேர்த்து மந்தமதாய்
உடம்பெனத்திமரா கிரத்தந்
தோன்றும் இந்தமாகுணங்களாலே
இதுகெற்பசுரோணிதந்தானே. (?) 4

சத்திமறிக்க

சுக்கு, கடுக்காய், வெண்காரம், சரிகொண்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து சக்கரையும் தேனும் கூட்டிக்கொடுக்கவும்.

வேறு:—புதுச்சட்டிக்காயவைத்து தேனைத்தெறித்து விளா விலையைப் போட்டு முகத்திலே ஆவிபிடிக்கச் சத்தி தீரும்.

வேறு:—விளாம்பட்டையைக் குடிநீர்வைத்து சோறுகிலும் கஞ்சியாகிலும் குடித்தவுடனே இந்தக் குடிநீரைக் குடிக்கச்சத்தி நிற்கும்

வேறு:—சர்க்கரைப்பாகு காய்ச்சிப்பதம் வருகிறபோது எள்ளு வறுத்துப் பொடிசெய்துபோட்டு அற்பமிளகுப் பொடியுங் கூட்டித்தின்னச்சத்தி நிற்கும்.

ஓக்காளத்திற்கு

தேற்றான்விதையை ஊறப்போட்டு இரண்டுபடி தண்ணீர் விட்டு உழக்காகக்காய்ச்சிக் குடிக்கத் தீரும்.

வேறு:—நத்தைச்சூரி சமூலம் காடியிலரைத்துக் குடிக்கத் தீரும்.

வேறு:—கூவிளயிலைச் சாறும் விளாவிலைச்சாறும் தேனில் குழைத்து மேலில் பூசத் தீரும்.

வெள்ளோக்காளத்துக்கு

மூங்கிலிலே குறுக நறுக்கிக்காய்ச்சிக் குடிக்கவும்.

வேறு :—பொரியைப் பொடிசெய்து தேனில்கொடுக்க மாறும்.

சத்தி ஓயாமலெடுத்தால்

குதிரைலத்தியாகிலும் கத்தபலத்தியாகிலும் எடுத்துக் கரைத் துப்பிழிந்து அரைக்கால் படி தண்ணீரில் வெள்வெங்காயமரைத் துக் கலக்கிக் கொடுக்கச் சத்தி நிற்கும்.

வேறு :—முத்தின பருத்திவேரைப் பாக்களவு அரைத்து அவ் வளவு கருப்புக்கட்டி கூட்டிவிழுங்கத் தீரும்.

மலசலங்கழிய

துடரிவேரை ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து உரிய எலு மிச்சம் பழச்சாற்றில் கரைத்துக் கொடுக்க அரைநாழிகையில் மல ஜல மிடும்.

வேறு :—பலகறை போதிய அளவு கொண்டு வந்து எருவில் குக்குட புடமிட்டு நன்ருய் ஆரவிட்டுப் பொடிசெய்துவைத்துக் கொள்ளவும். அனுபானம்—சிரட்டையிலே எலுமிச்சம் பழச் சாறு விட்டு அதிலேவெருகடிப்பிரமாணம் போட்டுக் கொடுக்க மலம் ஜலம் விடும்,

வேறு :—நெல்லிக்காய் ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து முட்டைவெள்ளைக்கரு விட்டு நன்ருய் மத்தித்து சீலையிலூட்டி வயிற்றில் போடவும். மலஞ்சலமிரண்டும் விடும்.

வேறு :—பாதாள மூலிகை எலுமிச்சங் காயளவு அரைத்துப் பசுவின் பாலில்கொடுக்க விடும்.

வேறு :—விரலில் விளக்கெண்ணெயைத் தடவிக்கொண்டு அதில் குப்பைமேனியை அரைத்துத்தடவி அபானத்தில் சுத்தவும். உடனேவிடும். சங்கங்குப்பியிலையை அரைத்து பசுவின் வெண் ணெயில் குழைத்துக்கொடுக்க நீர் விடும்.

வயிறுமிஞ்ச எடுத்தால்

அகத்திலையிணுக்கு இரண்டுபிடி எடுத்து இரண்டு படி தண்ணீரில் போட்டு நாலொன்ருக்கி இறுத்துக் கொடுக்க மலம் கட்டுப்படும்.

மூத்திரக் கடுப்புக்கு

ஆலம்விழுதுப்பட்டை பலம் 2, பூலாவேர்ப்பட்டை பலம் 2, கருப்புக்கட்டி பலம் 2, இளம்பசுவின் பால்விட்டரைத்துக்கலக்கிக் கொடுக்க மூத்திரக் கடுப்புத் தீரும்.

முட்டுப்பிசத்திற்கு

சுக்கு, மிளகு, வெள்வெங்காயம், கடுகு, இவை சமன் கூட்டி வெதுப்பிப் பொடித்துச் சட்டியில் போட்டு சற்றுகாயமும் பனைவெல்லமும் தட்டிக் கூடபோட்டு நல்லெண்ணெய்விட்டு காய்ச்சினபிறகு பிசைந்து எலுமிச்சங்காயளவு கொண்டு வெந்நீர் கொள்ளவும், இரவில் அமுதின்மேலே கொள்ளவும். உப்பிசந் தீரும்.

வேறு :—முருங்கைப்பட்டை சீவி ஒரு சிரங்கை, மூக்கரணை வேர் சிரங்கை, கொழுஞ்சிவேர், வசம்பு, சுக்கு இவைகளைச் சட்டியில் கூடப்போட்டு சிவக்கக்காய்ச்சி உழக்குத் தண்ணீர் கொடுக்கவும். முட்டுப்பிசம் தீரும்.

தலைவலிக்கு

அபின் வராகன் 2, நற்சீரகம் பலம் 1, வெள்வெங்காயச்சருகு வ. 3, வசம்பு, மிளகு வகைக்கு வ. 10, மஞ்சள் வ. 1, இவைகளை யெல்லாம் நன்றாய்ப்பொடி செய்து திரியுருட்டி நாசியில் புகை பிடிக்கில் தலையிடி நிற்கும். சந்தனமும் தும்பைச்சாறும் கொதிப் பித்துநெற்றியிலும் உச்சியிலும் பூசவும்,

ஒருதலைவலிக்கு

வேளையிலை, வசம்பு, வெள்வெங்காயம், இம் மூன்றையும் நைய்யத்தட்டி, இடிக்கிறபுறத்தின் காதிலடைக்கத் தீரும்.

வேறு :—நல்லெண்ணெய் படி ⅛, நத்தைச்சூரி வேர், அறுகு வேர், அதிமதுரம் இவையெல்லாமரைத்து வகைக்கு இரண்டுபாக் களவு, பொன்னுங்காணி, ஈரவெங்காயம் வகைக்கு ஒரு பாக்களவு அரைத்து எண்ணெயில் கலக்கிப்பதத்தில் வடித்து உச்சியிலும் தேய்த்து, செவியிலுமடைத்து, நாசியிலுமிருத்தவும்,

வேறு :—அரிதாரம், மஞ்சள், மிளகு, நேர்வாளம், சந்தனம், இவையெல்லாம் குப்பைமேனிச் சாறு விட்டரைத்து சீலையில்

திரித்து நாசியில் புகையேற்ற முகவாதம், நயனவாதம், கபாலக் குத்து, ஒரு தலைவலி தீரும்.

வேறு :—கீழ்க்காய்நெல்லிவேர், சிறுபாகல்வேர், எருக்கலம் பழுப்பு, மிளகு, எண்ணெய் சேர்த்துக் காய்ச்சித் தலையில் பிழியத் தீரும்.

நசியம் :—ஈரவெங்காயம் நைய்யத்தட்டிச் சீலையில்கட்டி கண்ணிலும் நாசியிலும் பிழிய ஒருதலையிடி தீரும்.

நஞ்சு குடித்தபேருக்கு

தேற்றான்கொட்டை, மாங்கொட்டை, வேப்பமுத்து, கடுக் காய், அகத்தியிலை, இலுப்பைப்பிண்ணாக்கு, வசம்பு, மஞ்சள், இவை யெல்லாமரைத்துச் சிறுநீரும் காடித்தெளிவுங் கலந்து கரைத்துக் கொடுக்கத் தலை தெரியாத சகலவிஷத்தையுமெடுத்துத் கலக்கித் தட்டிப்போடும்.

வேறு :—சங்கு வடவேர்த்தோல் அரைத்து இளவெந்நீரில் கொடுக்க எல்லா நஞ்சும் தீரும்.

வேறு :—முருக்கிலைச்சாறு பிழிந்து கொடுக்க பதினெட்டு நஞ்சும் தீரும்.

பச்சை நாபிக்கு :—பச்சை நாபி தின்றால் மிளகு அரைத்து நெல்லிக்காயளவு பசுவின் பாலில் கொடுக்கத் தீரும்.

வேறு:—மிளகும் சிறுகீரையும் அரைத்து வகைக்கு எலுமிச்சங் காயளவு வெண்ணெயும் அந்தளவு கூட்டிப் பசுவின் பாலில் குடிக் கத் தீரும்.

வேறு :—சுக்கு, மிளகு அரைத்துத் தண்ணீரில் கொடுக்கத் தீரும்.

வெள்ளைப் பாஷாணத்திற்கு :—சிறுகீரை சமூலம், மிதிபாகல் சமூலம், பசுவின் வெண்ணெய் வகைக்கு எலுமிச்சங்காயளவு, பசு வின் பாலும் கூட்டிக் காடித்தெளிவும் கலந்து கொடுக்கவும்.

வேறு :—பாகலிலையைக் கசக்கிச்சாறு குடிக்கத் தீரும். இந்த இலை இல்லாதிருந்தால் அக்காயுமாம்,

அலரி :—சிறுகீரை, தாமரையிலை, அகத்தியிலை, கடுக்காய், மஞ்சள், இவைகளை அரைத்துக் காடித்தெளிவில் கொடுக்கவும்.

வேறு :—கடுக்காயரைத்து இளவெந்நீரில் கொடுக்கவும்.

வேறு :—நாயுருவி அரைத்து முன்போலக் கொடுக்கவும்.

ஊமத்தங்காய் :—கோவைப் பிஞ்சும், மிளகும் பசுவின் வெண்ணெயும் கூட்டி காடித்தெளிவில் கொடுக்கத் தீரும்.

வேறு :—இலுப்பை வடவேரும் முசுமுசுக்கையும் இடித்து வயிற்றில் தடவி தூவாலை யிடவும். தீரும்.

குன்றிமணி :—நாயுருவி வேரை அரைத்து இளவெந்நீரில் கொடுக்கவும்.

வெண்தோன்றிக் கிழங்கு :—குன்றிமணி மரம், சுக்கு இவை இரண்டுமரைத்து இளவெந்நீரில் கொடுக்கவும்.

காஞ்சிரங்கோட்டை :—நாவல் பட்டை இடித்துப்பிழிந்து உழக்குச்சாறு குடிக்கவும்.

கள்ளிப்பால் :—ஆவாரை முகிழைப்பாலிலாவது மோரிலாவது குடிக்கவும்.

எருக்கலம் பாலும் நல்லெண்ணெயும் கலந்து குடித்தால் :—எள்ளும் கருப்புக்கட்டியும் ஒரு பாக்களவு கொடுக்கவும்.

சூனியம் தெறிக்க

நாட்டுப்பன்றிக் கொம்பும் பித்தும், பேய்மருட்டி வேர், நன்னாரிவேர், கரும்தும்பை வேர், ஊமத்தைவிதை, ஆலம்பட்டை, கஞ்சாவிதை, அபின், கம்பளிப்பிசின், கோரோசனை ஆக மருந்து பதினொன்றும் பன்றிரத்தத்தில் அரைத்து உண்டை செய்து நிழலுலர்த்தலாக உலர்த்திக் கொள்ளவும். இந்த உண்டையை நீரிலுரைத்து மேலில் பூச சூனியக்கட்டு மாறும்.

இதற்கு மந்திரம் :—வாயநசி, இது செபித்து வரத் தீரும்.

பேய்பிடி சன்னிக்கு

அஞ்சனம் :—நேர்வாளம் 10, மகிழம்விதை 5, பச்சை நாபி பலம் ¼, திப்பிலி பலம் ¼, மிளகு பலம் ¼, வசம்பு பலம் ¼, இலுப்பைப் பிண்ணாக்குப் பலம் 1, வெள்வெங்காயம் பாதி, உப்பு பலம் 1, குப்பைமேனி யிலை 10, இவையெல்லாம் பேய்ப்பீர்க்கஞ்சாறு விட்டரைத்து உண்டை செய்து கண்ணிலிட பேயும் சன்னியும் தீரும்.

நசியம் :—மூன்று மிளகும், முருங்கைப்பட்டையும் பாகலிலையும் தட்டிக் கண்ணில் பிழிய வெறி விடும். சன்னியும் தீரும்.

சூனியம் மீட்க

அச்சம்வேர், அழிஞ்சில் வேர், பூவரசவேர், இவை மூன்று மரைத்துப் பூச முறியும்.

நீரிழிவுக்கு

தகரை இலை கொண்டுவந்து ஒடுவடக்கிச்சாறு விட்டரைத்து இரண்டு கொட்டைப்பாக்களவு திரட்டி செந்தவிட்டில் புரட்டி இந்தப்படி மூன்றுநாள் விழுங்கவும். உப்பு, புளி மறுக்கவும்.

வேறு :—மாந்தோல் பொடி படி $\frac{1}{4}$, வெந்தயம் படி $\frac{1}{4}$, * சாமி படி $\frac{1}{4}$, † நெல் படி $\frac{1}{4}$, கிராம்பு படி $\frac{1}{4}$, ஆக இவையெல்லாம் பொடி செய்து தக்களவு தேனிலாவது பன்னீரிலாவது கொடுக்கவும்.

இதற்கு மாற்று :—ஆனையஞ்சி நெருஞ்சியைக் கொண்டுவந்து சீனியும் கூட்டிப் பழநீரில் கொடுக்கவும்.

வேறு :—இளநீர் வாய்திறந்து அதில் ஒருகாசெடை மிளகைப் பொடித்துப் போட்டு பனியில் வைத்து விடிவேறு கொடுக்க நிற்கும்.

வேறு :—ஆவாரைப் பஞ்சாங்கம் பலம் 3. புழுங்கல் தவிடு படி 1, குருவை நெற்பொறி படி $1\frac{1}{4}$, எள்ளுப் பிண்ணுக்கு பலம் 5, நெய்த்தோலிக் கருவாட்டுத்தலைப் பொடி படி $\frac{1}{4}$, அபின் பலம் 1, ஆக இவையெல்லாம் பொடித்து வஸ்திரகாயம் செய்து அளவாக மேதித்தயிரில் கொள்ளத் திரும்,

வேறு :—பசுவின் பால் படி $\frac{3}{4}$, முருங்கையிலை அரைத்து எலுமிச்சங்காயளவு, சங்கு அரைத்து கொட்டைப்பாக்களவு, கலந்து முதல்நாள், மறுநாள் மூன்றிலொன்றும் மூன்றும்நாள் இதில் பாதியும் குடிக்கத் தீரும். உப்பு, புளி மறுக்கவும், சிறு பயறு, முருங்கைப் பிஞ்சு கூட்டவும்.

---

* சாமை.

† உமிநீக்கி உபயோகிக்கவும்.

வில்வக்குழம்பு.

விள்ளாய் வில்வக்குழம்பதனை
விரும்பு பரிசுதனைக்கேளாய்
வில்வவேரினைக்குறுக
நறுக்கி நாலொரு பத்துப்பலம்
குள்ளா இருதூணி நீர்விட்டுக்
குறுக காய்ந்தெட்டொன்ருக்கி
நள்ளாய் சர்க்கரை நாற்பது பலம்
கலக்கிச்சீலை வடிகொண்டு
துள்ளாய் மேல் பொடியதுவும்
மருந்து சொல்லக் கேளாயோ,
தூத்தும் சுக்கு பலம் நாலரையும்
தோத்து மிளகிரண்டரையும்
மாததுந்திப் பிலியிரண்டைரையும்
மறை செவ்வியம் ஒன்றரையும்
சீத்தும் சீரகமி ரண்டரையும்
கிறக்கும் ஓமம் ஆழாக்கும்
சீற்ரும் சிறுமூலம் ஒன்றரையும்
திகழும் கொடிவேலி ஒன்றரையும்
ஏற்ருய் ஏலம் இலவங்கம்
யிகழும் பச்சிலை நாகப்பூ
ஆற்ருதொன்றிடை யெண்கழஞ்சு ஒன்ருய்
பொடித்துத்தூவிக்குழம்பாக்கி
தேத்தமுடனே தேன்விட்டு
சிறக்கக்காய்ந்து குழம்பு தின்னில்
கூற்ருய் வந்த சக்திகளும்
குறுக்கில் நெஞ்சில் நோக்காடும்
காத்தாய் வந்த குன்மமுடன்
கிராணிக்கழிச்சல் கிருமிகளும்
நீற்ருய் மூக்கில் நீர்த்தோஷம்
நிகழும் விக்கலிளைப்புடனே
மாத்தும் பாண்டு மகோதரமும்
வாதப்பித்த சிலேற்பனமும்
தோற்ரேமெனத்தான் போகும்
சொன்ஞர் முனிவர் சொன்ஞரே

புழுவிழ

மந்திரம் :—நெட்டாளனும், நெடுமூக்காளனும், பச்சாளனும் பருமூக்காளனும், குறுத்துப்புழுவும், நமன்புழுவும். கொடுக்குப் புழுவும், கொட்டியாள் புழுவும், பச்சைப்புழுவும், பல்வண்ணப் புழுவும், அப்பாள் கிடக்க அப்புணங்கிடக்க இப்புனத்தை அளிப் பார்களே, இப்புனமுமளித்தாயின்பாலுமுண்டாய் இனிப்போகச் சொன்னூர் சிரிவீசனப்பெருமாள்காடுஒரு பிறஞ்சாய வடமூலையில் சரிந்துபோகக்கடவதாகும், பிஞ்சுமதி கொடிப்பித்தனே யெங்கு மாய் நின்றயிரையவனே ஈசுரனேடுரை செய்திடே நல்லதம் பிரானுருன்னைப்போகச்சொன்னூர் நடமாடுமீசனுருன்னைப் போகச் சொன்னூர் ஆகொடுகோளறை அம்பலத்தாடுவார் முன்பாகக் கொண்டுவாரூ மென்று போந்தவாநூல் கொடுவந்த வாண ராயனையுமுன்னையும் வாளக்கொடுத்தானும் வளைந்தறுக்கின்றேன் அனம்பால் வேண்டாம் ஆவின்பாலுண்டே புறப்பாலுண்டு புனல் புறம் பே போகச்சிவா ஆளலாரும் செண்பகத்தாரும் விட்டிலா ருங்கூடியிருந்து தாங்களே நாடுகூறு செய்தார்களென்று கேட்டு நாடு கூறுநாமே மாத்திறேம். நாடு விட்டுப் போகச்சிவா போகா திருந்தொன்று கேட்டால் பெரிய திருவனுதன் திருச்சீர் காலறை விப்பேன் என்ற செய்தியறியவும்

ஆரம் பொலிந்த மணிமார்பா
அழகாயுந்தன் திருநாட்டில்
ஈரம்பொழிந்த மரங்களெல்லாம்
இலைகளுதிர்ந்து கிடப்பானேன்
வாரஞ்சொல்லி வழக்குறைத்து
மண்ணிலிருந்து மண்ணேரஞ் சொன்னூன்
கிளைபோல் ஒக்க உதிர்ந்து போகாயே
இந்திரன் மலைமேலிருக்குமிறையோன் சரத்தாலே

அந்தரமாய் வருகிற புழுவை அலகுரண்டு மாடாமல் கட்டி னேன் எனக்கட்டு கட்டுப்பிளர்கட்டு பேட்டைக்கட்டு என் கட்டு என் குருநாதன் கட்டும் வன்கட்டாய் நிற்கச்சிவா.

எரி புழுவுக்கு

அனுமான் மந்திரம் :— மாச்சாலம் உருத்திராய் மூசிக உச்சாட னுய் எரிபுழு நசிய உமபசுவ் அனுமான் எரிபுழுவுக்கு ர. ம. ய.

ம. ந, மோ. பகவதே அனுமாதே கிரிமி. கீடபதங்க துட்டசத்து வாயோ—சொல்லிந்தசைய—உம்படசுவாகா—அனுமார் பாதமே முன்னிற்க.

பச்சாளேக்கு

ஊழியிட்ட வினையினலே ஒன்பது வருஷகாலம்
ஒரு மழையும் பேயாமல் உயிர்போகச்சிலே
ஆளியிட்ட மின்னலும் அக்கனியரலுமடித்த
புல்லுத்தானுனலும் அரிசிலந்தியாலும்
நாளிட்டுத்தான் பகுந்து நாய் வயறுதான் விளேத்து
நாலிரண்டு மனிதரோடி நான் பிழைத்தபோது
ஆளியிட்ட வருணராயன் தண்மை மழைபெய்து
மற்று முள்ள மனிதரோடு மறுகடமுங்கொண்டு
பழஞ்சோழியிட்டு உரமறித்து வித்துக்கொண்டு
விரைத்தபயிரையெல்லாஞ் சொல்லவனத்தாகூடி
சூலவயறு ரோமயாளனென்று வீட்டில்எலிபச்சாளே நோதல்
பயிர்தனிலேயிருந்தால் பருப்பதுண்டோ சிவனே
[பருப்பதுண்டோ
சோளியிட்ட முருகராணே மூத்த நயினராணே
கடந்த வள்ளி செந்திக்கந்தராணே ஆணே கைலாசம்
[தண்ணுணே
மடந்தை சிறைமீட்ட மாதம் பியாராணே
விட்டிலாலிபச்சாளே முதல் நாய்வாய்கள் வெட்டுவதுயில்லே
வெள்ளெனவே வந்த மழை இனிப்பெய்வதில்லே
கள்ளனுட வார்த்தை விசுவாசமில்லே
காலமே பேயாமல் நின்றதுமில்லே
எள்ளிலெண்ணெய் வாராமல் இருந்ததுமோ இல்லே
இருந்த முடவன் தேன் எடுத்ததுமோ இல்லே
உள்ளுக்கருத்தை வள்ளலறிவாருமில்லே
ஒருபதேசப் பொருளுக் கொப்புண்டோ
சிவனே ஒப்புண்டோ கலிகாலமும் பிறந்து
காலங்களும் பொய்த்துக்காவல் வாங்கள்
படைவீடும் காடுகளும் பொய்த்தும்
பெலியான சீவலியும் பெண்டுகளும் பொய்த்து
பேதைத்தாய் பிள்ளேதனேப்பட்சித்த பஞ்சம் வந்து

சலியாமல் வருணராயன் தன்ம மழை பெய்து
சங்கு தாலி பணயம் வைத்துவித்துக்கொண்டு
[விதைத்தபயிரெல்லாம்
எலியான தெல்லாம் கூடி என் பயிரை வெட்ட
இரக்கமில்லையே சுவாமி என் தம்பிரானே
களமித்தமாலடியாரிட்ட பயிரையெல்லாம்
கலகலென எலிவெட்டக் கண்டிருந்து
நீங்களொப்பபத்தி வெத்தி என்னை நீங்கள்
உங்களுக்கு மெங்களுக்கு பயிர் பிழைப்பதுண்டோ
சர்பத்தை யெலிவிடும் எலிகளைத்
தலையொடிய வேசங்காணே,
நிறையாக நின்ற பூசை தருவேன்
இந்தவயலை இந்திரலோகமாக்கக்கொண்டேன்
நாலுவரப்பு மானுகமாகக்கொண்டேன்
மானுந்துள்ளி மானுகந்துள்ளித்துள்ளிப்
போறமானுக மேதுய்ய பெருங்கடலில்
பச்சாளாய்ப்பச்சூரி மயிர்க்குட்டி
கோடாரியாளியன ஆனீடியன வெருப்புழு
தாருப்புழுக் குருந்துப்புழுவிந்த
ஏழு கொழும் கழுதை தின்ற கள்ளரைப் போல்
கையைத்தட்டிக்களித்து விட்டார் எங்கள் பெருமாள்
கைதட்டிக்களித்துவிட்டார் போகச்சொன்னுர்
பெரிய திருமேனிகளாணே போகச்சொன்னுர்
கூல ஒரு பிமரயப்போகச்சொன்னுர்
எங்கள் பெருமாள் போகச்சொன்னுர்
நெல்லெல்லாம் நல்லபாம்பு நீரேல்லாம் சாரைப்பாம்பு
பையெல்லாம் கூகை வரப்பெல்லாம் ஆந்தை
அல்லாவினுணை அருளினுணை
அஞ்சநேரம் பள்ளிகொண்ட பெருமாளாணை
ஈச்சி வெட்டாதே ஆச்சிபோ ஆச்சிபோ.

சகல வாயுக்கும்

சிந்தாதி லேகியம் ;— புளியிலை நாலுமரக்கால், கடுக்காய் நானூறு, மஞ்சள், சிவதைவேர், நெல்லிக்காய், அவுரிவேர், காட்டு மல்லிகைசமூலம், சாறணைவேர், கொடிவேலிவேர், கோரைக் கிழங்கு, வேப்பம்பட்டை, கீழ்க்காய்நெல்லி, கொன்றைப்பட்டை,

தூதுளைவேர், பொன்முசுட்டைவேர், நாயுருவிவேர், சங்குவேர், பேராமுட்டி வேர், காட்டுக்குறிஞ்சாவேர், துளசிசமூலம், கண்டங்கத்தரிசமூலம், செந்தொட்டிசமூலம், முள்ளிவேர், ஆடாதோடை, செம்முள்ளிவேர், சீந்தில்கொடி, நன்னாரிவேர், சிற்றாமுட்டிவேர், சேங்கொட்டை, வசம்பு, இவை வகைக்குப் பலம் 10, இரும்பு பலம் 10, இரும்புக்கிட்டம் பலம் 10, இவையெல்லாம் எட்டு மரக்கால் பசுவின் கோமயத்தில் போட்டு எட்டொன்ருக வற்றவிட்டு கோது பிழிந்து வடிகொண்டு அதில் பழையவெல்லம் எண்பதுபலம் கரைத்து ஆண் பனங்கதிர், பேய்த்தும்பை, மஞ்சள்சருகு, கொடிவேலிவேர், புளியம்பட்டை, கீரைத்தண்டு, பலாசு, இவை சுட்ட சாம்பல் வகைக்குப் படி 1, குறுணி தண்ணீர் விட்டுக்கரைத்து அந்த நீரை இறுத்து ஊற்றின கோமயத்தில் விட்டு நாரத்தம் பழச்சாறு படி 1, அவுரி, நொச்சி, கையாந்தகரை, குப்பைமேனி, சிறு கல்லுருவி, சங்கிலை, பிரமி, இஞ்சி, நீர்மேல்நெருப்பு, மஞ்சள் வகைக்குச் சாறு படி 2 கூட விட்டு நறுநெய் படி 1, எண்ணெய் படி 1. ஆகக் கலந்து பாகு பதமாகக்காய்ச்சி இதில் கையாந்தகரைச்சாறு விட்டு, வறுத்தஅரப்பொடி படி ⅛ சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிப்பருப்பு, தான்றிக்காய், கற்கடகசிங்கி, சீரகம், கருஞ்சீரகம், ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, இந்துப்பு, ஓமம், வாய்விளங்கம், தேவதாரம், திப்பிலிமூலம், வகைக்குப் பலம் 1 இடித்து வஸ்திரகாயம் செய்து குழம்பில் தூவிஇறக்கி ஆறவிட்டு நாழித்தேன் விட்டுக்கலந்து கலசத்திலேயிட்டு ஒரு மாதமாவது பதினைந்து நாளாவது தானியப்புடமிட்டு வெருகடிப்பிரமாணம் சேவிக்க சகலவாய்வுகளும்போம். பாண்டு, காமாலை, வீக்கம், ஆமம் அட்டாங்கசோகம், குன்மம்,மகோதரம், மூலரோகமிவையெல்லாம் போகும்.

கண்டங்கத்தரி லேகியம்:— இஞ்சி பலம் 16, சீனி பலம் 8, இந்துப்பு பலம் 12, திப்பிலி பலம் 8, சுக்கு பலம் 5, திப்பிலிமூலம் பலம் 8, சாதிக்காய், ஏலம், கொடிவேலிவேர். இவை வகைக்குப் பலம் 5, மிளகு பலம் 16, கிராம்பு பலம் 8, வெல்லம் பலம் 16, நறுநெய் படி ¾, தேன் படி ½ இந்த மருந்தெல்லாம் சூரணம் செய்து இஞ்சியைப் பொன்னிறமாக வறுத்து அரைத்துக் கொண்டு சர்க்கரைப்பாகிலே போட்டு லேகியம் செய்து கொள்ளவும், இதில் கருஞ்சீரகம் பலம் 8, சீரகம் பலம் 8 கூடக் கூட்டிக் கொள்ளவும்.

வில்வாதி லேகியம்:— வில்வவேர் பலம் 30, விளாம்பழச்சதை பலம் 15, நெல்லிப்பருப்பு பலம் 12, கருவேப்பிலை ஈர்க்கு பலம் 6, முந்திரிகைப்பழம், இலுப்பைப்பூ, கொத்தமல்லி, இவை வகைக்குப் பலம் 2 இவையெல்லாம் நான்கு மரக்கால் தண்ணீர் விட்டு நாலொன்ருக வற்றவிட்டு இறுத்து அதில் பழைய வெல்லம் பலம் 50, கரைத்து இஞ்சிச்சாறுபடி 1, கொம்மட்டி மாதுளம் பழச்சாறு படி ¾ கலந்து பாகுபதமாகக்காய்ச்சி அதில் ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, நாகப்பூ, கொத்தமல்லி, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், கோட்டம், அதிமதுரம், இந்துப்பு, சீரகம், தாளிசபத்திரி, நன்னுரிவேர், இலாமிச்சம் வேர், அரைத்துக் கஸ்தூரி, குங்குமப்பூ வகைக்கு வ 6, பருத்திவிரைத் தாது பலம் 1, வாழைக்சருகு சுட்டசாம்பல் பலம் 1 ஆக இவையெல்லாம் சூரணம் செய்து மேல்பொடி தூவி இறக்கி உழக்குத் தேன்விட்டு முக்கழஞ்சு லேகியம் கொள்ள சத்தி, வாதம், பயித்தியம், அரோசகம், அக்னிமாந்தியம், ஓங்காரமேல்நோக்கியவாதம், இருமல், இளைப்பு, குன்மம், கிரகணி, வாயுஉபரி உடம்பு உலற்று க்ஷயம் இவையெல்லாம் போகும்.

மூலக்கிராணிக்கு

குடசாதி லேகியம்:—வெட்பாலைப்பட்டை பலம் 10, இடித்துப் பதக்குத்தண்ணீரில் போட்டு எட்டிலொன்ருக வற்றவிட்டு அதில் அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளி லோத்திரம், இலவம் பிசின், மாதளங்காய் ஓடு, கற்கடகசிங்கி, கோரைக்கிழங்கு, ஆத்திப்பூ, அத்திக்காய், வெட்பாலையரசி, இவைவகைக்குப் பலம் 1, அரைத்துக்கரைத்து முப்பது பலம் பழையவெல்லம் கரைத்து நெய்யும் விட்டு லேகியமாகக் செய்து பதினைந்து நாள் தானிய புடமிட்டு எடுத்துக்கொள்ள சகலமான மூலக்கிராணி, சுவாச காசம், ரத்தக்கிராணி இவையெல்லாம் போகும்.

கலிங்காதி லேகியம் ;— பேய்க்கொம்மட்டிக்காய் 50 கொண்டு வந்து துவைத்து சாறு பிழிந்து அதில் வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, கல்லுப்பு, கறியுப்பு, இவை வகைக்குப் பலம் 1, கடுக்காய் 20 சோமனுதபெருங்காயம், வராகனெடை 5 இவையெல்லாம் முன்சாற்றிலரைத்துக்கரைத்துக் காய்ச்சி லேகிய பருவத்தில் இறக்கி உள்ளுக்கு ஒரு கழஞ்சு கொள்ளவும்,

அட்டசூரணம் :— சுக்கு பலம் 7, மிளகு பலம் 5, சீரகம், பலம் 2, கருஞ்சீரகம் பலம் 6, திப்பிலி பலம் 1, ஓமம் பலம் 2, இந்துப்பு பலம் 5, பெருங்காயம் பலம் 3, இவைகளைச் சூரணம் செய்து முதல் கொள்ளுகிற சாதத்தில் வெருகடிப்பிரமாணம் சோற்றில் போட்டு நெய் காய்ச்சிவிட்டு முன் இது சாப்பிட்டு, பின்பு சாப்பிடவும், வாய்வு தீரும்.

தீபாக்னி சூரணம்:— ஓமம், பெருங்காயம், வாய்விளங்கம், இந்துப்பு, வெடியுப்பு. வளையலுப்பு, கல்லுப்பு, கறியுப்பு, கடுக்காய் தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, செவ்வியம் திப்பிலிமூலம், கோரைக்கிழங்கு, கடுகுரோகணி, கொடிவேலிவேர், சீரகம், கருஞ்சீரகம், வெட்பாலையரசி, செங்கழுநீர், கோட்டம், சிறு வழுதலைவேர், கண்டங்கத்தரிவேர், சிவதைவேர், அத்தித்திப்பிலி, பாலைவேர், பொன்முசுட்டைவேர், கருடக்கொடி, குளப்பாலைவேர், சிறுதேக்கு, நவாச்சாரம், அதிவிடயம், வசம்பு, மஞ்சள், மர மஞ்சள், இவை சமனுகச்சூரணம் செய்து வெல்லம் கூட்டித்தேனி லாவது நெய்யிலாவது கொள்ளச்சீதக்கட்டு, வாதரோகம், அட்ட விதக்குன்மம், மகோதரம், மலபந்தம், பாண்டு, காமாலை, மூல ரோகம், அக்கினி மாந்தியம், முளைமூலம், இருமல், இளைப்பு, அசீரணம், வாந்தி, வாதபித்தம், சிலேற்பனத்தில் உண்டான வியாதி இவையெல்லாவற்றையும் போக்கும்.

அபிபத்யாதி சூரணம்:— நெல்லிப்பருப்பு, வாய்விளங்கம், ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கோரைக்கிழங்கு, திரிகடுகு, கடுக்காய். வகைக்குப் பலம் 2, ஆரியக்கரைச்சிவதை பலம் 20, சூரணம் செய்து சர்க்கரை கூட்டி வெந்நீரில் கொள்ள சூலை, அக்கினிமாந்தியம், மூலம், குட்டம், பயித்தியம், சிறுபிள்ளைவாதம், சிலேற்பனம், பாண்டு, நெஞ்சுநோக்காடு, சீதக்கட்டு, இவை யெல்லாம் தீரும்.

வேறு:— ஓமம், திப்பிலி, திப்பிலிமூலம், ஏலம், இலவங்கம், பச்சிலை, நாகப்பூ, சுக்கு, மிளகு, இருவேலிவேர், கொத்தமல்லி, இந்துப்பு, வகைக்குப் பலம் 1, காட்டாத்திப்பூ, வில்வப் பிஞ்சு, மாதாளம்பிஞ்சு, குரோசானி ஓமம், வகைக்குப் பலம் 3, சீனி பலம் 6, விளாம்பிஞ்சு பலம் 8, இவையெல்லாம் சூரணம் செய்து அளவாகக்கொடுக்க அதிசாரம், கிராணி, க்ஷயம், பாண்டு, மகோதரம், காசசுவாசம், அக்கினிமாந்தியம், பிலீகம், அருசி, மூலம், வயிற்றிலுண்டாகிய வியாதி எல்லாவற்றையும் போக்கும்.

வேறு:— திரிகடுகு, வசம்பு, காயம், பொன் முசுட்டை வேர், அதிவிடயம், ஆடாதோடைவேர், செவ்வியம், கடுகுரோகணி, வாய்விளங்கம், ஆனைத்திப்பிலி, இந்துப்பு, திப்பிலிமூலம், வில்வப் பிஞ்சு, ஓமம், இவை சமனாகக்கொண்டு சூரணம் செய்து சிற்று மணக்கெண்ணெயிலாவது வெந்நீரிலாவது வெருகடிப்பிரமாணம் கொள்ள சுவாசம், சோகம், பவுத்திரம், பிலீகை, இருமல், பிரமேகம், காமாலை, பாண்டு, நெஞ்சுவலி, பக்கவலி, இசிவு, சூலை, அரோசகம், உதாவர்த்தம், ஆந்திரவிருத்தி, மூலவாய்வு, சிறுபுழு, கிராணி, சுரம், இவையெல்லாம் போகும்.

சுக்கில ஸ்தம்பனத்துக்கு

குளிகை:— அபின் பலம் 3, பச்சைக்கற்பூரம் பலம் 1, கஸ்தூரி பலம் 1, குங்குமப்பூ பலம் 1, ஆக யிவையெல்லாம் தேன் வார்த்தரைத்து மிளகுப்பிரமாணம் உண்டைசெய்து நிழலுலர்த்த லாக உலர்த்தி ஒருஉண்டை தேங்காய்ப்பாலில் கொள்ளவும். மதுரமாக ஆகாரங் கொள்ளசுக்கிலத்தம்பனம்.

வேறு:— நிலப்பனங்கிழங்கு, உழுந்து, நீர்வள்ளிக்கிழங்கு, பூனைக்காலிவிதை, இலவம்பிசின், இவைசமனாகக்கொண்டு சரி சர்க்கரைகூட்டி இரண்டு கழஞ்சு தேனிலே பதினைந்து நாள் கொண்டு இரவில் பாலும் சாதமும் கொள்ளபோகமதிகமாம். சரீரபுஷ்டியும் பலமும் புத்தியுமுண்டாய் நூறு ஸ்திரிகளுடனே போகம்பண்ண மனசுண்டாயிருக்கும்.

வேறு:— சந்தனம், சாதிலிங்கம், மாஷம், அபின், இவை அரைத்து வாழைப்பழத்தில் கொள்ள சுக்கிலத்தம்பனம்.

தசமூலவகை:—பேராமுட்டி, காட்டுக்நறிஞ்சான், துளசி, கண்டங்கத்தரி, செங்தொட்டி, முள்ளி, ஆடாதோடை, செம் முள்ளி, சீந்தில், நன்னாரி, ஆக இவைகளின் வேர், தசமூலமாம்.

வேறு:—சிற்றாமுட்டி, பேராமுட்டி, கண்டங்கத்தரி, சிறுவழு தலை, வாகை, முன்னை, பாதிரி, சிற்றாமல்லி, பேராமல்லி, பெருங் குமிழ் ஆக இவைகளின் வேர், தசமூலமாம்.

குக்கில் சுத்தி:—கோமூத்திரம், கையாந்தகரை, சீரா, செங்கழு நீர், துளசி இவைகளின் சாறுபடி 1, ஒருதாழியில்விட்டு குக்கிலைப் பொட்டணங்கட்டிக் குக்கில் நனையத் தொளாந்திரமாகக் கட்டிக்

காய்ச்சி ஆறவிட்டுக் கழுவிப்போட்டு எடுத்துப் பார்க்கச் சுத்தியாம்.

குக்கில் சூரணம் :—திரிகடுகு, திரிபலை, முத்தக்காசு, வாய் விளங்கம், செவ்வியம், சித்திரமூலம், ஏலம், இலவங்கம், திப்பிலிமூலம், தேவதாரம், கோட்டம், மஞ்சள், மரமஞ்சள், வெடியுப்பு, நவாசாரம், யவாட்சாரம், இந்துப்பு, அத்தித்திப்பிலி இவை வகைக்கு சமன் ஆகக் கூடின எடைக்குச் சுத்திபண்ணின குக்கில் சரிகொண்டு இவை ஒன்றாகக்கூட்டி பலம் ⅛ வீதம் உண்டைசெய்து தேனிலாவது நெய்யிலாவது ஒரு உண்டைகொள்ள காசசுவாசம், மூலரோகம், பழுங்காய்ச்சலிவை யெல்லாந் தீரும்.

பதகரிக்கு :—கூத்தன்குதம்பையும், இலைக்கள்ளி யிலையும் அரைத்துச் சிறுநீரிலே உள்ளுக்குக் கொடுக்கவும்.

குக்குடச் சூரணம் :—வெள்ளைக் கருங்கோழி முற்றினதைக் கொண்டுவந்து நெஞ்சைப்பிளந்து ரோமம், ஈரல், பித்துக்குடல், மூக்கு, தலைத்தள்ளிப்போட்டு உப்பு பலம் 16, தேங்காய்ப்பால் பலம் 16, எண்ணெய் பலம் 12, நெய் படி ¼, விட்டுக் குழம்பாகக் காய்ச்சி இதில் பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம் வகைக்குப் பலம் 3 பொடிசெய்து தூவிக் கிண்டி வறுத்து இந்த லவணம் மோரிலே கொள்ள இரத்தகுன்மம், சூலை, பெருவயிறு, பொருமல், விப்புருதி, வயிற்றுப் பொருமல், போகும்.

மூலத்திற்கு

இந்துப்பு பலம் 1, சீரகம் பலம் 2, திப்பிலி பலம் 4, சுக்கு பலம் 5, விதைபோக்கிய கடுக்காய் பலம் 12 ஆக இவை கூட்டி யிடித்து வெருகடி வெந்நீரில் கொள்ளத் தீபனமுண்டாம். மூலந் தீரும்.

இருமலுக்கு

திரிகடுகு வகைக்குப் பலம் 1, கடுக்காய்ப்பொடி பலம் 3 ஆக ஆறு பலத்தையும் பொடித்து வெருகடி உதயத்தில் ஊற்றின சிற்றாமணக்கெண்ணெயில் கொள்ளவும். இரவில் தேனில்கொள்ளவும். இந்தப்படி கொள்ள இருமல் நிற்கும்.

வசியத்துக்கு

சாதிக்காய் துளைத்து அதற்குள்ளே இரதம் பலம் 2 விட்டு அடைத்து ஊர்க்குருவியைப் பிடித்துக் குடலைத் தோண்டிப்

போட்டு அதற்குள்ளே அந்தக் காயைவைத்து வாயைத் தைத்து பதக்குக் கொள்ளுகிற பானையிலே மூன்றுபடி சாராயம்விட்டு அந்தக் குருவியைப் போட்டு சாராயம் அறவற்றினல் குருவியை எடுத்து ஆறவைத்து உண்டையை எடுத்துக்கொள்ளவும். சதையை ஒரு அரிசியளவு உண்டைசெய்து வேண்டியபேருக்குக் கொடுக்க வசமாம். உண்டையை அரையிலே கட்டிக்கொள்ளவும்.

சுகலேபனம்:—நல்லபாம்பு சட்டையைச் சட்டியிலிட்டுக் கருகாமல் வறுத்து நன்ருய்ப்பொடித்து நல்லெண்ணெய் விட்டுக் குழம்பாக அரைத்து பச்சைப்புழுகு வேதிச்சு ஒருகாணமளவு தண்டில் பூசி புணர்ந்து அவளுக்கு இரண்டு எள்ளளவு வெற்றிலையில் தடவிக்கொடுக்கப்பிரியமாட்டாள். கைகண்டது.

பித்த கஸ்தூரிமாத்திரை

பித்தமது தீர்ப்பதற்குப்பேர் பெரிய கஸ்தூரி
யுற்பனமதாக வுரைக்கக்கேள்—குற்றமிலாக்
கஸ்தூரிநீறுசிங்கி கடலழிஞ்சி மாயக்காய்
விஸ்தாரக்கஞ்சவலே வெட்டிவேர்—முத்தமுடன்
கற்பூரம் குங்குமப்பூ கிராம்பு திரிகடுகு
நற்பவளமுத்துவெள்ளி நாகணமு—மிக்கதொரு
கோரோசனைகலையின்கொம்பு ருத்திராட்சமுட
ஞக முறும்பொன்மெழு கோடமுக்கிராக்—காரமுடன்
கோட்டங்காண்டா மிருகக் கொம்பு கருடப்பச்சை
யிட்டமுடனீந்தேலமிலா மிச்சு—வட்டமிடு
வண்டுகொல்லி முந்திரிகைமதுரம் பெருங்குரும்பை
கொண்ட சண்பகப் பூக்கொத்தமல்லி—உண்டான
சாதிக்காய் சிற்றரத்தை சாத்திரபேதி—விளங்கங்
கோதறுமுப்பாலே குளப்பாலையுட—ஞதாவாஞ்
சீரகமிரண்டுடனே **சீர்க்காக்**கோலி சயிந்தம்
பாரமுறுமக்காரப்பத்திரியும்—ஈரமில்லாத்
தாளீசம் நாகப் பூச்சந்தனம்—இரண்டுடனே
வாழுமிலவங்கயிலே ம்கரப்பூச்—சேர்
வகைக்குக் கழஞ்செடைவாய்த்த வுலகேந்தித்
திகைத்து விடாதோற் பலந்தான் சேகரித்து—அரைக்கும்வகை
யானையதன் பாலுடனே வெள்ளாட்டுப் பாலாம் வரி
மாதளைநற்கனி நீர் மாதர் பா—லாதரவாங்

கத்தபத்தின் பாலிளநீர் கருப்பம்பால் பன்னீரில்
ஒக்கவிதிலொன்பது நாளுகந்தரைத்து—மிக்கதொரு
கடலையளவுருட்டிக்கட்டாய் நிழலிலுலர்த்திப்
பரணிதனிலடைத்துப் பண்பாய்—மகிழும்
ஆற்று மணல்வறுத்துப் பண்பாகவே—யிளநீ
ரூற்றியிறுத்து வொருகுளிகை—சித்துவமாய்த்
தானருந்தத் தீரும்நோய் எத்தரிய
பித்தமது நாற்பதும் பிதற்று மறிவுமய—லுத்தசய
ரோகமுடலெரிவுசத்திவிக்கல் வாந்தி பிர
மேகம்வயிற்றெரிவு நீரழிவு—காந்தல்பார்
தாகசுரங்கண்புகைச்சல் சேர்ந்ததொரு—விப்புருதி
நான்குடனே மீறுகின்ற வாயுமந்தங் கக்கல்கணை
சன்னி பதினெட்டுடனே சகலசுரத்துடனே
யுன்னு மிளைப்பிருமலுட் பொருமல்—பின்னுங்கேள்
கிருமிபதினெட்டுங்கிரீச்சனமும் நீர்க்கடுப்பும்
அகலுமனுபானமறிந்திடுக—வுலகமதில்
தீராதரோகமெல்லாம் தீருமென முன்னோர்கள்
ஆராய்ந்து சொன்னாரறிந்து.

பித்த கஸ்தூரி மாத்திரை (வேறு)

பேசுதமிழதனுல் பித்தகஸ்தூரிக் குளிகை
வாசனையாய் வைக்கும் வகையதுகேள்—நேசமுறுங்
கஸ்தூரி கஞ்சவளை கல்மதங்கார்போகரிசி
வித்தாரச்சிங்சி விடயமுடன்—உத்ததொரு
கலையினுட கொம்பு கடலிருஞ்சிபவளம்
பழுதில்லாவண்டு கொல்லிப்பட்டையுடன்—
[கொளுவியதோர்
முந்திரிபேரீந்து கல்நார் முக்கனியுஞ்சிற்றரத்தை
தந்திரமாங்கோட்ட மிரு சந்தனமும்—விந்தைபெறு
மம்புயங்கோரைக்கிழங் கோடக்கார முத்தேலஞ்
சண்பகப்பூ வெட்டிவேர் சீந்தில்மா—வேதமுறு
வால்மிளகு நாகப்பூ வாய்த்ததிரிகடுகு
நீலமதுசோதி நிலப்பனையுங்—கோலமுறு
பற்பாடகம் பூரம் பகர்சீரகமோ
டுற்பன மதாஞ்சாத்திர வேதியுடன்—சொற்பகருங்

குயிலின்மொழி மாயக்காய் குங்குமப்பூவோடிதெல்லாம்
ஓயிலாகவே வகைக்கு ஓர்கழஞ்சு—இலமுறுங்
கோரோசனை மூன்றுங்கூட்டி ஒன்ருய்த்தானரைக்க
வார்ணியுங் கொங்கை மடமாதர்பா—லாராயு
மாதளையின் கனிநீர்வாய்த்ததொரு செவ்விள
நீரானதொரு பேய்ப்புடொல்லாச் சாறணைப்பால்—நேரான
நெல்லிக்காய்ச்சாறு பன்னீர் நீள்கருப்பஞ்சாறிவைகள்
உன்னியிதி லொன்பது நாளுகந்தரைத்து—நன்னயஞ்சேர்
கடலையளவுருட்டிக் கட்டாய் நிழலுலர்த்திப்
பரணிதனிலடைப் பாங்குப்பெற ஓர்குளிகை—மனமுருக
மாதர்முலைப்பாலிளநீர் வாய்த்தஇஞ்சி ஆவின்பால்
தேனதனில், நெய்யதனில் சேர்த்தருந்த—மானனையீ
ரீளைக்ஷயரோக மிரைச்சல் கழிச்சலுடன்
கோழைமிகு பித்த மெரிகுன்மமும்போம்—வாள்விழியாய்
நீரழிவுகாந்தல் நிணமுருக்கி யுள்ளுருக்கி
பாருலகில் சன்னி பதினெட்டும்—சீலமுடன்
எண்பத்துநான்கு சுரமியல் பாகத்தீருமென,
நண்புற்றுச் சொன்னுர் நயந்து.

பித்த கஸ்தூரிக்குளிகை

நீலங்கயல் சேர்விழியாளே
நினைவையழிக்கும் பயித்தியந்தான்
ஆலங்கொண்டு மிகுந்துதனில்
அயர்ந்து மயங்கித்திரியாதே
ஏலஞ்சந்தனமதிமதுர
மியல்தேவதார மிருவேலி,
கோலஞ்சுக்கு சடாமாஞ்சி
கோட்டம் குங்குமங்கோரோசனை
முந்திரிப்பழம் பேரீச்சம்
பழம் பெருங்கஸ்தூரிபாரீர்
பச்சிலைநன்ளுரி பகருந்
திப்பிலி பொன்மெழுகுடனே.
சேரீர்தாழமில வங்கஞ்
சீறும் சீரகமிலுப்பைப்பூக்
காரீர்குங்குமமிலாமிச்சுக்
கடுகுரோகணிகழஞ் சொன்றே. 1

ஒன்றேகூட்டிப்புடோலச்
சாற்றிலரைப்பீர் ஒருசாமம்,
அன்றே நெல்லிக்காய்ச்சாறு
அழுவேகத்தபத்தின்பாலும்
குன்றேயானை முலைப்பாலுங்
கூறுங்கருப்பம்பாலுடனே
நன்றேநிலவேரிள நீரும்
நலங்கவைப்பீர் நலமாக. 2

நலமாயரைத்த மருந்துதனை
நல்லபருத்தி விதைபோலப்
பதமா யுருட்டிக் கொண்டக்கால்
பார்த்துக் கொடுக்கவகை கேளீர்
குணமா மணலைத்தான் வறுத்துக்
கோடி யிளநீர் இட்டிறுத்துப்
பதமா யுண்டை யிரண்டுதனில்
பகுந்து கொடுக்கப் பயித்தியம்போம் 3

போமே பித்த பயித்தியமும்
பித்த சுரத்தி லெழுந்ததுவும்
நாமேயத்தி சுரம் போகும்
அரிய காசம் க்ஷயரோகம்
போமே யென்று முனிவோரும்
பொருந்த உரைத்தார் புகல்வோமே—? 4

மேக கஸ்தூரிக் குளிகை

சொல்பெறு கஸ்தூரி கடலழிஞ்சி சடாமஞ்சி
சுத்தியுறுநல் கருடப்பச்சை கல்நார்
முற்பகருஞ் சாதிநிறை வெட்டியிருவேலி
மொய்த்தகல்ம தத்திேனாடு முப்பழமோடேலம்
கல்படரு பாசியுருரோசனை கோள்பூரங்
கந்தமுறு பத்திரியும் ஆவரைப்பஞ்சாங்க
முற்பனமீ தொப்பிடைகொள் சீதபனிநீரால்
உண்டைசிறு சுண்டையதின் காயளவுதின்னே. 1

மேகபாதக சுரமேகமிவை தீர
 மேதியுறு மோரிலிடு நீயுமொருவுண்டை
மேகபருவோ பிளவை வேகமழல்மாறு
 நறுங்கனியின் நீரதனிலுண்ண
வோகையுடனே தினர்கஸ்தூரி யிதுதானு
 மாதியுண்டையாயுள் மறையோதுவது மீதே. 2

கஸ்தூரிக் குளிகை

கோதறுகஸ்தூரி குளிகைசெய்யும் கூறதுகேள்
மேதகுகஸ்தூரி வித்துரு மஞ்—சோதிபொன்,
வெள்ளிகலைக்கொம்புசுக்கு வெட்டிவேர் முந்திரிகை
கொள்ளுமிலாமிச்சுடனே குங்குமப்பூத்—தெள்ளியபே
ரீந்தேலஞ்சந்த மிலுப்பைப்பூ கற்பூரம்
வாய்த்த கடுகுரோகணி சடாமாஞ்சி—கோட்டம்
தேய்த்ததேவதாரம் அதிமதுரந்தக்ககல்நார்
நன்னரி பார் ருத்திராக்ஷம் நல்லபச்சையுடன்—
 [சொல்வகைக்கோர்
கழஞ்சுகொண்டுவன் கருப்பஞ் சாற்றரைத்துச்
செவ்விளநீர் விட்டுச்சேர்த்தரைத்து
முற்றுலகில் கோரோசனையில் முக்கழஞ்சுகூட்டியொக்க
நற்றியபன்னீர்தனினலரைத்துக்—குற்றமறுக்
குன்றியளவுகுளிகை செய்தோருண்டைதனை
நன்றிளநீரிஞ்சித்தேன்நன் முலைப்பால்—வென்றியனு
பானமிதனில் பருகவேகக்கல்கணை
ஈனமுறுபித்தமிளைப்பிரும—லான்சன்னி
சித்தப்பிரமை தியக்கமயக்கமுடன்
சத்திவிக்கல்நாவறட்சி தாதுகெடல்—அத்திசுரம்
ஆறுச்சுரங்கள ருசியதி ரூட்சை
ஏருதகாந்தல் எரிவுழலை—மாருத
நீர்க்கடுப்புநீரழிவு நீண்டபிரமேகமுடன்
தீர்க்குமெனச் சொல்வாய் தெளிந்து.

சின்ன ஏலாதி மாத்திரை

இங்கிதமதாகநல்ல ஏலாதி மாத்திரையைச்
சங்கைபெற முத்தமிழால் சாற்றக்கேள்—மங்காத
ஏலமிலவங்க மிருவேலி மத்தம்விதை

சீலமுறு சண்பகப்பூ சிந்தில்மா—வாலிபமா
முத்துப்பவழ மொய்த்த சிறுதேக்கதுவும்
பித்தகலுங் கஸ்தூரி பீநாறி—யுற்றதொரு,
முந்திரிகைபேரீந்து முருங்கைவிதை தேத்துவிதை,
தந்திரமாங்கோட்ட மிரு சந்தனமு—மந்திரஞ்சேர்,
கோரோசனை கலையின் கொம்புமதுரமுடன்
நேராகுங் கச்சோலம் நிலப்பனையு—மாராயுஞ்
செங்கழுநீரின் கிழங்குந்திரிகடுகு இரண்டரத்தை
வங்காளப்பச்சை * மகரப்பூ—பொங்குதேவ
தாரங் களாசுகந்த பாலையிரு
சீரகமுமாமுறு முக்கனியோட முக்கிரு—யீரமில்லாச்
சாத்திரவேதி கல்நார்தக்க சிறுநாகப்பூ
கோத்திரமாமதனைவேர் குங்குமப்பூ—சீத்துவமாம்
பச்சைக் கற்பூரமுடன் பாங்குபெறவேவகைக்கு
நிச்சயமாமோர் கழஞ்சு நிறுத்தபின்பு—கொச்சையிலா
தாவின்பாலில் பன்னீரதிக முறுஞ்செவ்விளநீர்
பாகமுற மூன்றுதினம் பரிந்தரைத்து—மோகமுறுங்
கடலையளவுருட்டிக் கட்டாய் நிழலுலர்த்திப் புளகமுறு
மாதர்முலைப்பாலிளநீர் வாய்த்த—பசுப்பால் தேனி
லீதிலொரு குளிகையிடுவீரால்—வாதையுடன்
வாந்தி வயிற்றெரிவு மாறுப்பிரமேகங்
காந்தல் க்ஷயங்காசங் கழிச்சலுடன்—ஏந்திழையீர்,
சலக்கழிச்சல் நீரழிவுதான் தீருமென்று
குலத்திலுள்ளோர்தங்கள் முன்னே கூறு.

மகா ஏலாதி குளிகை

பூரணமாமேலாதி பொற்குளிகை கூட்டுதற்குப்
பாருலகில் நற்றமிழாற்பகரக்கேள்—பேர்பெரிய,
ஏலமதிவிடைய மிருவேலிகொத்தமல்லி
சாலவிலாமிச்சு வெட்டிசந்தனமும்—வேல்விழியாய்
முத்துப்பவழம் வெள்ளிமுந்திரிகை பேரீந்து
வித்துருவாங்கஞ்சவளை வில்வவேர்—¶ முத்தமுடங்
தாளீசஞ்சாதிக்காய் சாத்திரவேதியோடு
கோள்தீர்க்குங்கார் போகிகோட்டமகிலத்—தாழ்வில்லாச்

* பெருஞ்சீரகம், ¶ கோரைக்கிழங்கு.

சித்தரத்தை மாஞ்சிதிரிகடுகு நாகப்பூப்
பத்திரிகிராம்புதிரி பலையுடன்—சித்தர்பெறு
தாம்பிரபற்பம் சதாவேரிநாகபற்பம்
ஆம்படியே சிங்கியப்பிரகபற்பம்—நான்புகல்வேன்
பூனுகங்கற்பூரம் புழுகுசவ்வாது பச்சை
தேனுறுந் தேக்குச்சிவதையுடன்—ஊனுன
கொம்பரக்கு நீறுகலைக்கொம்புகண்டில் வெண்ணெயுடன்
தம்பமுறுவால் மிளகு தக்கோல—மின்பமுறு
சீரகமிரண்டு தெய்வதாரங் கிளியூறலான
தொருமாதளைவேர் முக்குராத்தான்—முத்திராக்க
மோமமுலுவா நிலப்பனையுங் கத்தூரி செங்கழுநீர்
கந்தமுடனுைத்தொரு மதுரங் கெருடப்பச்சை—
[வாய்விளங்கம்
பத்திராக்ஷம் சதுர்பெறுநன்னாரி சதாவேரிபேதான
சித்திரமூலஞ் சிறந்தநீர்முள்ளி விதை—வித்துருவாஞ்
சீந்தில் மாவெட்பாலை குற்றமில்லாக்
காரமிலவங்கமிலைகல் மதங்கல்—நாருடனே
பேராம் பெருமரத்தோல்பீனாரிகோதும்பை
நெய்தல்கிழங்கு நெரிஞ்சிவித்து—வண்டுகொல்லி
கைத்தோணி வித்தாட்டிகடலழிஞ்சி மெய்திகழும்
செஞ்சந்தனத்துடனே செவ்வள்ளி—சண்பகப்பூத்
தொய்யா குரோசானி துத்திவிதை
ஒய்யாமாசக்காய் வேப்பமபினும்வசுவாசி யோரிதள்வேரிது
வகைக்கோர் கழஞ்செடை நிறுத்து ஆதரவாய்
மிக்க கோரோசனையுமீருதி ருகழஞ்சு
ஒக்கவே சேர்த்தரைக்கு மூண்மைகேள்
இக்கு நீராவின்பாலிளநீர் பன்னீருடனே
நக்கனார் மாதளை யீன்றகனி நீர்
சிக்கெனவே மாதர் * முலைப்பாலும்?

---

*இவைகளாலரைத்துப் பயறு அளவு மாத்திரை செய்து காசம், சுவாசம், சுரம், வாந்தி இவை கட்குத்தக்க அனுபானத்தில் கொடுக்கவும்.

ஏலாதி மாத்திரை

பூமேவுமேலாதி பொற்குளிகை கூட்டுதற்கு
மாமேவுமேல மதிமதுரம்— பார்மேவு,
சந்தனந்தேவதாரஞ் தாளிசஞ்சாதிக்காய்
முந்திரிகை பேரீந்துமுத்துடனே—வந்தசெழுந்
துப்புக்கிராம்பு துடர்கோட்டஞ் சீரகமுன்
தப்பாதரோகணி சடாமஞ்சி—ஒப்பும்வகை
சொல்லும் வராகனெடை சோர்வில்
நல்லுத்திராக்கம் வெட்டிநன்னாரி—வல்லதொரு
செழுங்கழுநீரின்கிழங்கு தேத்தான்விதை கலைக்கொம்பு
பங்கமுறும் விளாம்பிசின்—பொங்கிலுப்பைப்
பூனாகப்பூவும் புதுலவங்கப் பத்திரியுஞ்
சீனமுத்தக்காசு திரிகடுகு—கானல்மிகு
முப்பாலை கூகைமுழுநீறுகஞ்சவளை முக்காலுஞ்
செப்பினே முக்கழஞ்சு மியக்கக்—கற்பூரங்
கஸ்தூரி புழுகொடு குங்குமப்பூச்
சேரவரகானெடை சேர்த்தே—யாலமுறு
சீலமாங்கோரோசனை கழஞ்சிரண்டிவைகள்
பால்வார்த்தரைத்தொரு நாட்—பக்கனளக்
கொம்மட்டி மாதுளையின் கொண்டபழச் சாற்றரைத்து
விம்மியிளநீரதனல் விட்டரைத்துச்—செம்மைபெறக்
கன்னலின்சாற்றொருநாள் கட்டுமிட்டாய்த் தானரைத்துப்
பன்னீரி லந்தப்படியரைத்து—நன்னயங்கொண்
டுற்றகடலையளவுண்டை நிழலுலர்த்திச்
சத்தமுறுசிமிழில்வைத்துச்—சொற்றவிஞ்சி
நீரிலிட்டாலீரலொடு நெஞ்செரிவுதானகலும்
மாதர்முலைப் பாலிலிடவானீர்ச் சுழத்தலகலுங்—காலமிளகு
[கஷாயத்தில்
கொள்ளில்பயித்தியமுங் குன்மமும்போம் வேழத்தில்
தெள்ளியநீர் இளநீர்ச்சீனியுட—னுள்ளருந்த
அத்தியில் பற்றுசுரமட்ட விதநீர்த்தோஷஞ்
சுத்தரத்த தோஷந் துணைக்கைகால்—மெத்தனவே
தீருமெண்ணான்கு சுரமுஞ் செப்புசன்னிபதின்மூன்று
மாறுமனுபான மறிந்திடுகில்—பாருலகி
லில்லைவியாதியிலை மரணமில்லை யென
வல்லமுனி சொன்னார் கிளந்து.

சந்தனாதி மாத்திரை

சங்கைபெறுமுத்தமிழால் சந்தனாதிக்குளிகை
மங்கையரேசொல்லும் வகையதுகேள்—பொங்கமுறுஞ்
சந்தனங் கஸ்தூரிகோட்டம் சாத்திரவேதிபுடால்
விந்தைபெருமேதைமகா மேதையுடன்--தந்திரமா
மூங்கில்மதமுத்தேலங்கடுகிந்துப் புக்கந்தியுடன்
சொல்லுங்கருடப்பச்சை சுக்குடனே—வல்லமையாய்
முந்திரிகை இந்துநெல்லிமொழியும் விளாம்பிசினும்
கொந்துசெறி குங்குமப்பூக் குரும்பையுடன்,—மந்திரனாசோ
சடாமாஞ்சிலவங்க மரீசமுடன் கற்பூரம்
சேர்ந்த கிராம்புவகை சேரவே யீதெல்லாம்
மொவ்வொரு கழஞ்சுயுலகேந்தியின் சதைத்தான்
கவ்வையில்லாத் தேசியதன் காயளவு—இவ்வகையோ
டாதிவிந்து தானுமறுகழஞ்சு மத்தம்விதை
சேரும் பதின்கழஞ்சு சேர்த்தபின்பு—ஆராய்ந்
தரைக்கும்வகை சொல்வேனினியின் பாலாமலகங்
கரைக்கடங்காக் கன்னிப்பால் கருப்பம்பால்—நிரைத்துவிடு
பன்னீரிளநீர்பகரும் வகைக் காழாக்கு
யுன்னியரைசாறி தெல்லா மொன்றாக—மின்னேகேள்,
சிறுசுண்டைக்காயளவு திரட்டி நிழலுலர்த்தி
பகருமனுபான முலைப்பாலுடனே—செகமகிழும்
இஞ்சிநீர்கலசப் பாலிளநீரிலோர் குளிகை
வஞ்சமிலா தருந்தமாறும் நோய்—அஞ்சாத
பித்தமறியாமல் பிதற்றுகின்ற பித்தமெல்லாம்
சித்தப்பிரமை தியக்கமுடன்—உத்தமலஞ்
சன்னிசுரம் பிரமை சயரோக மெய்ப்பிளைப்புச்
சன்னிவலிவாந்தி பித்தஞ்சேரவே—சொன்னபடி
இந்நோய்கள் தீருமெனயியல்பாய்க் கும்பமுனி
சொன்னாரிதனைத் தொகுத்து.

கடம்பரச மாத்திரை

சாத்திரமாராய்ந்து தமிழ்சாற்றும் கபம்பரச
மாத்திரைதான் செய்யும் வகையதுகேள்—ஏத்தமிகு
மாதிவிந்து கந்திவகைக்காறு கழஞ்சொன்றாகச்

சாதி சிறுகீரையதின் சாற்றரைத்து—வேதித்தொன்றாய்ச்
குகைதனில் வைத்து ஓடுகொண்டுமூடி மண்குன்றாமல்
சீலைமண்ணும் கொண்டு செய்து—நன்றிபெற
நல்ல மணலின் நடுவினில் வைத்தே புதைத்து
மெல்லச்சிறு புடமிட்டெடுத்து—வில்வவேர்
வாதமடக்கிவழுதலை கூத்தன்குதம்பை
பாதிரி நெருஞ்சி பெருவாகை—ஓதுகுரு
விஞ்சி நிலக்குமிழுமிக்க கண்டங்கத்தரியி
ரஞ்சிலுள்ள வேருமடவாக—மிஞ்சாமல் சீருடனே
பண்பாய் வகைக்குப்பலமொன்றரை நிறுத்து
நண்புபெறவேயிடித்து நாலுபடி—வன்புனலை
விட்டெரித்து வற்றிய நீர்விட்டுக் குகைமருந்தை
யிட்டரைத்துச் சாமமிரண்டரைத்து—சட்டமுடன்
குன்றியளவு குளிகை கருப்பஞ்சாறு
நன்றீர வெங்காயம் நன்னீர்தேன்—சென்றுடா
தோடையிலைச்சாற்றிலுஞ் சோர்விலாதே கொடுக்க
வோடும் இளைப்பிருமலுட் பொருமல்—பீடைசெய்யு
மஞ்சுவகை விக்கலையுமாவசியமாக
வஞ்ச மறத்தீர்க்கு மருந்து—?

சுரக் குளிகை

சொல்லறிய சுரனுண்டை கூறக்கேளாய்
சூதமொடு நேர்வாளம் சுத்திசெய்து
நல்லமிகு கந்தகம் வெண்காரமோ ரொன்று
நான் முக்கழஞ்சாக நிறுத்திவாறே
வில்நுதலாய் வெய்ய முலைப்பால்தான்
வார்த்து மிக வரைத்துக்கடலையளவுண்டை செய்து
வெல்லரிய சுரத்துக் கோருண்டை தன்னை
வெற்றிலையில் விட்டருந்த விட்டுப்போமே

கௌரியுண்டை

நலந்தரு கௌரி நாலு நாறுசீரகமே மூன்று
துலங்கிய துருசிரண்டு துத்தமே மூன்று நிம்பம்
பழந்தனிலரைத்து அண்டைப்பயறுபோல் பண்ணிக்
[கொண்டு
அலர்ந்த வெந்நீரிலிட்டாலருஞ்சுரம் குளிரும்போமே

நான்குநாள் மாறலுக்கு

எலிப்பகை தன்னையங்கே எருக்கம்பால் தன்னிலிட்டுச்
சலிப்பறமூன்று நாளுஞ் சார்ந்தபின் எடுத்துக்கொண்டு
பழுபாகலிலைச்சாற்றிலரைத்தங்குண்டைபயறுபோல்
நலம்பெறவே மோரிலிட்டல் நாலுநாள் மாறல்போமே.

தீபனராம பாணம்

மாயோன்தேவி ஆதியுமை
வளருந்துருசுதுத்தமுடன்,
தூய இருவிடங்கணமுஞ்
சொல்லுமனோசிலை நேர்வாளம்
தாயாநாபி சவுக்காரந்
தளருஞ்செம்பு பொடியிவைதான்
நேயமாகச்சரிகொண்டு
நிறுத்தே இதனை அரைத்திடுமே (1)

அரையீர்க்குப்பை மேனியின் சாறு
அதுதான் மூன்றுநாள் விட்டு
வரையாதரைத்து உளுந்தளவு
மகிழ்ந்தே பிடித்து நிழலுலர்த்தி
கரையீர் குளிகை ஒன்றுதான்
கருத்தாய் மாதர் பால் தேனில்
உரையீரிஞ்சிச்சாறதிலு
முலு வாய்க்கஷாயமதிலாமே (2)

ஆமேசங்கினி லைச்சாறு
அதிலுமலசன் தயிலத்தும்
போமே மூன்று சந்திகொள்ளப்
புலம்பும் சன்னியுழலைசுரம்
நாமேதரி யோமெனவகலும்
நடுக்கியயரும் விரைப்புவலி
தீமையில்லாதே யகலுந்
தீபனராம பாணமிதே (3)

பூபதி

செம்புத்த கடுநாற் கழஞ்சு
 சேர்ந்த சூதமவ் வெடையே
நம்பு கந்தகமெண் கழஞ்சு
 நாபியிரு கழஞ்சிவை கூட்டிக்
கொம்பங் களித்து விழுதாகக்
 கிளறுந் தேசிச்சாற் றரைத்து
வெம்புந்தழலால் தகடுதனில்
 மேலுங் கீழும் பூசிடுமே. 1

இடுமே சட்டிதனில் வைத்திங்
 கியல்பாய் மூடிமண் செய்து
தடுமாறில்லாக் கெசபுட மிட்டுச்
 சார்சீதளமா யெடுத்து
வடுவானல ரச முடனே
 மன்னும் பிரதாபலங்கே சுரனும்
நடுவாமக்கினி குமாரனுக்கு
 நம்பீர் பூபதி யிதுவெனவே. 2

இதுவே சன்னி சுரந்தனக்கு
 மியல்பாயுள்ள மருந்துமிதே
பொதுவாய் நின்று மாவிதனை
 புரக்கும் பூபதி ரசமுமிதே
கதிரோன் மதிய முள்ளளவும்
 கருதும் சன்னியுமன்ற கலும்
விதியே தப்பாதென நினைத்து
 வேதமாமுனி தானுரைத்தார். 3

சன்னிவாத வயிரவன்

சூதம் நாபிமனோசிலை கந்தகந்துலங்கு
 தாரம்டங்கண மிவையெல்லா
மோது சுத்திசெய்திவை கழஞ்சொன்றாய்
 ஒக்க ஆறுகழஞ்சு கொள்லிங்கமும்
நீதமாகிய கொடிவேலிச் சாறதை
 நெகிழவிட்டரை ஒருநாள் மறுபடி
சீதமாகிய எலுமிச்சம்பழத் தண்ணீர்
 சிறந்து விட்டரை குழிக்கல்லில் மெல்லவே. 1

மெள்ள விஞ்சிச்சாற்றினில் மூன்றுநாள்
விரும்பி நோக வரைத்துழுந்தளவுண்டை
உள்ள மெய்க்கத்திரட்டி நிழலிலே
உலர்த்தி நல்ல பரணியிலடைத்திதைக்
கொள்ளு மிஞ்சிச்சாற்றனு பானத்தில்
கொடுக்கவாதம் வலிசன்னி சுரமுமே
தள்ளி யோடிப்பறந்து துலைந்திடுஞ்
சன்னிவாத வைரவன் குளிகையே. 2

நீலகண்டரசம்

பாழுஞ்சூதம் கந்தகம் நாபியும்
பகருந்துத்தம் தாம்பிர பற்பமும்
கேழுமியக் கழஞ்செடை சரிகொண்டு
கிளருஞ் சம்பிரச்சாற்றினி லரைத்திதை
நீழும் பாசிப்பயறளவுருட்டியே
நிழலுலர்த்திப் பானையிலடைத்துவை
தாழ்வில்லாதிஞ்சிச் சாற்றினி லோருண்டை
தானுரைத்திடு சன்னிய தேகுமே. 1

ஏகுஞ் சன்னிபதிமூன்றுடன் வலி
இசிவுவாதம் விரைப்புச் சுரமுமே
போகுமட்ட குன்மமும் வாய்வும்
புகலும் நீலகண்ட ரசமென
ஆகு மாத்திரைபேர்சொல்லச் சன்னிதான்
அகன்றுபோய் விடுந்திண்ண மதாகவே
பாகமாகவே சத்தியிடத் துறை
பரமன் திருமிடற்றவுஷத நாமமே, 2

சுராங்குசம்

மத்தம்விரை சூதம்வளர் நாபிகந்தகமு
மொத்தவிடை நாற்கழஞ் சொவ்வொன்று—உத்ததொரு
வேர்க்கொம்பு திப்பிலிமிளகு கழஞ்செட்டு
நேர்பாகச் சம்பிரத்தின் னீரரையே. 1

அரையீர் மறுநாளில் ஆத்திரசச்சாற்றில்
அரைப்புதீர்குளிகை குன்றி போலுருட்டிக்
கரைசுராங்குசத்தைக் கருதி அருந்தவே
கரையாக தீராச்சுரமனைத்தும் தீருமே.

திரிமூர்த்திரசம்

வருத்தும் வெள்ளைப் பாஷாணம்
மனிதர் மூத்திரந்தனிற் போட்டுத்
திருத்தமாக நாளிரண்டு
திறமாயூற வைத்தெடுத்துக்
கருத்தாய் லோகச் செந்தூரம்
கழஞ்சிரண்டு முக்கழஞ்சு
பருத்த சீனக் காரமவை
பண்பாய்ச் சம்பீரச் சாற்றரையே. 1

அரைத்தமருந்தை உளுந்தளவு
அழுந்தப்பிடித்து நின்றுலர்த்தி
திருத்தும்சீரகம் கிராம்புமிக்கச்
சீனிமுலைப்பால்தன்னிலிட
உரைத்தார்குளிகை ஒன்றதுதான்
ஒளியுங்குளிரும் மாறல்சுரம்
வருத்தாதகலும் திரிமூர்த்திரசம்
வாங்கியருந்தீர்போதிரண்டே 2

நவக்கிரக ரசம்

சாதிலிங்கங்கௌரி மனோசிலை
தாரநல்ல சூதமும்நற்துத்தமும்
தீதகற்றியசத்திதுருசுடன்
சிறந்தவெள்ளைப் பாஷாணமித்துடன்
ஓதுமிக்க சுண்ணும்புக்கல்லுமே
யேர்க்கவேசரிகொண்டிருந்த மருந்தெல்லாம்
நீதிகாரவல்லியின் சாற்றில்
நெகிழவேயொருநாளரை நீயுமே 1

நிம்பப்பட்டைச்சாருெருரு நாளரை
நோகவேதயிர்த்தண்ணீரில் மறுபடி
இன்பமாக ஒருநாளரைத்துத்தான்
இந்த மூன்றுமரைப்பு மரைத்தபின்
தன்பமாக நிழலுலர்த்தாகவே
தானுலர்த்திக் குப்பியிலிட்டிதை
முன்பு கூறியகுப்பிவாய் மூடியே
மூன்றுசீலை மண்ணது செய்திடே 2

செய்தபின்னொரு சட்டியில்மணலிட்டுச்
சிறந்தகுப்பியைத்தன்னிடை வைத்தபின்
துய்யமண்ணைச்சிறுகவு மேலிட்டுத்
துலங்க ஆறஞ்சுகடிகை தீயெரித்தபின்
பையவேயந்த மருந்தையெடுத்துத்தான்
பகருமிஞ்சிச் சாற்றினிலரைத்திதைச்
செய்யும் பாசிப்பயறளவுண்டைதான்
திருந்தவே நிழலுலர்த்தாயுலர்த்திடே 3

உலர்ந்தபின்னிஞ்சிக் சாற்றினிலோருண்டை
உரைத்தருந்திடிலெண்வகைச் சுரமுமே
பலத்தமாறல் குளிர்பலவெதுப்புடன்
பேசுஞ்சன்னியனைத்து மகன்றிடும்
நலஞ்சிறந்திடும் நவக்கிரகரசமதை
நல்ல ஆகமநூன்முறையாகவே
பலபடச்செய்து கொள்வீருலகிற்
பகருந்திவ்வியமான மருந்திதே. 4

சிவரச குளிகை

ஓதும்லிங்கம்நாற்கடிகை
ஊரப்போட்டு முலைப்பாலில்
மாதேசுத்தியாக்கிய பின்
வளஞ்சேர்சுக்கு நற்பவளம்
ஓதுங்கலையின் கொம்புசிப்பி
முத்தோடுத்திராக்ஷ முடன்
காதுந்திப்பிலி அக்காரக்
காரமிளகுடன்டங்கணமே 1

கனவாதப் பிரேக பற்பங்
காந்த பற்பமிவைசேர்
நினைவாய்ச்சாதிலிங்க முதல்
நிறுத்துச்சரியாயெடை கொண்டு
மனைவாழ்மாதர் முலைப்பாலில்
மகிழ்ந்தே அரைத்துப்பயறளவு
சினவேல் விழியாய் குளிகை பண்ணி
சிறந்தே நிழலிலுலர்த்திடுமே 2

உலர்த்திப்பரணி தனிலடைத்து
ஒதுங்குளிகை ஒன்றதுதான்
நலக்கு முலைப்பால் தனிலுரைத்து
நாவில் தடவிக் கண்டூஷம்
பிலக்கச் செய்து ஓர் குளிகை
பின்னும் இஞ்சிச்சாறருந்த
கலங்குஞ்சன்னி பதிமூன்றும்
கடுகும் சிவரசமிதுவே 3

திரிவிக்கிரம ரசம்

ஆழியில்துயிலு மால் தேவியாதிய ராவிந்து நாபி
தாழ்விலாதெடைதான சேரச்சரி கொண்டு முருங்கைநீரால்
கோதிலாதரைத்து இத்தைக்குப் பியிலிட்டு மூடி
வாழ்புதுப் பாண்டத்திட்டு மறுத்து மேல் சட்டி மூடே 1

மூடியே சீலைமண்ணு மூன்றது செய்து நன்றாய்
நாடியேயிரண்டு சாமம் நல்லெரியிட்டிறக்கி
நீடியநொச்சிச்சாற்றை நெகிழவிட்டரைத்து நேராய்
நாடியே நெல்லுப்போலே நலம்பெறக்குளிகை பண்ணே 2

பண்ணிய குளிகையிரண்டு பருகிடில் நொச்சிச்சாற்றில்
விண்ணெழும் விரைப்புவாதமிகு சன்னியனைத்துமேகும்
மண்மிசையுள் ளோரிந்த மருந்தினையருந்த ரோகந்
திண்ணமதாகத் தீரும் திரிவிக்கிரம ரசமிதாமே. 3

அமிருத சஞ்சீவி

இங்கிலியம் நாபியிரதமொடு கந்தகமும்
நங்கடுகு ரோகணியும் நாடியே—அங்குநிறை
சேரச்சரிகொணடு சிறந்தகரிப்பான் சாற்றில்
சார அரைத்திதனைத் தானுருட்டே. 1

தானே குன்றிபோல் குளிகை தப்பாதுருட்டிநிழலுலர்த்தி
மரனே இஞ்சிச் சாறதனில் மகிழ்ந்தே குளிகையொன்
[றருந்த
ஈனமான வலிவிரைப்பு இசிவு சன்னி பதிமூன்றும்
தேனே அமிருத சஞ்சீவி ரசம்பேர் சொல்லத் தீர்ந்
திடுமே. 2

ஆனந்த பைரவன்

நாவிசூதம் லிங்கமனோசிலை
நல்லகந்தக மரிதாரம் அக்காரச்
சோவிபாளமிருவி வெண்காரமுஞ்
சுத்திபோக்கி நிறவிஷங் கூட்டியே
நாவிநிம்பபழச் சாற்றிலரைசமன்
நோவுதீரும் பயறளவுண்டையால்
ஆவிதன்னை யலையாமல் காத்திடும்
ஆதி ஆனந்தவைரவன் குளிகையே. 1

விரேசனக் குளிகை

சுக்குமூன்று கந்தியிரண்டு சுத்தியான வாளமெட்டு
வொக்குநல்மிளகிரண்டு மொன்றுகாரமொன்று சூதம்
கற்குள் குளிர்ந்த நீர்தனிலரைத் துளுந்துபோல்
மிக்கநற் சலத்திலுண்ண விரேசனம் பிறக்குமே.

விஷ கோடாரி மாத்திரை

தாரஞ்சூதம் சிலையிலிங்கம்
தக்ககந்தி நேர்வாளம்
ஆரவகையொன் றிருகழஞ்சா
யடைவில் கரிய கம்பளியும்
தீரத்துடனேசுட்ட கரித்
திடமா ஈயம் வெண்கழஞ்ச தொக்க
வீரத்தருக்கன் பால் படி கால்
விட்டரைத்துக் குன்றிமட்டே. 1

மட்டே குளிகை மேனிரச
மதனில்கொடுக்க எலிவிஷமுந்
துட்டப் பாம்பு விஷமுடனே
தோஷம் பதின்மூவகையு மறுந்

தட்டாதுனக்குத் துளக்குத்துள்
  வீச்சுதானே விரைப்பு வலியகலும்
கிட்டார் வாய்வு வெல்லத்தில்
  கிளந்து கொடுக்கத்தான் தீரும். 2

தீருஞ்சுக்குக் குடிநீரில்
  தீபன முண்டா மந்தமறும்
பாரும்பால் நெய்யுப்பிவை நேர்
  பார்த்துக் கண்டு கூட்டுவது
கூறுங்காணும் தீய விஷ
  கோடரி குளிகை யிதுவெனவே
பேரும் சொல்வீரிம் மருந்து
  பெரியோர் சொன்ன குறிப்பிதுவே. 3

நீரிழுவுக்கு காரீய உண்டை

காரீயம் பதின் கழஞ்சைக்
  கரண்டிதனில் வைத்துருக்கிப்
பாரீரிரதம் நாற் கழஞ்சு
  பாய்ச்சிக் கொள்ளும் பதருதே
ஈரீர் காந்தஞ் சாதிலிங்கந்
  தானேரொன்றிரு கழஞ்சு
வேரார்த் தெருமை மோரிலரைத்
  துண்டை யிருபத்தாறு செய்யே. 1

செய்தாலுண்டை ஒன்றதனைச்
  சிறந்த மோரிலிருபோது
மிதமாகக் கொள்வீரானு
  லுடனே வா தோற்பவம் நாலும்
வெய்யும் பித்தோற்பவ மாறும்
  விளங்கும் கபமுற்பவம் பத்தும்
நொய்ய பிரமியம் நீர்செறிப்பு
  நொடியில் போமென்றுரையீரே. 2

சுரத்துக்கு

ஒன்றிரத நாத்தமுமொன்றோர் நான்குபாளவிதை
அன்று கடுகுரேரகணியுமாறிளநீர்—ஒன்றதனீ
ரூற்றியரைத்துண்டை பயறெப்பிளநீர் பாலிலிடப்
பேர்த்து மிருதாது சுரம்போமே. 1

மந்த சுரத்திற்கு

வெந்தயங் காற்சீரோமம் விந்துவுடன் மரகதமு
மிந்தவகை நாகேந்தியிர் கழஞ்சு—சந்ததமும்
வெற்றிலையின் சாற்றில் மிளகுபோல் உண்டையிதால்
பற்றறுமே மந்தசுரம் பார்.

கணை சுரத்திற்கு

சொல்லிலவங்க மரத்தோல் மாயக்காய் கொத்த
மல்லி செண்பகப்பூ மதுரமுடன்—நல்லீர
உள்ளிச்சாற்றில் அரைத்து உண்டை முலைப்பால்தனில்
கொள்ள க்கணைசுரத் திற்கு.

நாரசிங்க ரசம்

கரிமுகவனிருசரணகமல மலர்போற்றிக்
  கைவாண நாரசிங்கரசவகையைக்கேண்மின்
பரைவிந்து பொரிகாரம் அரிதாரம்நாபி
  பண்பான கடுகுரோகணி வெள்ளையோடு
லிங்கமானவிந்தவகை யொன்றுகழஞ்சாகவேநீ
  யாகும்கிராம்பொன்றரைக்க வகைகேளாய்
மரீசக்குடிநீரிலரை மற்றைநாளிஞ்சி
  வாகானயேகாரவல்லி யொருநாளே. 1

வல்லியொருநாளரைசம் பீரச்சாற்றில்
  வாகுபெறவேசிறிய பாசிபிரமாணங்
கல்லைசெறித்திடு கடுகுவெந்தநீரதிலேகொள்ளக்
  குடிபோகும்மூன்றுவிதச்சுரமும்
புல்லியதோர் சீதசுரம் மாறலிவையெல்லாம்
  பொருந்த இஞ்சிநீரிலிடத்தோற்ருதே போகும்
மல்லுலவுதென்பொதியமலை முனிவன்வேதம்
  வழுவாதுசெய்த இந்தவாகடமிதாமே 2

சுயமக்கினி

நாலு சூதமனேசிலையிரண்டுநல்ல கந்தகம் நாலிரண்டு
கால்காந்தம் பதினாறுகடியலோக மவையிரெட்டி
ஏலங்குழலாய் குமரிப்பால் இதனிலரைத்து வட்டாக்கித்
தாலந்தன்னிலப்பிவைக்கத்தழலா யெரியுங்கண்டாயே 1

கண்டாயே குவைபிலிகையுடன்
கடியகுன்மம் பாண்டுவுடன்
தொண்டால் செறியாதெடுக்குகின்ற
கொடியகிராணிவயிற்றெரிச்சல்
உண்டால் பொருமல் புளித்தேப்பம்
உதரவலிமுடக்குகாமாலே
விண்டால்சோகை விஷபாகம்
மீளுஞ்சுய மக்கினிதனக்கே. 2

வேறு

சூதம்நாபிலிங்கமனே சிலேதூக்கி
அவ்வெடை கந்தகம் காந்தமும்
போதவெண்கழஞ்சுபொடி யீரெட்டுப்
புகலு கற்றாழைப்பால் விட்டரைத்துமே
மோதுந்தாலப்புறத்தினிலப்பியே
முனிந்த சூரியன் முகத்தினிற் காய்ந்திடில்
நீத மாஞ்சுய மக்கினி யீதென
நிகழ்த்தினுந்தமிழ் மாமுனி காணுமே.

நீர்கடுப்புக்கு

வெண்காரங் கார்காய மிந்துப்புக் காரீயம்
வெள்ளேயுப்பு ரோம முவருப்பு துத்தம்
வெண்கிராம்புகல்மதம் கல்நார் ஒன்றுக்கி ரண்டு
வராகன் கடுச்சேர் குமரிச்சாற்றில்
அத்தண்கார வரைத்துருட்டி லந்தைக்கொட்டைத்
தண்டிரண்டு வராகன் சீனம்பொரி
வெந்நீரிலுண் தெரியிரண்டுருண்டை நீரடைப்புக்கல்லு
மூத்திரக்கிரீசனந் துன்மாங்கிஷமும் போமே.

அப்பிரகக் குளிகை

அப்பிரக பற்பங்காந்தங் காரீயஞ்சூத
மது சேரக்கழஞ்சு நாற்பது தா
னெப்பீரவுரி விரைத்தாளொரு வேருகய
முலந்தஉண்டை மோரிலுண்ண
நிற்கும்நீர் கடுப்புப்பிரமேகம்
நீரின் கழிச்சலிவை யெல்லாம்
நில்லாதெனவே நினேயாதே
நிறை வேலப்பிரகக்குளிகையிதே.

விஷ்ணு சக்கரம்

ஆதிவிந்து தாரம் லிங்கமான சத்தி நாபியுஞ்
சோகிமூலபற்ப முந்துலங்கு காந்தமொடு சிலே
நீதிநீலி நிம்பமரை நெருங்க குன்றியளவிடு
பாதி சத்தியாயிருந்த பாரளந் தோன் சக்கரம். 1

சுக்கு மிளகு திப்பிலியும் சொன்னமருந்து மூன்றுதனை
ஒக்க நறுக்கியுதகம் விட்டுயுலாவிக் காய்ச்சி உண்டையிடில்
பக்கவாத முகசன்னி பத்துங்குதிரை வலி விரைப்புப்
புக்குஞ்சுரங்களி வையெல்லாம் போமே மூன்றுநாட்
[கொள்ளே. 2

ஆனந்த வயிரவன்

வெண் காரந்திரி கடுகு சாதிலிங்கம் சத்தி
விரும்பு பச்சைக்கற்பூரமிது சேரச்சரியாய்ப்
பண்பாகுந்தேசிக்காய்ச் சாறுதனிலே யரைத்துப்
பகர் குன்றிபோல் குளிகை செய்து நிழலுலர்த்தி
நண்பாகச் சர்க்கரை யிலோர் குளிகை தன்னை
நற்புளிப்புக் கசப்பகற்றி யருந்திடில் சன்னி
கண்காண மருட்டிவிக்குஞ் சாடு வலி பித்தங்
கடிந்தேகுமானந்த வயிரவன் பேர் காணே.

வாதராக்ஷசன்

பச்சை நாபி சூதம் நற்றாம்பிரம்
பகருங்கந்தகம் வெண்காரமித்துடன்,
மெச்ச அமுர்தவல்லிக்கி யாழத்தில்
விரும்பி நோக நாளரைத்தபின்
இச்சையாகிய சாரணை வேர்த்தழை
இடித்து வெந்த கியாழத்தரைத்திடு
மிச்சமாகிய கொடிவேலிச்சாறதை
விட்டரைத்திடு பருவமதாகவே.

பருவமாக யிம்மூன்றரைப்புந்தான்
பைய மூன்றுநாளு மரைத்தபின்
பெரிய குன்றிப் பிரமாணங் குளிகைதா
னமுந்தச் செய்து நிழலிலுலர்த்தியே

பெருகும் நொச்சி யிஞ்சி துளசிகள்
பேசுமிந்தச் சாறென்றில் தானிட
மருவு சன்னி சுரம் வலி வாதமு
மலங்கிப் போய் விடும் வாதராக்ஷதமிதே.

பூபதி

சொல்லு நாபி கந்தக மாலாம் பெண்டிற்
சூதம் நாலு மருந்தும் சரியெடை
நல்லதாகவே தனித்தனிச்சுத்தி தானயம் பெறச்
செய்து சிறுபுள்ளடிச்சாற்றதை
மெல்ல விட்டரை சுண்டைக்காயளவிலே
விரும்பியே குளிகை பிடித்து நிழ
லிலேயுலர்த்தி இதுதனை யெடுத்துச்
செய்யும் வகையது கேளுமே. 1

வாய்குவிந்திடும் பீங்கான் பானையில்
வைத்து இந்தக் குளிகை யனைத்துமே
தூயமாக் கல்லுக் கொண்டிந்தக் குப்பிவாய்த்
துலங்கமூடிச் சீலைமண்ணேழுதான்
நேயமாகச் செய்து உலர்த்தியே
நேர்மையாய் ஒருபானையில் பருமண
லாய்நாலு மரக்காலளந்திட்டு
யதனடுவில் குப்பியை வைத்திடே. 2

வைத்துப் பானைவாய் சட்டியால் மூடியே
வழங்குமியக்க சீலைமண் செய்துதான்
உற்ற அடுப்பினிலேற்றி எரியிட்டு
ஓதும் நல்ல கமலாக்கினியதாய்
மெத்த ஐந்துசாமம் யெரியிட்டு
மறுத்திடாதிதைச் சமபாகம் பண்ணியே. 3

இடுமெரியதை மாற்றியோர் நாளது
இருந்து தன்னுறலானபின்
நடுவிருந்திடு பரணி மருந்தை
நலம்பெற மெள்ள எடுத்திந்த மருந்துடன்

வடுவகற்றிடுஞ் சூத்திரனுபியை
மறுத்திடாது ஒருகாசெடை நிறுத்துத்தான்
கடுமணல் படுமருந்தது தன்னிலே
காசுநாலு கூட்டி யரைத்திடே. 4

அரையுமந்தப் புள்ளடிச் சாற்றினல்
அழுந்தவே குன்றிபோலக் குளிகை
விரையவேசெய் நிழலுலர்த்தியே
விரும்பும் நல்ல பரணியிலடைத்திதை
வரையிலுள்ள தோராத்திரசச் சாற்றில்
வகுத்து நல்லனுபானத்திட்டிடத்
தரையிலுள்ள சுரஞ்சன்னி வலிப்புடன்
சர்வரோகமும் தீர்க்கும் பூபதியே. 5

மகா பூபதி

தாம்பிர பற்பம் சூதம் சத்தி இம்மருந்துமூன்று
நாம்பயில் கழஞ்சோரொன்று நாற்கழஞ்சாகக்கொண்டு
தேம்பியோர் கழஞ்சுநாபி சேரவே ஒன்ருய்க்கூட்டி
ஓம்பிய செறுப்படிச்சாறூத்தியே அரைத்திடாயே. 1

ஊத்தியே அரைத்தபின்பு உருட்டியே குளிகையாக
நேர்த்தியாய் நிழலுலர்த்தி நேசமாங் குப்பிதன்னில்
சேர்த்திது நிறையவிட்டுச் சிறியவாய் வளப்பக்கல்லால்
போற்றிய குப்பிவாயைப் பொருந்தவே மூடிடாயே. 2

மூடியே சீலைமண்ணு மூன்றது செய்துலர்த்தி
நாடியோரதனில் நடுவைத்துப் பருமணலைக்
கூடவே சுத்தியிட்டுக் கொஞ்சமதாகத்தானே
தேடிய வடுப்பிலேத்தித்தியது எரித்திடாயே 3

எரித்திடுங்கடிகைபத்து எரிந்தபின் பாறவைத்து
உரைத்திடு மருந்தெடுத்து வோதுமோர் கழஞ்சுநாபி
திருத்தமாய்ச் சுத்திபண்ணிச் சேர்த்திந்த மருந்தினேடு
தரித்ததோர் சிறுபுள்ளடியின் சாறுவிட்டரைத்
[திடாயே. 4

சாறுவிட்டரைத்த உண்டைதானுளுந்தளவாய்ப் பண்ணிக்
கூறிய நிழலுலர்த்திக் குப்பியிலடைத்து வைத்துத்
தேறிடுமிஞ்சிச்சாற்றில் திருந்தவோர் குளிகைகொள்ளில்
மீறிய சன்னிவாதம் விரைப்புடன் சுரமும்போமே. 5

போய்விடுஞ்சத்தி வேர்வை புலம்பிடும் பித்தமாறல்
காயுமுள்சுரங்கள் காந்தல் கனத்ததோர் திரக்ஷிவாய்வுத்
தீயதோர் கொடியரோகந் தீர்ந்திடு மகா பூபதியை
ஆயநூல் வேதஞ்சொன்ன அதன்படி செய்து
[கொள்ளே. 6

கிராணிக்கு

வெள்ளைக்குந்திருக்கங் கிராம்புகாய பத்திரி
மிக்க மத்து வித்துடனே கார்வகை
தள்ளையோரொன்ருறு கழஞ்சதாய்
தான்மரீசம் பதின்கழஞ்ச தொக்கவே
விள்ளையோ விஷமாண்டுடனே எறுலிங்கமிக்க
வுத்தமதாளி யுந்தும்பையுஞ் சாறரைத்து
உள்ளநல்லெண்ணெய் கால்படி கூட்டியேசுவறி
வெந்ததில் தம்பலச்சாறு விட்டரைத்துள்ளே 1

உள்ளபடி யேதுவரையளவுண்டை செய்தால்
[மண்டலங்கொள்
தள்ளாக்கிராணி சீக்கிராணி தானேயெரிப்பு உள்ளுருக்கி
உள்காந்தல்செல் போலரிக்குமெலும்புருக்கி தீரு
[மிருவகைப் பிரமியமும்
தள்ளாதெனவுமுள்ளாதே தரியாதோடும்
[திண்ணமிதே. 2

சாதிவசுவாசி மாத்திரை

சாதிக்காயோடு வசுவாசி
சார்ந்தகிராம்புடன் சாதிலிங்கம்
ஊசிக்காந்தம் குராசானி ஓமம்
மத்துவித்துடனெண்கழஞ்சு

வேதிமத்தஞ்சாற்றி லரைத்
துண்டைபயறளவே
வேறுயனுப்பானத்திலேயிட
ஆதியறிய நீரழிவு
அதிக மூலக்கடுப்புமிக்க
வாதபித்த வயிற்றுவலி
மாறநல்ல மருந்திதுவே.

மதனகாமேசுரம்

ஆகத்திரிசுகந்தமவின் மருந்தமுக்குருவேர்
வேகமாமத்துக்கஞ்சாவிதை சமன்கொரக்கர்ச்சாற்றில்
பாகமாங்கடலைபோலப்பாலுடன் பருகுவீரால் தேகமும்திடம
தாகுஞ் சேர்ந்துமாதரோடனுபவிக்க வலுவதாம் மதனகாமே
[சுரமே.

காசகுலாந்தகன்

அரிதாரஞ்சிலைநாபி கடுகுலிங்கம் காரமாக
வகைக்கொருகழஞ்சு இஞ்சிச்சாற்றில் சாம
முரிதாகுமேனிச்சாற்றில் சாமமரைத்தே
உண்டை உளுந்தளவிதன்பேர் காசகுலாந்தகன்தா
னெரியசீர்வறுபொடியோருண்டையிடு
தேனிலீளி சுரங்காச மிவைதீரும் விக்கல் தீரும்
பரிவாக இஞ்சிதேன்திப்பிலியில் கொடுக்க
பழுங்காய்ச்சல்முறைச்சுரங்கள் சன்னிபறந்திடுமே.

தாளகேசுரம்

கந்திரண்டு கழஞ்சுரசம் கழஞ்சுயெவட்சாரம்
கழஞ்சு மூன்றரிதாரமைங்கழஞ்சு சுக்கு
வந்திவருமிளகுதிப்பிலி பொரிகாரங்கோட்டமான
சித்திரமூலமஞ்சள் நாபியிங்குப் போடே
வந்தகார்த்திகைக்கிழங்கு பொன்முசுட்டை வேரும்
வகையொன்றுக்கோர்கழஞ்சுயரை கையான் சாற்றில்,
சொந்தவுண்டைகுன்றியளவிஞ்சி தேனருந்தச்
சுரங்காசதோஷம்போம் தாளகேசுரமே.

வங்கார சஞ்சீவி மாத்திரை

வங்காரசஞ்சீவிவைக்கும் விதங்களதனைச்
சிங்காரமானதிருவேகேள்—மங்காத
செம்பிரும்பு பித்தளையுஞ் சேர்கஞ்சவட்டுருக்கு
அம்புவிமண்காய்ச்சுமமயமுங்—கொம்பனையீ
ராறுவகைலோகமரமிட்டு ராவியினிக்
கூறுஞ்சமனெடையாய்க் கூட்டியபின்—வீறுடனே
வெண்காரஞ்சூதமிகுத்த மனோ சிலையு
மங்கரிதார மதிகாந்தம்—பாங்காய்
வகைக்கோர் பலமாக வாங்கி மகிழ்ந்து
கந்தியாறு பலம் வாங்குசேர்—வெள்ளைக்
குமரிச்சாறுதனை விட்டரைத்து மூன்று நாளத்
தண்ணீரிலரைத்து அடையாய்த்தான் பிடித்து—வெள்ளிய [தோர்
சட்டியிலிட்டுத் தயவுடனே தானுமொரு
சட்டி கொண்டு மூடியே சாணிமண் செய் —சட்டிதனைச்
சூட்டடுப்பிலேத்தித்துய்ய கமலாக்கினியாய்
நாட்டமுடன் மூன்று நாளாறுமல்—நாட்டமுடன்
பாரறிய நாலானுள் பார்த்தெடுத்துப் பத்திரமாய்ச்
சேருமருந்ததனைச் செப்பக்கேள்—நல்லாவின்
கோமயத்தில் நாபியொரு பலத்தைச் சொல்லாமல்
தானே சுவர வைத்த பின்பு சுகநாபி—தன்னுடனே
யத்தியென்றுந் திப்பலியோடம் மூலம்
மொத்திகையாய் வகைக்கோர் பலமாகப்—பாங்காய்
மூன்றரையு மொன்றுகப் பாவித்துத் தாங்காணும்
வெள்ளுள்ளிச்சாறுதனை விட்டரைத்து முன்கூட்டு— [விள்ளரிய
செந்தூரம் விட்டரைத்து வொள்ளியதோர்குன்றிப்
பிரமாணம் குளிகைதனையுருட்டி—ஒன்றாய்
நிழலுலர்த்தி உள்ளித்தயிலத்தில் ஒருண்டை
தான்கொடுத்தால் தள்ளு சன்னி பதினெட்டும்—தான்தீரும்
கள்ளமில்லா மாவிலிங்கைச்சாற்றி
லரைமண்டலந்தான் கொண்டக்கால்—ஏகுமேவாத

மெண்பதுவுமாவுச மாங்குட்டம் பதினெட்டுகுறைநோவு
வண்டுகடி சிட்டறவேதீருமெனச்—செப்பு
கிட்டாத காணுக்கடியும் கபால
குட்டம் வங்கு சொறி சிரங்கு படர்தாமரை—குட்டங்
கிரந்தி முதலானதும் போங்கேளீர்
அறிந்திட்டே கொம்மட்டிக்காய்ச்சாற்றில்—ஆறுண்டை
தான் கொடுத்தாலம்மட்டோ வாயுவறுமகன்று
தாழ்வில்லா அட்டகுன்மம் பிலீகை—நீரக்கவுசியுடன்
சட்டமுடன் தீருமெனத்தப்பாது திட்டமுள்ள
சஞ்சீவி வங்கார சஞ்சீவி நங்காய் கேள் நயந்து.

குளிர் காய்ச்சலுக்கு

அடுக்கரி தாரங் கழஞ்சுடனே யனலாஞ் சுண்ணம்பதினளவு
கடுத்த வேலிச்சாறுவிட்டுக்கதிக்க வரைத்து மிளகளவு
எடுத்த சுக்குத் தேரதனை யிதமாங்குடி நீரதிலோருண்டை
கொடுக்க நடுக்குஞ்சுரங்களெல்லாம் குலாவிக்கொண்டே
[போய்விடுமே.

மருந்திட்டுக்கு

கண்டங்கத்தரி கரந்தை பொன்னுவரை
சுண்டைக்காயளவுண்டை விழுங்கிட
வண்டக்கார் குழலார் செய்த,வஞ்சனை
உண்டக்கானினு மோடியொளிக்குமே.

சூடாமணி குளிகை

கொட்டமொடு சாதிலிங்கம் பொரிகாரம் நாபி
குன்றி மணியலகை சன்னி நாயகந்திப்பிலியு
மட்டு மலர் பூனுதம் வகையுடனே சேர்த்து
வகைக்கு நால் மிளகு தன்னை வணிதமாய்க்கூட்டு
இட்டமுறு மடமயிலே யிஞ்சி நீரதனி
லிதமாக ஏழுரைப்பு வரைத்த வதன் பின்பு
வட்டமுலை மாதே கேள் குன்றிமணி போலே
வடிவாக வுருட்டியபின் வகையதனைக்கேளே

கேளீரே சன்னி பதின்மூன்று வாதங்
கெடியான வலியைந்து சுரமும் வாய்வும்
கேளான முக்கோணல் மாறல் குத்துடனே
வேர்வை மற்றுங் குணமா மென்னே
தாழானயிஞ்சி நீர்முலைப்பாலில் தேனில்
தயவான சுக்கு நீர் வெந்நீரிலாமே
வேளான பிராந்தியற்கு வேசித்த சூடா
மணியின் குளிகைதானே (2)

உள்ளியுண்டை

உள்ளியுஞ் சோமனுப்பு முயர்ந்ததோர் லிங்கஞ்சூதம்
வெள்ளி வெண் காரங்காந்த மிளகு திப்பிலியுங் கூட்டிக்
கள்ளியின் நொச்சிச்சாற்றில் உண்டைசெய் குன்றிபோலக்
கொள்ளிலே குன்மமெட்டுங் குடகரி யேரிப்போமே

வீரவிக்கிரம நாத விசயபூபதி

பூமாதுரையும் புவியோர்பிணி தீரப்
பார்மேவுசெந்தமிழ்நூல் பார்த்துணர்ந்து—நாமமிகு
மாணிக்கமுத்துமஞேசிலை வெண்கார
மாணிப்பவழ மரியதிராய்ப்—பேணியிடு
காந்தசெந்தூரம் படிகங்கற்கடகசிங்கி
வங்கசெந்தூரம் நிமிளேசேரவே—காந்தமுடன்
கந்தகமோரஞ்சனக்கல்கேள் சாத்திரபேதிரச
செந்தூரம் வெண்கலஞ்சீனக்கார—முந்து
லோகப்பொடி பித்தளையுருக்காமல் லோக செந்தூரஞ்
செப்புகின்ற தாம்பிரசெந்தூர—மொப்புடனே
பத்துவராகன் பரிவாக ஓர்வகைக்குச்
சித்தமுடனிறுத்துத் தீர்க்கமாய்—முத்திபெறச்
சேரப்பொடியாக்கிச்செறுப்படியின் சாறுவிட்டு
நேர ஒருசாமம் நீயரைத்துச்—சார்
குளிர்தாமரைச்சாற்றில் கொண்டிரண்டு சாமம்
தெளிவாகவேயரைத்திடக்—கேளிதமாகத்
தான் வேப்பம்பட்டையினிய சாற்றிலொரு
சாமமரைத்து தேவாய்பாய வில்லைதட்டி—ஏலவே
கூனிவாய்ந்தசட்டிதனிலிட்டு மறுசட்டிகொண்டு திடமாய்,

சீலமண்ணேழு செய்குவாய்—இட்டமுடன்
ஆழக்குழிவெட்டி அதனிலெருவடுக்கி
மீளமருந்தை அதின்மேல்வைத்துப்—பாளையமாய்
மேலுமெருவடுக்கி மிக்க உமிபோட்டு
மேலுமுயரமண் பூசிமெய்ப்பாகச்—சால
வெளிவிட்டு நற்றிசையில் வெந்தீயிட்டே மூட்டி
யொளியிட்ட நாலாநாள் உற்று—வெளியில்வைத்து
நாபியொடு திப்பிலியும் நற்திப்பிலி மூலமும்
மேவும்வகைக்கேதான் விதமாகத்—தாவமிது
பத்துவராகனெடை பண்பாகக் கோமயத்தில்
சுத்தியெனவேயொருநாள் தோய்ந்தூறி—எத்தாக
ஆறியபின்னெடுத்தங்குற்ற செருப்படியின்
சாறதனைவிட்டு நன்றாய்த்தானரைத்து—மீறு
மருந்துடனேபோட்டு வளமாய்ப் பிசறித்
திருந்தவுஞ்சாறுவிட்டுத் தேய்த்து—விரும்பியொரு
குன்றிப்பிரமாணம் குளிகைபண்ணித்
தின்னவனுபானஞ் செப்பக்கேள்—தேனில்
திரிகடுகு செய்யயிஞ்சிசர்க்கரை கானில்
கருப்புக்கட்டிதனில் லெந்தவியாதிக்—?
காமேனுமனுபானங்கள் கண்டு
சிந்தைமகிழ்ந்தே கொடுக்கத் தீரும்—சந்ததமும்
வாதமோரொன்பதுடன் வாட்டுகின்றபித்தமது
மெத்தநூற்றிருபத்தெட்டுடனே—சேதமுறு
சேத்துமமுந்தொண்ணூற்ருறுஞ் சேர்ந்திடுஞ் சன்னி
யேற்ற பதினெட்டும்—சோரமாங்
குட்டு பதினெட்டும் குடைச்சலொடு விப்புருதி
துட்டசுரமொன்பதும்தான் தொல்லுலகில்—முட்டுகின்ற
மூலம்பன்னிரண்டும் முதுதிமிரந்தான் தஞ்சு
சூலையோரெண்பதுவுந் தோன்றுது—மூலமா
மந்திரவாயுவறும் மூத்திரக்கிரீச்சனமறும்
இந்த நோயெல்லாமெளிதாமே—சிந்தனையொன்
றில்லை யெனவே இயல்முனிவர் தானுரைத்தார்
நல்லதோர் பத்தியங்கள் நண்பாகச்—சொல்வதுகேள்
அந்தந்தநோய் கண்டதுக்காமென வறிந்து
சிந்துவென வேப்பதனைச் சேராதே—யந்தமுறும்
ஆவின்பால் நெய்துவரையாகும் வகைக்கன்புடனே

பாவனையாகச் செய்வாய் பரிவாகப்—பூவில்
விசையமுறு வெல்வீர் விக்கிரமநாத
விசைய பூபதி யெனவே மிக்காய்—நிசமாகச்
சொல்லித்திரை புகழ்சூழ் புவியோர் நோயறிந்து
வல்லபடி செய்வாய் மகிழ்ந்து.

இராம பாணம்

இரதமிளகு வலம்புரிக்காயிருகுந் திருக்கந்துருசு
வெளிச்சப்பிசின் மஞ்சள் காந்தம் சொல்சண்பகப்பூ
மருவிடுகோட்டஞ் சிறுநாகப்பூ அரிதாரம் லிங்க
மிருகழஞ்சுப்பு மறுகழஞ்சாக எடுத்துக்கொண்டே, 1

கொண்டபுளிகள் இருபத்தினலிவை கூட்டிரசம்
விண்டபருத்தி கரிப்பான் நல்வெற்றிலைச்சாறு விட்டு
கண்டதொவ் வொன்றுக்கோர் நாழிகை சுத்திசெய்வார்
[குறுவை
பிண்டியுழக்கில் கறுக்குமளவும் பிடித்திடியே. 2

இடித்திளநீர் விட்டொருநாழிகையரைத் தேயிந்தலிங்கந்
தடித்த பனைவெல்லமுமிட்டு மூன்றரை நாழிகைதான்
பொடிக்க வரைத்தரிதாரத்தைச் சுண்ணப்புனலிலவித்திடு
வடித்திடுதுத்தம் தாளிச்சாறு நன்ருய் விட்டரைத்தே
[பின்னே. 3

பின்னும் வசளையிலைதுத்தம் பொரித்ததை பின்னிற்கும்நீர்
தன்னுல் திராட்சப்பழத்தாலும் நற்பஞ்சதாரையினுல்
பொன்னுல் பாலொடு சீதேவிசாற்றில் புரிந்தரைத்துத்
துன்னுத சட்டுவந்தீமேலிருக்கத் துருசுவைத்தே. 4

வைத்துப் பதினெருக்காற் கோமியங்கொண்டுவைசுறுக்கு
மெத்த விரண்டுழக்காண நீருமிரண்டுபடி
வித்தக்குழிசட்டியில் வைவேடுகட்டி மென்காந்தம் வைத்தே
அத்தைப்புடவையில் வைமூடி மண்செய்தங்கனலெரியே. 5

எரிவிட்டெடுத்ததெக் கோமயத்தாற் சுறுக்கேத்திப்பிறகு
மரிவிட்டசாறிலரை மருந்துயாவுமருவ யிடித்து
ஒருபிடி நொச்சிக்கொழுந்தோ டொருபிடியாங் கரிப்பான்
அருகொழுந்துந்தரு நெற்பிண்டி காற்படிதந்திடித்தே. 6

தந்த சுண்டை பசுங்காயளவோரோர்தரத்துக்குநீர்
லிந்தளவாகவோர் மூன்றரைநாள் கொள்ளுநான்குண்டையு
முந்திடுமோரன்னமுண்டே மருந்துண்ண மூன்றரைநாள்
பிந்திவெந்நீர் விடப்பத்தாமணக்கெண்ணெய்
[பின்குளியே. 7

ஏயாமருந்தொரு மாதமிருந்து கெட்டால்
மாயக்கொழிஞ்சியிரத மோராமூரக்கு வைத்துமுன்சா
ராயத்தொன்றிலரைத்துக் கொடுக்க வதிரக்கிரந்தி
தீயான குட்டம்பதகடி சூலைபுண் தீர்ந்திடுமே. 8

தீரும்புரைகள் பவுத்திரமோரிற்புளியில் தின்ன
வாரும்படி பத்தியமிச்சையாகுமவப்பத்தியம்
நாரிபுணர்ச்சி தவிர மருந்துக்கு நாமமெண்ணில்
சீரியராமன்கணைப் பேரிதற்குத் தெரிந்திடிலே 9

சிந்தாமணி குளிகை

ஆதியானருளாலவுஷதத்தினுல் முறையா
யோது சிந்தாமணி குளிகை யுரைக்கக்கேள்—நீதியுடன்
நாபிநிர்விஷமும் நல்லயிரதமுடன்
தாவியதோர் தாளகமுஞ்சாதிலிங்கம்—தக்கோலஞ்
சத்த வசுவாசி தாம்பிர பற்பமுடன்
முத்துவெள்ளி பொன்பவழமோக—விரத்தி
னஞ்சேர் வகையொன்று சிறப்பாகவே
நிறுத்துப் பாதிமதிசூடுபார—நந்தி
வட்டத்தின் சாறுடனே வளமாகவே யரைத்து
வைத்த சிறுபயறுபோலுருட்டித்—திட்டமுடன்
நிழலிலுலர்த்தி நெல்லதனினுள்வைத்து அவித்துக்
கட்டாகத்தானெடுத்துக் காரணமாய்—வந்ததொரு
நோயை மாற்றிவிக்கும் வகைகேளீர் பூனுகங்
கலைக்கொம்பு முசுறுமுட்டை—சேரவரைத்துத்
திகட்டாக்குளிகையொன்று ஆதிபரன் சோதிபரனருளாலே
இஞ்சிநீர்தேன் முலைப்பாலிதுகளிலே
கொடுக்க வந்தச்சன்னிவாத சுரமாறும்

விஷ்ணு சக்கரம்

அரியாளி சூதமும் நாபிகந்தகமுமான
சவுக்காரம் யவட்சாரம் நவாசாரம்
பொரிகார மிந்துப்புச் சமபாகங்கூட்டியே
பொருந்திய ஆமத்திலைச் சாற்றில் ஒருசாமமரைத்துப்
பரிவானசொண்டானதினுள்ளேவைத்துப் பதருமல்
நீலவண்ணம் புகைக்காணவெடுத்து
வுரியதொரு வெள்ளாட்டின் பித்து மீன் பித்து
முட்கலந்து கொள்ளுவது உளுந்தளவுதானே. 1

வேறு

மருவுநாபிமனோசிலை சூதமும் வாய்த்தகாந்த நற்கந்தக
[மோரடை
சருவுரோகணி சார்புடையிந்துவுங் தக்கதிப்பிலி சுக்குமரீசமும்
தருவுநேரெடைரண்டு கொளுஞ்சியின் சாறுதன்னில்
[லரைத்திடு சக்கரம்
பொருவிதுண்டை பயறளவாகவே போற்றுந் தேனிஞ்சிச்
[சாற்றிலுரைத்திடே, 1

இடுகபாலவலி பீனிசத்துடனே பித்தமசித்திடு சன்னியும்
முடுகுகுன்ம மகோதரமூர்ச்சையுமுத்துஞ் சோகைகளதிசாரங்
கடுவெனத்திரண்டு மறைந்தெழுங்காச சுவாசவியாதிமறுத்
திடுந்திடனிதாகுமைவண்ணனிருப்பொடு செங்கயத்தோடு
[சக்கரமாமிதே. 2

ரசதாம்பிர குளிகை

பொன்னே ரசதாம்பிர பொற்குளிகைகூட்டுதற்கு
மின்னே விபரம் விளம்பக்கேள்—முன்னே
இரதமொடு கந்தகமிசை நாபிரோகணியும்
விரகமுறுஞ் சாதிலிங்கமீர்மனையில்—நேர்வாள
மெண்கழஞ்சு சுத்திசெய்த தாம்பிரத்தைத்
துங்கமுடனோர்பலங் கொண்—டத்தனையுங்
கையானீராலரைத்துப் பத்தியாய்
மிதிபாகல் சாறொருநாள்—விட்டரைத்து

மெல்ல வநிமதியாக் குன்றிமணியள்வாயிதை
ஆதிபெற வுண்டைசெய்து வொண்ணிழலிலே
உலர்த்திப் பிரியமுடனேர்குளிகை
பெய்வளையீர் திரிகடுகின் பொடியொடு தேனில் புரட்டிப்
பருகிடில் கடிதான அட்டகுன்மங்
கோரவாதமுடல்நோயும் பிலீகையுடன்கவிசை
சார்வில்லாயெண்பது வாதமிளைப்பிருமல்
சிலேற்பனம் போமுந்தாதுள மாந்தையுட் சுரம்
போமின் பரவுதாகங்காமாலை நீரடைப்பும்
போமிப்படியாமிஞ்சியதின் சாற்றிலிட
வலி சுரங் குளிர்காய்ச்சல் மாறிவிடுந்துவி
மாறல் தொட்டதோர் சதுமாறற்—பொன்னனையீர்
பேரான சுக்குக்கியாழமதில் பாகாயருந்திடுகிலச்
சத்தும் வயத்துத்திருஷ்டி தோஷமுதலித்தனையும்
ஏகுமே பானுவைக்கண்டபனிபோல்
அகலுமேஞானமுனி சொன்னர் நயந்து

சுரத்துக்கு

வெள்ளை மலாக்காவுடனேமிக்க கோரேசனையு
முள்ள சம்பீரச்சாற்று லுண்டைசெய்து—தள்ளாது
கோதைமுலைப்பாலிலிடக் கோபித்த
பித்தசுரந் தீருமெனச்செப்பு.

வேறு

துத்தமிரண்டொன்று வெள்ளைசுத்தியறச்செய்திதனை
மத்திலைநீர் விட்டரைத்து வாய்த்தஉண்டை—சத்தியமாய்
தேனிஞ்சிச் சர்க்கரையில் செய்ய பனைவெல்லம் அதில்
ஆனதிரிசுரமுமாறும்,

சஞ்சிவிமாத்திரை

செய்யடாசகடன் கோபுரத்தில் திருந்துஞ்சிரசு முக்கடுகு
பொய்யாமதனைப் பொது மறைவன் பொறியில் பொறிசந்த
[னக்கிரகங்
கையோயாம லொருசாமங் கடுகுனுதி முதச்சாற்றில்
அய்யா சிறுபயறுண்டைதன்னைஐந்து தினத்தில் சஞ்சீவி

சஞ்சீவி தன்னிலப்பாரிசவாதம் சன்னியுடன்
வஞ்சானகய ரோகம் வாத சூலைவரட்சி குன்ம
மிஞ்சும் பயித்தியம் மேகவெட்டைவெதுப்பு சத்திகுன்ம
மஞ்சி யோடிப் போகு மென கத்தி முனிவருரைத்தாரே

இதற்கு விவரம்:—தாரம், லிங்கம், நாபி, காரம் ஆகவகைக்குச் சரியிடை.

சூலைக்கு

சுக்கிருபலமதில் சோமனுப்புடன்
தக்கவெள்ளுள்ளி வசம்பு காயமு
மிக்கதோர் வகைக்கி தோர்பலங்கள் சூட்சமாய்
மிக்கவேயிடித்தரை முருங்கைசாற்றிலே. 1

சாற்றரை சுண்டைக்காய் தண்டிமாத்திரை
போற்றியநுகர் விலாப் பொருமல் மாற்றிய
மாற்றிய சூலைநோய் அனைத்தும் தணித்திடும்
நீற்றியசுரமும் பால் நெய்யு முப்பு மாகுமே 2

கிராணிக்கு

அத்தி காந்தமதி விடயமபின்கிராம்பு சாதிக்காய்
ஒத்தகடுகு திரிகடுகு ஓமங்காய மிந்துப்புச்
சித்திர மூலிச்சாற்றரைத்து தேற்றுனளவு உண்டைசெய்து
பற்று மேதித்தயிரிலிடப் பதறியோடுங்கிராணியிதே.

சுரக்கிராணிக்கு

சாதிலிங்கம் விளதுடி சாதிக்காய்,
சிறுநாகப்பூவிடைய முங்காவி
மேவியகஞ்சாவிதைசுக்குக் கலந்துடன்
கையான்சாற்றிலரைத்துத்
தாவியோருண்டை சிறுபயறளவதாய்த்
தரிக்குந்தேனில் நருக்கியுகந்திட
மேவுகின்ற கழிச்சல்குளிர்சுரம்
விட்டுப்போகுங் கிராணிகபாடமே.

கிராணிக்கு

த்ராளீசபத்திரிகழற்சி விதை கஞ்சாத்
தக்க ஊமத்தம்விதை பத்திரிகிராம்பு
மேலானதிப்பிலிகுரோசானி ஓமம்
வில்லைப்பழத்திேைடு நல்லவதிவிடயம்
சாலவே சீரகம்பேய்முசுட்டை யிருவேலி
தக்க ஓமம்பெருமரத்தின் பட்டை சாதிக்காய்
கோலமாதளையபின் வகைக்கொரு
கழஞ்சாய்க் கூட்டிய லிங்கமும் இரண்டுகழஞ்சாமே. 1

அண்டவே பதமாக வறுத்துக் கொண்டு
மத்திவேர் நீரைவார்த்தரைத்துலர்த்திக்
கொண்டயிஞ்சி தேன்தயிரில் பருத்திக்காய்நீரில்
கொடுக்கவே அதிசாரம் வாயுகிராணி
மண்டிய வற்ருதவாய்வு மூலக்கடுப்பு
வயிற்றுநோய் வயிற்றுக்கடுப்புயிவைகள் தீரும்
பண்டுசொன்னநாளை யென்பாணுயேனெனப்
பகர்ந்திட்டாரகத்தியரும் பாரிலுள்ளோர்க்கே. 2

வேறு

நாபியுடன்திரிகடுகு நல்லலிங்கமதிவிடய
மேவியிதனைச்சரி கூட்டி விளங்கிய நிம்பஞ்சாற்றரைத்துத்
தாவுமிஞ்சிசாறதனில் தானேகொள்ளவல்வீராய்ப்
பூவிலுள்ளகிராணியெல்லாம் போமுண்மைப்புகலிதுவே

சுரத்துக்கு

வெள்ளைமிளகுதான்சாதிலிங்கம் வெண்காரஞ்
சுக்குவெள்ளைப்பாஷாணம் பின்பலித
முள்ளகௌரி நேர்வாளந்துத்தம் பரவியதிப்பிலி
குருவிகடுக்காய்தான்றிய முகுநொச்சியிலை
உள்ளிசீரம் பொன்னரிதாரம் நிம்பஞ்சாற்றில்
சேர்த்துவொளியுடனே மிளகளவு
கொள்ளத் தானேயுண்டான சுரங்கள்
சன்னியோடிப்போமே.

வேறு

திப்பலி சாதிக்காயுஞ் சீர்பச்சை நாபி சூதம்
ஒப்பமாங்கந்தகத்தோடொரு மிக்கச்சமனுய்க் கூட்டித்
தப்பில்லாயிஞ்சிச்சாற்றில் தானரைத்துண்டாயாகில்
வெப்பில்மாசூலை குன்மம் விரைந்து போம்விளம்பினேமே.

நாவுக்கினியான் பாதாங்குசக் குளிகை

நாவுக்கினியானொருகழஞ்சு நல்லசோமனிருகழஞ்சு
நாறும்நெல்லிக்கந்தகம் நல்லசவுக்காரமிவைதானுற் கழஞ்சு
பச்சைக்கிளியினிறகதுவும் பருத்தமணியிவைநாற்கழஞ்சு
நேமத்துடனே நாபிகௌரி நேரொக்கி ரண்டுமீரரையாகு
மிதனில்செவ்வாலனென்பது பொடியதாக்கி
அளவாய்ச்சட்டிதனிலுறுபுடமதனுல்
மரமாமெலுமிச்சம்பழச்சாற்றில் வருந்தியரைத்து
[மருந்துதன்னைக்
கடலையது போலுண்டை சமைத்து மருந்து பரணி
[தனிலடைத்து
ஒருண்டைப்பனைவெல்லம் சர்க்கரைதேனிஞ்சிதனில்கொள்ள
சூலைகாசம்போம் தூங்குங்காமாலை வெண்ணெய்சலக்கோவை
ஆருப்பாண்டுரோகமுடன் சொல்லுங்கவிசை பிலீகை
இவையெல்லாம்மாறுங்காணுமிம்மருந்து தின்ருல்
மாருதென்றுமனஞ் சஞ்சலிக்க வேண்டாமே.

வேறு

விண்டுவின்பாரியும் வேரியிடுநாபியும்
கண்டிடுஞ்சூதமுங் காந்தமனேசிலை
ஒண்கடுகுரோகணியுமொக்கவைச்சரி
கொண்டு சம்பீரநீரதால் தானு மாட்டிடே 1

ஆட்டிடு மாடமளவதுருட்டியே
ஊட்டிடு மங்கையே யுனதுபாலினில்
ஏட்டிடுவிதிமுறை யெண்ணெண் சுரமும்
நாட்டினிலே யில்லை நந்தியுரைத்ததே. 2

வேறு

இரதந்தகர மெவட்சாரங்கரிய போளங்
கற்கடகசிங்கி அசமதாகத்துடனரிதாரந்

தசையுருப்பண்ணுஞ் சத்தியவட்சார
மப்பிரேகமதிநவசார மவிப்புகழ் தரிக்கும்
விரிவெண்கார முற்றநோய் தீர்க்குமூமத்தம்
விரையுங் கற்றவாரியுங் கார்த்திகைக் கிழங்கும்
நலம்பெற வளர்ந்த நன்னாரிவேரும்
நிலம்பெற வளர்ந்த நிலப்பனைக் கிழங்கும்
திருவுற வளர்ந்த சித்திரமூலியும்
பெருக்கவளர்ந்த பேய்ப்புடோலும்
வேப்பந்துளிரும் விரிநொச்சி வேருமாப்
பெரும்புகழ் சேர்வட்டத்திருப்பியுமோர்பெற
வளர்ந்திடும் மருந்தெல்லாம்
நேர்நேராக நிரம்பக்கூட்டி
எலுமிச்சம்பழமியல்புடன் கொணர்ந்து
சலமறப் பிழிந்தசாறு வார்த்தரைத்து
அறிவுடன்கூட்டி ஐந்து நாளரைத்துச்
சிறுபயறளவு குளிகையும் சேர்த்து
மிளகுபொடித்து மேற்பொடி போட்டு
அளவுடனென்று அறிந்து கொடுக்க
வச்சரிவுறு சன்னிதான் பதின்மூன்றும்
பரிவுடன் தீர்க்கும் பாதாங்குசமே.

சீராம பாணம்

கௌரிதுத்த மரிதாரங்கிளையும் வெள்ளைப்
பாஷாணம் அவுரிமத்தனதன் சாற்று
லரைத்த வுண்டை பயறதுவாய்ச் சீதையுமிஞ்சிச்
சாற்றிலிடுஞ் சீராமபாண குளிகையிதே. 1

சந்தனாதிக்குளிகை

வாட்டமதனற் குன்றுத மண்மேல் மிகுத்தசந்து முத்தங்
கோட்டம் நெல்லியதிமதுரம் குலாவுமிலாமிச்சிருவேலி
தேட்டம் பெரியதக்கோல சேரவரைத்து யிளநீரில்
கூட்டிக்கொள்ள வல்லீரே குளிருஞ் சந்தனாதியிதே.

வேறு

மிருத்துவாதிக் குளிகை

கந்தகமொன்று ரசமொன்று பாளம்நாலு
கிளர்கடுகுரோகணியும் ஆறுகக்

கொண்டு முந்துமிளநீர்தன்னலரைத்து
முதிர்ந்த பயறளவாக வுண்டைசெய்து
வந்தபல சுரந்தனக்கு யிளநீர் பாலில்
வகையறிந்து கொடுசுரம்போம் வயிறும்
போகுஞ் சுந்தரமாமி ருத்துவாதி
குளிகைதன்னைத் தொல்லுலகில் போகச்சொல்லுவேனே.

மருத்துவாதி

முத்தமோடு திப்பலியோடொத்த மரிசுக்குமுற்
கடுகுரோகணி கொள்ளிரு சீரகமோடேல
மொத்தயிருவேலி மிகு மெத்தவது மிச்சமது
தக்கோல முடனேது மிலவங்கங்
கொத்தமல்லி யொற்றமதிற் கோரோசனைகள் கோட்டங்
கொண்டிடு தெங்கிள நீரிவையரைத்தே
ஒத்தமிளகினது உண்டையதுருட்டி
ஒத்துயர்தீரு மருத்துவாதி யிதுவாமே.

மிருத்துவாதி

கொத்தமல்லி யதிமதுரமேல மிலவங்கம்
கோட்டமொடு சண்பகங் கோரோசனை
முத்தமெத்த சந்தனேடு மொய்த்தயிருவேலி
முற்றிய கரும்பு புளி நீர்முப்பழமோடொக்க
வைத்ததொரு முந்திரிகை மற்றெரு பேரீந்து
வகைபட நிவத்திதனை யொன்றுபட வரைத்து
ஒத்த பரிதாப சுரமுடனெடுத்தால்
ஓடுபுறங்காணு மிருத்துவாதி யிதுவாமே.

வெப்புக்கு

கொட்டமிலவங்கங் கோரோசனை மதுர
மிட்டமுடன் சந்தனங்கல் நாரேலம் சாத்திரபேதி
கட்டளையாய் நேர்கொண்டு முலைப்பாலில்
விட்டரைத்து போதகலும் வெப்புக் குணம். 1

மதனகாமேசுரம்

கட்டாகவே மதனகாமேசுரஞ் சொல்லக்கேள்
கொட்டவதி மதுரங் கொத்தமல்லி வெட்டிவேர்

சாதிக்காய் பத்திரிசன்னிலவங்கத்துடனே
மாதளைவேர்ப்பட்டை மலாக்காவுங்கோதும்பை
குங்குமப்பூக் கஸ்தூரி கோரோசனை கர்க்கடக
சிக்கி நீர்முள்ளிவிதை சிற்றரத்தைப் பொங்கு கருஞ்
சீரகம், நாகப்பூ நற்சீரகமீறவக்கிழச்கு
கோரைக்கிழங்கு சதகுப்பையுடன் சேருந்
திரிகடு கோடிந்து திரிபலைகற்பூரந்
திரிசாதகமுலுவாத்தேற்ருன் சிறுதேக்கு முந்திரி
பேரீந்து முருங்கையதின் பிஞ்சசுவகந்த நீர்
வாளிக்கிழங்குடனே முந்துகொடிவேலிவே
ரூமத்தின்விதையில் பதின் பிசின்சாலமிலா
மிச்சம் வேர்சாறடை வேர்ச்சீலமுள்ள செங்கழுநீர்க்
கந்தமத்தித்திப்பிலி நிலப்பனைக்கிழங்கு பொங்கு
கிட்டிணவப்பிரகசெந்தூர நெருஞ்சிக்காய்கள்
சண்பகப்பூவோடு பூனைக்காலிவிதை மெய்ப்பான்
கையாந்தகரைவிதை கனத்தருத்திராக்ஷமுடன்
மெய்யாகும் நல்லவிளாம்பிசினும் செய்யபருத்தித்
துத்திவேர்சீந்தில் மாத்துய்யது ஒருதாளீச
பத்திரியோடே கடலைபண்பாக மொய்த்த
கூகைநீருக்கவிவை கூட்டும் வகைக்கோர்கழஞ்சு
சாகசமாய்கஞ்சாவின் சாற்றிலரைபாகமாய்
நாலுநாள்தானரைத்து நற்கடலைபோலுருட்டிப்
பாலிளநீர்ச் சீனிப்பழம்நெய்தேன் மாலுமையா
யிந்த அனுபானத்திலந்தி சந்திகொண்டாலுந்திப்
பொருமல்வயிற்றுள்ளெரிவு அந்திசந்தியுட்காய்ச்சல்
காந்தலுளைமாந்தையுட்சயநோய் வெட்காச்சி வெப்பமுமே
யல்லியும் நடக்காமனீராமெலும்புருக்கி
நீரிழிவுநாலைந்துஞ் சாராக்கிராணி வகையாறு
தீரா இருமலிளைப்பு நிசமென்ற கயரோகம்
பெருவாய் நீரூறிவரும் பித்தமரு வருப்பு
மந்தாக்கினி வயிற்றில் வாய்வு நோயுள்ளதுவும்
பிந்தாதிவையொழியும் பேசக்கேள் முந்தத்திறி
வசியம் வெந்தாதிகள்வசியம் இயக்கவுறுதி
முகவசிய முண்டாகுஞ் சிறுவயதாய் வாலிபமு
முண்டாமார்க்கண்டன்போலிருப்பார் நூலிடைமின்னுர்க

ளொருநூறு பேராலிங்கனஞ்செய்யவு
மோதம்பனமுந் தேகபலமுண்டாம்
வையகத்திலுள்ளோர் கேள்மகிழ்ந்து.

சன்னிவாத வயிரவன்

துள்ளுமிரதங்கந்தகமுந் துலங்குமிளகு நெல்வேருந்
தெள்ளுநாபி சிற்றரத்தை திகழுஞ்சுக்கு நேர்வாள
மள்ளுமுசுறு முட்டையுடனருந்தும் பூசனீவித்துமொக்கக்
கொள்ளுமருந்துக்கொத்த வெடையாய்க் கூட்டிக்கொள
[வென்றே. 1
கொண்ட கரிப்பான் சாறதனில் குணமாயரைத்து உளுந்தளவு
உண்டைபண்ணி உலர்ந்ததற்பின் உடனே இஞ்சிச்சாறதனில்
கொண்டோர்குளிகைக் கொண்டக்கால் குளிருஞ் சன்னிவாத
[சுரம்
பண்டோர்செய்த வல்வினைபோல் பதறி ஓடிப்போய்
[விடுமே. 2

பூலோக சிந்தாமணிக் குளிகை

செப்பரிய பூலோக சிந்தாமணிக்குளிகை
சேர்பெரிய பைந்தமிழாற் சொல்லக்கேள்—திப்பிலியில்
நான்கு சவுக்காரம் நான்குகாரம்பூவும்
நான்கு சாதிக்காய் நாலரைதான்காண்சாதி
பத்திரியு மூன்றுபகர் நாபிகந்திசிலே
ஒத்தநிறை வகைக்கிதோர்கழஞ்சு மொய்த்திடுவெண்
குந்திருக்கஞ் சூடனிவை கொள்வகைக்கோர் கால்கழஞ்சு
நந்திகுக்கில் சீனப்பாவுஞ் சந்தேகமின்றி
வகைக்குமிதுவன்பாய்க்கழஞ்சு அரைகொளான்றே
பொடியுமொன்றவரை நன்றாகச் செய்யுங்
கிரிகைதனைச் செப்பக்கேள் சுத்திசிலைத்தையல் முலைப்
பாலதனில் தானூரப் பெய்யுகின்ற கோசலத்தில்
நாபியிருக்கில் நின்பங்தோலிலவி
வீசுகந்திபாலிலவி மென்பாய்முன் பேசுகின்ற
பத்திரிகாயாவின் பாலிலவிமுன் வாங்கிவைத்த
சவுக்காரமெண்ணெய் வாங்கயவி சுத்திசெய
நல்லெண்ணெய்தனிலே இரும்புப்பொடி வறுத்துத்

தண்ணீர்க்கழுநீரில்தான் கழுவிப் பன்னிசைக
குமரிவேர் வாட்டியதில் வந்தநீர்க் கால்படியாமச்
சாரில்யிரும்புத னக்குக்கந்தி நேராக நன்றுயரைத்தால்.
பின்நன்பாய் முன்சொன்னதெல்லா மொன்றுய்க் கரிப்பான்
சாறாற்றியரை ஊன்றுது நிம்பம்பழச்சாற்றில்
நோகவே தானரைத்துச் சிறுபயறு போலுருட்டிப்
பண்பாகவொக்க நிழலுலர்ந்தா லனுபானவர்க்க
மெல்லாஞ் சொல்லும்வகையினுக்கோர மிக்கவிஷந்
தீண்டிலக்குளிகை சிறுநீரிலே கொடுத்துப்
பூண்டுகடிவாயில் பூசப்போம் மூன்றுவிஷந்
தாக்கில் முருங்கையிலைச் சாறிலுண்டை சேர்த்தெரித்துக்
கொக்குமுருங்கைக் குளைதோய்த்துப் பார்க்கில் நடுவுச்சி
தொடுத்துக் கடிவாயுள்ளவரைக்குந் தடவில்
மெச்சுவயந்தவிடமகலு முடச்சன்னி
சஞ்சாரமென்றல் பலூத்தான் காட்டப்பூசி
வன்றுலிஞ்சி முசுறுமுட்டையீதிலிடுமிஞ்சி
வையின்கட்டிவலித்து தென்றல் காய்ந்தபுளியம் பொருக்கைச்
சுட்டநீர்தன்னிலிடு தொக்கனிலே ஆடிய
காமாலை கிராணிக்கு மருவுகொதிகஞ்சியிலுள்
மூலந்தடித்தபுற மூலமுடன் நால்விதிவஞ்சினையுஞ்
சூனியமு மாத்துமநந்தி பத்திரி
நீரிஞ்சு சித்தப்பிரமையிதை யகற்றுங்குஞ்சுபெற
மாட்டாதபேற்கு மருந்தாவின் கொம்புடனே
கூட்டிய நல்லெண்ணெய் விட்டுக்கொண்டு அரைத்துத்
தாட்டிகமாய்க் கீழ்நோக்கியே தடவக் கீழ்நோக்கிப்
பெறுவாள் வாள்போலக் குறுக்கே மறிகிடந்தால்
வேழமலச்சாம்பலு மோருண்டையுமாய்த்
தக்க நல்லெண்ணெய்தனில்
விம்புபெறுமே சுரம்போய் வெந்நீரில் ஆம்பு
குளிர் காய்ச்சல் மிளகு கிஷாயத்தினிலிடப் போஞ்
சூட்சவிடாச்சுரம் போம் நொச்ச பொல்லத பித்த
சுரமுள்ளி வெந்தபோம் நீரில்
மந்தசுர மெய்த்தகலுஞ் சம்பையிலைச் சாற்றில்
அத்திசுர மெய்திலிள வெந்நீரிலென்பது
வாதந்தானும் நொய்துவிடுஞ்
சர்க்கரையில் நோக்கமாய்

மெய்யிலுறு பாரிசவாய்வறும் பார் சீரகநீரில்
சேருமலசம முஞ்சிக்கினுல் வோர் குளிகை
க்ாயங்தென்னேலையிட்டுக் காய்ந்த நீர்தன்னிலிடு
வீயும் விளக்கெண்ணெய் தழம் விட்டுரைத்து நெய்யி
லிதை யத்திலத்தழுத்தில் விக்கலாறுங் கரிப்பா
னீர் சத்திகுன்மம நோலியத்தனிக்கும்
ஏகுமிருமலிளைப்பு முதலேகு கையால்
உருவுசுடலாவரைச்சாறாட்டவரு பிரமேகம்
பசுவின் பாலிலறுங்காணிளனீர்ச் சுட்ட தண்ணீ
ரென்புருவம் நீர்ச்செறுப்பு ஏகுமேயன்பாக
மூன்றுண்டை எண்ணெய் முழுகக் கண்காசமறு
மூன்றுமவுத்தி வலியுண்டா
நாலத்தொன்று மலைவேம்பின் தோலிஷந்த வெந்நீரிலே
மிளகைத்தான் புகல நாற்கழஞ்சு—தான்வறுத்து
மேல்பொடியும் போட்டுக் குளிகையஞ்சு போட்டே
நல்லெண்ணெய் விட்டுக் கூட்டியெரித்துக் கொடுக்க
வீட்டிமையாயிப்படியே முப்பொழுதிலேகுமே
பத்திய முமுப்புப் புளியு மொழியவே
தப்பாது மாத்துபித்த வாய்வுக்கு வண்சீரகமேல்
நீர்சுக்குகொத்தமல்லி நெல்லிமுள்ளியேற்றயிலாச்
சர்க்கரைபாசிப்பயறுத் தக்கமுசுமுசுக்கை
நெல்பொரி நலமுன்னையிலை நேரான நற்பானுர்
வில்லைவேர் பேய்ப்புடல் வெவ்வேறு முக்கழஞ்சு
அல்லலறக்காய்ந்து வற்றித்தானக்கால்
நல்லாயோருண்டையிடு முன்னேருரைத்த
அனுபானமுட்கொண்டு செய்யச்சொன்னுர் குறித்து.

கிராணிக்குத் திரிகடுகு மாத்திரை

மானிலத்தில் வாழுகின்றமானிடர்க்குக் கிராணிவந்தால்
நேசமுடன் மருந்துவகை சொல்லக்கேள்
நின்மான திரிகடுகு வாய்விளங்கந்தாகமுடன்
அதிமதுரம சமதாகந் தயவான யேலமுடன்
சாதிக்காயும் வாகுடனே கிராம்புவகை பத்திரியாம்
வலுவிடையஞ்சுண்டை வற்றலக்கராவும் நெக்குடைய
சிற்றரத்தைப் பினுங்கஞ்சா நிசமான வெந்தயமும்

குந்திருக்கும் வாசமுடன் குங்குமங் கோரோசனை
வருந்தியிடு சீரகங் கொத்தமல்லிசீருடனே
கடுகுநெல்லிவகை கழஞ்சாயத்திரமான மருந்துவகை சொல்
[லக்கேளு

மாவாரம் பட்டையரிசிகொழுந்துடன்
மாவினிற் நற்சுளைமாதளைத் தோலோடு
பிரமட்டை யரசங்கொழுந்துடனரைபிரிய
முற்றுப் புளியம் விதைத்தோல் தோகையுற்றமருந்து
தொகுத்தகழஞ்ச தாயாசையுற்று ஆவரைதன்
சமூலக்கியாழத்தில் பாசமாகவரைத்து
சுண்டைக்காய் நேசமாக எருமைத்தயிரினில்
வேகமான கிராணிகளெட்டுடன் 'தாகமான
கடுப்புள ரத்தமும் போகுமாம் அதிவிரைச்சல்
கழிச்சலும் வேகமான வியாதிகள் தீர்ந்திடும்.
ஞானமானசத்த ரிஷிகளும் நேசமாகக்
கொடுக்கு மருந்திதுவே கமுற்ற சூரியன் வந்திட
ஆசையற்றுப்பனியது வாங்கும்போல்
நேசமுற்று அகத்தியர் சொன்னதே.

சுயமக்கினி

காந்தமோரைங்கழஞ்சு கருதரப் பொடியுமி ரட்டி
ஈய்ந்திடு கெந்தகமிரத முக்கழஞ்சுகூட்டி
ஆய்ந்திடுஞ் சாதிலிங்கமரைக்கழஞ்சதனில் கூட்டிச்
சாய்ந்திடும் வரிக்கத்தாழைச்சாறு விட்டிரண்டுசாமம்
இரண்டரைச்சாமமரைத்து மைபோலுருட்டிடுமருந்து
[தன்னை
உளக்கலந்தன்னில் வைத்திரண்டிடுங் கிண்ணியிலே
செப்பெனகவிழ்த்துமூடி விரண்டுடன் வெயிலில் வைத்தால்
வெண்புகை யெழும்புங் கண்டீர் 1

வெண்புகை யெழுந்து தீய்ந்துவிட்டபின்னதை யெடுத்துப்
பண்புறுதான்றி சுக்குப்பருமிளகுடன் கடுக்காய்
அன்புறுமசமதாக மரைக்கழஞ்சதனில் கூட்டி
இன்புறு தேனிலேடே யிதுபணவெடை கொள்வீரே. 2

இதுபணவெடைச் செந்தூரம் எட்டுநாள் தின்னச் சோகை
அதிரிடுமண்டை சூலையங் கிஷங்கெந்ததாளி
முதிர் கடுப்பிளைப்புக்கைகால் முயங்கிய கரப்பான் வாதம்
பிதிரிடும் பித்தபாண்டு போமெனப் பேசினரே. 3

வேறு

அரப்பொடி பலமிரண்டு வழக்கிங்கிடுங் காந்தமொன்று
பரமெனவழங்கு தாம்பிரபற்பமும் அதனில்பாதி
யாமிகுநாபி சூதமுகந்த கந்தகமுங் கல்னுர்
விரைசெறிகுழலே யொன்ருேர் விரைந்து கால்பலமுங்
[கூட்டே. 1

கூட்டிய மருந்துக்கெல்லாந்தாயெனுங் குமரிப்பாலை
ஊட்டியே யரைத்துச் சேர்த்துக் கலத்தினில் தூரில்வைத்து
மறுகிண்ணி கொண்டுமூடி பூட்டிடுங் கிண்ணித்தூரில்
பொங்கிடுந் தூமந்தானே. 2

பொங்கிடுந்தூமமாறிப்போனபினிஞ்சித் தேனில்
அங்கிடுகுன்றிநொந்துயருந்திடிலட்டகுன்மம்
தங்கிடுஞ்சுவாசகாசந்தனித்தனி மூலரோகம்
அங்கிடுந்திண்ணஞ் சொன்னேம் சுயமக்கினிவழங்குவீரே. 3

சுரமாத்திரை

காரார்குழலீர்பொரிகாரம் கனகமிளகு நாபிசாதிலிங்கம்
பாரீரோமமிவையைந்தும் பங்கொன்றிஞ்சிச்
[சாற்றிலரைத்துச்
சீராய்நேராய்ச்சிறு பயறளவாய்த் திரட்டுமுண்டைப்
[பிரமாணங்
தீராச்சுரமும் வசூரிசன்னி திரண்டவாய்வும் போய்விடுமே. 1

சஞ்சீவிக்குளிகை

மாவின்கொட்டைமுத்த மொடுஅதளும் விடயம் தீன்பூவுந்
தாவுங்கஞ்சாவபினேடு சாதிக்காய் நல்வாலுழுவை
கூவுமோம மிருவகையுங் கூட்டுந்திரிவித பத்திரியும்
ஏவுங்காந்தம் நாகரமும் விளம்பும்புளியவிதைத்தோலே 1

தோலே தாடிக்காய்த்தோலும்துலங்கு வில்வத்தோடுடனே
நாடும்விளாங்காயோடு மிக்கநல்ல கைப்புக்கரிக்கன்றுங்
கோடும்பருத்திவிதைப் பருப்புங்கூட்டும் வெட்பாலரிசிவிளா
நாடுமாத்திப்பூக் காயுநல்ல தெங்கின் பூவாமே. 2

ஆமேவகைக்கு இருகழஞ்சு அடைவாய் நிறுத்துப்பீருங்கநீர்த்
தாமேவார்த்து அரைத்தொருநாள் தாயைக்கொன்றான்
[சாற்றிலரைத்துப்
பூமேலரசர் விரோதிக்காய்ப் பிழிந்தசாற்று லரைத்தொரு
[நாள்
நாமேதித்தக்கிரத்தால் நன்றாயரைத்துக் குளிகைபண்ணே. 3

பண்ணீர்சுண்டைக்காயளவு பண்பாய்த்தயிர்தேன்
[தன்னுடனே
உண்ணீரிரண்டுமாத்திரை தானுகந்தேயந்திசந்தியன்பாய்க்
கண்ணேபடைக்கவொட்டாதே கடுப்புரத்தமுள்மூலம்
புண்ணும்சீதமதிசார மோடுங்கிராணிமூலமுமே. 4

மூலமானவயிற்றிரக்க முற்றுவயிற்றுக் கடுப்புடனே
சாலக்கழியும் பெருமலமும் தரியாதகலும் பொருமல்மந்த
மேலக்குழலீர்சஞ்சீவி யென்னுங்குளிகைப் பேருரைக்க
ஞாலமதனில் மாந்தர்கள் மேல் நாடாதுதரக்கடுப்புளதே. 5

ஒற்றடம்

புங்கம் விதை புன்னைவிதை இலுப்பைவிதை காணம்புரசுவிதை
எள்ளுப்பருத்திவிதை கழற்சிவிதை முடக்கொற்றான்விதையுங்
கங்கையாதளைவிதை ஆமணக்கம்விதை சணல்விதை ஊமத்தம்
[விதை
சிற்ற கத்திவிதையுமிங்கு மகிழங்கொட்டை முருங்கை விதை
[நிமபம் விதை
சேங்கொட்டைநேர்வாளம் சித்திரமூலி வேரும் சிதந்த முட்
[குரண்டிவேரும்
பற்றிரக் கொத்தான் வேரும் படர்கரியுடையின் வேரும்
மெத்திய குழால சுண்டை வேர்ப்பட்டையிவையொன்று
சுத்தமோர் பலமாய்க்கொண்டு துகளற இடித்துக்கொள்ளே 1

கொள்ளுஞ்சுக்கு மிளகுடன் திப்பிலி கோட்டந்தான்றி
[வசம்பு கடுக்காய்
உள்ளியரத்தை கடுகு அறுகு சதகுப்பை கார் கோலரிசி
வெந்தயம் மஞ்சள் செவ்வியம் வெளிச்சிப்பிசின்திப்பிலிமூலங்
கல்மத மிந்துப்புடனே கருஞ்சீரகம் வாய்விளங்கம் 2

வெட்பாலையரிசி விளாவரிசி குந்திருக்கங்குக்கில்
விளங்கமோரொன்று முக்கழஞ்சாய் விரையவிடித்துத்தூளாக்கி
நட்பாயொன்ருய்க்கலந்து முட்டை மஞ்சள் கருவைம்பதுங்கூட்டி
நல்லதேங்காயஞ்சுடைத்துத் திருகி உள்ளிபதின் பலமுந்தட
[வாயரைத்து 3

எண்ணெய் விட்டுப்பிசைந்து வறுத்துச்
சீலைதன்னில் தயங்க மூங்கில்குழல் நடுவே
வைத்து கடியஞ் செண்ணெயுடனூரவிட்டுச்
அஞ்செண்ணெய் ஒன்ருய்ச்சட்டிதனில் விட்டுச்
சினேக பொட்டணத்தை யொத்தி யெடுத்து
உச்சிமுதல் பிடரி கழுத்து நெற்றி செவியடி முதுகு
தண்டு கைப்பட்டை பின்முட்டி கை கால்
எங்கு மொத்திடுகில் சன்னி பதிமூன்று மாங்கே 4

நிச்சயமாய் நீக்கிவிடும் எண்பதுவாதம் பொங்கு திரை வலி
சன்னி வாதங்கள் முகவாதம் கைவிரைப்புப்புற வலியும்
புறவீச்சு மண்டவாதம் வாணவாதம் சீதவாதந் தீராதவாதம்
நாக்குப்பிடிசன்னியுடன் பல் நோயும் விட்டு நீங்கும் 5

அறிவிக்குந்தலம்

உச்சி பிடரி செவியடி யான கழுத்தில் தோளில்
நடுநெற்றி தன்னில் பிறிவுற்றிரண்டு கையில்
பெருவிரல்நுதியில் பேணுஞ் சுரிப்பிடரிதன்னில்
இரண்டு குதிதன்னிலுமறிவித்த கறுப்புடனே வெள்ளையதில்
நடுவில் வாகான நடுமுதுகில் கைப்பட்டைக்கீழாய்
செறிவுற்ற நாலுவிரல் கடையதனில் வாகாகச்
சீர்பெறவே யறிவிக்கில் சன்னி விட்டுத்தீரும் 6

ஒற்றடப் பொட்டணந்தைலம்

பைந்தொடியே விறவலிக்குப் பரிகாரம் கேளாய்
பாய்ந்தகுக்கில் காந்தமுள்ளி திரிகடுகு காயம்
நந்து சிறு நாகப்பூ முசுறு முட்டையிதெல்லா
மந்தைப்பால் விட்டரைத்துச்சீலையினிலூட்டி
புந்தியுறத்திரியாகத் திரித்து வேப்பெண்ணெய்
புங்கெண்ணெய் தனிலெரித்து விழுந்தயிலமெடுத்து
மந்தமறவஞ்சனக்கு மாரனொடு வீரன்
மலரயனத்திரனெடியமால் திகிரியுடனே 8

பொய்யாத காளகண்டன் பூபதியுங் கூட்டிக்
கொடுத்து மெய்யிலுமிந்தத்தயில மிட்டுத்
திமிறியபின் மேலிலொற்று பொட்டணத்தின்
விபரமது கேளே நெய்த்தேங்காயுள்ளி
உவாவேள் கொற்ருனிடித்து ?
நெடுமுகடி வாகனத்தின் நீர்த்தெளித்து வறுத்தே
ஒத்தான சீலேயினில் பொட்டணமாய்க் கட்டி
உச்சியுள்ளங்கை காலில் ஒற்றியதின் மேலால்
அத்தகைய உந்தியதையு மங்குலத்தின் கீழே
விசை நாடிதானறிந்தறிவித்தால்தீரும்
இத்தயிலம் பொட்டணமென்றிரு வகையுமல்லா
லெத்திவகையிலுஞ்சிறிதுண்டியம் பவது கேளே. 10

பரிகரி ஒட்டகங் கழுதையிவையின் லத்திகளேப்
பார்த்தெடுத்தே யவ்வகையில் நீர் தெளித்து வறுத்து
விரிதருஞ்சார மெல்லாம் பிழிந்து வைத்துக்கொண்டு
மிக்கவையின் கோது கொண்டு வெது வெதுக்க ஒற்றில்
பிரிதருநாடிகளெல்லாஞ் செவ்வையாக நிமிரும்
பின்னே அந்தச்சார் நீர்பிழிந்து வைத்துடனே
யரியதொருகாளகண்டன் காந்தி பிரலாபன்
காகினி கூமாரன் வீராவனகுமாரன். 11

இவ்வகையின் பிரமாணங்கூட்டியெடுத்
தருந்தவருணனேடு விசுவாதமூர்ச்சை செவ்வரிய குதிரை வலி
பறப்புநீர் விறைப்பும் தினவுகாண்முன்னீருள்
பொலத்திட்டென விட்டொழியு மவ்விமத்திடலாகுமென்று
குருமுனிவனருந்தவர் முன்னுரைசெய்தானதும்
அல்லாவினியுங்கொவ்வை நறுங்கனிவாயாய் வேறுநட
நந்திகாடாகுளிகையின் விவரங்கூறுவேன் கேளே. 12

சிந்தாமணி வில்லே

அறிந்து பலகலே நூலாராயும் பண்டிதரே
சிறந்த கனகம் வெள்ளிசிப்பிமுத்து—நிறந்தழைக்கு
மாதி விந்துதாரமானமனேசிலேயு
மோதுசத்திநாவிநல்லலோக முட னீதி உள்ள
தாம் பிரபற்பந்தழல் போன்ற காந்தபற்ப

மாம்படியே நற்பவள்மப்பிரகம்—நாம்புகலும்
வச்சிரத்தோடொக்க வகைக்குக் கழஞ்சிரண்டு
நிச்சயமாய் வெவ்வேறு நிறுத்திதனை யுச்சிதமாய்ச்
சித்திரமூலஞ்சிறந்த கியாழமதை
வித்தாரமாக மெள்ளவிட்டரைத்து—மத்தினிக்கேள்
பொரிகாரம் நாற்கழஞ்சுபோத நிறுத்தெடுத்து
விரிவாகச்சம்பீரநீர் விட்டரைத்துத்—தெரிவாய
நல்லபலகரை தானுற்பதிலும் பணமாகவேதடவி
உலரவைத்துப் பின்மருந்தையுட் செலுத்தி—நலமாக
ஒவ்வொன்றையொன்று கொண்டுவுடன் பொருந்தத்தான் மூடி
யிவ்வகையாம் பலகரைதானிருபதையும்—செவ்வேதா
னேடுதனில் பரப்பியுமி தன் மேல்தான் சொரிந்து
காடியடுப் பேற்றி நல்லெரிதான்—கோடாது
நன்றாகவேயெரித்து நலமாகவே உமியில்
குன்றாத தீப்பிடித்தால் கூறக்கேள்—கன்றியசெந்
தீயனைத்துந்தான் வாங்கிச்சிறப்பாகவே உமியில்
நேயமாய் வெந்தது தானீறியபின்—தீயாறிக்
குளிர்ந்ததன்பின் பலகறையுங் கூறுமதன் மருந்தும்
வளம்பெறவே நிறுத்திதனை வைத்ததின்பி—னுளங்களிக்குங்
குப்பியதனில் வைக்குங் கூறுமாசகலவுரந்
தப்பாமலிதனிடையேதான் போட்டு—மெய்ப்பாகச்
சம்பீரச்சாறு சிறந்தயிஞ்சிச்சாறு விட்டு
நம்பியரைத்திதனை நாளிரண்டு கம்பீர
மாகவில்லைதான்பிடித்து வானநிழலுலர்த்தி
மோகமுள்ள செப்பிலிட்டு மூடிவைத்து—வேகமுள்ள
ஆத்திரகச்சாறு தேனுனை வெல்லமிதுகளிலே
பார்த்திதனைத்தான் கொடுக்கப் பாறுநோய்—தீர்த்துவிடுஞ்
சன்னியனைத்துஞ் சகல சுரமகலு
முன்னுமிருமலுட்டிண ரோகமுடன்—பின்னுங்கே
ளீளை சயரோக மிளைப்பு வரட்சியொடு
மீளுநோய் வாதம் வலிவிரைப்புடனே—தாழ்வில்லா
தெல்லாப்பிணியனைத்து மேகுமே யாய்ந்தறிந்து
நல்லனுபானமிது நாடுங்கால்—தொல்லுலகோர்
தேடுதமிழ்க்கு முதல் சிந்தாமணியாகும்
நாடியவ்விதம் செய்நன்றாகக்—கோடனைய
புளகமுலைமாதே புவிமீது இம்மருந்தை
யுளமகிழச் செய்வாயுகந்து. 1

வச்சிராதி வில்லை

ஒல்லையெழுதண்கடல் நீருண்ணுதற்கு வச்சாரதி
வில்லை அது செய்யும்விதமுறைகேள்—வல்லமுழுத்
தங்கந்தேனப்பிரகந்தனுட்காந்த மிம்மூன்
றிங்கிவைகளோர் கழஞ்சு சீட்டெய்தியொன்று—யங்குகரு
வாழைவிரிபூவை நடுமத்தியத்தரிந்துபனம்
பாளையது போலக்கலசம் பண்பில்மறு—நாளி
லூறியபால் விட்டரைபின்னெவ்வு மத்திவேர்ச் சலம்விட்
டாறியரை தங்கமற்று தானக்கால்—மீறுதிரி
பலையொடு தேற்றான் பருத்திவிதைப் பருப்பு
வேலைபுளியம் விதைத்தோலியுஞ்—சாலவே
வெண்குன்றியின் பருப்புமிக்க விளாவரிசி
பண்கொண்ட காணப்பருப்புடனே—எண்கொண்ட
தொக்கவகைக்கு வகைக்கிவைகளோர் கழஞ்சுதான்கூட்டி
மிக்கமுன் சொற்பாலிலிரண்டு விட்டுத்—தொந்தித்து
சந்திரோதயவில்லைதானது போலேயுருட்டி
மந்திரோதயன் முகத்தின் வையாமல்—சொந்தநிழல்
தன்னிலுலர்த்தி வில்லைதானெவ்வொன்று தேனிலுண்ண
மன்னுமந்தி சந்தியிந்தவாறு கொள்ளப்—பின்னமற
ஏழுநாள் வில்லையுமோ ரெழிலிரண்டு கொண்டக்கால்
விழில் நீர்க்காந்தல் வெகுசலங்கள்—வாழுமுடல்
நீரழிவு நாலைந்து நீங்குமென முன்னோர்கள்
சீரளவிலாதெனச் செப்பு.

அசோமேதை மதுச்சுனகி சூரணம்

மன்னுமசோமெதை மதுச்சுனகி சூரணத்தைப்
பன்னுதமிழதனுற் பகரக்கேள்—துன்னுகொடி
வேலிவேராறுபலம் வெட்டித் தரித்திடித்துச்
சாலயீராறுபடி தண்ணீரில்—ஏலவே
யெட்டொன்ருய்க் காய்ந்தாலிறக்கிப் பிசைந்திறுத்துத்
திட்டமா நாலுபலஞ் சீனப்பா—வட்டமாய்ச்
சீவிய விந்திருக்கும் சித்திரமூலப் புனலில்
தூவி விரவிச்சுவறியே—பாவகமாய்த்
தானுலர்ந்தாலக்காந்த மரிதாரந்துரிசு துத்த
மான கிராம்போமமரத்தை குக்கில்—கானக்குள

விந்தமர மஞ்சள் விளாவரிசி வெட்பாலை
இந்திரதஞ்சாதிலிங்கம் மேவ்வரிசி—கந்தகஞ்செவ்
வீயஞ் சதகுப்பை வெந்தயங் குரோசானி
காயந்திரிகடுகு கார்போகி—தூயநவ
சாரங் கடுகுடனற்தான்றி சிவதையிரு
சீரகம்ரோகணி சிறுதேக்கு—நேரான
திப்பிலிமூலங்காரஞ்சீர்வசம்பு வால்மிளகு
வைப்பாமெவட்சாரம் வாய்விளங்கம்—தப்பாது
பத்துநாள்காணவகை பார்த்து வலைகக்குவகை
சித்திரமாய்முக்கழஞ்சு சேரவே—தந்திரமாய்ச்
சேர்ந்திடித்துச் சீனப்பாச்சீவினதில் ஒன்ருகப்
பார்த்து விரவியபின்பாங்குகேள்—கூர்த்தகண்டங்
கத்தரிவேர்ச்சாறடையுங்காய்வேர் மாலக்கிழங்கு
மாவிலிங்கப்பட்டையுடன் புங்கந்தோல்—ஆகியனுய்க்
கோட்டான முக்குராவேரிவைகள்
நாகரிகமாய் வகைக்கு நாலுபலம்—பாகுபெற
மட்டிடித்தாவாறு மரக்காலுதகமதில்
விட்டெரித்—தெட்டொன்ரு
யிதில்காவந்துவத்தி மூன்ருநாளிலிடு கோசலம்
முன்னுளிலிடு பச்சிலைதைவேளை கரந்தை
இலங்குகாய் கெழுமுடக்கொற்ருன்
முருங்கைகொடிக்கள்ளி எலுமிச்சையித்தோடே
நொச்சியிலைக்கள்ளி மொய்த்தசங்கங்குப்பிகழற்சியுடன்
கொள்வாய் செருப்படியும் பொற்புறு நற்றும்பை
பொடுதலையுமெய்ப்பான
வாதமடக்கிவகைக்கு வகைசாறுபடி
போதவேமூன்று புனலிலொக்க—கோத்தறவே
கூட்டியபின்செய்வதுதான் கூறக்கேள் முற்றியவெள்
ளாட்டின் கருஞ்சதை மூவஞ்சுபலம்—தாட்டிகமாய்க்
குறுகவரிந்ததில் முன்சேர்த்தபட்டை
சேகரித்துப்பொட்டணஞ் செய்சீலைதனில்—வேகிலிலைச்
சாறுகியாமுங்காணச்சாறு கோமூத்திரந்தான்
கூறிய பாண்டத்துள்ளிதை யுள்ளாக்கிப்—பேறுபெறத்
தொலாந்திரமாகத்தூக்கியெரித்திற்குக்
கோமூாறதாக்கக் குழம்பானல்—தாளிதனி

லொட்டியதுஞ்சிலைதனிலொட்டியதுந்தான் வழித்துக்
கட்டிபடாதேவெயிலில்காய்ந்திடித்துக்—கெட்டிசெய்யத்
தூளில்வெருகடிதேன் சுட்டதண்ணீர்தன்னில் நல்ல
நாளந்தி சந்திகொள்ள நாற்பது நாள்—கேளுமினிப்
பத்தியநோய் கண்டுசொல்லன்பாக உப்புக் கூட்டுகிலுங்
குத்தெரிவிடுப்புளைவு கோரகோப—போத்திகடி
சுண்டுவலிமண்டையிடி தொண்டையில் வரும்புரைபுண்
வண்டுகடியுந்தியிலமர்ந்திரைதல்—கெண்டைவலி
கால்கைதலைமேல்சொறிவு காதிலிடிகாதிரைவு
மேல்கைவெடிபாதவெடி மீறுதிமிர்—சூலைபதி
னெட்டினேடு குட்டமிருவெட்டினுடன் மூக்குதலை
கட்டியமுடக்குதலைகக்குதலை—மட்டில்லாத்
தேமல்தழுதணைதந்திச் சொறிசிரங்குபடர்
தாமரைவங்கோயாச்சலம்புரைபுண்—காமாலை
மேவுங்கிரந்திவிதங்கள் பவுத்திரங்கள்
நாவினில்வரும்பிணிகள் நாசியில் நீர்—சீவிழுந்த
மண்டைநோய்மிஞ்சுகண்டமாலை உதரத்துவலி
அண்டவினை வாதமென்பதானதுவெல்லாங்—கொண்டபெரும்
புண்ணெரிவு குத்து்புரைபோம்பின்னேரண்டத்
தெண்ணெய்முழுகென்றேயியற்று.

குக்குடத்துச் சுனகி சூரணம்

கோதையே சீனப்பாகுக்குடத்தினுள்ளவைக்குந்
தீதில்லாச் சூரணத்தைச் செப்பக்கேள்—ஏதமுறும்
பட்டையொருநாலுபலம் பாங்காகவேசீவி
இட்டமுறு குப்பிச்சாற்றிட்டூறிக்—கட்டாய
நிழலிலுலர்ந்த தென்றல் நேரானகாந்தம்
தேமருவுமுக்கடுகு வாச—மொளிரு
மரிதாரங் கந்தகமாஞ் சாதிலிங்கம்
பொரிகாரம் ஓமமுடன் பூவே—மரமஞ்சள் சாதிக்காய்
பத்திரிபூதவக் காரப்போது துத்தம்
ஒதுநவசாரமுடன் துருசுகேளாய்—விளங்க
மிருசீரகமுமியக்கவி லவங்கம்
வழங்கு குரோசானி அபின் மாதே—துளங்கேலங்
குக்கில் குளவிந்தங்கொடிவேலி வேர்த்தோலையும்

நற்கடுகு வெந்தயங் கல்நார்மதமுமி—கக்காண
வெட்பாலையரிசிவிளாவரிசி நற்சிவதைக்
கிப்பால் ரோகணியுமிந்துப்புப் பாயநிறை—கால்பலமாய்
நிறுத்திடித்து ப்பொடித்து நன்ருய்
மறுக்கல் வடிகொண்டமாவை—நெறியான
பட்டைப்பொடியுடனே பாங்காகவே விரவிப்
பெட்டைக்கருங்கோழியது பின்கொணர்ந்து—கட்டாகக்
கால்தலையில் ரோமங்களைந்து குடல்போக்கி
மேல் மருந்து சேரவிரவியிட்டு—நூல் கொண்டு
தைத்து மொருதாளிதனில் கோசலங் குறுணி
சித்திரமூலஞ்சிறுதும்பை—முத்தினதை
வேளைபொடுதலையுமிக்க நொச்சிகள்ளியுடன்
தாளாதொன்ருேர் நாழிச்சாறுடனே—கோளுருய்க்
காணமலிந்தகியாழங்குறுணிவிட்டுக்
கோணியப்படால் வேடு கொண்டதன் மேல்—பேணியே
குக்குடம்வைத்தோர் சட்டிகொண்டு கவிழ்த்துப் பொருத்தி
வைக்கில்விடவினிலுமண் பூசி—தக்க அடவாக
யெரித்து வற்றினுலெடுத்து உடனே எலும்பை
யுதரிச்சதையது தானேடுத்துப் போட்டு—வச்சதையு
மருந்தையுந்தான் காணமறுத்துலர்ந்து காய்ந்திடித்துத்
தேனில் வெறுகடிதான் நாற்பது நாள் மிக்க—அந்திசந்தி
பருகவே பத்தியமும் பாங்காயுரைசெய்யக்கேள்
வெள்ளாடு டும்புமுசல் மியகக்கவுதாரி
உள்ளான்சிவல் காடைஊர்க்குருவி—தள்ளாத்திருக்கை
விரிசுருத்தேளிவரால் போத்து
விரித்துலரும் நெய்த் தோலி மிக்காய் பருத்த
துவரம் பருப்புடனே தூதுளங்காயு
மவரை முருங்கைப் பிஞ்சாகும்—பரிசில்லாக்
கீரையின் தண்டு கிளர்ந்த சுரைக் கொழுந்து
சீர்க்கதலிப்பிஞ்சு சிறுகீரை நேர்நறு நெய்
கோழி முட்டையா மருந்து கொண்டுமு கிந்து தென்ருல்
தாழாதேயேரண்ட யெண்ணெய்தான் முழுக—ஊழ்வினை யாங்
குட்டமிணை யெட்டினெடுகுத்துக் கடுப்பிவைகள்
முட்டின்முடக்கு வலி மூக்குதலை—கட்டியிடு
சூலை படர்தாமரை கைதோள் தலைகள்
மேல் சொறிவு சியலுறு புண்ணோடு புரை சீவிழுதல்—சோவியாய்

விண்டிடு கிரந்திமிக மிஞ்சிய பவுத்தி ரமும்
தொண்டைவலி கெண்டை வலி தேர்ந்தவலி—பண்டையுடல்
கோரவலி வாதம் வெகு கோபமுறுவூதுதலை
பாதகடி மேவியல் பாய் கடிப்—போதப்
போருமலுளைவு பொடுபொடுப்பு நெஞ்சா
லிருமுமிளைப்பு மிடிப்பு—விருவிருப்பு
மண்டையிடி துண்டமதில் வந்தடை சலங்களோடு
தொண்டையுறு புண்புரைகள் தோதவினை—கண்டவினை
போத்திகடி யத்திசுரம் புத்த விக்கலொடு
சத்தியுதரத்துவலி தற்பிளவை—யிற்றுவிழும்
நீரடைத்திடல் காதடைத்திடல் நீள்தசைக்கொடி வீழ்த்தலைச்
[சொறி
வேரடைப்பிது மூலமுட்பிணி மேவு முட்டன
பேரெடுத்துரை செய்யுமிந்த நோய்களெல்லாம்
தீருமென முக்கண்ணனார் தையலுக்குச் சொன்னார் தனித்து.

குக்கில் சூரணம்

காரணத்தால் முன்னோர்கள் கட்டாயுரைத்த குக்கில்
சூரணத்தைப் பைந்தமிழால் சொல்லக்கேள்—பாரிநிம்பத்
தோலுடனே ஆடாதோடையிலை சிந்தில்
காலஞ்சாறடை கண்டங்கத்தரியுஞ்—சாலவே
குக்கிலிதில் சுத்தி செய்து கொண்டு வற்றி நாலுபல
மிக்கச் சீனப்பாகுமே பலனுன்—கொக்கவே
வெட்பாலரிசி விளாவரிசி கார்போகி
நற்பாங்கருஞ்சீரக நான்கு—செப்பமிது
முக்கழஞ்சுதான் வகைக்கு மூத்தியபின்னே அரத்தை
தக்கதிரிகடுகு சாதிக்காய் மிக்கதிரி
பலைசிறு தேக்குடனன் பான தொன்ப தொவ்வொன்று
மேலுங் கழஞ்சிரண்டு மேலினிக்கேள்—கோலக்
கிராம்பு கழஞ்சொன்ரா சங்கம்வேர் நற்சிவனார்
வேம்பு சங்கங் குப்பிவேர் வெள்ளறுகு—மென்பாக
நன்றாயுலர்ந்த வின்னுலுவகையும் புறம்பீ
தொன்று வகைக்காமாக்குச் சூரணமாய்—ஒன்றுபட
யித்தனையுந்தானே யிடித்து வடிகட்டியதை
நித்தம் வெருகடி தேனில் புசிக்கில்—மொய்த்தபதி

னெண் குட்டஞ்சூலையுடனெண்பது வாதங்கிரந்தி
புண்கட்டு மேகம்புரை வடுப்புண்—கண்பட்டுப்
பாதிக்கு நல்ல பவுத்திரமும்போம் பிணியைப்
போகிக்கு முப்புப் புளிதவிர்க்கச்—சாதிக்கு
நாவினில் கைப்புண்டான நாளிலுப்புக் கூட்டெனவே
பாவித்திதமாய்ப் பகர்,

குக்கில் சூரணம் (வேறு)

கூட்டுந் தமிழதனுல் சொன்ன குக்கில் சூரணந்தான்
கூட்டும் பரிசதனைக் கூறக்கேள்—நீட்டு கண்டங்
கத்தரி சமூலமுத்தக்காசு சிவனார்வேம்பு
முத்திய வெப்பந்தோல் முதுசீந்தி—மெய்த்தாடா
தோடையிலை புங்கந்தோல் பேய்ப்புடலான
தோடு திரிபலை பதினோர் மருந்து—கூடவகைக்
கைந்துபலம் வெவ்வேறடவாகவே நிறுத்து
மிஞ்சாத் திரிபலை விதை போக்கிப்—பஞ்சாகப்
பண்பாயிடித்து பலத்திற்கிருநாழி
வெண்புனலை மூன்று மிடாவில் விட்டு நண்பாக
முன்னமிடித்ததையும் மூன்று பங்கிட்டே போட்டு
உன்னியிதமாய்க் கலக்கி யொவ்வொன்ருய்—சொன்னபடி
செய்யும் வகையதனைச் செப்பக்கேள் நற்சரக்கா
யய்ய மற்ற குக்கில்தனி லைந்துபலம்—தொய்ய நல்ல
சீலைதன்னில் கட்டிச்சிலத்திப் படாதியல்வாய்ச்
சாலவே தோலாந்திரமாக்கி—மேலிலொன்று
மூடாமல் மேலிரண்டு மூன்று நாளெரித்து
வாடாமல் பொங்கி வராதே யெரித்துச்—சாடிய நீர்
மெத்தக்குறுகினக்கால் வேருேர் மிடாவிலதை
வைத்தபடி யெரித்து வற்றினக்கால்—இத்திதை விட்
டப்பால் மிடாய்தனிலுமப்படியே நீயெரித்து
மெய்ப்பாக மூன்றுமிடா மருந்தும்—செப்பமுடன்
ஒன்ருக விட்டுதகமெல்லாம் வற்ருமல்
நின்றபுனல் மூன்றுபடி நேற்குமட்டுங்—கன்ருமலத்
தோலாந்திரமாகத் தூக்கி யெரித்திறக்கிக்
கோளார தாகக் குளிர்புனலில்—பாளைக்கி
டாதே கழுவியதையுமொரு பொட்டணமா
வீதாவின்பால் தானிரு நாழி—போதவிட்டுப்

பொட்டணத்தைத்தூக்கி வெண்பால் பொங்காமல் தானெரித்து
நிட்டைய தாய்ப்பால் சிரங்கை நிற்கையிலே தொட்டிறக்கிக்
கொண்டு புனலில் கழுவிக்கொண்டால த்துடனே
தண்டொடு நீர்முள்ளித்தழையரிந்து—மிண்டி விடா
தெட்டுப் பலங்கொண்ட திலரிக்கிராவி நெல்லுச்
சட்ட முடனே நாழிதான் விரவி—மட்டில்லா
வாய்விரிந்ததாளிதனில் வண்டுகட்டி மூன்றையும் வைத்
தோய்வில்லாமல் கரையவொன்ருய்க் காயாமல்
நன்ருகவே தேய்த்து நன்னீர் விடப்படியே
கன்ருதெடுத்துக் கரைத்திறக்கித்—தென்புலத்தான்
மெள்ளவசையாமல் வெயிலில்வைத்துத் தானிறுத்து
தள்ளுபுனலத் தனையுந் தானிறுத்தால்—உள்ளநீர்
வற்றவுலர்த்தி மறுத்தாவின் நெய்தெறித்துக்
குற்றமறவே வறுத்துக் கொண்டக்கால்—ஒத்ததொரு
சீனப்பாவைந்து பலம் சீரகமீரண்டுடனே
ஆனகுரோசானி அதிமதுரம்—கோனில
வங்கந் திரிகடுகு வாய்விளங்கம் கொத்தமல்லி
தங்குதிரிபலை தேவதார மஞ்சள்—பொங்குசத
குப்பைகாரம் ஓமம் நல்லகோட்டம் வசம்பு
வெட்பாலரிசி விளாவரிசி—தப்பாத
சேங்கொட்டை சாதிக்காய் சாதிபத்திரியுடனே
மாதே கடுகுரோகணி மரமஞ்சள்
ஓதுகின்ற கஸ்தூரி மஞ்சள் நாகப்பூ இவை
மெத்த நிறைகொள்ளாமல் ஓர்கழஞ்சு—கொண்டிடித்துத்
தூளாக்கித் தெள்ளியந்தக் குக்கிலுடன் இலவங்கம்
பத்திரிகச்சோலம் நல்ல பச்சைச் சேர்த்தொன்ருய்
மெள்ள வெருகடிதேனில் குழைத்துமீறிவிடாமல் பருகுவீர்
அந்திசந்தி பண்பாயருந்திவரப்போமே
பலநோய் புண்குடோரஞ்சூலை மேகக்கிரந்தி
யழிபறங்கிதாம்தேரும் பவுத்திரங்களெல்லாம்
புளிவுப்பில் தீர்க்க மறந்துண்பார்தமக்கு.

அட்ட சூரணம்

சீரிய சிறுவருஞ் சிறந்த மூவருங்
கூறியதொருவனுங் கொடிய வேதமு
மாரிய வடகரை அசமதாகமும்
நேர்படி லெண்வரும் நெருப்பதாகுமே.

தாபாக்கினி சூரணம்

கேட்பவருக்குத் தாபாக்கினி சூரணந்தமிழால்
வாய்ப்புடனே சொல்லும் வகையதுகேள்—வாய்ப்பான
ஓமம் பெருங்காயமும் பயந்துவாய்விளங்க
மாமாம் திரிகடுகு வெட்பாலரிசி—(?)
நேயந்திரிபலே செவ்வியம் சிறுதேக்குக் கோட்டம்
மறவில்லாமஞ்சள் மரமஞ்சள் கருஞ்சிவதை
திப்பிலிமூலம் பருத்த குறிஞ்சாவேர் நற்பாலே தொரு
பொன்முசுட்டை யிரும்புலிகங் கோரைங்கிழங்கு
மவனமுடன் மலினம் நீக்கி வகைகழஞ்சு—நனமை
வசம்பு கருக்கி மறுத்தோர்கழஞ்சு
நிசம்பெறவே ஒன்ருக்கி நித்தம்—வசமாய்
வெருகடிபோலந்தி சந்திவெல்லம் நறுநெய்யில்
பருகிவரப்பாண்டு விஷபாகம்—பொருமலிளேப்
பக்கினியின் மந்தம் அசதிவாதங் குளுமை
மிக்க உடலெரிவு மேலேப்பம்—விக்கலொடு
சங்கரக்கிராணி சயமிருமல் குன்மம் வினே
தொங்கிவருமுதர சூலமுடன்—தங்கு
அசீரணமுந்தீரும் அக்கினியுமுண்டா
பொசீகரணங்கொண்ட கற்புப்போய்—வசீகரமாய்
மூலத்திலுள்ள வினேமுற்று மறப்பண்ணு மேனத்
தலத்தினி லெவற்குஞ் சாற்று.

தாளிச பத்திரி சூரணம்

பன்னுதமிழ் தாளீசப்பத்திரி நற்சூரணத்தைத்
துன்னுதமிழதனுல் சொல்வதுகேள்—பொன்னுலகில்
பாங்கான தாளீசபத்திரி கழஞ்சாறு
வாங்கு மதிமதுர—மைங்கழஞ்சுசேர்
மிளகதுவும் நாற்கழஞ்சுமேல்தோல் போய்ச்சுக்கி
னளவுக்கு இருகழஞ்சுக்கப்பால்—வளமான (?)
திப்பிலி கழஞ்சிரண்டுசேர் கூகைநீறதொன்று
யிப்படியெலாங் கழஞ்சதீரைந்து மெய்ப்பிலில
வங்கமுமீரைந்தெனச் சொல்வார்சீனி எண்கழஞ்சு
தொங்குபடாதிப்படியால் சூரணத்தா லங்கமுறுங்
காசசுவாசங் காசநோய் சயநோய்

நீர்சமுறுநெஞ்சுவலி நாவரட்சை—பேசரிய
பாண்டு கிராணி விஷபாகம் பிலிகை சுர
மீண்டுவிடுந்தீபன மிக்காகும்—வேண்டியதோர்
பயித்தியமுமரோசி பலவும் போமென்று
வயித்தியரே சொல்லுவீர் மகிழ்ந்து.

அபிபத்தியாதி சூரணம்

அல்லலறத்தானே அபிபத்யாதி சூரணத்தைச்
சொல்லரியபைந்தமிழால் சொல்வதுகேள்—நெல்லிமுள்ளி
ஏலமிலவங்க மிலவங்கப்பத்திரியு
மால்விட்மற்ற அரிதகியுங்—கோலம்
விளங்கந்திரிகடுகுமேகநிந்தந்தான
துலங்கவகைக்கோர் கழஞ்சுதூக்கி—வளங்கமிது
பத்துமருந்தும் பதின்கழஞ்சுநற்சிவதை
மொய்த்தகழஞ்சதுவுமுப்பதுதான்—இத்தனையு
மொன்ருயிடித்தபொடிக் கொத்தவிடைசீனி
அன்ருடத்துதையத்தன்பாக—வென்றிவென்றி
வெருகடிபோல் நல்லயிளவெந்நீரில் கொள்ளப்
பொருமலிரைச்சல் புளித்தேப்—பருவருப்பு
நெஞ்செரிவு நெஞ்சுவலிநீங்காப்பிரமேகம்
வஞ்சமருக்குன்மம் வயிற்றுவலி—மிஞ்சுதிரி
தோஷமுடனே உதரசூலமிகுத்தெரிவு
வீசுமுடலத்தினவு விஷபாண்டு—பேசரிய
தீரைகடியுஞ்சிறுபுழுவுந்திதீர்ந்துப்சி
பூரையெனவுண்டாகும் புகலக்கேள்—நீரை
யுடைக்கும்மலங்கழற்று முள்ளபடியின்னேய்
துடைக்குமருந்திதனைச் சொல்லு.

தாடிமாதி சூரணம்

வஞ்சமறுந்தாடிமாதியெனுஞ் சூரணத்தைச்
செஞ்சொல்மொழியதனல் செப்பக்கேள்—மிஞ்சகன்ற
மாதளங்காயோடுடனே வாய்த்தவில்வக் காயோடு
சாதிக்காய்பத்திரி பூத்தான்மூன்று—மோதுகின்ற
கற்கடகசிங்கிகுரோசானிதிரிகடுகு
வர்க்கமபினேமம்வாய்விளங்கஞ்—சொற்குயர்ந்த
கஞ்சாவதி விடயங்காவிக்கல் வாலுழுவை
செஞ்சொலிலவங்க மத்தித்திப்பிலியு—மிஞ்சாத

சீரகம் விளாவரிசி செய்யபெருமரத்தோல்
சாருமிலந்தையதின் தன்பலமு—மார
விளர்ம்பிசினோடத்தவை வெவ்வேறு கழஞ்சொன்று
துளாவிவெவ்வேறு வறுத்தொன்றாய்—அளாவியிதைத்
தானிடித்த சூரணமாந்தன்னைத் தயிர்தேனில்
பானமது செய்யவிஷபாகமுத—லானதும் ஒரு
காயாலே பாண்டுகுன்மங்கட்டாகிராணிவகை
யாமாமதிசாரமானதெல்லாம்—போமெனவே
சொன்னாரகத்தி முனிசொன்னபடி—செய்வீரால்
பொன்னாகு மேனி புகழ்ந்து.

மரீசாதி சூரணம்

மரீசஞ்சுக்குத் திப்பிலியும் வழங்குஞ் சீரகமிந்துப்புத்
தரீசமென்னுஞ் சாதிக்காய்சாத்திரவேதிப் பத்திரியும்,
பரீசக்கல்நார் கிராம்புபகருமோமங் குரோசானி
யரீசக்கஞ்சாயிலவங்க மபினோடின்னம்மருந்து சொல்வேன். 1

சொல்வேன் மாவின்பருப்புடனே சுண்டைவற்றல் நல்காந்தமுடன்
வெல்லு ஓமமாத்திப்பூ வெள்ளையுள்ளி இதுசமனாய்
நில்லுமிதனைக் பராகம் பண்ணி நித்தம் வெருகடி தேனிலிட
வல்லற்படுத்து நோயின்வகையது தானுரைக்கக் கேட்பீரே. 2

கேட்பீராகில் தீரும் நோய் கிராணி மூலஞ்சீ மூல
மாட்படாதவதிசாரமனேக வெப்புச்சன்னி சுரந்
தீட்படான பெருமல முந்தீருங் கடுப்புக் கழிச்சலிவை
மீள் பூடாகுங்கிரிகையிது விரும்பிச் செய்வார்க்குண்மையிதே. 3

அசுவகந்தி சூரணம்

ஏலஞ்சீரக மதிமதுரம் யிலவங்கத்தோல் நெல்லி முள்ளி
கோலந்திரி கடுகு நாகப்பூக் கூகை நீரூடு வெந்தயமும்
பாலின் கிராம் பொடுதாளீச பத்திரி கோட்ட மாசக்காய்
வாலின்மிளகு சிற்றரத்தை வகைக்கோர் கழஞ்செடை சரியே. 1

சரியாய் அசுவகந்தமது தானேயிடித்துப் பொடித்தெடையாய்
பரிவாய்ச்சீனி கலந் துதையம் பருகீர் வெறுகடி நறு நெய்யில்
விரிவாயருந்த வுடம்புலர்தல் வெளுப்புச்சயனோயிளைப்பிருமல்
செரியாச் சுரம் போம் அசுவகந்த சூரணமதனாலுடலிடுமே. 2

திராக்ஷாதி சூரணம்

முந்திரிகை நெல்லி முளி மதுரஞ்சுக்கு கரத்தை
சந்தனம் பேரீந்து கோட்டம் சாதிக்காய்—கந்தமாம்
செங்கழுநீர் நாகப்பூத்திப்பலி கிராம்பு—இல
வங்கத்திலை மிளகு வால்மிளகு—அங்கத்தில்
பூசுகின்ற கோபிபுகழேலங் கொத்தமல்லி
வீசுமிருவேலி வேர் வெட்டிவேர்—வாசனை
கற்பூரஞ் சந்தனம் மிலுப்பையதின் பூவிலவங்கம்
நெற்பொரி நற்சீரந்தாளீசமிது—சேர்வெடைதா
னிவ்வெடைக்குச் சீனியதில் பாதி கூட்டியதை
ஒவ்வியகை மூவிரலாலுட்கொள்ள—நவ்வுகின்ற
பித்த மனற்சூடு சுரம் பித்தவெட்டை சத்தி விக்கல்
மெத்தெனலா நெஞ்செரிவு மேலேப்பம்—பித்தத்தில்
வாய்வு யிருமல் வரட்சியுடலெரிவு
தேயுமிது வன்னத்து வேஷமுடன் நோயாத
மூலக்கனல் சூடு மூலவெட்டை நீர்க்கடுப்புச்
சீலத்திராக்ஷாதி தின்றக்கா—லாலத்தி
லோடிப்போமென்று முன்னோருள்ளபடி சொன்னமொழி
நாடிப்போய்ச் செய்வீர் நவின்று

சிங்காதி சூரணம்

தேசு தமிழாலினிய சிங்காதி சூரணத்தை
ஆசுதமிழால் வடநூலாராய்ந்து—பேசிதுகேள்
கற்கடகசிங்சி கண்டங்கத்தரிவேர் முக்கடுகு
நற்கடுக்காய் தான்றி நெல்லி நஞ்சொழித்து—மியக்க வெடி
யுப்புச்சிறு தேக்குயர் கோட்டமோர் கழஞ்சு
தப்பிதமில்லாதபடி தானிடித்து—மெய்ப்பாய
வெருகடி தேன்தன்னில் விரைந்திருபோதுண்ண
இருமலிளைப்பு விக்கலேகு—மரூசியறு
மண்டைநீர்த்தோஷ மறும்வாதமறும் பீனிசம்போம்
தொண்டையரிகுரல் போஞ்சூடும்போ—மிண்டியவாய்
நீரூற்றறுவறுப்பு நீங்கிடுமென முன்னோர்கள்
மாரேத்துரைத்தார் வகுத்து.

10991
2413